05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பெரிய புராணத்தில் நாயன்மார்களின் சரியை தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சரியை தொண்டுகளும் ஓர் ஆய்வு

KAJIAN SARIYAI THONDU NAYANMAAR DALAM TEKS PERIYA PURANAM DAN SARIYAI THONDU BADAN BUKAN KERAJAAN MASYARAKAT INDIA PORT DICKSON

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மகேஸ்வரி த/பெ தேவராஜு

MAGESWARI A/P DEVERRAJU

சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம்

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

2020

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பெரிய புராணத்தில் நாயன்மார்களின் சரியை தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சரியை தொண்டுகளும் ஓர் ஆய்வு

KAJIAN SARIYAI THONDU NAYANMAAR DALAM TEKS PERIYA PURANAM DAN SARIYAI THONDU BADAN BUKAN KERAJAAN MASYARAKAT INDIA PORT DICKSON

மகேஸ்வரி த/பெ தேவராஜு

MAGESWARI A/P DEVERRAJU

தமிழ் இலக்கிய முதுகலை பட்டத்திற்கான ஆய்வேடு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

DISERTASI DIKEMUKAKAN BAGI MEMENUHI SYARAT UNTUK MEMPEROLEH IJAZAH SARJANA SASTERA
(MOD PENYELIDIKAN)

மொழி மற்றும் தொடர்புதுறை புலம்
சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம்

FAKULTI BAHASA DAN KOMUNIKASI
UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

2020

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

Sila tanda (√)

Kertas Projek	
Sarjana Penyelidikan	√
Sarjana Penyelidikan dan Kerja Kursus	
Doktor Falsafah	

ISTITUT PENGAJIAN SISWAZAH

PERAKUAN KEASLIAN PENULISAN

Perakuan ini telah dibuat pada 11 Februari 2020

i. Perakuan pelajar:

Saya, **MAGESWARI A/P DEVERRAJU (M20171000903)** dari **FAKULTI BAHASA DAN KOMUNIKASI** dengan ini mengaku bahawa disertasi yang bertajuk **KAJIAN SARIYAI THONDU NAYANMAAR DALAM TEKS PERIYA PURANAM DAN SARIYAI THONDU BADAN BUKAN KERAJAAN MASYARAKAT INDIA PORT DICKSON** adalah hasil kerja saya sendiri. Saya tidak memplagiat dan apa-apa penggunaan mana-mana hasil kerja yang mengandungi hak cipta telah dilakukan secara urusan yang wajar dan bagi maksud yang dibenarkan dan apa-apa petikan, ekstrak, rujukan atau pengeluaran semula daripada atau kepada mana-mana hasil kerja yang mengandungi hak cipta telah dinyatakan dengan sejelasnya dan secukupnya.

_____

Tandatangan pelajar

ii. Perakuan Penyelia

Saya DR. KARTHEGES A/L PONNIAH dengan ini mengesahkan bahawa hasil kerja pelajar yang bertajuk **KAJIAN SARIYAI THONDU NAYANMAAR DALAM TEKS PERIYA PURANAM DAN SARIYAI THONDU BADAN BUKAN KERAJAAN MASYARAKAT INDIA PORT DICKSON** dihasilkan oleh pelajar seperti nama di atas dan telah diserahkan kepada Institut Pengajian Siswazah bagi memenuhi sebahagian/ sepenuhnya syarat untuk memperoleh Ijazah Sarjana Sastera.

_____ _____

Tarikh Tandatangan Penyelia

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

UPSI/IPS-3/BO 31
Pind:00 m/s 1/1

ISTITUT PENGAJIAN SISWAZAH /
INSTITUTE OF GRADUATE STUDIES

BORANG PENGESAHAN PENYERAHAN TESIS/DISRTASI/LAPORAN KERTAS PROJEK
DECLARATION OF THESIS/DISERTATION/PROJECT PAPER FORM

TAJUK / *TITLE:* **KAJIAN SARIYAI THONDU NAYANMAAR DALAM TEKS PERIYA PURANAM DAN SARIYAI THONDU BADAN BUKAN KERAJAAN MASYARAKAT INDIA PORT DICKSON**

No.Matrik / *Matric's No.:* **M20171000903**

Saya / *I:* **MAGESWARI A/P DEVERRAJU**
(Nama pelajar / *Student's Name*)

Mengaku membenarkan Tesis/Disrtasi/Laporan Kertas Projek (Doktor Falsafah/Sarjana)* ini disimpan di Universiti Pendidikan Sultan Idris (Perpustakaan Tuanku Bainun) dengan syarat-syarat kegunaan seperti berikut:-
acknowledged that Universiti Pendidikan Sultan Idris (Tuanku Bainun Library) reserves the right as follows:-

1. **Tesis/Disrtasi/Laporan Kertas Projek ini adalah hak milik UPSI.**
   The thesis is the property of Universiti Pendidikan Sultan Idris.

2. **Perpustakaan Tuanku Bainun dibenarkan membuat salinan untuk tujuan rujukan sahaja.**
   Tuanku Bainun Library has the right to make copies for the purpose of research only.

3. **Perpustakaan dibenarkan membuat salinan Tesis/Disertasi ini sebagai bahan pertukaran antara Institusi Pengajian Tinggi**
   The Library has the right to make copies of the thesis for academic exchange.

4. **Perpustakaan tidak dibenarkan membuat penjualan salinan Tesis/Disertasi ini bagi kategori TIDAK TERHAD.**
   The Library are not allowed to make any profit for 'Open Access' Thesis/Disertation.

5. **Sila tandakan (√) bagi pilihan kategori di bawah / *Please tick (√) for category below:-***

☐	**SULIT / CONFIDENTIAL**	Mengandungi maklumat yang berdarjah keselamatan atau kepentingan Malaysia seperti yang termaktub dalam Akta Rahsia Rasmi 1972 / *Contains confidental information under the Official Secret Act 1972*
☐	**TERHAD / RESTRICTED**	Mengandungi maklumat terhad yang telah ditentukan oleh Organisasi/badan di mana penyelidikan ini dijalankan / *contains restricted information as specified by the organization where research was done.*
☑	**TIDAK TERHAD / OPEN ACCESS**	

_____
(Tandatangan Pelajar / *Signature*)

Tarikh:

_____
(Tandatangan Penyelia / *Signature of Supervisor*)
& Nama & Cop Rasmi / *Name & Official Cop*)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நன்றியுரை

இந்த ஆய்வு முழுமை பெறுவதற்கு எல்லாம் வல்ல ஈசனின் திருவருளே காரணமாக அமைந்தது. 'அவனன்றி ஓர் அணுவும்' அசையாது என்பதுபோல் சிவனருளன்றி இவ்வாய்வினைச் செய்து முடித்திருக்க இயலாது. எனவே, வேதநெறி தழைக்க, சைவத்துறை விளங்க, செம்மொழியாம் தமிழ்மொழி செழித்து ஓங்க சிவபரம்பொருளின் தாளினை முதலில் போற்றி வணங்குகின்றேன். 'பெரிய புராணத்தில் நாயன்மார்களின் சரியை தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சரியை தொண்டுகளும் ஓர் ஆய்வு' எனும் தலைப்பில் அமைந்த இவ்வாய்விற்கு உரிய கருத்துகளையும் ஆலோசனைகளையும் வழங்கி நெறிமுறைப்படுத்தியும் என்னை ஊக்கப்படுத்தியும் உதவிய ஆய்வு நெறியாளர் முனைவர் கார்த்திகேஸ் பொன்னையா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன். அவரது வழிகாட்டலும், ஊக்கமும் தன்னம்பிக்கையுணர்வுமே இந்த ஆய்வு வெற்றிகரமாக அமைய அடித்தளமாக அமைந்தது. தொடர்ந்து எல்லா வகையிலும் ஒத்துழைப்பு நல்கிய சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப்பிரிவு பேராசிரியப் பெருமக்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியைக் கூறிக் கொள்கிறேன். இவர்களைத் தொடர்ந்து எனது ஆய்வுக்கு உதவியாக இருந்த சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழக விளையாட்டு அறிவியல் புலத்தின் இணைப்பேராசிரியர் முனைவர் குணதேவன் த/பெ ஏழுமலை அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தவிர, அன்பும் ஆசியும் வழங்கிய எனது பெற்றோர் அமரர் திரு.தேவராஜூ த/பெ லக்ஷ்மணன் அவர்களுக்கும் எனது தாயார் திருமதி. கமலா அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைப் பகிர்ந்து கொள்கிறேன். மேலும், இவ்வாய்வை மேற்கொள்ள ஆதரவு அளித்துத் துணையாய் நின்ற எனது சகோதரர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆய்வுச் சாரம்

பெரிய புராணத்தில் நாயன்மார்களின் சரியை தொண்டுகளையும் மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை, போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம், போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம் ஆகிய மூன்று அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சரியை தொண்டுகளையும் ஆய்வு செய்யும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது பண்புசார் ஆய்வாக அமையப் பெற்றுள்ளதால் நூலக ஆய்வில் நூல்நெறிமுறையின் மூலம் பெரிய புராணச் செய்யுள்களுக்கு விளக்கங்கள் பெறப்பட்டதோடு 63 நாயன்மார்களின் சரியை தொண்டுகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும், நேர்க்காணல் வழியாக மேற்குறிப்பிடப்பட்ட போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்கள் மூன்றின் தோற்றம், வளர்ச்சி, நடவடிக்கைகள், செயல்பாடுகள், திட்டங்கள் ஆகியனவும் கண்டறியப்பட்டன. இதன்மூலமே கிடைக்கப்பெற்ற தரவுகள் பகுப்பாய்வுக்குப்பின் ஒருங்கிணைக்கப்பட்டு ஆய்வு முடிவும் பெறப்பட்டுள்ளது. இவ்வாய்வு முடிவானது பெரிய புராணத்தில் நாயன்மார்களின் சரியை தொண்டுகளையும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சரியை தொண்டுகளையும் ஒத்திருப்பதோடு சில வேற்றுமைகளையும் காட்டுவதாக அமைந்துள்ளது. நாயன்மார்களில் 47 பேர் சரியை மார்க்கத்தில் கோயில் திருப்பணிகளையும் இறையடியார்களுக்குத் தொண்டுகள் செய்வதையும் தங்களின் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்துள்ளனர் என்பது தெளிவாகிறது. இவ்வாய்வின்வழி 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' எனும் கூற்றை முன்நிறுத்தி நாயன்மார்கள் செயல்பட்டதை அமுது படைத்தல், பொருளுதவி செய்தல், உடல் உழைப்பால் தொண்டுகள் புரிதல், ஆலயத் திருப்பணிகள் செய்தல் போன்ற சரியை தொண்டுகள் சுட்டி நிற்கின்றன. இவர்களைப் பின்னொற்றியே உணவு, உடை, கல்வி, இருப்பிடம், நன்னெறிப் பயிற்சிகள் என மக்களின் தேவையறிந்து செயலாற்றுவதை மேற்குறிப்பிடப்பட்ட போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களும் கடமையாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன என்பதை இந்த ஆய்வு காட்டுகின்றது. இவை யாவும் பெரிய புராணத்தில் நாயன்மார்களின் தொண்டுகளை ஒத்திருப்பதைக் காணும் அதே வேளையில், வேலை வாய்ப்புகளையும் தொழில்திறன் பயிற்சிகளையும் வழங்கி மக்கள் சுயகாலில் இயங்கவும் இவ்வியக்கங்கள் உதவுவதையும் இந்த ஆய்வு எடுத்துரைகின்றது. எனவே, பெரிய புராணத்தில் நாயன்மார்கள் காட்டிய வழியில் எவ்வித எதிர்பார்ப்புமின்றி தொண்டுகளாற்றுவது இறைவனுக்கே செய்யும் உண்மை தொண்டுக்கான மனநிறைவை அளிக்கும்; தன்னலமற்ற சேவைகள் மேலோங்கும்; இகத்திலும் பரத்திலும் நிலையான வாழ்வளிக்கும் என்பதையும் இவ்வாய்வு உணர்த்துகின்றது. தவிர, நமது சமயம் உணர்த்தும் உயரிய பண்பாடாகிய தொண்டு நெறியும் வருங்காலத் தலைமுறையினருக்கு வழிகாட்டலாக அமையவும் இவ்வாய்வு துணைபுரியும். இதனால், தன்னலம் மறைந்து பொதுநலம் பேணும் உன்னத சமுதாயம் மலரும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

KAJIAN SARIYAI THONDU NAYANMAAR DALAM TEKS PERIYA PURANAM DAN SARIYAI THONDU BADAN BUKAN KERAJAAN MASYARAKAT INDIA PORT DICKSON

ABSTRAK

Kajian ini bertujuan mengkaji *sariyai thondu Nayanmaar* dalam teks *Periya Puranam* dan badan bukan kerajaan masyarakat India di Port Dickson. Kajian ini berbentuk penyelidikan kualitatif yang berfokus kepada kaedah perpustakaan yang bersifat interpretasi kesusasteraan. Memandangkan teks *Periya Puranam* iaitu sumber rujukan utama kajian ini adalah satu-satunya karya Kesusasteraan Pertengahan yang menekankan *sariyai thondu*, maka pemahaman dan tafsiran puisi-puisi klasik dilaksanakan melalui pendekatan *hermenutik.* Pendekatan ini juga membantu mengenal pasti *sariyai thondu* yang diamalkan oleh *Nayanmaar* dalam teks *Periya Puranam.* Selain itu, instrumen kajian berbentuk temu bual digunakan dalam memperoleh data daripada pengerusi dan setiausaha tiga badan bukan kerajaan masyarakat India yang memberi sumbangan berbentuk kebendaan dan fizikal kepada kaum India di sekitar kawasan Port Dickson iaitu Persatuan Hindu Sangam Port Dickson, Pertubuhan Pembangunan Sosial Port Dickson dan Pertubuhan Keluarga Bahagia Berinovatif Port Dickson. Analisis teks *Periya Puranam* menyatakan seramai 47 orang *Nayanmaar* berpegang teguh dalam prinsip dan pegangan hidup dalam melakukan *sariyai thondu* seperti menyedekah makanan dan mendermakan barang-barang kepada para pengikut Tuhan, membuat amalan kebajikan di kuil serta memberi khidmat fizikal kepada para pengikut Tuhan. Justeru, hasil temu bual mendapati bahawa badan bukan kerajaan masyarakat India Port Dickson yang tersebut di atas juga mengikut jejak langkah *Nayanmaar* dalam memberikan khidmat seperti menghulurkan bantuan makanan, barang-barang keperluan, menyediakan kemudahan pendidikan dan tempat tinggal kepada masyarakat setempat. Namun, terdapat juga perbezaan dari segi *sariyai thondu* yang dilakukan oleh *Nayanmaar* dalam teks *Periya Puranam* yang mana ketiga-tiga badan bukan kerajaan ini juga memberikan latihan kemahiran perindustrian dan menyediakan peluang pekerjaan dalam sektor perindustrian dan perkilangan. Kesimpulannya, Analisis teks dan hasil temu bual kajian ini menunjukkan *sariyai thondu* yang dilakukan oleh *Nayanmaar* dalam teks *Periya Puranam* dan tiga badan bukan kerajaan masyarakat India Port Dickson membantu memenuhi keperluan para pengikut Tuhan dan penduduk setempat. Implikasi kajian ini dapat menyedarkan kepentingan dan meningkatkan *sariyai thondu* badan bukan kerajaan masyarakat India demi menjamin masa depan anak bangsa.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

STUDY ON SARIYAI THONDU NAYANMAAR IN THE TEXT OF PERIYA PURANAM AND SARIYAI THONDU OF PORT DICKSON INDIAN NON-GOVERNMENTAL ORGANIZATION

ABSTACT

The purpose of this study is to examine and explain the practices of *sariyai thondu* by *Nayanmaar* in the text of *Periya Puranam* (the Great Myth) and by the non-govermental organization communities of Indians in Port Dickson. This study was conducted based on qualitative research focusing on literary interpretation of literature. As the text of *Periya Puranam* became the main source of reference of this study, the understanding and interpretation of classical poems was carried out through *hermeneutic* approach. This approach also helped to identify the practices of *sariyai thondu* by *Nayanmaar* in the text of *Periya Puranam*. In addition, interviews were also used as an instrument to study the development and implementation of the *sariyai thondu* which practiced by the three Indian non-govermental organizations around Port Dickson; the Hindu Association of Port Dickson, the Port Dickson Social Development Organization and the Innovative Happy Family Organization Port Dickson. The findings suggest that there are some similarities and differences between the *Nayanmaar* in the texts of *Periya Puranam* and the Indian non-govermental organizations in Port Dickson. According to the texts of *Periya Puranam,* a total of 47 *Nayanmaar* held the principles of doing services to devotees, by providing food, by donating goods, practicing charity works in the temple and also by providing other helpful physical services. Hence, it was found that the non-govermental organizations also follow *Nayanmaar's* footsteps in providing services such as providing food aid, essential goods, providing educational facilities and shelter to the local community. These three non-govermental organizations also provided training to enhance the skills and provided job opportunities to the locals in order to ensure and develop for a better future. In conclusion, this study shows and concludes that services which were directed to the community without expecting anything in return brings satisfaction and also brings one closer to the God. This study implicates the importance of producing people or devotees with humanity

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பொருளடக்கம்

		பக்கம்
மாணவர் உறுதி ஆவணம்		ii
நன்றியுரை		iv
ஆய்வுச் சாரம் (தமிழ்மொழி)		v
ஆய்வுச் சாரம் (தேசியமொழி)		vi
ஆய்வுச் சாரம் (ஆங்கிலம்)		vii
உள்ளடக்கம்		viii
அட்டவணை பட்டியல்		xv
படவரைவு பட்டியல்		xvii
எழுத்துச் சுருக்கக் குறியீட்டு விளக்கம்		xvii
இயல் 1	முன்னுரை	
1.1	அறிமுகம்	1
1.2	ஆய்வுப் பின்னணி	2
1.3	ஆய்வுச் சிக்கல்	8
1.4	ஆய்வு நோக்கம்	11
1.5	ஆய்வு வினா	12
1.6	ஆய்வுக் கருத்துக் கட்டமைப்பு	13
1.7	ஆய்வின் முக்கியத்துவம்	14

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.8	ஆய்வு எல்லை	16
1.9	கருச்சொல் விளக்கம்	18
1.9.1	பெரிய புராணம்	18
1.9.2	நாயன்மார்கள்	20
1.9.3	அடியார்கள்	21
1.9.4	சித்தாந்தம்	22
1.9.5	பதி	23
1.9.6	பசு	23
1.9.7	பாசம்	24
1.9.8	சரியை	25
1.9.9	தொண்டு	27
1.9.10	அரசு சாரா இயக்கம்	27
1.9.11	அரசு சாரா இந்தியர் இயக்கம்	28
1.10	தொகுப்புரை	30
இயல் 2	**இலக்கிய மீள்நோக்கு**	
2.1	முன்னுரை	31
2.2	பெரிய புராணம் - அறிமுகம்	32
2.3	பெரிய புராணம் (பெயரும் - பொருளும்)	33
2.4	பெரிய புராண நூலாசிரியர்	35
2.4.1	சேக்கிழாரின் காலம்	36
2.5	பெரிய புராணம் தோன்றிய சூழல்	38
2.6	பெரிய புராண நூலமைப்பு.	41

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

2.7 பெரிய புராணமும் சமயமும் 43

2.7.1 பெரிய புராணம் காட்டும் சைவம் 45

2.7.2 பெரிய புராணத்தில் சைவ நெறிகள் 46

2.7.2.1 பக்தி நெறி 47

2.7.2.2 அன்பு நெறி 47

2.7.2.3 அருள் நெறி 48

2.7.2.4 தொண்டு நெறி 49

2.7.2.4.1 மக்கள் தொண்டு 51

2.7.2.4.2 மகேசன் தொண்டு 54

2.7.2.5 சித்தாந்த நெறி 57

2.7.2.5.1 பதி 58

2.7.2.5.2 பசு 60

2.7.2.5.3 பாசம் 60

2.7.2.5.4 சித்தானந்த சாதனம் 62

2.7.2.5.5 சித்தாந்தம் கூறும் சரியை 64

2.8 பெரிய புராணம் தொடர்பான பிற ஆய்வுகள் 67

2.9 அரசு சாரா இயக்கங்கள் 71

2.9.1 அரசு சாரா இயக்கங்களின் பங்கு 73

2.10 மலேசியாவில் அரசு சாரா இயக்கங்களின் பதிவு இலாகா 74

2.10.1 மலேசியாவில் அரசு சாரா இயக்கங்கள் 75

2.10.2 மலேசியாவில் அரசு சாரா இந்தியர் இயக்கங்கள் 76

2.10.2.1 மலேசிய இந்து சங்கம் 78

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

2.10.2.2 மலேசிய இந்தியர் இளைஞர் இயக்கம் 79

2.10.2.3 மலேசிய இந்து இளைஞர் இயக்கம் 80

2.10.3 போர்ட்டிக்சன் இந்திய அரசு சாரா இயக்கங்கள் 81

2.10.3.1 மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை 81

2.10.3.2 போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம் 84

2.10.3.3 போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம் 86

2.11 அரசு சாரா இயக்கங்கள் பற்றிய பிற ஆய்வுகள் 87

2.12 தொகுப்புரை 89

இயல் 3 ஆய்வு நெறிமுறை

3.1 முன்னுரை 90

3.2 ஆய்வு வடிவமைப்பு 91

3.3 தரவுகள் சேகரிப்பு முறை 94

3.3.1 நூலக ஆய்வு 97

3.3.2 நேர்க்காணல் 98

3.4 ஆய்வுக் கருவி 101

3.4.1 நூலக ஆய்வுக்கான ஆய்வுக் கருவி 101

3.4.2 நேர்க்காணலுக்கான ஆய்வுக் கருவி 104

3.5 தரவுகள் பகுப்பாய்வு முறை 106

3.5.1 விளக்கமுறை 106

3.6 ஆய்வுக் கோட்பாடு 109

3.7 ஆய்வு நடைமுறை 114

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

3.8 தொகுப்புரை 115

இயல் 4 ஆய்வு முடிவுகள்

4.1 முன்னுரை 116

4.2 சரியை தொண்டு 117

4.3 நாயன்மார்களின் தொண்டு மார்க்கங்கள் 119

4.4 நாயன்மார்களின் சரியை தொண்டுகள் 125

4.4.1 அடியார்களுக்கு அமுது படைத்தல் 127

4.4.1.1 இளையான்குடி மாறனார் 135

4.4.1.2 அப்பூதியடிகள் 138

4.4.2 அடியார்களுக்குப் பொருளுதவி செய்தல் 143

4.4.2.1 அமர்நீதியார் 149

4.4.3 அடியார்களுக்கு உடல் உழைப்பால் தொண்டுகள் புரிதல் 154

4.4.3.1 திருக்குறிப்புத் தொண்டர் 154

4.4.4 ஆலயத் திருப்பணிகள் செய்தல் 161

4.4.4.1 கணநாதர் 171

4.4.4.2 குங்கிலியக் கலயர் 174

4.4.5 பிறத் தொண்டுகள் 178

4.4.5.1 விறன்மிண்டர் 182

4.4.5.2 மெய்ப்பொருளர் 185

4.5 போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் தொண்டுகள் 189

4.5.1 சமயத் தொண்டு 191

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.5.1.1 மலேசிய இந்து சங்கம் வட்டாரப் போர்ட்டிக்சன் பேரவையின் சமயத் தொண்டுகள் 192

4.5.1.2 போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகத்தின் சமயத் தொண்டுகள் 200

4.5.1.3 போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகத்தின் சமயத் தொண்டுகள் 202

4.5.1.4 போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமயத் தொண்டுகளின் ஒப்பீடு 204

4.5.2 சமுதாயத் தொண்டு 208

4.5.2.1 மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவையின் சமுதாயத் தொண்டுகள் 209

4.5.2.2 போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகத்தின் சமுதாயத் தொண்டுகள் 212

4.5.2.3 போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகத்தின் சமுதாயத் தொண்டுகள் 218

4.5.2.4 போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமுதாயத் தொண்டுகளின் ஒப்பீடு 220

4.6 நாயன்மார்களின் சரியை தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சரியை தொண்டுகளும் - ஒப்பீடு 226

4.6.1 நாயன்மார்களின் சமயம் சார்ந்த சரியை தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமயம் சார்ந்த சரியை தொண்டுகளும் - ஒப்பீடு 228

4.6.2 நாயன்மார்களின் சமுதாயம் சார்ந்த சரியை தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமுதாயம் சார்ந்த சரியை தொண்டுகளும் - ஒப்பீடு 256

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.7	தொகுப்புரை	268
இயல் 5	**ஆய்வுக் கருத்தாடல்களும் முடிவுகளும்**	
5.1	முன்னுரை	271
5.2	நாயன்மார்களின் சரியை தொண்டுகள் பற்றிய கலந்துரையாடல்	272
5.3	போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சரியை தொண்டுகள் பற்றிய கலந்துரையாடல்	279
5.4	நாயன்மார்களின் சரியை தொண்டுகள், போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சரியை தொண்டுகள் பற்றிய கலந்துரையாடல்	285
5.5	ஆய்வு விளைவு	290
5.6	தொடராய்வுக்கான பரிந்துரைகள்	292
5.7	தொகுப்புரை	293
மேற்கோள் பட்டியல்		295

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அட்டவணை பட்டியல்

அட்டவணை எண்		பக்கம்
3.1	ஆய்வுக்குட்படுத்தப்பட்ட இயக்கங்களில் தகவல் கொடுத்தோரின் பெயர்களும் அவர்களின் பொறுப்பு அல்லது பதவியும்	100
3.2	சரியை மார்க்கத்தைக் கடைபிடித்துத் தொண்டாற்றி நாயன்மார்கள்	101
3.3	சரியை நெறியில் ஒழுகிய நாயன்மார்களும் பெரிய புராணப் பாடல் எண்ணிக்கையும்	102
3.4	சரியை தொண்டுகளும் அதனைக் கடைபிடித்த நாயன்மார்களும்	102
3.5	அடியார்களுக்கு அமுது படைத்த நாயன்மார்கள்	102
3.6	அடியார்களுக்குப் பொருளுதவி செய்த நாயன்மார்கள்	103
3.7	ஆலயத் திருப்பணிகள் ஆற்றிய நாயன்மார்கள்	103
3.8	பிறத் தொண்டுகள் ஆற்றிய நாயன்மார்கள்	103
3.9	போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமயத் தொண்டுகளின் ஒப்பீடு	105
3.10	போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமுதாயத் தொண்டுகளின் ஒப்பீடு	105
4.1	சரியை மார்க்கத்தைக் கடைபிடித்துத் தொண்டாற்றி நாயன்மார்கள்	121
4.2	சரியை நெறியில் ஒழுகிய நாயன்மார்களும் பெரிய புராணப் பாடல் எண்ணிக்கையும்	123

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.3	சரியை தொண்டுகளும் அதனைக் கடைபிடித்த நாயன்மார்களும்	126
4.4	அடியார்களுக்கு அமுது படைத்த நாயன்மார்கள்	133
4.5	அடியார்களுக்குப் பொருளுதவி செய்த நாயன்மார்கள்	148
4.6	ஆலயத் திருப்பணிகள் ஆற்றிய நாயன்மார்கள்	168
4.7	பிறத் தொண்டுகள் ஆற்றிய நாயன்மார்கள்	179
4.8	மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவையின் சமயத் தொண்டுகள்	193
4.9	போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகத்தின் சமயத் தொண்டுகள்	200
4.10	போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகத்தின் சமயத் தொண்டுகள்	203
4.11	போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமயத் தொண்டுகளின் ஒப்பீடு	205
4.12	மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவையின் சமுதாயத் தொண்டுகள்	210
4.13	போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகத்தின் சமுதாயத் தொண்டுகள்	213
4.14	போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகத்தின் சமுதாயத் தொண்டுகள்	218
4.15	போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமுதாயத் தொண்டுகளின் ஒப்பீடு	221
4.16	நாயன்மார்களின் சமயம் சார்ந்த சரியை தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமயம் சார்ந்த சரியை தொண்டுகளும் - ஒப்பீடு	229
4.17	நாயன்மார்களின் சமுதாயம் சார்ந்த சரியை தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமுதாயம் சார்ந்த சரியை தொண்டுகளும் - ஒப்பீடு	257

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

படவரைவு பட்டியல்

படவரைவு எண்		பக்கம்
1.1	ஆய்வுக் கருத்து கட்டமைப்பு	13
3.1	ஆய்வு வடிவமைப்பு	93
3.2	தகவல் புலனாய்வு முறை	107
3.3	ஆய்வுக் கோட்பாடு கட்டமைப்பு	113
3.4	ஆய்வு நடைமுறை	114

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எழுத்துச் சுருக்கக் குறியீட்டு விளக்கம்

குறள்	திருக்குறள்
தி.தொ.பு	திருத்தொண்டர் புராணம்
புறம்	புறநானூறு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இயல் 1

முன்னுரை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.1 அறிமுகம்

இவ்வியல் ஆய்வைப் பற்றிய முழுக் கண்ணோட்டத்தைக் காட்டுகின்றது. இவ்வாய்வின் உள்ளடக்கம் பல்வேறு கூறுகளில் பகுக்கப்பட்டுள்ளது. அவை ஆய்வு பின்னணி, ஆய்வுச் சிக்கல், ஆய்வு நோக்கம், ஆய்வு வினா, ஆய்வின் முக்கியத்துவம், ஆய்வு எல்லை, கருச்சொல் விளக்கம், முடிவுரை என்பனவாகும்.

இவ்வியல் ஆய்வின் ஒட்டுமொத்தக் கருத்துகளையும் எடுத்தியம்பும் வகையில் அமைந்துள்ளது. மேலும், ஆய்வுச் சிக்கலுக்கு வித்திட்ட காரணிகளும் இங்கு விவரிக்கப்பட்டுள்ளன. இந்தக் காரணிகளின் அடிப்படையில் ஆய்வு நோக்கமும் அதைச் சார்ந்த வினாக்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேலும், ஆய்வின் முக்கியத்துவமும் இவ்வியலில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இவ்வாய்வின் முக்கியத்துவம் சமுதாய நலன் கருதி வாழ்வியலை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்ள உதவும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் ஆய்வு எல்லை ஆய்வின் மூலங்களை விளக்குகிறது. தவிர, இதில் சில சமயக் கோட்பாடுகளும் விளக்கப்பட்டுள்ளன.

இதைத் தவிர்த்து, கருச்சொற்கள் விளக்கம் எனும் பகுதியில், ஆய்வில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட சில கருச்சொற்களையொட்டித் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இறுதியாக, முடிவுரை ஆய்வு பின்னணி, சிக்கல், நோக்கம் ஆகியவற்றைத் தொகுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.2 ஆய்வுப் பின்னணி

உலகின் தொன்மையான சமயமாகச் சைவ சமயம் திகழ்கிறது. உலகிலுள்ள மற்ற நெறிகளைப் பிழையெனாது சித்தாந்த நெறியென்றும் சிவநெறியென்றும் போற்றப்படுகிறது சைவ சமயம். இச்சமயம் தென்னாடுடைய சிவபரம்பொருளை முழுமுதற் பொருளாகக் கொண்டது எனச் சைவ சமய வரலாறு எனும் நூலில் ந.சி.கந்தையா கூறியிருக்கிறார் (2010). அன்பு நெறியான சைவ சமய நெறியின் தோற்றம், அடியார்கள் இறைஞானத்தால் அவர்கள் உள்ளத்தினின்றும் பாடல்களாகவும் பாசுரங்களாகவும் உருபெறக் காரணமாக அமைந்தது. இறைவனின் பெருங்கருணையினைப் பெற்ற அடியார்கள் உலக மக்களும் உய்யும் பொருட்டு இறைபேற்றினை அருளிச் செய்தவையே பக்தி இலக்கியங்களாக விளங்குகின்றன

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

(குன்றக்குடி அடிகளார், 2001). இத்தகு பக்தி இலக்கியங்கள் இம்மையிலும் மறுமையிலும் கிடைக்கப்பெறும் இன்பத்தைத் தரவல்லவை (வெள்ளைவாரணர், 2002).

சைவ சமயத்திற்கு அடிப்படையாகத் திகழ்வது பன்னிரு திருமுறைகளாகும். அவற்றுள் பன்னிரண்டாம் திருமுறையாகப் போற்றப்படுவது பெரிய புராணமாகும். பன்னிரு திருமுறைகளில் பெரியதும் சிறந்ததுமான பெரிய புரணத்திற்கு நிகர் எதுவுமில்லை. தமிழ் நாட்டில் வரலாற்றுக்குட்பட்ட காலத்தில் ஊரும் பேரும் வேறுபட்டுப் பல்வகை மரபுகளில் தோன்றி பயன் கருதாது பேரன்புடன் இறைத்தொண்டாற்றிய சிவனடியார்களின் வரலாற்றைக் கூறுவதே பெரிய புராணம் (முத்துக்கருப்பன், 2010).

பெரிய புராணம் 63 நாயன்மார்களின் இறைத்தொண்டினை நன்கு படம் பிடித்துக் காட்டுகின்றது. இவர்கள் அறநெறி, அன்புநெறி எனும் பாணியில் தொண்டாற்றிப் பேரின்பமாகிய வீடு பேற்றினை அடைந்தனர். அவ்வாறு வீடு பேறு அடைய அவர்கள் ஒவ்வொருவரும் சமயம் காட்டும் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றனைப் பிறழாது கடைப்பிடித்து வந்தனர். அந்த அடிப்படைக் கொள்கைகள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று வரையறுக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் அடியார்கள் மேற்கண்ட ஏதாகிலும் ஒரு மார்க்கத்தின் துணையுடன் தங்களின் பக்தி வாழ்க்கையை மேற்கொண்டு ஒழுகி வந்தனர் (ஞானசம்பந்தன், 1999).

சத்குரு குருதேவ் முத்து கொத்தள மாரியப்ப செல்வராஜ் (மு.மா.செ) இறைவனை அடையும் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நால்வகை மார்க்கங்களைச் சிவநெறிச் சமயம் உணர்த்துகிறது எனக் குறிப்பிடுகின்றார் (2015).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அதில் சரியை திருக்கோயில் தொண்டுகளை உள்ளடக்கியது என்பதை,

நாடு நகரமும் நற்றிருக் கோயிலுந்
தேடித் திரிந்து சிவபெரு மானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே
(திருமந்திரம், 1418)

(**விளக்கம்**: இதன்கண் சீலநெறி நிற்போர் திருத்தொண்டு ஓதப்பெறுகின்றது. சிவபெருமான் மெய்யடியார்கள் உய்யுமாறு ஆண்டாண்டு வெளிப்பட்டருள்கின்ற திருநாடு திருநகரம் திருக்கோவில் முதலியவற்றைத் தலையன்பால் தேடித்திரிந்து 'ஆலயம் தானும்அரனெனத் தொழுமே' என்றபடி இடையறாது தொழுவர். அங்ஙனம் தொழுவார்க்கு அகம்புறமாய் இன்றியமையாதன முறையே பாடுதலும் பணிதலுமாம். அங்ஙனம் செய்தார் நல்லுள்ளங்களைச் சிவபெருமான் திருக்கோவிலாகக் கொண்டருள்வன்.)

எனும் திருமந்திரப் பாடல்வழி எடுத்தியம்புகிறார் திருமூலர்.

முன்பிறப்பின் வினைப்பயனாலேயே உயிர்கள் ஒவ்வொன்றும் மீண்டும் மீண்டும் பிறவி எடுக்கின்றன. 'பண்டு செய்த பல வினையின் பயன்' (திருமுறை 5:47:1537) என இதனையே திருநாவுக்கரச சுவாமிகள் குறிப்பிடுகின்றார். சோமசுந்தரம் அவர்களும் இதையே உயிர்கள் முக்திப் பேற்றை அடையும் வரை பிறப்பெடுத்துக் கொண்டேயிருக்கும் என்று கூறியுள்ளார் (2001). எனவே, உலக வாழ்வில் உழன்று கொண்டிருக்கும் உயிர்கள் அனைத்தும் இறைவனின் அடியவராகிவிடின் பிறவித் துயரும் வாழ்க்கைத் துயரும் நீங்கும் என்பதை,

வண்டுலா மலர் செஞ்சடை ஏகம்பன்'
தொண்டனாய்த் திரியாய் துயர் தீர்கவே'
(திருமுறை 5:47:1537)

(**விளக்கம்**: நெஞ்சமே! நீ முற்பிறவிகளிற் செய்த பழவினைகளின் பயனைக் கண்டும் கண்டும் பின்னும் களிப்புற்றுக் கெடுகின்றனையே, வண்டு உலாவுகின்ற மலரையணிந்த செஞ்சடை உடையவனாகிய திருவேகம்பத்துப் பெருமானுக்குத் தொண்டனாகி உன் துயர்கள் தீரும்பொருட்டுத் திரிவாயாக. கு-ரை; பண்டு செய்த பழவினை-முற்பிறவிகளிற் செய்த சஞ்சிதம். பயன்-பிரார்த்தம். கண்டும் கண்டும்-அனுபவத்தால் பார்த்தும் பார்த்தும். களித்தி-களிப்படைகின்றாய். காண்-அசை. வண்டுலா மலர்-தேனுண்ண வண்டுகள் உலவுகின்ற மலர்கள். திரியாய்-திரிவாயாக. துயர்தீர -அத்துன்பம் நீங்க.)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எனும் பாடல்வழி உணர்த்துகிறார் திருநாவுக்கரசர். செந்தமிழரின் இறை கொள்கையான சைவ சித்தாந்தம் பதியாகிய இறைவனை அடைய பசுக்களான உயிர்கள் தம்மைப் பற்றியிருக்கும் பாசம் எனும் அழுக்கினை அல்லது மலத்தினை முதலில் நீங்கப் பெற வேண்டும் என்றுரைக்கின்றது. சைவ சித்தாந்தம் குறிப்பிடும் சீலம், நோன்பு, செறிவு, அறிவு (சரியை, கிரியை, யோகம், ஞானம்) என்கிற நன்னெறி நான்கினையும் பின்பற்றினாலேயே உயிர்கள் மலம் நீங்கி இறைவனை அடைய இயலும் என்கிறார் ந.தர்மலிங்கம் (2012).

பெரிய புராணம் இறையின்பம் எய்திய 63 நாயன்மார்களும் சித்தாந்தக் கொள்கைகளான சரியை, கிரியை, யோகம், ஞானமாகிய நான்கு மார்க்கங்களில் ஒன்றனை உறுதியாகக் கடைபிடித்தவர்களேயாவர் என தி.என். இராமசந்திரன் (2005) கூறுகிறார். இவற்றுள் சரியை மார்க்கமே பெரும்பான்மையிலான நாயன்மார்களை முக்திக்கு அழைத்துச் சென்றுள்ளது. நாயன்மார்களில் பலரும் சரியை எனும் தொண்டு நெறிக்கு உட்பட்ட பல செயல்களைச் செய்து அதன் வழியிலே உறுதியாய் நின்று இறைவனை அடைந்தனர் என்பதே கலியாணசுந்தரனாரின் கருத்து (2014).

எனவே, இந்த ஆய்வில் சரியை மார்க்கத்தைப் பின்பற்றி இறைவனின் அன்பிற்குத் தங்களை ஆளாக்கிக் கொண்டு பேரின்பமாகிய வீடு பேற்றினை அடைந்த நாயன்மார்களின் வரலாறுகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அன்பு நெறியான சிவநெறியில் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட நாயன்மார்கள் அக்கால மக்களுக்கு மட்டுமின்றி இக்கால மானுட குலத்தின் நன்மை கருதியும் தொண்டாற்றியுள்ளனர் என்று பகர்கின்றார் மணிவாசகன் (2010).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

‘அன்பே சிவம்’ என்பது நாம் அறிந்த ஒன்றே. ஆதலின், பற்பல விதிமுறைகளை வகுத்துக் கொண்டு இறைவனை வழிபடுவதைக் காட்டிலும் அவரவர்க்கு இயன்ற வகையில் எளிய முறையில் அன்பு நெறியில் சிறு சிறு தொண்டுகள் புரிந்தும் இறைவனிடத்தில் ஓர் உறவினை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று சைவ சித்தாந்தம் தெளிவுறுத்துவதாக ந.தர்மலிங்கம் (2012) கூறியுள்ளார். மேலும், இவ்வுலக வாழ்க்கையில் அன்பு நெறியில் தொண்டாற்றி இறைவனின் திருவடி நீழலில் ஒன்றி விட்ட நாயன்மார்களின் வாழ்வியல் நெறிகளைப் பின்பற்றுவதற்கும் சைவம் சிந்தாந்தம் பரிந்துரைக்கின்றது என்கிறார் அவர் (2012).

சைவ சித்தாந்தக் கொள்கையான சரியையின் அடிப்படையில் ஒன்றான எளிய முறையிலான தொண்டுகள் இன்றளவும் நம் சமுதாயத்தின் ஒரு கூறாகவே திகழ்ந்து வருகின்றன. தற்போதைய சூழலில் தனிமனிதர்கள் மட்டுமின்றி குடும்பம், சமுதாயம், அரசு என அனைத்தும் தத்தம் சக்திக்கு ஏற்றவாறு தொண்டுகள் ஆற்றுவதைக் கடமையாகக் கொண்டுள்ளன. இதில் சில அரசு சாரா இயக்கங்களும் விதிவிலக்கல்ல. உலகளாவிய நிலையில் பல அரசு சாரா இயக்கங்கள் மக்களுக்குத் தொண்டாற்றுவதையே தங்களின் முக்கியக் குறிக்கோளாக எண்ணிச் செயல்படுகின்றன என்கிறார் நோர்மா மன்சூர் (Norma Mansor, 2014).

மலேசியாவைப் பொருத்த மட்டிலும், பல அரசு சாரா இயக்கங்கள் சமுதாயப் பணிகளைச் செய்து வந்துள்ளன. இது போன்ற இயக்கங்களின் நடவடிக்கைகள் மலேசிய அமைப்புகள் பதிவு இலாகாவின் கட்டுப்பாட்டுக்குள் உட்பட்டதாக அமைந்துள்ளன (மலேசிய அமைப்புகள் பதிவு இலாகா, 2017). ‘தொண்டு’ என்பதையே தங்களின் கருப்பொருளாகக் கொண்டு இந்தியச் சமுதாயத்திற்குப் பல தொண்டுகள் புரிந்து வரும் ‘மலேசிய இந்து சங்கம்’ இங்குக் குறிப்பிடத்தக்கது. சமுதாயப் பணிகளைச் செவ்வனே

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

செய்யும் மலேசிய இந்து இளைஞர் மணிமன்றம், மலேசிய இந்திய இளைஞர் இயக்கம் போன்றவையும் இதற்குச் சளைத்தவையல்ல. மலேசியா உட்பட உலகளாவிய நிலையில் இது போன்ற அரசு சாரா இயக்கங்கள் மக்களின் நல்வாழ்விற்குத் துணைபுரியும் பல தரப்பட்ட உதவிகளைச் செய்வதற்காகவே தோற்றுவிக்கப்பட்டுள்ளன என நோர்மா மன்சூர் தெரிவிக்கிறார் (Norma Mansor, 2014).

பெரிய புராணம் தொடர்பான பல ஆய்வுகள் இதற்கு முன்பதாகவே மேற்கொள்ளப்பட்டிருப்பினும் அவை யாவும் அடியார்களின் பக்தி நெறியை மட்டுமே காட்டும் வகையில் அமைந்துள்ளன. நாயன்மார்களின் தொண்டு நெறியைப் பற்றி உரைப்பதாக அமையவில்லை என அ.ச.ஞானசம்பந்தன் (1994) கூறியுள்ளார். சித்தாந்தக் கொள்கையான சரியை மார்க்கத்தின் அடிப்படையில் நாயன்மார்களின் தொண்டுணர்வையும் மக்கள் தொண்டைக் கருத்தில் கொண்டு இயங்கும் இக்கால அரசு சாரா இயக்கங்களின் சீரிய பணிகளையும் எடுத்தியம்பும்படியான ஆய்வுகள் இன்னும் இல்லை. தொண்டு நெறியின் அடிப்படையில் இல்லாத வாழ்வு சிறந்த வாழ்வாகாது என்பது க.திரவியம் (2001) அவர்களின் கூற்றாகும். தொண்டு மக்களின் நல்வாழ்வுக்கு வழிவகுப்பதோடு உலக நன்மைக்கும் வித்திடும். இதனையே நாயன்மார்களின் வாழ்வும் சித்திரிக்கின்றது. எனவே, இவ்வாய்வில் பக்தி நெறியில் நின்று தன்னலம் கருதாது பிறர் நலம் போற்றித் தொண்டாற்றிய 63 நாயன்மார்களின் சரியை தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சேவைகளும் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.3 ஆய்வுச் சிக்கல்

மானுட வாழ்க்கையினை நெறிப்படுத்தி, ஒழுக்கமிக்கவர்களாக இப்பூவுலகில் வாழவும் மக்கள் யாவரும் ஒன்றே எனும் குறிக்கோளை அடையவும் வழிகாட்டி நிற்பவை பக்தி இலக்கியங்களே என்கிறார் அ.மு.பரமசிவானந்தம் (1972). ஒவ்வொருவரும் அவரவர் விருப்பத்திற்கேற்பத் தங்களால் இயன்ற எளிய முறையில் எல்லாம் வல்ல பரம்பொருளிடம் பக்தி செலுத்தி ஈடுபடும் பொழுது அமைதியான வாழ்வு நிலைபெறுவது திண்ணம். அத்தகையதொரு அறவாழ்வை உணர்த்திக் காட்டுவதற்கும் சைவ சித்தாந்தம் கூறும் தொண்டு நெறியைக் கடைப்பிடித்து ஒழுகவும் சமுதாயக் கீழ்மைகள் மறைந்து போகவும் பெரிய புராணம் வழிகாட்டுகின்றது.

பெரிய புராணம் 63 நாயன்மார்களின் வரலாற்றினைத் தொகுத்துக் கூறும் களஞ்சியமாக மட்டுமல்லாது சிந்தாந்தக் கொள்கைகளான சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றைப் பறைசாற்றும் களமாகவும் திகழ்கிறது. தமிழ் இலக்கிய ஆய்வுலகில் பெரிய புராணம் பல நோக்கங்களுக்காக உட்படுத்தப்பட்டு வந்துள்ளது. இருப்பினும், இந்நன்னெறி நான்கினையும், குறிப்பாகச் சரியை எனப்படும் அடியார்களின் தொண்டு நெறி குறித்த ஆய்வுகள் மிகக் குறைவாகவே உள்ளன. பெரிய புராணம் ஒன்றுதான் அடியார்களின் தொண்டின் மாண்பை அக்காலக்கட்டத்தில் எடுத்தியம்பியது என்பதை அ.ச.ஞானசம்பந்தன் குறிப்பிடுகின்றார் (1994).

அக்காலத்தில் அடியார்களின் தொண்டு பெரும்பாலும் கோயில் தொண்டாகவே இருந்ததெனினும் மக்களின் துயர் தீர்த்தது. 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' எனும் அடிப்படையில் அடியார்களின் தொண்டு மக்களைச் சென்றடைந்தது. அதே நிலையில் இன்று உலகளாவிய நிலையில் தொண்டுகள் என்பது மனிதக் குலத்திற்காகச்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

செய்யப்படும் அடிப்படைத் தொண்டாக மாறியுள்ளது. மக்களுக்காகச் செய்யப்படும் இத்தகையத் தொண்டுகள் இறைவனையே அடைகிறது என்றும் கூறலாம் (முத்துசண்முகம், 1989). பணம், பொருள், நேரம், சேவை ஆகியவற்றைப் பேறு குறைந்தவர்களுக்கு அளிப்பதே தொண்டு எனப்படுவதாக ஜோசப் மெத்தியூ (2000) குறிப்பிடுகின்றார். தொண்டுணர்வு அடிப்படையில் செய்யப்படும் சேவையினால் வாழ்வும் திருப்திகரமாக அமையும் எனவும் குமரன் இராமையா (2015) மலாயாப் பல்கலைக்கழகத் தமிழ் பேராய்வு ஆய்விதழில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, தற்காலச் சூழலில் தொண்டு நெறி என்பது சமுதாயத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளை அறிந்து திறந்த மனத்தோடு சேவையாற்றவும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் வழிவகுத்துள்ளது (குமரன் இராமையா, 2015). இக்காலக்கட்டத்தில் அரசு சாரா இயக்கங்கள் தொண்டு எனும் அடிப்படையில் பல வழிகளில் மக்களின் இன்னல்களைத் தீர்ப்பதில் பங்காற்றி வந்துள்ளன என்பது நோர்மா மன்சூர் அவர்களின் கருத்தாகும் (Norma Mansor, 2014).

உலகளாவிய நிலையில் இயங்கி வரும் அரசு சாரா இயக்கங்கள் பலவும் உள்நாட்டிலும் தொண்டாற்றுவதைத் தங்கள் கடமையாகக் கொண்டுள்ளன. இவ்வியக்கங்கள் தேசிய அளவில் நின்றுவிடாமல் மாநிலம், வட்டாரம் எனச் சேவைகள் செய்து வந்துள்ளன. அந்த வகையில் போர்ட்டிக்சனில் செயல்படும் பல அரசு சாரா இயக்கங்களுள் இந்தியச் சமுதாயத்தைச் சார்ந்து தொண்டாற்றி வரும் சில இயக்கங்கள் இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இந்த இயக்கங்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு செயல்படினும் அவை மக்களின் மேம்பாட்டிற்கு வழிவகுக்கவில்லை என்பது இங்குள்ளோரின் பரவலான கருத்து. மேலும், இவர்களின்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொண்டு சரியை அடிப்படையில் அமைந்துள்ளனவா என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது.

ஆகவே, மானுட வாழ்க்கையே இயந்திரத் தன்மையுடையதாக மாறிக் கொண்டிருக்கும் இன்றைய சூழலில் தன்னலமின்றித் தொண்டாற்றும் எண்ணம் மேலோங்கவும் சமுதாயத்தின் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்யவும் எத்தகைய சேவைகள் வழிகோலும் என்பதை ஆராயவும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்தத் தொண்டுணர்வின் மூலமாக மக்களின் மனங்களைச் செம்மைப்படுத்தி வாழ்க்கையைச் சீராக அமைத்துக் கொள்ள முடியும் என்பதாலும் இவ்வாய்வு இன்றியமையாத ஒன்றாகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.4 ஆய்வின் நோக்கம்

இந்த ஆய்வு பெரிய புராணத்தில் நாயன்மார்களின் சரியை தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சரியை தொண்டுகளும் ஓர் ஆய்வு எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் நோக்கம் பின்வருமாறு அமைந்துள்ளது:

i. பெரிய புராணத்தில் நாயன்மார்களின் சமயம், சமுதாயம் சார்ந்த சரியை தொண்டுகளை அடையாளம் காணுதல்.

ii. போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமயம், சமுதாயம் சார்ந்த சரியை தொண்டுகளை அடையாளம் காணுதல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

iii. பெரிய புராணத்தில் நாயன்மார்களின் சமயம், சமுதாயம் சார்ந்த சரியை தொண்டுகளையும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமயம், சமுதாயம் சார்ந்த சரியை தொண்டுகளையும் ஒப்பீடு செய்தல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.5 ஆய்வு வினா

ஆய்வு வினா ஆய்வின் நோக்கத்தை முன்னோடியாகக் கொண்டே அமைக்கப்பட்டுள்ளது. ஆய்வு வினாக்கள் பின்வருமாறு:

i. சைவ சித்தாந்தம் காட்டும் சரியை மார்க்கம் யாது?

ii. பெரிய புராணத்தில் நாயன்மார்கள் சரியை தொண்டுகள் யாவை?

iii. போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமயத் தொண்டுகளும் சமுதாயத் தொண்டுகளும் யாவை?

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


iv. போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் தொண்டுகள் பெரிய புராணம் காட்டும் தொண்டுகளை அடிப்படையாகக் கொண்டு திகழ்கின்றதா?

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.6 ஆய்வுக் கருத்துக் கட்டமைப்பு

படவரைவு 1.1 ஆய்வுக் கருத்துக் கட்டமைப்பைக் காட்டுகிறது.



படவரைவு 1.1. ஆய்வுக் கருத்துக் கட்டமைப்பு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.7 ஆய்வின் முக்கியத்துவம்

ஓர் இலக்கியம் அது சார்ந்த சமுதாயத்திற்கு நல்லறங்களைக் காட்டும் அறநூலாகவும் மானுட வாழ்க்கையின் மேன்மையான நிலைக்கு வழிகாட்டும் வாழ்வியல் களஞ்சியமாகவும் திகழ்வது அவசியமாகிறது. இவ்வாய்வுக்குக் களமாக விளங்கும் பெரிய புராணம் பக்தி நெறியும் தொண்டு நெறியும் ஒருங்கே அமையப்பெற்ற மாக்கதையாகும். அதன் அடிப்படையில் சரியை தொண்டு பற்றிய இந்த ஆய்வு மேலும் சைவ சமயத்தின் சிறப்புகளை மேலோங்கச் செய்யும்.

தமிழ் இலக்கிய ஆய்வுலகில் பெரிய புராணம் பல ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டிருப்பினும் அவை யாவும் பெரும்பாலும் ஆன்மிகத்தை ஒட்டியே அமைந்துள்ளன. பெரிய புராணத்தில் சமுதாய நிலைகள், அறம், நீதிமுறைமை போன்றவையே அதிகம் பேசப்பட்டுள்ளன. இறைவனை அடையும் எளிய வழியாகிய நாயன்மார்களின் தன்னலம் கருதாத் தொண்டு நெறி பெரிய புராணம் தோன்றுவதற்கு முன்னும் குறைவாகவே எடுத்தாளப்பட்டுள்ளது என்பதை அ.ச.ஞானசம்பந்தன் (1994) அவர்கள் விளக்கக் காணலாம். அதே வேளையில் இன்றைய சூழலில் காணப்பெறும் சமுதாயச் சேவைகளும் சமயம் சார்ந்த சேவைகளும் கவனத்தில் கொள்ளப்படவில்லை என்றே கூறலாம். எனவே, இவ்வாய்வு பேரின்பப் பேற்றை அடையும் சரியை தொண்டை அடையாளங்காணும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெரிய புராணத்தைப் பற்றிய தெளிவான விளக்கம் பெறவும் இவ்வாய்வு முக்கியமானதாகக் கருதப்படுகிறது. பெரிய புராணம் காட்டும் நாயன்மார்களின் சரியை தொண்டு இவ்வாய்வைப் படிப்போர்க்கு வாழ்வில் வழிகாட்டியாகத் திகழும். மேலும், இறைவனுக்கும் அவனது அடியார்களுக்கும் செய்யக்கூடிய எளிய முறையான

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொண்டுகளைப் பறைசாற்றும். இதன்வழி, ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற அளவுக்கு மக்களுக்குத் தொண்டாற்றுவதில் ஈடுபாடு காட்டுவர். அதே வேளையில் இம்மையிலும் மறுமையிலும் இறையின்பத்தைத் தரவல்ல தொண்டுணர்வோடு செயல்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

தவிர, அரசு சாரா இயக்கங்கள் மக்களுக்காக ஆற்றும் தொண்டுகளையும் இவ்வாய்வு அனைவரும் அறியும்படி செய்யும். இது போன்ற அரசு சாரா இயக்கங்களும் மக்களின் நல்வாழ்வைக் கருத்தில் கொண்டு மேலும் சீரிய பணிகளையும் சேவைகளையும் ஆற்றுவர் என்றும் உறுதியாக நம்பலாம். பெரிய புராணம் காட்டும் அறநெறியில் ஆற்றப்படும் தொண்டுகளினால் இவ்வியக்கங்கள் சாதி, சமய, மத பேதமின்றி தங்கள் சேவைகளை நிலைபெறச் செய்ய முடியும். இவ்வியக்கங்கள் மக்களின் நிலையறிந்து, தேவையறிந்து செயல்படவும் இந்த ஆய்வு வழிவகுக்கும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இதைத் தவிர்த்து ‘மக்கள் தொண்டே மகேசன் தொண்டு’ எனும் அடிப்படையில் ஒவ்வொருவரும் இனி சமுதாய மேம்பாட்டிற்குத் தொண்டாற்ற முன்வருவர் என்றும் நம்பலாம். நாயன்மார்களின் வரலாறு இவர்களுக்கு ஒரு முன்னோடியாக அமையும். மக்களுக்குச் செய்யப்படும் தொண்டுகள் யாவும் இறைவனையே சாரும் என்பதை உணரும் மனப்பக்குவமும் மேலோங்கும். இதனால் தனிமனிதனாகத் தொண்டாற்ற முடியாவிட்டாலும் நாடு தழுவிய நிலையில் இயங்கி வரும் அரசு சாரா இயக்கங்களோடு மக்கள் கைக்கோர்த்துச் செயலாற்ற இவ்வாய்வு துணைபுரியும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேலும், இவ்வாய்வானது இளையோர் சமுதாயத்திற்கு ஒரு தூண்டுகோலாகவும் அமையும். நிலையில்லா வாழ்வியல் கொள்கைகளில் ஈடுபாடு காட்டும் நம் இளையச் சமுதாயம் அறவாழ்வை உணர்ந்து நன்னெறியைக் கடைப்பிடித்து மேலோங்கவும் இது துணைபுரியும். இவர்களும் தங்களைத் தொண்டு நெறியில் அர்ப்பணித்துக் கொண்டு மக்களுக்குச் சேவையாற்றுவர் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இறுதியாக, தமிழ் இலக்கிய ஆய்வுலகில் பெரிய புராணம் பன்முக நோக்கில் உட்படுத்தப்பட்டு அதன் தனித்தன்மைகள் ஆராய்ந்து வெளிப்படவும் இவ்வாய்வு உதவும். சமுதாய நலன் கருதிய தொண்டுகளை வெளிக்கொணரவும் இந்த ஆய்வு ஏதுவாக அமையும். மேலும், இத்தலைப்பினை அடியொற்றி எதிர்காலத்தில் பல புதிய ஆய்வுக்களங்களும் உருபெறும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.8 ஆய்வு எல்லை

ஆய்வு முடிவுகள் பயனுள்ளதாக அமையும் நோக்கில் இவ்வாய்வு ஒரு குறிப்பிட்ட கோணத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. இதில் பெரிய புராணம் மூல நூலாக எடுத்தாளப்பட்டுள்ளது. பெரிய புராணம் 63 நாயன்மார்களின் வரலாற்றுத் தொகுப்பாகும். சேக்கிழாரின் பெரிய புராண நூலுக்குப் பலர் உரை எழுதியிருப்பினும் இவ்வாய்வில் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் 1972-ஆம் ஆண்டு வெளியீடு செய்த மங்கையர்கரசி அவர்களின் 'சேக்கிழார் பெருமான் அருளிய திருத்தொண்டர் புராணம்' எனும் நூல் முதன்மை ஆதாரமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வில் பெரிய புராணத்தில் இடம்பெறும் பாடல் எண் வரிசை இந்த நூலைப் பின்பற்றியே சுட்டப்பட்டுள்ளது. தவிர, பக்தி இலக்கியம் தொடர்பான நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கலைக்களஞ்சியங்கள் போன்றவையும் துணை ஆதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும், பெரிய புராணம் காட்டும் சரியை எனப்படும் தொண்டு நெறி மட்டுமே இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், போர்ட்டிக்சன் வட்டார அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் தொண்டுகளும் இங்குக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை, போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம், போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம் ஆகியவையே ஆய்வுக்குட்படுத்தப்பட்ட இயக்கங்களாகும். பெரிய புராணத் தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் தொண்டுகளும் சமயம், சமுதாயம் என்ற அடிப்படையில் மட்டுமே அடையாளம் காணப்பட்டுள்ளன. பெரிய புராணம் காட்டும் சரியை தொண்டுகளின் அடிப்படையில் இவ்வியக்கங்களின் தொண்டுகள் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டுள்ளன.

இதைத் தவிர்த்து, மெய்கண்டார் எழுதிய சைவ சித்தாந்தத்தின் துணையுடன் தொண்டு எனப்படும் சரியை அடிப்படையிலான கோட்பாடுகளை இவ்வாய்வு தாங்கி நிற்கிறது. எனவே, சைவ சித்தாந்தக் கோட்பாடுகளான பதி, பசு, பாசம் ஆகியவை மூன்றும் ஆய்வுக் கோட்பாடுகளாக எடுத்தாளப்பட்டுள்ளன. சமுதாயப் பணிகளை முன்நிறுத்தி மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வு பக்தி நெறி மார்க்கமும் சரியை எனப்படும் தொண்டு நெறி மார்க்கமும் எனும் அடிப்படையிலும் அமைந்துள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.9 கருச்சொல் விளக்கம்

இந்த ஆய்வில் பயன்படுத்தப்பட்ட சில கலைச்சொற்களின் விளக்கம் கீழ்க்கண்டவாறு அமைகிறது.

1.9.1 பெரிய புராணம்

திருத்தொண்டர் புராணம் எனும் இந்நூல் பெரிய புராணம், திருத்தொண்டர் மாக்கதை எனும் பெயர்களில் வழங்கப்படுகிறது. சேக்கிழார் இதற்கு இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம் என்பதாகும். இதனை,

> இங்கிதன் நாமம் கூறின் இவ்வுல கத்து முன்னாள்
> தங்கிருள் இரண்டில் மாக்கள் சிந்தையுட்சார்ந்து நின்ற
> பொங்கிய இருளை ஏனைப் புறவிருள் போக்குகின்ற
> செங்கதி ரவன்போல் நீக்கும் திருத் தொண்டர்புராணம் என்பாம்
> (தி.தொ.பு. 10)

(**விளக்கம்**: (இ-ள்.) இங்கு.....கூறின் - இப்புராணத்தின் பெயர் என்னென்று சொல்வோமாயின்; இவ்வுலகத்து....இரண்டில்அநாதிகாலந் தொட்டு இங்குள்ள இருவேறு இருள்களுள்ளே;ஏனை செங்கதிரவன்போல் - மற்றப் புற இருளைப்போக்குகின்ற சூரியனைப்போல; மாக்கள் இருளை -மாக்களின் உயிரினிடத்தே பொருந்தி நின்ற பொங்கிய அகஇருளாகிய ஆணவத்தைப் போக்குகின்ற; திருத்தொண்டர் புராணம் என்பாம் - திருத்தொண்டர் புராணம் என்று சொல்வோம்.)

எனும் பாடல் வழி அறியலாம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சேக்கிழார் பெரிய புராணம் பாடச் சுந்தரரின் திருத்தொண்டர் தொகையும் நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியும் துணை நூல்களாகப் பயன்பட்டன என்கிறார் வெள்ளைவாரணர் (2008). பயன் கருதாது பேரன்புடன் இறைவனை வழிபட்டு அவனருள் பெற்ற 63 நாயன்மார்களின் வரலாற்றுத் தொகுப்பே பெரிய புராணம் (இராசமாணிக்கனார், 1996).

சமண சமயம் மேலோங்கிக் கிடந்த காலக்கட்டத்தில் சேக்கிழார் பெருமான் மீண்டும் சைவம் தழைத்தோங்கவே பெரிய புராணம் பாடினார் என்கிறார் இராசமாணிக்கனார் (1996). 63 நாயன்மார்களின் வரலாற்றினை நன்கு ஆராய்ந்தறிந்த பின்னரே சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தைத் தில்லையில் அரங்கேற்றம் செய்ததாகக் கலியாணசுந்தரனார் குறிப்பிடுகின்றார் (2000).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பெரிய புராணம் 63 நாயன்மார்களின் வரலாற்றினை மட்டுமல்லாது சைவ சமயத்திற்குத் தொண்டு செய்த மேலும் ஒன்பது தொகையடியார்களையும் போற்றிப் புகழ்கின்றது. சைவ சமயத்தின் அடிப்படை நூல்களாக விளங்கும் பன்னிரு திருமுறைகளில் 12-வது திருமுறையாகப் பெரிய புராணம் விளங்குகிறது (கிருபானந்த வாரியார், 2003).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.9.2 நாயன்மார்கள்

தமிழ்நாட்டில் வாழ்ந்த சிவனடியார்கள் நாயன்மார்கள் என்றழைக்கப்படுகின்றனர். இறைவனின் திருவடியில் அன்பு செலுத்தித் தலைமை பேறு எய்தியவர்கள் நாயன்மார்கள். 'நாயன்' எனும் சொல் தலைவன் என்று பொருள்படும். நாயன்மார்கள் என்றால் தலைவர்கள் என்றும் கூறலாம். எனவே, இறைவன் என்கிற தலைவனைப் போற்றிய தலைவர்கள் என்பது சாலப் பொருந்தும். நாயன்மார் என்ற சொல்லுக்கு இன்னும் பலர் பலவாறு பொருள் கூறினும் கருத்து ஒன்றேயாகும் எனத் திரு.வி.கலியாணசுந்தரனார் (1922) நாயன்மார் திறம் எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

நாயன்மார் எனும் பெயர் தலைவர், கடவுளர், பெருமையிற் சிறந்தோர் என பொருள் கொண்டதாக இருப்பினும் பெரிய புராணத்தில் வரும் 63 தனியடியார்களையே சிறப்பாகக் குறிக்கிறது எனக் கலைக்களஞ்சியம் எனும் நூல் கூறுகின்றது (1954). தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில், பல்வேறு மரபுகளில், பல்வேறு சாதிகளில் தோன்றியவர்களே 63 நாயன்மார்கள் எனத் திரு.வி.கலியாணசுந்தரனார் (2014) மேலும் கூறுகிறார். இராசமாணிக்கனாரும் (1996) நாயன்மார்கள் அறுபத்து மூவரே எனக் கூறியுள்ளார். எனவே, வாழ்க்கை குறிக்கோளில் உறைப்பாய் நின்று தொண்டாற்றிச் சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்டவர்களை நாயன்மார்கள் என்றும் கூறலாம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.9.3 அடியார்கள்

அடியார்கள் எனும் சொல் ஒன்றுக்கு அடிமைப்பட்டவர் என்பதைக் குறிக்கும். அடியார்கள் கடவுளுக்கும் மக்களுக்கும் தொண்டு செய்பவர்கள் ஆவர். மேலும், சமய வேடம் தாங்கியவர்களையும் இச்சொல் குறிப்பதாக ஆறுமுகம் (1989) தமது ஆய்வில் குறிப்பிட்டுள்ளார். 'நான்' என்ற அகந்தையும் 'எனது' என்ற அகங்காரமும் அற்றவர்களே அடியார்கள். இவர்கள் இறைவனை வணங்க மன அடக்கம் வேண்டும் என்பதை நன்குணர்ந்தவர்கள். இறைவன்பால் காதல் கொண்டு பற்பல சோதனைகளையும் சாதனையாக்கியவர்கள் மட்டுமே அடியார்கள் என வழங்கப்பெறுவர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அடியார்கள் அன்பே வடிவானவர்கள்; தங்களது உடல், பொருள், ஆவி அனைத்தையும் இறைவனுக்கே அர்ப்பணித்து வாழ்ந்தவர்கள்; இறையடியார்களிடத்தில் இறைவனைக் காணும் மனப்பக்குவம் உடையவர்கள். தங்கள் மேனியில் பூசும் திருநீற்றைப்போல் புனிதமானவர்கள் எனச் சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தில் கூறுகிறார். மேலும், அடியார்கள் தொண்டு செய்வதையே குறிக்கோளாகக் கொண்டவர்கள். தொண்டு நெறியைக் கடைபிடித்தவர்களே அடியார்கள் எனவும் அ.ச.ஞானசம்பந்தன் (1999) பெரிய புராணம் - ஓர் ஆய்வு எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். எனவே, இறைவனின் பெயரால் உயிர்களுக்குத் தொண்டு செய்பவர்களை அடியார்கள் என்பது தகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.9.4 சித்தாந்தம்

சிவனை முழுமுதற் பொருளாக எண்ணி வழிபடுகின்ற சமய நெறியான சைவ சமயத்துக்கு அடிப்படையாக மெய்கண்டாரின் சைவ சித்தாந்தம் எனும் தத்துவப் பிரிவு விளங்குகிறது. ஆன்மிகம் தொடர்பான பல்வேறு கருத்துகளையும் ஆராய்ந்து அதன் தொடர்பாகக் கடவுள், உயிர், உலகம் பற்றியக் கருத்துகளைச் சிந்தித்து முடிந்த முடிவாகக் காணப்பட்டதுதான் சித்தாந்தம் என்கிறார் நாகப்பன் ஆறுமுகம் (2008).

சிந்தித்துக் கண்டறிந்த முடிவான உண்மையே சித்தாந்தம் என்று பொருள்படும் (அந்தம் - முடிவு). சைவ ஆகமங்கள் குறிப்பிடும் கடவுள் கொள்கைகளைச் சித்தாந்தம் எனத் திருமூலர் குறிப்பிடுகிறார். திருமூலர்தான் சிந்தாந்தம் எனும் சொல்லை முதன்முதலில் சமயத்துறையில் பயன்படுத்திய அறிஞராவார் (நாகப்பன் ஆறுமுகம், 2008).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பதி , பசு , பாசம் ஆகிய மூன்றையும் என்றும் நிலையான பொருள்களாக ஏற்றுக் கொள்வது சைவ சித்தாந்தத்தின் அடிப்படையாகும் (ஆனந்தரசன், 2003). சைவ சித்தாந்தத்தின்படி இம்மூன்றும் முதலும் முடிவும் இல்லாதவை. இதனால், இம்மூன்றையும் யாரும் படைத்ததில்லை என்கிறது சைவ சித்தாந்தம். ஆயினும், என்றும் நிலையாக உள்ள இம்மூன்றும் வெவ்வேறு தன்மைகளைக் கொண்டவை.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.9.5 பதி

பதி என்பது தலைவன், அரசன், பிரபஞ்சத்தின் ஆட்சியாளன் (நந்தலாலா, 2008). சைவ சித்தாந்தத் தத்துவம் பதியை இறைவன் என்கிறது. அறிவு வடிவாகவே இருக்கும் இறைவன் எல்லாம் அறிந்தவன்; எங்கும் நிறைந்திருப்பவன்; அளவற்ற வல்லமை பெற்றவன். இந்தப் பிரபஞ்சத்தை ஒரு மாபெரும் சக்தி படைத்துக் காப்பாற்றுகிறது என்பதே தமிழர்களின் நம்பிக்கை (நிர்மலா தேவி, 2013).

சைவ சமயம் பதியாகிய இறைவனே பிரபஞ்சத்தைப் படைத்தான் என்கிறது. தனது குறைகளையறிந்த மனிதனே பூரணத்துவம் பெற்ற பதியை உணர முடியும் எனக் கூறுகிறார் முனைவர் நாகப்பன் ஆறுமுகம் (2008). பதியாகிய இறைவன் ஒவ்வொரு ஆன்மாவுக்குள்ளும் உறைகின்றான்; தவிர மனிதனின் கற்பனைக்கெட்டாதவாறு எங்கும் வியாபித்திருக்கின்றான் எனத் திருமந்திரம் இயம்புகிறது.

1.9.6 பசு

பசு எனும் சொல் உயிர்களைக் குறிக்கும். பசுவாகிய உயிர்கள் ஆணவத்தால் கட்டப்பட்டுக் கிடப்பவை. உயிர், ஆன்மா, ஆத்மா, அணு என்றும் சொல்லப்படும் (நாகப்பன் ஆறுமுகம், 2008). உயிர்கள் எண்ணிலடங்காதவை என்பதால் சைவ மெய்கண்ட நூல்கள் அவற்றை எண்ணிலி என்கின்றன. உயிர்கள் அநாதியானவையே என்றும் இறைவனால் தோற்றுவிக்கப்படாதவையே என்றும் சைவ சித்தாந்தம் கூறுவதாக ந.தர்மலிங்கம் (2012) பகர்கின்றார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேலும் அவர் உயிர்கள் இயல்பாகவே அறிவுள்ளவை; ஆனால் மலங்களினால் பிணிக்கப்படும்போது அவற்றின் அறிவு மறைக்கப்படுகிறது என்கிறார் (2012). எனவே, மலங்களின் பிணிப்பிலிருந்து தாங்களாகவே விடுபடுவதற்கு உயிர்களால் முடியாது. இறைவனின் துணையுடனேயே மலங்களின் பிடியிலிருந்து உயிர்களால் விடுபட முடியும். இறைவன் உயிர்களுக்கு உடலும் உலகமும் கொடுத்துச் செயல்படுத்துகிறான். அதன் மூலம் உயிர்களின் அறிவு, இச்சை, செயல் ஆகியவற்றை இயங்கச் செய்கின்றான். (நாகப்பன் ஆறுமுகம், 2008).

1.9.7 பாசம்

பாசம் எனும் சொல் கட்டு அல்லது தளை என்று பொருள்படும். பாசம் உயிர்களின் அறிவு, இச்சை, செயல் ஆகியன இயங்காமல் கட்டிப்போடுகின்றது. உயிர்களைப் பற்றியிருக்கும் அழுக்கு அல்லது மலமே பாசம் என்கிறார் ந.தர்மலிங்கம் (2012). மலங்கள் சடப்பொருள்கள்; அறிவற்றவை; இம்மலமானது மூவகைப்படும் என்பதால் மும்மலம் எனவும் குறிப்பிடப்படுகின்றது. அவை ஆணவம், கன்மம், மாயை என்பனவாகும்.

ஆணவ மலம் உயிர்களை ஆரம்பம் முதலே பிணித்து அவற்றின் அறிவை மறைக்கும் வல்லமை கொண்டது. இதுவே உயிர்களை அறியாமை எனும் பள்ளத்தில் தள்ளுகின்றது (தர்மலிங்கம், 2012). இதனால் உயிர்கள் இறைவனையும் அடைய முடியாமல் நிற்கின்றன. இதனாலேயே இறைவன் உயிர்களுக்குக் கன்மம், மாயை என்ற இரு மலங்களையும் கொடுத்து ஆணவத்தைப் போக்குகின்றான் எனச் சைவ சித்தாந்தம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கூறுவதாக மேலும் அவர் (2012) குறிப்பிடுகின்றார். எனவே, உயிர்கள் இறைவனை நெருங்கும்போது பாசம் தன்னாலேயே நீங்கிவிடும்.

1.9.8 சரியை

சரியை 'தொண்டு நெறி' அல்லது 'தாச நெறி' என்றும் அழைக்கப்படுகிறது (நாகப்பன் ஆறுமுகம், 2008). திருக்கோயில் தொண்டுகள் புரிவதே சரியை எனப்படும் எனக் கௌசல்யா (1996) மேலும் விளக்குகிறார். இறைவனுக்கு மலரிட்டு நீராட்டுவதும் கைத்திருத்தொண்டு செய்வதும் சரியை எனப்படும். பெரிய புராணத்தில் இவ்வகை சரியை வழிபாட்டை,

> நல்ல நந்தன வனப்பணி செய்பவர் நறுந்துணர் மலர்க்கொய்வோர்
> பல்ம லர்த்தொடை புனைபவர் கொணர்திரு மஞ்சனப் பணிக்குள்ளோர்
> அல்லு நண்ப லுந்திரு வலக்கிட்டுத் திருமெழுக் கமைப்போர்கள்
> எல்லை யில்விளக் கெரிப்பவர் திருமுறை யெழுதுவோர் வாசிப்போர்
> (தி.தொ.பு. 3925)

(**விளக்கம்**: (இ-ள்) வெளிப்படை; நல்ல திருநந்தனவனத்தின் பணி செய்வோரும், நறிய துணர்களில் பூத்த மலர்களைக் கொய்வோர்களும், பலவகைப்பட்ட மலர் மாலைகளைப் புனைபவர்களும், சென்று திருமஞ்சன நீரினைக் கொணரும் பணிக்கு உள்ளவர்களும், இரவும் பகலுமாகத் திருவலகும் திருமெழுக்கும் அமைப்போர்களும், அளவு படாத திருவிளக்கு எரிப்பவர்களும், திருமுறைகளை எழுதுவோர்களும், அவற்றை வாசிப்பவர்களும்.
(வி-ரை) நல்ல...பணி செய்பவர் - நல்ல - நன்மையாவது இறைவரை அலங்கரிக்க வாய்த்த புனிதமாகிய செடி மரம் கொடிகளை வளர்த்தலும் காத்தலும் சிவன்பணிக்குப் பயன்படுத்தலும் ஆகிய இவை தீமை கலவாத, கருணையே உருவுடைய, பணி என்னும் தன்மை; செய்பவர் - நிலம் பண்படுத்தல், விதை - நாற்று முதலியவை நடுதல், நீர்பாய்ச்சுதல். களை கட்டல் முதலாயினவை செய்தல் எனப்பட்டன. பின்னர், அவ்வப்பணிகளின் தொழில்வகைக் கேற்றபடி மலர் கொய்வோர் - தொடைபுனைபவர் - மஞ்சனப் பணிக்கு உள்ளோர் - அமைப்போர்கள் - எழுதுவோர் - வாசிப்போர் என்பது காண்க.)

எனும் பாடல்வழி விளக்குகிறார் சேக்கிழார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நந்தவனம் அமைத்து, மலர்கள் பறித்து, மாலை கட்டி, இறைவனின் திருமேனியை நீராட்டி, திருமெழுக்கிட்டு, விளக்கேற்றும் சரியை தொண்டை இப்பாடல் சுட்டுகிறது. மேலும், திருமுறை தொடர்பான விருப்பம் உள்ளவர்களைப் பயிற்றுவிப்பதும் சரியை தொண்டே ஆகும். திருநாவுக்கரசர், குங்கிலியக் கலய நாயனார், அரிவாட்டாய நாயனார், மூர்த்தி நாயனார், முருக நாயனார், உருத்திரப் பசுபதி நாயனார், நமிநந்தியடிகள் ஆகியோரும் சரியை வழிபாட்டையே கடைப்பிடித்தனர் என்பதும் பெரிய புராணத்தின்வழி புலனாகிறது (இராசமாணிக்கனார், 1996).

திருக்கோயிலைக் கூட்டிக் கழுவுதல், மெழுகுதல், கோலமிடல், தீவர்த்தி ஏந்துதல், பல்லக்குச் சுமத்தல், மலர் பறித்துக் கொடுத்தல், திருமஞ்சனத்துக்குப் பால், நீர் கொண்டு வந்து கொடுத்தல், குளம் வெட்டுதல் போன்றவை திருக்கோயில் தொண்டுகளைக் குறிக்கும் (தர்மலிங்கம், 2012). ‘மக்கள் தொண்டே மகேசன் தொண்டு’ எனும் அடிப்படையில் உலக உயிர்களுக்கு உணவு, உடை, உறையுள் கொடுத்துத் தொண்டு செய்வதும் சரியை மார்க்கம்தான் (தர்மலிங்கம், 2012). எனவே, இயன்ற வழியில் சிறு சிறு உதவிகளை இறைவனுக்கும் அவன் அடியார்களுக்கும் செய்வதும் சரியை எனப்படுகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.9.9 தொண்டு

பிற உயிர்களுக்குப் பயன்படும் வகையில் உலக வாழ்க்கையை அமைத்துக் கொள்வதே தொண்டு எனப்படும். தன்னலம் கருதாமல் ஒருவர் மற்றவருக்குச் செய்யும் செயலையும் உதவி புரிதலையும் இது குறிக்கும். திருத்தொண்டு என்பது இறைவனிடத்தில் அடிமைத்திறம் கொண்டு அன்பு நெறியில் இறைவனுக்கும் இறை அடியார்கட்கும் செய்யும் தொண்டைக் குறிக்கும். இறையுணர்வே தொண்டுக்கு அடிப்படை என்பதைச் சேக்கிழார் அறிவுறுத்துகிறார்.

தொண்டு எனும் சொல் மிகப் பழைமையானது. இஃது அடிமைத்தனம் எனும் பொருளுடையது. மேலும், பணி செய்தல், இறை வழிபாடு, ஊழியம் போன்று பிறப் பொருள்களையும் தாங்கி நிற்கிறது (நடராசன், 1993). அன்பு காட்டுவதற்குத் தொண்டு முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அதனாலேயே, தொண்டு நெறி அன்பு நெறியென்று போற்றப்படுகிறது. எனவே, உயிர்களின் துன்பத்தைப் போக்கி இன்பமுறச் செய்யும் உதவிகளே தொண்டு என்பது இங்கு நோக்கத்தக்கது .

1.9.10 அரசு சாரா இயக்கம்

அரசு சாரா இயக்கங்கள் பன்முகத்தன்மை வாய்ந்தவையாக அமைகின்றன. மனித நேயத்தின் அடிப்படையில் தன்னலம் கருதாச் சேவையாற்றும் ஒருமித்த மனமுடைய மக்களின் அமைப்பே அரசு சாரா இயக்கங்கள் என உலக வங்கி (1990) கூறுகின்றது. அரசு சாரா இயக்கங்கள் கூட்டுறவு அடிப்படையில் செயல்படுபவையே அன்றி எவ்வித வணிக நோக்கத்திற்காகவும் இயங்குவதில்லை என்பதையும் அது (1990)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

குறிப்பிடுகின்றது. வல்லரசு நாடுகளில் இயங்கி வரும் உலகளாவிய மேம்பாட்டிற்குத் துணைபுரியும் தனியார் அமைப்புகளே அரசு சாரா இயக்கங்கள் எனவும் உலக வங்கி மேற்கோள் காட்டியுள்ளது.

அரசு சாரா இயக்கங்கள் தற்போது எல்லா நாடுகளிலும் இயங்கி வருகின்றன. இவை உள்நாட்டில் வட்டார, மாநில, தேசிய அளவிலும் செயலாற்றுகின்றன. சமுதாய மேம்பாட்டிற்காகத் தனியார் நிதியை உணவு, குடும்பக் கட்டுப்பாடு தொடர்பான சேவைகளுக்கு வழங்குவதில் அரசு சாரா இயக்கங்கள் பெரும் பங்காற்றுகின்றன. மேலும், தொண்டு எனும் குறிக்கோளுடன் செயல்படும் இவை சமயம், சமுதாயம் சார்ந்த இயக்கங்களாகவும் திகழ்கின்றன எனப் பாங்கோக்கில் நடைபெற்ற ஆசியான் தொழில்நுட்ப நிறுவனங்களின் பணிமனையில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது (1988). அரசு சாரா இயக்கங்கள் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன என்று அந்த ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது (1988). எனவே, இன்றைய காலக்கட்டத்தில் மக்களுக்குப் பலவகையிலும் சேவையாற்றும் அமைப்புகளே அரசு சாரா இயக்கங்கள் என்பது கருத்தில் கொள்ளத்தக்கது.

1.9.11 அரசு சாரா இந்தியர் இயக்கம்

நாடு முழுவதும் இயங்கி வரும் அரசு சாரா இயக்கங்கள் இன்றளவில் ஒரு கூட்டணியாகச் செயல்பட்டு வருகின்றது. இவ்வியக்கங்கள் தனிமனிதன், குடும்பம் எனத் தங்கள் சக்திக்கு ஏற்றவாறு பல தொண்டுகளை ஆற்றி வருகின்றன. இருப்பினும், இவ்வியக்கங்களின் குறிக்கோளும் செயல்திட்டங்களும் மக்களின் நலன் கருதியே அமைவதாக நோர்மா மன்சூர் தெரிவிக்கிறார் (Normah Mansor, 2014).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இதில் அரசு சாரா இந்தியர் இயக்கங்களும் விதிவிலக்கல்ல. மலேசியாவில் செயல்பட்டு வரும் மலேசிய இந்து சங்கம், மலேசிய இந்து இளைஞர் இயக்கம் போன்றவை இந்தியச் சமுதாயத்திற்குப் பல சேவைகளை வழங்கி வருகின்றன (மலேசிய அமைப்புகள் பதிவு இலாகா, 2017). குறிப்பாக இவற்றின் நடவடிக்கைகள் இந்துக்களுக்குச் செய்யும் சேவைகளாக அமைகின்றன. இவ்வியக்கங்களின் சேவைகள் இந்து சமயச் சுவடுகளைப் பின்பற்றி சமயக் கல்வியைப் போதிக்கவும் இந்துக்களின் வாழ்க்கை தரத்தைக் கல்வியிலும் வணிகத்திலும் உயர்த்திக் காட்டவும் வழிவகுக்கின்றது (மலேசிய இந்து இளைஞர் இயக்கம், 2018). அதன் அடிப்படையிலேயே இவ்வாய்வுக்குட்படுத்தப்பட்ட மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை, போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம், போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம் ஆகியன மூன்றும் போர்ட்டிக்க்சன் வாழ் இந்து பெருமக்களுக்குச் செய்யப்படும் சமயம், சமுதாயம் சார்ந்த உதவிகளை மையமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.10 தொகுப்புரை

இவ்வியல் ஆய்வுப் பின்னணி, ஆய்வுச் சிக்கல், ஆய்வின் நோக்கம், ஆய்வு வினா, ஆய்வுக் கருத்துக் கட்டமைப்பு, ஆய்வுக் கோட்பாடு கட்டமைப்பு, ஆய்வின் முக்கியத்துவம், ஆய்வு எல்லை, கருச்சொற்கள் விளக்கம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. இவ்வியலின் ஆய்வுப் பின்னணி பெரிய புராணத்தில் நாயன்மார்களின் சரியை தொண்டுகளின் அடிப்படையில் தற்கால அரசு சாரா இயக்கங்களின் சேவைகளைப் பற்றி விவரித்துள்ளது.

தவிர, ஆய்வுச் சிக்கல் இன்றைய நிலையில் தொண்டுகளைப் பின்னொற்றியே அமைந்துள்ளது. அதன் அடிப்படையில் நான்கு ஆய்வு நோக்கங்களும் வினாக்களும் இதில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வின் முக்கியத்துவம் எல்லா சாரர்களுக்கும் தொண்டின் மாண்பை எடுத்தியம்பும் வகையில் வரையறுக்கப்பட்டுள்ளது. இறுதியாக, இவ்வியலில் ஆய்வு தொடர்பான 10 கருச்சொற்களையொட்டிய விளக்கங்களும் இடம்பெற்றுள்ளன. எனவே, இவ்வியல் ஆய்வின் ஒட்டுமொத்தக் கண்ணோட்டத்தை வழங்கியுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இயல் 2

இலக்கிய மீள்நோக்கு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

2.1 முன்னுரை

தமிழில் இலக்கியங்கள் பலவும் காலந்தோறும் தோன்றி மறைந்துள்ளன. சங்க இலக்கியங்கள் சங்க காலத்திலும், காப்பியங்கள் சங்கம் மருவிய காலத்திலும், அதன் பின்னர் நீதி இலக்கியங்களும் தோன்றியுள்ளன. இவற்றுக்குப் பின் தோன்றியவையே பக்தி இலக்கியங்ளாகும். பக்தி இலக்கியங்கள் சமயத்தின் பெருமைகளை நன்கு உணர்த்திக் காட்டுகின்றன. தமிழ் வரலாற்று அறிஞர்கள் புராணங்களையும் பக்தி இலக்கியங்களில் சேர்த்துள்ளனர் (இராமசந்திர தீக்சிதர், 1930). அவற்றுள் தமிழ்மொழியின் மாபெரும் கொடையாகக் கருதப்பெற்று முதன்மையாக வைத்துப் போற்றப்படுவது பெரிய புராணம் என வழங்கப்பெறும் திருத்தொண்டர் புராணமாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இத்தகைய நூல் பற்றிய சிறப்புகள், இந்நூலின் மூல ஆசிரியரான சேக்கிழார் வரலாறு, அவரின் காலம், இப்புராணத்தின் நோக்கம், நூல் அமைப்பு, நாயன்மார்களின் வாழ்க்கை குறிப்புகள், அவர்களின் தொண்டு நெறி, அவர்களின் முக்திக்கு வழிகாட்டிய கூறுகள் போன்றவற்றை இவ்வியல் ஆராய்ந்துள்ளது.

மேலும், தற்போது தன்னலம் கருதாமல் பொதுநலம் கருதிச் சேவையாற்றி வரும் அரசு சாரா இயக்கங்களைப் பற்றியும் இவ்வியல் தொகுத்துக் கூறுகின்றது. அரசு சாரா இயக்கங்களின் தோற்றம், அவற்றின் நோக்கம், அவற்றின் சேவைகள் குறித்த ஆய்வும் இவ்வியலில் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், மலேசியாவில் அரசு சாரா இயக்கங்கள், குறிப்பாக அரசு சாரா இந்தியர் இயக்கங்களைப் பற்றிய பின்னணிகள், அவற்றின் நோக்கம், தொண்டு ஆகியவையும் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

2.2 பெரிய புராணம்

தமிழ்ப் புலவர்கள் தத்தம் மொழியில் எழுந்த இலக்கியங்களைப் போற்றி மகிழ்ந்துள்ளனர் என்பது மு.அருணாசலத்தின் கருத்தாகும் (1909). குறிப்பாகத் தமிழில் உள்ள பன்னிரு திருமுறைகளும் அரும் பெரும் பொக்கிஷமாகவே திகழ்கின்றன. திருஞானசம்பந்தர் அருளிய திருக்கடைக்காப்பான முதல் மூன்று திருமுறைகள், அப்பர் அருளிய தேவாரம் முதலான மூன்று திருமுறைகள், சுந்தரரின் திருப்பாட்டு, என இவ்வேழு திருமுறைகளும் தேவாரம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன (வெள்ளைவாரணர், 2016). மாணிக்கவாசகரின் திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையாகும். திருமாளிகைத் தேவர் முதலாகச் சேதிராயர் வரை அருளியது ஒன்பதாம் திருமுறையாகக் கொள்ளப்படுகிறது. பத்தாம் திருமுறையான

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

திருமந்திரத்தைத் திருமூலர் அருளியுள்ளார். 11-ஆம் திருமுறை நம்பியாண்டார் நம்பி உட்பட பன்னிருவரால் பாடப்பெற்றுள்ளது. இதில் இறுதியாக வரும் 12-ஆம் திருமுறையே திருத்தொண்டர் புராணம் என்றழைக்கப்படும் பெரிய புராணம் (வைத்தியநாதன், 1995).

பெரிய புராணத்தின் மூலம் தமிழ்மொழியே ஆகும். முற்றிலும் தமிழிலேயே இயற்றப்பட்ட பெரிய புராணத்தைப் பின்னர் ‘ உபமன்யு பக்த விலாசம் ‘ என வடமொழியில் மொழிபெயர்த்துள்ளனர். எனவே, தென்மொழியிலிருந்து வடமொழிக்குச் சென்ற பெருமையும் பெரிய புராணத்தை சாரும் என்கிறார் திருமுருக கிருபானந்த வாரியார் (2003).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

2.3 பெரிய புராணப் பெயரும் பொருளும்

பெரிய புராணம் திருத்தொண்டர் புராணம், திருத்தொண்டர் மாக்கதை எனும் பெயர்களில் அழைக்கப்பெற்று வருகிறது. இதன் மூல ஆசிரியரான சேக்கிழார் பெருமான் இந்நூலுக்கு இட்ட பெயர் திருத்தொண்டர் புராணமேயாகும். இதனைப் பாயிரப் பகுதியில் வரும்,

> இங்கிதன் நாமம் கூறின் இவ்வுல கத்து முன்னாள்
> தங்கிருள் இரண்டில் மாக்கள் சிந்தையுட்சார்ந்து நிண்ற
> பொங்கிய இருளை ஏனைப் புறவிருள் போக்குகின்ற
> செங்கதி ரவன்போல் நீக்கும் திருத் தொண்டர்புராணம் என்பாம்
> (தி.தொ.பு. 10)

(விளக்கம்: (இ-ள்.) இங்கு.....கூறின் - இப்புராணத்தின் பெயர் என்னென்று சொல்வோமாயின்; இவ்வுலகத்து....இரண்டில்அநாதிகாலந் தொட்டு இங்குள்ள இருவேறு இருள்களுள்ளே;ஏனை செங்கதிரவன்போல் - மற்றப் புற இருளைப்போக்குகின்ற சூரியனைப்போல; மாக்கள் இருளை -மாக்களின் உயிரினிடத்தே பொருந்தி நின்ற பொங்கிய அகஇருளாகிய ஆணவத்தைப்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

போக்குகின்ற; திருத்தொண்டர் புராணம் என்பாம் - திருத்தொண்டர் புராணம் என்று சொல்வோம்.)

எனும் பாடல் வரிகளின் மூலம் அறிய முடிகிறது. சேக்கிழார் புராணம் இதற்கு வலிமை சேர்க்கின்றது. இந்நூல் சேக்கிழாரால் 'மாக்கதை' எனக் குறிப்பிடப்பட்டுள்ளமையால் பிற்காலத்தில் மக்களால் பெரிய புராணம் என்றும் அழைக்கப்பட்டது (மங்கையர்கரசி, 1972).

திரு.வி.கலியானசுந்தரனார், 'பெரிய' எனும் அடைமொழி தன்மையை உணர்த்துவதாகத் திகழ்வதேயன்றி அளவினை உண்ர்த்துகின்றது என்றால் பொருந்தாது என்கிறார். மேலும், 'பெரியர் புராணம்' என்று சொல்வோரும் உள்ளனர். இதில் 'பெரியர்' எனும் சொல் பெருமை உடையவர் அல்லது திருத்தொண்டர் என்பதினாலும் இப்பெயர் வழங்கலாயிற்று என்பது அவர் கருத்து (2000).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொண்டு என்பது ஒருவர் தன்னலமின்றி பிறர்க்குச் செய்யும் உதவியையோ அல்லது சேவையையோ குறிக்கும். திருத்தொண்டு என்பது இறைவனுக்குச் செய்கின்ற தொண்டையும் அவன் பால் காதலுற்ற அடியார்கட்குச் செய்கின்ற தொண்டையும் ஒரு சேரக் குறிக்கும் என அழகரடிகள் கூறுவதைச் சுட்டுகிறார் ஆறுமுகம் (1989). தமிழ்நாட்டில் வெவ்வேறு மரபுகளில் தோன்றி இறை தொண்டாற்றிய சிவனடியார்களின் வரலாற்றை எடுத்தியம்புவதால் இது திருத்தொண்டர் புராணம் என்றழைக்கப்படுகிறது.

பெரிய புராணத்துள் வரும் திருத்தொண்டர்கள் கற்பனைக்கும் எட்டாத அரியச் செயல்களைப் புரிந்தவர்கள். 'செயற்கரிய செய்வார் பெரியர்' (குறள், 26) எனும் வள்ளுவன் கூற்றுக்கிணங்க இதுபோன்று செயற்கரிய செய்த பெரியவர்களின் வரலாற்றைப் பறைசாற்றும் புராணம் என்பதால் பெரிய புராணம் எனும் பெயரும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இதற்குத் தகும். சேக்கிழாரின் 'இயற்பகை நாயனாரின் வரலாற்றில் வரும் 'செயற்கருஞ் செய்கை செய்த தீரனே ஓலம்' எனும் வரிகளும் இதனையே மெய்ப்பிக்கின்றன (திருத்தொண்டர் புராணம், 433).

2.4 பெரிய புராண நூலாசிரியர்

பெரிய புராண நூலாசிரியர் சேக்கிழார் ஆவார். சேக்கிழார் என்பது குடிப்பெயரைக் குறிக்கும். இப்பெயரில் மொத்தம் பன்னிருவர் உள்ளதாக நம்பப்படுகிறது. இவர்களுள் எழுவர் குன்றத்தூரைச் சேர்ந்தவர்களாவர் (இராசமாணிக்கம், 1996). குன்றத்தூர் தொண்டை மண்டலத்தைச் சார்ந்த ஊராகும். எனவே, சேக்கிழார் மரபினர் தொண்டை மண்டலத்தில் வாழ்ந்தனர் என்பது உறுதியாகிறது. இவர்கள் சோழ அரசியலில் சிறப்புப் பெற்றிருந்தனர். மேலும், சோழ அரசர்களிடம் பல பட்டங்கள் பெற்றுள்ளனர். சேக்கிழார் எனும் குடிப்பெயருக்குப் பின்னே வரும் சோழ முத்தரையன், உத்தமச் சோழப் பல்லவராயன், களப்பாளராயன், கரிகாலச் சோழப் பல்லவராயன், முனையதரையன் போன்ற பட்டங்கள் இதனைப் பறைசாற்றுகின்றன (அருணாசலம், 1909). இவர்களுள் உத்தமச் சோழப் பல்லவராயன் எனும் சிறப்புப் பெயர் பெற்ற சேக்கிழார் என்பவரே பெரிய புராணத்தின் நூலாசிரியர்.

சேக்கிழாரின் பெயர், 'சேக்கிழான் மாதேவடிகள் இராமதேவனான உத்தமச் சோழப் பல்லவராயன்' என்று இரண்டாம் இராசராசனது 17-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. 'இராமதேவன்' என்பது சேக்கிழாரின் இளமைப் பெயராகும். 'மாதேவடிகள்' என்பது பெரிய புராணத்தை இயற்றிய பின் அவருக்கு வழங்கிய பெயராகும் என்கிறார் இராசமாணிக்கனார் (1996).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அநபாயச் சோழன் எனும் மன்னன் இவருக்கு வழங்கியச் சிறப்புப் பெயரே 'உத்தமச் சோழப் பல்லவராயன்' என்பதாகும். 'அருண்மொழித் தேவர்' என்ற சிறப்புப் பெயரும் இவருக்கு உண்டு. சேக்கிழார் குன்றத்தூரில் வேளாண் மரபைச் சேர்ந்தவராவார். தான் தோன்றியக் குடியைப் புகழ்பெறச் செய்ததினால், குடிப்பெயராகிய 'சேக்கிழார்' எனும் பெயரே இவருக்கு நிலைத்தது என்கிறார் மு.அருணாசலம் (1909).

சேக்கிழார் சிறந்த சிவபக்தர். சோழ நாட்டிலுள்ள திருநாகேஸ்வரம் எனும் திருக்கோயிலில் எப்போதும் வழிபாடு செய்வது இவரது வழக்கம். அக்கோயில் இறைவன் மீது கொண்ட பேரன்பால் அதே போன்றதொரு கோயிலைக் குன்றத்தூரிலும் எழுப்பினார். அதற்கும் திருநாகேஸ்வரம் எனும் பெயரையே சூட்டி மகிழ்ந்தார் (சுப்ரமணியம் பிள்ளை, 1940).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

2.4.1 சேக்கிழாரின் காலம்

சேக்கிழார் வாழ்ந்த காலம் குறித்துப் பலரும் விவாதித்துள்ளனர். சேக்கிழார் முதலாம் இராஜேந்திரன் காலத்தவர் என்று கூறும் சோழசுந்தரதேசிகர் கருத்தையும் முதலாம் குலோத்துங்கன் காலத்தவர் என்று கூறும் கோபிநாதராவ், பூர்ணலிங்கம் பிள்ளை, கா.சு.பிள்ளை ஆகியோரின் கருத்தும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதைத் தமிழ்ப் புலவர் வரலாறு எனும் புத்தகத்தில் அருணாசலம் குறிப்பிடுகிறார் (1909). வெள்ளைவாரணரோ (2008) சேக்கிழார் இரண்டாம் குலோத்துங்கன் காலத்துக்கும் மூன்றாம் குலோத்துங்கன் காலத்துக்கும் இடைப்பட்டவர் என்கிறார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இவர்களின் கருத்துகளைக் கூர்ந்து கவனிக்கையில் சேக்கிழாரின் காலத்தைப் பின்வருமாறு கணிக்கலாம். சேக்கிழார் என்பவர் இரண்டாம் குலோத்துங்கன் காலத்திலும் அவன் மகனாகிய இரண்டாம் இராஜராஜன் காலத்திலும் அவன் மகனாகிய மூன்றாம் குலோத்துங்கன் காலத்திலும் வாழ்ந்தவர். இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில்தான் சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தை இயற்றியதாக நம்பப்படுகிறது. சேக்கிழார் 'அநபாயன்' எனும் சொல்லைப் பத்து இடங்களில் பயன்படுத்தியிருப்பது தெரிகிறது. இந்த அநபாயன் இரண்டாம் குலோத்துங்கன் என்பது ஒட்டக்கூத்தர் இயற்றிய 'மூவருலாவாலும்' என்பதிலிருந்து அறிய முடிகிறது (அருணாசலம், 1909).

தன்னை ஆதரித்த அநபாயனைச் சேக்கிழார் அநபாயன் என்றும், சில இடங்களில் அபயன், சென்னி, குலோத்துங்கன் என்றும் தம் நூலில் பாடியுள்ளார். எனவே, இவர் இம்மன்னனின் காலத்திலேயே திருத்தொண்டர் புராணம் பாடினார் என்பதையும் அறிய முடிகிறது. இரண்டாம் குலோத்துங்கன் தில்லை பொன்னம்பலத்திற்குப் பொன்முகடு வேய்ந்தான் என்பதைத் திருத்தொண்டர் புராணம் குறிப்பிடுகின்றது (மங்கையர்கரசி, 1972). ஒட்டக்கூத்தரும் 'குலோத்துங்கச் சோழ உலாவில்' இதனைக் குறித்துள்ளார் (ஞானசம்பந்தன், 1999).

இரண்டாம் இராஜராஜன், மூன்றாம் குலோத்துங்கன் ஆகியோரின் ஆட்சிக்கு இடைப்பட்ட காலத்தில் அரசாட்சி புரிந்த இரண்டாம் இராஜராஜனுடைய (1163-1178) ஒன்பதாம் ஆண்டு ஆட்சியில் (1172) கிடைத்த திருநற்றியூர்க் கல்வெட்டு இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் திருத்தொண்டர் புராணம் இயற்றப்பட்டதை மெய்ப்பிக்கிறது. மேலும், இரண்டாம் இராஜராஜன் தாராசுரத்தில் 63 நாயன்மார்களின் சிலைகளை வடித்ததும் இம்மன்னன் திருத்தொண்டர் புராணத்தில் காட்டிய ஈடுபாட்டைக்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

காட்டுகின்றது. மேற்குறித்த சான்றுகளால் சேக்கிழார் இரண்டாம் குலோத்துங்கன், அவர் மகன் இரண்டாம் இராஜராஜன், அவர் மகன் மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சியின் முற்பகுதி வரை வாழ்ந்தவர் என்பது தெளிவாகிறது. சேக்கிழார் இவ்வாறு மூன்று காலத்தவர் ஆயினும் அவர் பெரிய புராணம் இயற்றியது இரண்டாம் குலோத்துங்கன் காலமேயாகும் எனக் கருத முடிகிறது (வெள்ளைவாரணர், 2008).

2.5 பெரிய புராணம் தோன்றிய சூழல்

சேக்கிழாரின் காலத்தில் அவர் வாழ்ந்த நாடு சமணர்களின் ஆதிக்கத்தின் கீழிருந்தது. கி.பி 6, 7-ஆம் நுற்றாண்டுகளில் அங்கு வாழ்ந்த மக்களிடையே சமண சமயம் ஓங்கி நிலைபெற்று விட்டது (ஞானசம்பந்தன், 1999). திருநாவுக்கரசரின் வரலாற்றில் குணபரன் என்ற பல்லவ மன்னன் சமண மதத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாறியதை அறிய முடிகிறது (இராசமணிக்கனார், 1959). தண்டியடிகள் நாயனாரின் வரலாற்றுக் குறிப்பில் சோழ நாட்டில் சைவர்கள் சமண சமயத்துடன் போராட்டம் நடத்தியதையும் கலியாணசுந்தரனாரின் கூற்றின் மூலம் காண முடிகிறது. மேலும், நின்ற சீர் நெடுமாறனாகிய கூன் பாண்டியன் சமணராயிருந்து பின் சைவராகியதைத் திருஞானசம்பந்தரின் வரலாறு சித்திரிக்கின்றது (ஆறுமுக நாவலர், 1995).

கி.பி. 8, 9-ஆம் நுற்றாண்டுகளில் சமணர்கள் ஆங்காங்கு மடங்களை நிறுவி நூல்களையும் வெளியிட்டனர். சமண சமயத்தைப் பரப்புவதையே குறிக்கோளாகக் கொண்ட சமணர்கள் தமிழில் பல காப்பியங்களும், நீதிநூல்களும், இலக்கண நூல்களும் இயற்றினர். அவற்றுள் கொங்குவேன் மாக்கதை, சூளாமணி, நீலகேசி, யசோதரக்காவியம், சீவக சிந்தாமணி போன்றவை அடங்கும். வீர சோழியம்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நேமிநாதம், வச்சிணந்தி மாலை, யாப்பருங்கலக்காரிகை, திவாகரம், பின்கலந்தை முதலான நூல்கள் கி.பி. 10 ,11 ,12-ஆம் நூற்றாண்டுகளில் இயற்றப்பட்டன என்பதை அறிய முடிகிறது. நன்னூல், நம்பியகப்பொருள், சூடாமணி நிகண்டு முதலியன 12 அல்லது 13ஆம் நூற்றாண்டுகளில் இயற்றப்பட்டன (இராமசந்திர தீக்சிதர், 1930).

சேக்கிழார் தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த அநபாயனின் ஆட்சி காலத்தில் தமிழ் நாட்டில் சமண சமயம் மேலோங்கி நின்றது. சமணர்கள் தங்களின் கொள்கைகளைக் கன்னட, தெலுங்கு நாடுகளிலும் வட நாட்டிலும் பரப்பி மேல்நிலை அடைந்தனர் (இராசமாணிக்கனார், 1996). இந்நிலையில் சமண சமயத்தின் வலிமையினால் மன்னனும் மக்களும் 'சீவக சிந்தாமணி' எனும் சமணக் காப்பியத்தைப் படித்து இன்புற்று, அதனையே உண்மை நூல் என்றும் கருதி வாழ்ந்தனர். அநபாயச் சோழனும் அக்காப்பியத்தைப் பெரிதும் பாராட்டி மிகுந்த ஆர்வமும் காட்டி நின்றான். சேக்கிழார் சமணர்கள் இயற்றிய காப்பியமான சிந்தாமணி பொய்க்கதையென்றும் அஃது உயிர்கள் அறிய வேண்டிய உண்மை பொருளல்லவே என்பதை விளக்கினார். மேலும், இம்மையிலும் மறுமையிலும் பலனளிக்க வல்லது சிவக்கதை ஒன்றே என்பதையும் மன்னனுக்கு உணர்த்தி நின்றார் (சுப்ரமணியம் பிள்ளை, 1940).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

திருத்தொண்டர் பெருமைகளைப் பேசும் சிவகதையே நற்கதை என்றியம்பிய சேக்கிழார், மன்னனின் வேண்டுகோளுக்கிணங்கப் பெரிய புராணம் பாடியருளினார். சமண மதத்தைத் தழுவியிருந்த மன்னனை மீண்டும் சைவ சமயத்திற்குக் கொண்டு வரவே சேக்கிழார் பெரிய புராணத்தைப் பாடினார் என்பதை,

> அவகதையாய்ப் பயனற்ற கதைஈ தாகில்
> அம்மையும் இம்மையும் உறுதி பயக்கத்தக்க
> சிறுகதை ஏது அதுகற்ற திறமைப் பேர் ஆர்
> சீவக சிந் தாமணி போல் இடையில் வந்த
> நவகதையோ புராதனமோ முன்னூல் வகையோ
> நானிலத்துச் சொன்னவர் ஆர்கேட்ட பேர் ஆர்
> தவகதையோ தவம் பண்ணிப் பேறு பெய்த
> தனிகதையோ அடைவுபடச் சாற்றும் என்றான்
>
> (தி.தொ.பு. 6)

எனும் சேக்கிழார் புராணத்தின்வழி அறியலாம் (மங்கையர்கரசி, 1972).

தில்லை சென்ற சேக்கிழார் பெருமான் ஆயிரங்கால் மண்டபத்தில் அமர்ந்து பெரிய புராணம் பாடத் தொடங்கினார். சித்திரைத் திருவாதிரை நாள் தொடங்கி அடுத்தாண்டு சித்திரைத் திருவாதிரை நாள் வரை இப்புராண அரங்கேற்றம் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது (இராசமாணிக்கனார், 1996).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

2.6 பெரிய புராண நூலமைப்பு

சேக்கிழார் பெரிய புராணம் பாடச் சுந்தரரின் திருத்தொண்டர் தொகையும் நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியும் மூல நூல்களாக அமைந்தன. இதனை,

மற்றி தற்குப் பதிகம்வன் றொண்டர்தாம்
புற்றி டத்தெம் புராணர் அருளினால்
சொற்ற மெய்த் திருதொண்டத் தொகை எனப்
பெற்ற நற்பதி கம்தொழப் பெற்றதாம்

அந்த மெய்ப்பதி கத்தடி யார்களை
நந்தம் நாதனாம் நம்பியாண் டார்நம்பி
புந்தி ஆரப் புகன்ற வகையினால்
வந்த வாறு வழாமல் இயம்புவாம்

(தி.தொ.பு. 8)

என்று பெரிய புராணத்தில் தெளிவு பெறலாம் (இராசமாணிக்கனார், 1996). தவிர, மூவர் முதலிகளின் திருமுறைகள், காரைக்காலம்மையாரின் திருப்பதிகம், இரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி, சேரமான் பெருமாள் பாடிய திருவாரூர் மும்மணிக்கோவை, ஞானவுலா போன்ற நூல்களும் சேக்கிழாருக்குத் துணைபுரிந்தன. மேலும், 'தில்லை உலா' எனும் நூலும் சேக்கிழாருக்குப் பயன்பட்டிருக்கலாம் என இராசமாணிக்கனார் (1996) குறிப்பிட்டுள்ளார் .

தொண்டு எனும் மாண்பே பெரிய புராணத்தில் காப்பியப் பொருளாக உள்ளது. சேக்கிழார் தனக்கு முன்னர் இருந்த அடியார்களின் வரலாற்றை நன்கு ஆராய்ந்து அறிந்து புதிய காப்பியத்தை அமைத்தார். முன்னர் இருந்த மூலங்கள் எதுவும் தொண்டின் சிறப்பைக் கூறவில்லை. மாறாக அவை அடியார்களின் பக்திச் சிறப்பை மட்டுமே எடுத்தியம்பின. ஆனால், சேக்கிழார் பெருமான் அதே மூலங்களின்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

துணைகொண்டு சிவனடியார்களின் தொண்டின் மாண்பை உலகுக்குக் காட்ட முனந்தார் (ஞானசம்பந்தன், 1999).

மேற்கண்ட மூலங்களின் உதவியுடன் இயற்றப்பட்ட பெரிய புராணம், இரண்டு காண்டங்களாக வகுக்கப்பெற்றது. இக்காண்டங்களுள் 13 சருக்கங்கள் முறைப்படுத்தப்பட்டன. அவற்றுள் 4286 பாடல்களை உள்ளடக்கி இதற்குத் திருத்தொண்டர் புராணமென பெயரிட்டார் சேக்கிழார் பெருமான் (கலியாணசுந்தரனார், 2000).

பெரிய புராணத்தில் முதல் சருக்கமான திருமலைச் சருக்கம் சுந்தரர் விண்ணிலிருந்து மண்ணுக்கு வந்ததை விளக்குவதாக அமைந்துள்ளது. இறுதியாக வரும் வெள்ளானைச் சருக்கம் சுந்தரர் மீண்டும் விண்ணுலகை அடைவதை விவரிக்கின்றது. திருத்தொண்டர் தொகையிலுள்ள 11 பாடல்களின் முதல் அடியைக் கொண்டு சேக்கிழார் ஏனைய 11 சருக்கங்களுக்கும் பெயரிட்டுள்ளதைக் கா.சுப்ரமணியம் பிள்ளை அவர்கள் கோடிட்டுக் காட்டியுள்ளார் (1940). அவை முறையே தில்லைவாழ் அந்தணர் சருக்கம் , இலைமலிந்த சருக்கம், மும்மையால் உலகாண்ட சருக்கம், திருநின்ற சருக்கம், வம்பறாவரி வண்டு சருக்கம், வார் கொண்ட வனமுலையாள் சருக்கம், பொய்யடிமை இல்லாத புலவர் சருக்கம், கடல் சூழ்ந்த சருக்கம், கறைக் கண்டன் சருக்கம், பத்தராய்ப் பணிவார் சருக்கம், மன்னியச் சீர் சருக்கம் என்பவையாகும். பெரிய புராணத்தில் ஆரம்பத்திலும், நடுவிலும், கடைசியிலும் சுந்தரரின் வரலாறு இயம்பப்பட்டுள்ளது. பிற அடியார்களின் வரலாறுகள் இடையில் கூறப்பட்டுள்ளன (இராசமாணிக்கனார்,1996). சேக்கிழார், நம்பியாண்டார் நம்பியைப் பின்பற்றி தம் நூலில் 63 தனியடியார்களையும் ஒன்பது தொகையடியார்களையும் பாடியுள்ளார். சுந்தரர் 60 நாயன்மார்களைப் பற்றிப் பாடினார். நம்பியாண்டார் நம்பி சுந்தரரையும் அவர்தம் தாய் தந்தையராகிய

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சடையனார், இசைஞானியாரையும் சேர்த்து அறுபத்து மூவர் ஆக்கினார். இதுவே 63 நாயன்மார்களின் வரலாறானது (அருணாசலம், 1969).

2.7 பெரிய புராணமும் சமயமும்

சிற்றின்ப வாழ்க்கையில் திளைத்திருக்கும் மக்கள் பேரின்பமாகிய வீடுபேற்றினை அடைய பெரியோர்கள் வகுத்த வழியே சமயம் எனப்படும். இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள ஆன்மிக உறவை வெளிப்படுத்துவதே சமயமாகும். மேலும், விலங்குணர்ச்சியுள்ள மனிதனைத் தெய்விகத் தன்மை பொருந்தியவனாகப் பக்குவப்படுத்துவதும் சமயம் என்கிறார் வ.பெருமாள் (1971). கண்ணால் பார்க்கும் உலகையும் நமது சிற்றறிவிற்கு எட்டியபடி அறியதகுந்த ஆன்மா, இறைவன் ஆகிய இரண்டையும் காட்டும் ஞான ஒளியாகக் கூறப்படுகிறது. மனிதர்களின் உடல், உள நலத்திற்கு மட்டுமல்லாது அவர்கள் வாழ்வதற்குரிய வழிகளை வகுக்கும் ஒழுக்கப்பீடமாகவும் சமயம் திகழ்கிறது. மனிதர்களுக்குத் தேவையான அனைத்து நலன்களையும் கொடுக்கும் 'கற்பக மரம்' என்றே ஆறுமுக நாவலர் (2002) சமயத்தைக் குறிப்பிடுகிறார்.

சமயமாகிய நிறுவனம் மூன்று நிலையங்களைத் தன்னகத்தே கொண்டு இயங்குகின்றது. இம்மூன்று நிலையங்களும் சமயத்தின் பணி நேரிடையாக மக்களைச் சென்றடைவதை உறுதிபடுத்துகிறது. அவையாவன, திருக்கோயில்கள், திருமடங்கள், மக்களின் சமய ஆர்வத்தால் தோற்றுவிக்கப்பட்ட அமைப்புகளேயாகும். இவை மூன்றும் சமய வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் முக்கியமானதாகத் திகழ்கின்றன எனக் குன்றக்குடி அடிகளார் (2001) பகர்ந்துள்ளார். பெரிய புராணத்தின் அடிப்படையில்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பார்க்கையில் அக்காலத்தில் திருமடங்கள் யாவும் பெரும்பாலும் சிவனடியார்களினாலும் நாயன்மார்களினாலும் தோற்றுவிக்கப்பட்டன. இதில் தங்கிச் செல்லும் அடியார்கள், தூதுவர்கள், வழிபோக்கர்கள் என அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது. அத்துடன் சமய போதனையும் நடத்தப்பட்டது.

சமுதாய வாழ்வின் பண்பாட்டினைத் திருக்கோயில்களில் காணலாம். கோயில்கள் மக்களின் வாழ்க்கைக்காகவே எழுப்பப்பட்டன என்பது குன்றக்குடி அடிகளாரின் கூற்று (2001). கோயிலில் செய்யப்படும் வழிபாடுகளும் உணவு முறையும், உலகம் வாழத்தான் வேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்துகின்றன (பரமசிவானந்தம், 1972). நாயன்மார்கள் காலத்தில் கோயில்கள் மக்களுக்கு அனைத்துமாக விளங்கியதைக் காண முடிகிறது. அக்காலக்கட்டத்தில் எழுந்த சமயப் பிரச்சினைகளைக் களையவும் மக்களை ஒன்றுபடுத்தவும் திருக்கோயில்களே நாயன்மார்களுக்குத் துணை நின்றன. இதனாலேயே சமயக் குரவர்களும் தலயாத்திரை மேற்கொண்டு இறைவனை வணங்கினர். நாயன்மார்கள் கோயிலில் திருப்பணி செய்தனர். மேலும், திருக்கோயில்களைச் சார்ந்த மடங்களில் மக்களுக்கு உணவும் வழங்கப்பட்டது (கலியாணசுந்தரனார், 2014)

திருக்கோயில்கள் பழங்காலத்தில் மக்களின் வறுமையையும் அறியாமையையும் அகற்றும் இடமாக விளங்கின. எனவேதான், கோயில் அனைவரின் தலைமை இல்லமாக விளங்கியது. பல்வகை அறங்கள், மருத்துவ நிலையம், கல்வி நிலையம், ஊராட்சி, ஞான மன்றம், கலை மன்றம், தேர்தல் கூடம் என்று கோயில்கள் அக்காலத்தில் உயிர்நிலையாக இருந்தன. அக்காலச் சமய வாழ்வு சமுதாய வாழ்வாக விளங்கியது. மக்களிடத்தில் இறைவனைக் காணும் திறந்த மனம் படைத்ததே சமய வாழ்வு ஆகும் (இராசமாணிக்கனார், 1959).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நீலகண்டர் மனைவியின் பிணக்குத் தீர்த்தது: பரவையார், சங்கிலியார் திருமணத்தை நடத்தியது; திருஞானசம்பந்தர் திருமருகலில் வணிகப் பெண்ணின் துயர் நீக்கித் திருமணம் செய்து வைத்தது யாவும் இறைவனருளால் திருக்கோயிலிலேயே நடந்தது. மேலும் சமுதாய வாழ்வு மறுமலர்ச்சி பெறவும் திருக்கோயில்கள் உதவியுள்ளன. சமுதாயத் தொண்டு செய்ய அப்பர், திருவீழிமிழலையில் ஞானசம்பந்தருக்குப் பொற்காசுகள் கொடுத்ததையும் பார்க்கையில் திருக்கோயில்கள் அன்பு, அறம், தொண்டு, சமயம் என பலவற்றுக்கும் பங்காற்றியுள்ளன (குன்றக்குடி அடிகளார், 2001).

2.7.1 பெரிய புராணம் காட்டும் சைவம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தென்னிந்தியாவின் வரலாற்றுக் காலத்துக்கும் முற்பட்டச் சமயமாகச் சைவம் விளங்குகிறது. சைவம் பழைமையான சமயம் என்பதற்குச் சிந்துவெளி ஆராய்ச்சிகளில் கண்டெடுக்கப்பட்டப் பொருட்களே சான்றுகளாகும். சிந்துவெளி நாகரிகத்தில் சிதைவுண்ட பல இலிங்கங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் சிந்துவெளி மக்கள் சிவனை முழுமுதற்பொருளாக வழிபடும் சைவ சமயத்தினர் என்று கோலப்ப கனகசபாபதி பிள்ளை (2018) கூறுகின்றார். சங்கக் காலத்தையடுத்த பல்லவர் காலத்தில் சைவ சமயம் வளர்ந்தோங்கியது (கந்தையா, 2010).

சமயக் குரவர்கள் நால்வரும் நாயன்மார்களும் இக்காலக்கட்டத்திலேயே தோன்றிச் சமய உணர்வு மேலிடும் பக்திப் பாடல்களை அருளிச் செய்தனர் (சென்னை பல்கலைக்கழகம், 1981). பல்லவர் காலத்தையடுத்த சோழர் காலம் சைவ சமயத்தின் உச்சம் என்கிறார் ந.சி.கந்தையா (2010). சைவ சமயம் எழுச்சி கண்டது மட்டுமல்லாது

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இறைவனையும் இறையடியார்களையும் பாடும் மரபு எழுந்தது. சிவத்தொண்டையே குறிக்கோளாகக் கொண்டு பல அரியச் செயல்களையும் அற்புதங்களையும் செய்த நாயன்மார்களின் வரலாறு பெரிய புராணமாகப் படைக்கப்பட்டது (சுப்ரமணியம் பிள்ளை, 1940). இதனால் பெரிய புராணம் சைவத்தின் பெருமையை உணர்த்தும் நூலாக விளங்குகிறது.

2.7.2 பெரியபுராணத்தில் சைவ நெறிகள்

சைவ சமயம் பல்வேறு நெறிகளை உள்ளடக்கியது. அன்பு, தொண்டு, பக்தி, ஆகம நெறி, சிந்தாந்த நெறிகள் என அடுக்கிக் கொண்டே போகலாம். இவை யாவும் சமயம் என்ற கட்டுப்பாட்டுக்குள் வரையறுக்கப்பட்டுள்ளன. பெரிய புராணத்தில் மூவகை நெறிகள் போற்றப்படுகின்றன. அவை முறையே ஆகம நெறி, அன்பு நெறி, வைதிக நெறியாகும். சிவகோச்சாரியார், திருநீலநக்கர், சண்டேஸ்வரர் ஆகியோர் ஆகம நெறியைப் பின்பற்றியவர்களாவர். கண்ணப்பர் அன்பு நெறியைப் பின்பற்றியவர். வைதிக நெறியைப் பின்பற்றியவர் சிவபாத இருதயர். இவற்றுள் ஆகமம் என்பது சிறப்புடையது. 'ஆ' என்பது பாசத்தையும், 'க' என்பது பசுவையும், 'ம' என்பது பதியையும் குறிப்பதால் இது முப்பொருள்களை உணர்த்தும் நூல் என்பது ஆறுமுக நாவலரின் (2002) கருத்தாகும்.

ஆகமங்கள் இறைவனால் உலகிற்கு அளிக்கப்பட்டவை. அவை மொத்தம் 28. இவ்வாகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு மார்க்கங்களையும் முப்பொருள் தத்துவத்தையும் உணர்த்துகின்றன எனக் கா.சுப்ரமணியம் பிள்ளை (1940) குறிப்பிடுகின்றார். 'அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்' என்கிறது திருமந்திரம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

(திருமந்திரம், 69). பெரிய புராணத்தில் ஆகமம் இறைவனால் அருளப்பட்டது எனவும் அதன் குறிக்கோள் சிவபூசையே என்பதும் விவரிக்கப்பட்டுள்ளது.

2.7.2.1 பக்தி நெறி

பக்தி என்பது வரையறுக்க முடியாத ஒன்று. இருப்பினும் பக்தியைப் பற்றி அ.ச.ஞானசம்பந்தன் காண்டில்ய பக்தி எனும் சூத்திரத்திலிருந்து விளக்கியுள்ளார். இறைவனிடத்தில் கொள்ளும் மிக உயர்ந்த அன்பைப் பக்தி எனலாம். இறை பணியில் மனதை ஒருமுகப்படுத்தி செலுத்துவதுதான் பக்தி. இது தர்ம, யோக, ஞானங்களைக் காட்டிலும் உயர்வானதாகும் என்கிறார் அவர் (1999).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தனக்கென வாழாமல் பிறருக்காக வாழ்பவன் பக்தன் அல்லது தொண்டன். பெரிய புராணத்தில் பக்திச் சுவை ததும்பி வழிகிறது. சேக்கிழார் இடம், பொருள், காட்சி எல்லாவற்றிலும் இறைவனையே காண்கிறார். பக்தி என்பது சமய வாழ்வின் சாரமாகவும் திகழ்கிறது. மற்ற உறவுகள் அனைத்தையும் மறந்துவிட்டு இறைவனுக்கும் நமக்கும் உள்ள உறவை மட்டுமே எண்ணுவது பக்தி என்கிறார் கேயார்ட் (ஞானசம்பந்தன், 1999).

2.7.2.2 அன்பு நெறி

பக்தி நெறியும் அன்பு நெறியும் ஒன்றாகவே கருதப்படுகிறது. இவ்விரண்டு நெறிகளும் தன்னலமற்ற இறை தொண்டினையே போற்றுகின்றன. இருப்பினும், அன்பு நெறியானது பக்தி நெறியைக் காட்டிலும் உயர்வானதாகக் கருதப்படுகிறது. அன்பு நெறியில் சில அநுசாரங்கள் ஏற்படினும் இறைவன் அவற்றைப் பொறுப்பதோடு அதனையே

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

உயர்ந்ததாகவும் ஏற்றுக் கொள்கிறார் எனக் குன்றக்குடி அடிகளார் (2001) விளக்குகிறார். அன்பே எல்லாவற்றிற்கும் மேலானது. அன்பு மேலோங்கினால் தன்னலம் மறைவதோடு பிறர் நலம் பேணும் எண்ணமும் மேலிடும். திருவருளைப் பெறுவதற்கும் அன்பே சிறந்தது. அன்பினால்தான் சமுதாயம் இயங்குகிறது என்பதைச் சேக்கிழார் உணர்த்துகிறார். இச்சமுதாய அமைப்பு உயிர்களைத் தாங்குவதோடு வளர்த்தும் விடுகிறது. குறைவற்ற நிறைவான அன்பு சிவத்தை அடைகிறது என்கிறார் அடிகளார் (2001).

அன்பு நெறியில் குறைகள் தெரியாது. இன வேற்றுமை, ஏழை பணக்காரன் தன்மை, ஆண்டான் அடிமை நிலை ஆகியவற்றை அன்பு நெறி கருதுவதில்லை. முருக நாயனாரது மடத்தில் அடியார்கள் அனைவரும் உணவுண்டு கலந்துரையாடியது போற்றுதற்குரியது. 'அன்பின் வழியது உயிர்நிலை' (குறள், 80) என்பதற்கேற்ப 'அன்பும் சிவமும்' ஒன்றுதான் என்கிறார் திருமூலர். இறைவன் சிவகோச்சாரியாருக்குக் கண்ணப்பரின் அன்பு பூஜையையே உணர்த்தினார். பூசலாரின் அன்பு கலந்த மனக்கோயிலே இறைவனுக்கு உகந்ததாக அமைந்தது. அன்போடு செய்யப்படும் வழிபாடே சிறப்பானது என்கிறார் குன்றக்குடி அடிகளார் (2001).

2.7.2.3 அருள் நெறி

அருள் அன்பின் உச்சம் எனப்படுகிறது. 63 நாயன்மார்களின் வரலாறும் அருளின் வெளிப்பாடே என்கிறார் அருணாசலம் (1969). அருளானது பரந்த இயல்பைக் கொண்டது. நமக்குத் தொடர்பில்லாதவர்களுடனும் ஏற்படக்கூடியது. இதையே வள்ளுவரும்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப்
பண்பும் பயனும் அது

(குறள், 45)

எனச் சான்று பகர்கின்றார். இல்வாழ்க்கையில் அருள் போற்றப்படுகின்றது என்பதை இக்குறள் விளக்குகிறது. சமயக் குரவர்கள் மூவரும் அருள்வழி நின்றவர்களேயாவர். இவர்கள் நிகழ்த்திய அற்புதங்கள் அருளின் வெளிப்பாடேயாகும். எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டும் என்பதே இவர்களின் கோட்பாடாகும் (அருணாசலம், 1909).

2.7.2. தொண்டு நெறி

'பொது நலத் தொண்டும் தியாகச் சாதனமும் இல்லாத வாழ்க்கை மேதகு வாழ்வல்ல' என்கிறார் க.திரவியம் (1974). தன்னலமற்ற மனமிருந்தால் மட்டுமே தொண்டாற்ற முடியும். பயன் கருதாமல் இடையூறுகளைக் கண்டும் பின்வாங்காமல் செய்வதே தொண்டாகும். இறைவன் அருளையே மூலதனமாகக் கொண்டு அவனுக்கும் அவன் அடியார்களுக்கும் மக்களுக்கும் எவ்வித எதிர்பார்ப்புமின்றி செய்வதே தொண்டு. அடியார்கள் பிறருக்குத் தொண்டு செய்வதையே இறைவனிடத்தில் வேண்டி நின்றனர். தாயுமானவரும், இதனையே,

வேண்டுஞ் சீரருள் மெய்யன்பர்க் கேயன்பு
யண்ட நானென் புலமறி யாததோ
ஆண்ட நீஉன் அடியவன் நானென்று
தூண்டு வேனன்றித் தொண்டனென் சொல்வதே

(தாயுமானவர் பாடல், 208)

என இறைவனிடத்தில் அன்பர் பணி செய்ய வேண்டுகின்றார்.

பெரிய புராணத்தில் 'தொண்டு' எனும் பண்பே மேலோங்கி நிற்கிறது. இஃது அடியார்கள் வாழ்வோடு தொடர்புடையது. பிறரின் வளர்ச்சியைக் கண்டு தோன்றும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அழுக்காறுகளை நீக்கவல்லது பொதுநலத்தொண்டே என்று கூறும் அழகரடிகளின் கூற்று அடியார்களின் வாழ்வோடு தொடர்புடையது என நடராசன் தமது ஆய்வொன்றில் குறிப்பிட்டுள்ளார் (1993). பெரிய புராணத்தில் அடியார்கள் தொண்டுணர்வுள்ளவர்களாதலால் தொண்டர்கள் எனப்பட்டனர். இதில் பலவகை தொண்டுகள் இடம்பெற்றுள்ளன. சிவனடியார் தொண்டு, திருக்கோயில் தொண்டு, உழவாரத் தொண்டு, இறைவனுக்குச் செய்த தொண்டு, சமயத் தொண்டு எனப் பகுக்கப்பட்டுள்ளது. சிவனடியார்களைச் சிவனாகவே கருதும் இயல்பு நாயன்மார்களிடம் இருந்தது. சிவனிடத்தில் கொண்ட அன்பால் அவன் அடியார்கட்குச் செய்த தொண்டு சிவத்தொண்டு ஆனது (ஞானசம்பந்தன், 1999).

நள்ளிரவில் கொட்டும் மழையில் விதைநெல்லைக் கொண்டு அடியார்க்கு விருந்து வைத்த இளையான்குடி மாறனார், அடியார்களுக்குப் பேதமின்றி பாதபூசை செய்த கலிகம்பர், கோவணத் தொண்டு புரிந்த அமர்நீதியார், அடியார்களுக்குத் துணி வெளுத்துக் கொடுத்த திருக்குறிப்புத் தொண்டர், அடியார் அமுதுக்குச் செந்நெல் சேமித்த கோட்புலியார், தனியொருத்தியாய் அடியார்கட்கு உணவு, உடை கொடுத்து உபசரித்த காரைக்காலம்மையார், போரில் பெற்றக் கூலியை இறையடியார்க்காக்கிய முனையடுவர், சூதில் வென்ற பொருளை அடியார்க்கமுதாக்கிய மூர்க்கர், பிள்ளையையே அரிந்து அடியார்க்கு அமுது படைத்த சிறுதொண்டர் போன்றோர் சமுதாயத் தொண்டும் செய்தது தெரிய வருகிறது (ஆறுமுக நாவலர், 2008). இதனால்தான் அடியார்க்குச் செய்யும் தொண்டு இறைவனையே சாரும் எனக் கீழ்க்காணும் பாடல்வழி விளக்குகிறார் திருமூலர்.

அவன் பால் அணுகியே அன்பு செய்வார்கள்
சிவன் பால் அணுகுதல் செய்யவும் வல்லன்
அவன் பால் அணுகியே நாடும் அடியார்
இவன் பால் பெருமைஇலயம் அதாமே

(திருமந்திரம், 1843)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

(**விளக்கம்**: மேல் ஓதிய சிவனடியாரை அடைந்து, அவர்க்கு அன்பும் பணியும் இன்புறச் செய்வார், சிவபெருமான் திருவடியை நெருங்கவும் வல்லராவர். மேலும், அம் மெய்யடியாரைத் தொடர்ந்து நாடுபவர் சிறந்தோராவர். அவர்பால் முழுப்பெருமையும் தங்கும். சிவனடியார் வாயிலாகவே தாயிலாச் சிவனை ஏய்தலாம்.)

2.7.2.4.1 மக்கள் தொண்டு

அடியார்கள் தன்னலங்கருதாமல் சமுதாயத்திற்கு அறவழியில் நின்று திருத்தொண்டு செய்பவர்கள்; எத்தகைய பணிகள் மக்களின் நல்வாழ்விற்கும் மேம்பாட்டிற்கும் வித்திடுமோ அத்தகைய குறிப்பறிந்து செயல்படும் அருளாளர்கள் என அ.கி.நாயுடு (1963) குறிப்பிடுகின்றார்.

துன்பம் நேரிடும் போது மக்களுக்கு உதவுவது மக்கள் தொண்டாகிறது. தொண்டுள்ளம் படைத்த அடியார்கள் ஓரிடத்திலேயே இருப்பதில்லை. ஊர் ஊராகச் சென்று தொண்டு செய்வர். பெரிய புராணத்துள் நாயன்மார்களின் வரலாற்றில் இதனைக் காணலாம் (ஆறுமுக நாவலர், 2008). நாயன்மார்கள் இறைவனை வழிபடும் நோக்கத்திற்காகவே பல ஊர்களுக்கும் சென்றனர். இருப்பினும், 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்பதை நன்கு உணர்ந்தவர்களாதலால் மக்கள் தொண்டையே முதன்மையாகக் கருதிச் செயலாற்றினர் (சென்னை பல்கலைக்கழகம், 1981).

பெரிய புராணத்துள் நாயன்மர்களின் மக்கள் தொண்டு பலவிடத்தும் விவரிக்கப்பட்டுள்ளது. கொல்லிமழவரின் மகளுக்கு முயலகன் எனும் நோய் ஏற்பட்டமையால் அவள் ஆசிரமத்தில் சேர்க்கப்பட்டாள். அந்நாளில் அங்கு வந்த திருஞானசம்பந்தர் சிவபெருமானை எண்ணிப் பதிகம் பாட அப்பெண் குணமாகினாள். இதிலிருந்து அடியார்கள் பிணியினின்றும் வாழ்வதுடன் மற்றவர்களையும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

காப்பாற்றுகின்றனர் என்பது தெரிகிறது (சத்தியவேல் முருகனார், 2014). மேலும், திருஞானசம்பந்தர் கொடி மாடச் செங்குன்றில் தங்கியிருந்தபோது அடியார்களுக்கு அந்நாட்டில் குளிர் நோய் ஏற்பட்டது. திருஞானசம்பந்தர் பதிகம் பாடி அந்நாட்டு அடியார்கள் நோயிலிருந்து விடுபட உதவினார். தொற்று நோய் பரவினால் மருத்துவர்களின் உதவியை இன்றைய நாளில் நாடுகின்றனர். ஆனால், அன்று அடியார்களே மருத்துவராகவும் தொண்டு புரிந்துள்ளனர் என்பதும் இதனால் நிருபனமாகிறது (.கலியாணசுந்தரனார், 2014).

திருமருகலில் வணிகனைப் பாம்பு தீண்ட அவனது காதலி கதறி ஓலமிட்டாள். அங்கு வழிப்போக்கனாக வந்த திருஞானசம்பந்தர் 'சடையா எனுமால்' (திருமுறை 2:18: 1655) எனத் தொடங்கும் 'விஷம் தீர்த்த திருப்பதிகம்' பாடி இறைவனை வேண்டி நின்றார். இறையருளால் வணிகன் உயிர்ப்பெற்றெழ அவனுக்கும் அவன் காதலிக்கும் திருமணமும் நடத்தி வைத்தார். எனவே, அடியார்கள் என்பவர் உயிர் கொடுக்கும் ஆற்றலைப் பெற்றவர்களாகவும் உள்ளத்தால் ஒன்றியவர்களை இணைத்து வைக்கும் பண்புள்ளவர்களாவும் இருந்துள்ளனர் (சத்தியவேல் முருகனார், 2014).

அடியார்கள் சமுதாயத்தில் உள்ள இன்ப துன்பங்களையும் உணர்ச்சிகளையும் ஏற்று அதற்கேற்றவாறு தொண்டுள்ளம் படைத்தவர்களாயினர். இதனைச் சுந்தரரின் வரலாறு காட்டுகின்றது. அவிநாசியில் முதலையுண்ட சிறுவனை மீட்டுக் கொடுத்தார் சுந்தரர். சேக்கிழார் இதனை,

'.. .. சிறுவனை யான்
அந்த முதலை வாய் நின்று மழைத்துக் கொடுத்தே யவிநாசி
எந்தை பெருமான் கழல்பணிவே னென்றார் சென்றார் இடர் களைவார்
(தி.தொ.பு. 4237)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

(**விளக்கம்**: அச்சிறுவனை, விழுங்கிய அந்த முதலையின் வாயினின்றும் அழைத்துக் கொடுத்த பின்னரே, நான் அவிநாசியாகிய எமது பெருமானது திருவடிகளைச் சென்று வணங்குவேன்; என்றார் சென்றார் இடர்களைவார் - தம்பால் அன்பினாற் சென்றவர்களது இடரைக் களைவாராகி நம்பிகள் என்று இவ்வாறு சொன்னார்.)

என்று பாடுகிறார். அடியார்கள் இடர் தீர்த்தது இதனால் புலனாகிறது (செந்தமிழ்ச் செல்வி, 2006).

அடியார்கள் மக்களுக்கு உணவு கொடுத்தும் தொண்டாற்றியுள்ளனர். இறைவனின் அடியார்கள் என்ற ஒரே நோக்கத்திற்காக மட்டும் அடியார்கள் இத்தகையத் தொண்டாற்றவில்லை. முன்பின் தெரியாதவர்களாயினும் அவர்களை உபசரிப்பதே அடியார்களின் பண்பெனச் சேக்கிழார் குறிப்பிடுவதாக அ.ச.ஞானசம்பந்தன் (1999) 'பெரிய புராணம் ஓர் ஆய்வு' எனும் நூலில் கூறியுள்ளார் . மேலும், சைவ நெறி உலகம் தழுவியது என்ற கொள்கையினாலே அடியார்கள் அனைவருக்கும் உணவளித்தனர் எனும் சேக்கிழாரின் கூற்றையும் முன்நிறுத்தியுள்ளார் (ஞானசம்பந்தன், 1999).

இவற்றால் நாயன்மார்களின் தொண்டு மனப்பான்மையை நன்கு அறிய முடிகிறது. இவர்களின் தொண்டு இன்றையச் சமுதாயச் சூழலிலும் காணப்படுவதைப் பார்க்க முடிகிறது. எனவே, பண்பாடு நிறைந்த ஒரு சமுதாயத்தையே பெரிய புராணமும் உயர்த்திக் காட்டுகின்றது (குன்றக்குடி அடிகளார், 2001).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

2.7.2.4.2 மகேசன் தொண்டு

இறைப் பணிக்காகவே தங்களை அர்ப்பணித்துக் கொண்டு வாழ்வதை இது குறிக்கும். மேலும், இறைவனுக்குச் செய்யும் தொண்டையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்க்கை நடத்தியதும் தகும். தில்லைவாழ் அந்தணர்கள், ஆதி சைவ மரபினர், முப்போது திருமேனி தீண்டும் அடியார்கள் ஆகியோர் இதில் முதலிடம் பெற்றவர்கள் (இராசமணிக்கனார், 1959).

தமக்காக இன்றிப் பிறருக்காகத் செய்வது சமூகச் சேவையாகும். வழிபட வரும் அடியார்களிடத்தில் இறைவனைப் பற்றிய உண்மைகளையும் தத்துவங்களையும் எடுத்துக் கூறுவதும் இத்தகையச் சேவையேயாகும். சடையனார், இசைஞானியார் யாவரும் இதுபோன்ற அகத்தொண்டு புரிந்தவர்களேயவர். கணம்புல்லர், கலியர், நமிநந்தியடிகள் ஆகியோர் திருக்கோயிலில் விளக்கேற்றும் தொண்டினைச் செய்தவர்கள். பலரும் வந்து இறைவனைத் தரிசிக்கும் ஆலயம் ஒளிபொருந்தியதாக இருக்க வேண்டும் என்பது இவர்களது ஆசை (ஆறுமுகம், 2004). மேலும், அகயிருளை நீக்கும் இறைவனை வழிபடுவோர்க்குப் புறயிருளை நீக்கும் திருவிளக்குத் திருப்பணி சமூகத் தொண்டாகவே கருதப்படுகிறது. திருக்கோயிலில் குங்கிலியத் தீபம் இடும் பணி குங்கிலியரால் மேற்கொள்ளப்பட்டது. இதன்வழி, உயிர்களிடம் நச்சுத்தன்மை பரவாமல் பாதுகாக்கும் மிகப் பெரியத் தொண்டைச் செய்தவராகிறார். திருநாளைப்போவார் நாயனார் புலையர் சாதியில் பிறந்தாலும் இறைவனின் பூசைக்காக வாசனைத் திரவியங்களையும் இசைகருவிக்காகத் தோல், வார் முதலியவற்றைக் கொடுத்தும் தொண்டாற்றியுள்ளார் (ஆறுமுக நாவலர், 1851).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அப்பர் பெருமான் தொண்டின் நெறியை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர். நாம் வழிபடும் இறைவனின் திருக்கோயில் எப்போதும் சுத்தமாக இருக்க வேண்டும் என்ற நெறியை உணர்த்தியவர் அப்பரடிகள் என மஞ்சுளா (2004) குறிப்பிடுகின்றார் . இவர் இறைவனடி சேரும் இறுதி நேரம் வரை உழவாரத் தொண்டு புரிந்தவர் என்கிறார் சேக்கிழார் (மங்கையர்கரசி, 1972).

இறைவனை மனம், வாக்கு, காயத்தினால் வணங்க வேண்டும். மனம் இறைவனை நித்தமும் சிந்திக்க, வாய் இறைவனது திருவைந்தெழுத்தை ஓத, உடலினால் பல தொண்டுகள் புரிந்தவர்கள் அடியார்கள். நாள்தோறும் காலை, மாலை என இரு வேளையும் இறைவனின் திருக்கோயிலைச் சுத்தப்படுத்தித் தொண்டாற்றியவர்களும் உண்டு. மேலும், திருக்கோயில்களில் இறைவனுக்காக பூமாலை கட்டிக் கொடுத்தவர்களும் உண்டு. தொண்டு செய்தால் இறைவனின் திருவடியை அடையலாம் என்று திருநாவுக்கரசரின் புராணத்தில் சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார் (சுப்ரமணியம் பிள்ளை, 1940).

சமுதாய வாழ்வில் நிறுவப்பட்டக் கோயில்கள் பண்பாட்டின் உண்மையை எடுத்துரைக்கின்றன என்கிறார் அ.மு.பரமசிவானந்தம் (1972). எனவே, சமயமானது தொண்டின் நெறியை உலகுக்கு உணர்த்திக் காட்டுவதோடு மட்டுமின்றி உலகம் உய்யவும் வழிகாட்டுகிறது (குறளகம், 1992).

சமயக் குரவர்கள் பல ஊர்களுக்கும் சென்று பதிகம் பாடி இறைவனை வழிபட்டனர்; சைவ சமயத்தைப் பரப்பவும் செய்தனர் என்பது ந.சி கந்தையா (2010) அவர்களின் கருத்து. திருஞானசம்பந்தர் புத்த நந்தியின் தலையில் இடிவிழச் செய்தது; ஆண்பனையைக் காய்க்கச் செய்தது; மதுரையில் கூன் பாண்டியனின் வெப்பு நோய்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தீர்த்துச் சைவத்தைத் தழைக்கச் செய்தது; அனல் வாதம் புனல் வாதம் புரிந்தது யாவுமே சைவ சமயத்தை நிலைநாட்டச் செய்த தொண்டுகளேயாகும். குலச்சிறையாரும் சைவ சமயம் தழைக்க அரசிக்குத் துணையாயிருந்து திருஞானசம்பந்தரை அழைத்துத் தொண்டாற்றினார் (சத்தியவேல் முருகனார், 2014).

தான் கெட்டாலும் மற்ற உயிர்களை வாழவைப்பதே சமயப் பண்பாடாகும். வாழும் காலத்தில் மட்டுமின்றி வீழ்ந்திடினும் கூட உலகம் வாழ வழி செய்வதும் சமயப் பண்பாடாகும். இத்தகைய நெறிகளையே சமயத் தலைவர்கள் பின்பற்றி வாழ்ந்தனர். இவர்களின் முயற்சியால் நிறுவப்பட்ட சமயப் பள்ளிகள் சமூகத் தொண்டாற்றும் களமாகவும் அமைந்தன. தம் இன்பத்தைத் தியாகம் செய்து மற்றவர் இன்பம் பெறுவதற்காக வாழ்தலே சமய வாழ்வாகும். தன்னை வருத்தி உலக மக்களை மகிழ்விக்கும் பண்பாட்டைச் சமயம் சமூகத்திற்கு வழங்குகிறது (பரமசிவானந்தம், 1972). இவ்வகையில் யார் தீங்கிழைத்தபோதும் தொண்டு எனும் குறிக்கோளிலிருந்து பிறழாமையே அடியார்களின் பண்பு என்பதைச் சேக்கிழார் உணர்த்தியுள்ளார். தண்டியடிகள், திருநாளைப் போவார் ஆகிய நாயன்மார்கள் மக்களின் பயன்பாட்டிற்கு உதவியாகத் தொண்டாற்றியுள்ளனர் என்பதையும் அறிய முடிகிறது (சுந்தர், 2008).

நாயன்மார்களில் பலரின் தொண்டு சைவ சமயத்திற்கு இன்றியமையாதது (கந்தையா, 2010). அக்காலக்கட்டத்தில் சைவம் மீண்டும் தழைத்தோங்க அறப்போராட்டம் நடத்தியவர்கள் நாயன்மார்கள். சமணர்களாயிருந்த அரசனையும் நாட்டு மக்களையும் சைவத்திற்குத் திருப்பிய பெருமை இவ்வடியார்களையே சாரும். பொறுமை, மனந்தளராமை, சகிப்புத் தன்மை, உறுதியான குறிக்கோள் ஆகியவை இவர்களது போராட்டம் வெற்றியடைய வழிவகுத்தது எனலாம் (குறளகம், 1992)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

2.7.2.5 சித்தாந்த நெறி

உலகின் தொன்மையான சமயமாகிய சைவம் தமிழர்கள் போற்றிய இறைநெறி என்பது மறுப்பதற்கில்லை என்கிறார் ந.தர்மலிங்கம் (2012). இதனைச் சைவ சித்தாந்தம் என்றும் குறிப்பிடுவதுண்டு. சைவத்தைச் சமயம், சித்தாந்தம் என்ற இரண்டு நிலைகளில் சிந்திக்க வேண்டுமென நாகப்பன் ஆறுமுகம் (2008) கூறுகிறார். அவரின் கூற்றின்படி இறைவனை அறியும் உணர்வின் வெளிப்பாடு சமயம் எனவும் இறைவனை அறியும் அறிவின் வெளிப்பாடு சித்தாந்தம் எனவும் தெளிவு பெறலாம் (2008).

சித்தம் + அந்தம் என்பதே சித்தாந்தம் ஆனது. இது சிந்தையின் முடிவான முடிவேயாகும். மேலும், சிவத்தைப் பற்றிய சிந்தனையின் முடிவுதான் சைவ சித்தாந்தம் எனப்படுவதாகக் கூறுகிறார் ந.தர்மலிங்கம் (2012). இந்தச் சைவ சித்தாந்தம் சிவ ஆகமங்களையும் திருமுறைகளையும் மெய்கண்ட சாஸ்திரங்களையும் அடிப்படையாகக் கொண்டே விளங்குகின்றது என்கிறார் அவர் (2012).

திருவள்ளுவரும் இதனையே ‘கடவுள் வாழ்த்து’ எனும் அதிகாரத்தில் மேற்கோள் காட்டியுள்ளார். திருக்குறள் இறைவன் பெருமைகளை அறிவார்ந்த சிந்தனையாகக் கடவுள் அதிகாரத்தில் சுட்டுகிறது (நாகப்பன் ஆறுமுகம், 2008). திருக்குறளில் கடவுள் பெயரோ சமயத்தின் பெயரோ எங்கும் குறிப்பிடப்படவில்லை. சைவ சமயத்தின் சித்தாந்தமும் இதுபோன்று மெய்ப்பொருள் உண்மைகளையே ஆராய்கிறது என்பது அவர் (2008) கூற்று. ந.தர்மலிங்கம் (2012) அவர்களும் தமிழர் சிந்தனையின் பெரும் பயனாகக் கிடைத்ததே சித்தாந்தம் என்கிறார். எனவே, சைவ சித்தாந்தத் தத்துவக் கொள்கை தமிழ்மொழிக்கும் தமிழருக்குமே உரியது எனலாம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சைவ சித்தாந்தம் தவயோகிகளாலும் முனிவர்களாலும் அருளப்பட்டது என நாகப்பன் ஆறுமுகம் (2008) கூறுகிறார். சைவ சித்தாந்தம் பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் உண்மைகளை விளக்கி நிற்கிறது. இம்மூன்றைப் பற்றியும் அறிந்து கொள்வதால் மட்டும் உயிர்கள் இறைவனை அடைய முடியாது. மாறாக, இறைவனடியைச் சேரும் குறிக்கோளை அடைவதற்குத் தேவையான பயிற்சிகளையும் உயிர்கள் மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் உண்டு எனவும் நாகப்பன் ஆறுமுகம் (2008) கூறுகிறார். இந்தப் பயிற்சி உடலளவில் தொடங்கி மனம், உயிர் என பல படிமுறைகளாக அமைந்துள்ளதைச் சைவ சித்தாந்தம் தெளிவாக விளக்குகின்றது என்பதையும் அவர் (2008) வலியுறுத்துகிறார்.

2.7.2.5.1 பதி

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எழுத்துகள் எல்லாம் அகரத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதுபோல் உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டு விளங்குகிறது. இதையே வள்ளுவம்,

> அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
> பகவன் முதற்றே உலகு
>
> (குறள், 1)

குறிப்பிடுகிறது. உலகப் பொருள்களைத் தோற்றுவித்துச் சிறிது காலம் நிலைபெறச் செய்து, பின்னர் அவற்றை ஒடுக்கும் பேரறிவு ஒன்று உள்ளதென்பது புலப்படுகின்றது என ந.தர்மலிங்கம் (2012) தெளிவுறுத்துகிறார். தத்துவ உலகில் இறைவன் அல்லது கடவுள் என்றழைக்கப்படும் பரம்பொருளே பதி எனச் சைவ சித்தாந்தம் வழங்குவதாக நாகப்பன் ஆறுமுகம் (2008) கூறுகின்றார் .

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

'பதி' எனும் சொல்லுக்குத் தலைவன், தலைமை கொண்டவன், காப்பவன் எனப் பொருள் கொள்ளலாம். பதியானது தனது சிறப்பு நிலையில் உண்மை, அறிவு, இன்பமாய் விளங்குகின்றது எனச் சைவ சித்தாந்தம் கூறுகின்றது. இந்த நிலையில் பதிக்குக் குணம், அடையாளம், பெயர், வடிவம் ஆகியவை கிடையாது என்பதை ந.தர்மலிங்கம் (2012) கோடிட்டுக் காட்டுகிறார். பதி தனது சிறப்பு நிலையில் உண்மை, அறிவு, இன்பமாய் இருக்கின்றது.

இதனையே சத்து, சித்து, ஆனந்தம் என்கின்றனர் என நந்தலாலா (2008) கூறுகிறார். ஆதியும் அந்தமும் இல்லா நிலையான பேராற்றலே சத்து எனப்படும். இதனையே, திருமூலரும் பதி என்றும் அழிவில்லாத நிலைத்த பொருள் என்கிறார். சித்து என்பது பேரறிவினைக் காட்டுகிறது. இவ்வுலகங்களையும் இவ்வுலகப் பொருள்களையும் இயக்கவும் ஒடுக்கவும் செயல்படும் அந்த அறிவு வடிவே பதி என்பதும் புலப்படுகிறது. ஆனந்தம் எனப்படுவது மனிதர்களின் கண்ணுக்கும் கற்பனைக்கும் எட்டா வண்ணம் இருக்கும் பதியின் பேரின்ப நிலையைக் குறிக்கின்றது என நாகப்பன் ஆறுமுகம் (2008) கருத்துரைக்கிறார்.

உயிர்கள் பாசப் பிணைப்பிலிருந்து விடுபடும் பொருட்டுச் சிறப்பு நிலையில் இருக்கும் பதியானது பொது நிலைக்கு இறங்கி வருகிறது. இதுவே அருவம், உருவம், அருவுருவம் எனப்படும் மூவகைத் திருமேனிகளாகும் என்று அவர் (2008) மேலும் விளக்குகிறார். எனவே, பதியாகிய இறைவன் உயிரோடும் உலகங்களோடும் ஒன்றாய் இருந்து அவற்றை இயக்குகிறான். மேலும், உயிர்கள் அறிவையும் அனுபவங்களையும் பெறச் செய்கிறான். இறுதியாக, உயிர்களைப் பாசத்திலிருந்து நீக்கி தன்னிடம் உள்ள பேரின்பத்தை நுகரச் செய்கின்றான் (தர்மலிங்கம், 2012).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

2.7.2.5.2 பசு

'பசு' என்பது உயிரைக் குறிக்கும். 'பச்' எனும் வேர்ச்சொல்லிலிருந்து உருவான இது கட்டப்பட்டது என்று பொருள்படும் என்கிறார் நாகப்பன் ஆறுமுகம் (2008). பசு என்பது உயிர், ஆன்மா, ஆத்மா, அணு என்றும் சைவ சமயத்தில் கூறப்படுகின்றது.

பதியைப் போன்று பசுக்களும் அநாதியானவையே என்கிறது சித்தாந்தம். மேலும், உயிர்கள் எண்ணிலடங்காதவை. ஆதலால் அவற்றை 'எண்ணிலி' என்றும் சைவ மெய்கண்ட நூல்கள் குறிப்பிடுகின்றன (தர்மலிங்கம், 2012). இறப்பிற்குப் பிறகு உடல் மட்டுமே அழிகிறது. ஆனால், உயிர் உடலினின்றும் வெளியேறி மீண்டும் பிறவிகள் எடுக்கும் தன்மையையுடையது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

உயிர்களுக்கு அவை செய்த கர்ம வினையின் அடிப்படையில் பிறவிகள் கொடுக்கப்படுகின்றன என்பது சைவத்தின் நம்பிக்கை. உயிர்கள் எல்லா பாவங்களையும் துடைத்தொழித்துப் பாச பந்தங்களிலிருந்து விடுபடும்போதுதான் இறைவனை அடைகின்றன (நாகப்பன் ஆறுமுகம், 2008). பிறவிப் பிணியிலிருந்து நீங்கப் பெற்ற உயிரானது முக்தி எனும் வீடு பேற்றினை அடைந்து பேரின்பமாகிய இறைவனின் திருவடியில் சேரும் (கௌசல்யா, 1996).

2.7.2.5.3 பாசம்

'பாசம்' என்பது வடமொழிச் சொல்லாகும். இதன் பொருள் கயிறு என்பதாகும். கயிற்றின் பயன் கட்டுவதாகும். எனவே, பாசம் எனும் சொல் கட்டு அல்லது தளை எனும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பொருளைத் தாங்கி நிற்கிறது என்கிறார் நாகப்பன் ஆறுமுகம் (2008). மேலும், பாசம் என்பது உயிர்களைக் கட்டுகிறது. இதனால், உயிர்களின் இயல்பான ஆற்றல்களான அறிவு, இச்சை, செயல் ஆகியவை மூன்றும் செயலற்றுப் போகின்றன எனவும் அவர் (2008) குறிப்பிடுகின்றார் .

உயிர்களைப் பற்றியிருக்கும் அழுக்கு அல்லது மலமே பாசம். இது மூவகைப்படும். அவை ஆணவம், கன்மம், மாயை ஆகும். இம்மூன்றில் ஆணவ மலம் ஆரம்பம் முதலே உயிர்களைப் பற்றியிருக்கும் என்கிறார் ந.தர்மலிங்கம் (2012). இவ்வாணவ மலத்தினாலேயே உயிர்கள் அறியாமையில் உழன்று தன்னையும் அறியாமல் இறைவனையும் அறிய முடியாமல் தவிக்கின்றன என்கிறார் அவர் (2012).

எனவே, பெருங்கருணையாளனான இறைவன் இந்த ஆணவ மலத்தைக் கழுவவே உயிர்களுக்குக் கன்மம், மாயை எனும் இரண்டு மலங்களைச் சேர்த்துக் கொடுக்கின்றான் என்கிறது சைவ சித்தாந்தம் . நமது எண்ணம், சொல், உடல் ஆகியவற்றால் செய்யப்படுபவையே கன்மம் எனப்படும். இது கர்ம வினைகள் என்றும் கூறப்படுகின்றது. மாயை என்பது உலகங்களையும் உலகப் பொருள்களையும் தோற்றுவிக்கவும் ஒடுக்கவும் காரணமாயிருக்கின்ற மூலப்பொருள் (தர்மலிங்கம், 2012). இம்மூன்று மலங்களும் பசுவைப் பற்றுமே தவிர பதியினைப் பற்றாது. உயிர்கள் செவ்வியுற்று இறைவனை நெருங்கும்போது பாசம் எனும் கட்டு தானாகவே மறைந்து விடும் என்கிறார் அவர் (2012).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

2.7.2.5.4 சித்தாந்த சாதனம்

உலகம் தோன்றிய காலம் முதல் கடவுளைப் பற்றிய கருத்துகள் நிலவி வருகின்றன. கடவுளைப் பற்றியக் கேள்விகள் எழுந்தது போலவே உயிர், உலகம் பற்றிய சிந்தனையும் எழுந்தது. கூடவே இறைவன், ஆன்மா, உலகம் தொடர்பான விளக்கங்களும் தேவைப்பட்டன. இதன் அடிப்படையில் முப்பொருள் பற்றிய ஆராய்ச்சிகளும் தோன்றின. இந்த ஆராய்ச்சிகளின் முடிவே சித்தாந்தம் எனப்பட்டது என்கிறார் நாகப்பன் ஆறுமுகம் (2008).

சித்தாந்தம் பற்றிய அறிவானது பிணி, மூப்பு, சாவு ஆகிய உயிர்களின் துன்பத்தைக் களைய வழி தேடியது. உலக வாழ்வில் அனுபவிக்கின்ற துன்பங்களிலிருந்து விடுபடச் சிந்திக்கச் செய்தது. இதன் அடிப்படையிலேயே ஞானிகளும் முனிவர்களும் அதற்கான சாதனங்களை அல்லது செயல்முறைகளை வடிவமைத்தனர் என்கிறார் அவர் (2008). பதி, பசு, பாசம் எனப்படும் முப்பொருள் தத்துவங்களையும் வீடுபேறு அடைவதற்கான நெறிகளையும் விளக்குவதே சைவ சமயம்.

இவற்றுள் முதலில் உள்ளது சித்தாந்தம் எனவும் இரண்டாவது சமயம் எனவும் காணலாம் என்பது அவர் கருத்து. மேலும், சித்தாந்தம் அறிவுவயப்பட்டதால் அறிவு நெறி என்றும் சமயம் உணர்வுவயப்பட்டதால் பக்தி நெறி என்றும் கூறலாம் எனவும் அவர் கூறுகிறார். எனவே, சித்தாந்த அறிவைச் சாதனங்களில் செயல்படுத்தினால் உயிர்கள் ஆணவத்தால் ஏற்படும் அறியாமை நீங்கி வீடுபேறு அடைய முடியும் என்பதையும் அவர் (2008) தெளிவுறுத்துகிறார். சைவ சமய அடியார்கள் யாவரும் இதுபோன்று பயன் பெற்றவர்களேயாவர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

முக்தி அல்லது வீடுபேறு அடையும் நிலையை விளக்கும் படிமுறைகளையே சித்தாந்தம் சாதனம் எனக் குறிப்பிடுகின்றது. சாதனம் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவை தமிழர் போற்றிய தவநெறிகள் எனக் கூறுகிறார் நாகப்பன் ஆறுமுகம் (2008). தாயுமானவரும்,

விரும்பும் சரியையுமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனி அன்றோ பராபரமே

(தாயுமானவர் பாடல், 1)

எனும் பாடல் வழி இதனை உணர்த்துகிறார்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நன்னெறிகள் நான்கும் சிவனுக்கு அடிமையாகும் நெறிகளேயாகும் (நாகப்பன் ஆறுமுகம், 2008). இந்தச் சித்தாந்த நெறிகளையே சேக்கிழார் பெரிய புராணத்தில் புகுத்தியுள்ளார். பெரிய புராணம் முழுவதும் நாயன்மார்களின் பக்தித் திறம் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றின்வழி புலனாகிறது (குன்றக்குடி அடிகளார், 2001).

வீடுபேற்றினை அடைய மேற்கண்ட நான்கு நெறிகளில் ஏதாகிலும் ஒன்றனைத் தெரிவு செய்து அதனைப் பின்பற்றினால் இறைவனை அடையலாம் என்கிறார் ந.தர்மலிங்கம் (2012). திருமூலரும்,

அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரிசு ஆயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரிசு ஈசன் அருள் பெறலாமே

(திருமந்திரம், 36)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

(**விளக்கம்**: அனைத்துயிர்க்கும் தந்தையொப்பானை, அழியாச் செல்வ நந்தியை, உண்ணத் தெவிட்டாப் பண்ணப்படாத இயற்கை அமுதனை, ஒப்பில்லாத பிழைபொறுத்தாளும் விழைதகு வள்ளலை, பேரூழிக் காலத்தும் ஒடுக்கமின்றி நின்று மீண்டும் உலகினைப் படைப்பிக்கும் முழுமுதல்வனை, எந்த வகையானும் - அருள் உந்தும் வழியில் தொழுங்கள். தொழுதால் அந்த வகையால் அச் சிவனும் வந்து அருள்புரிவன். வள்ளலென்றார், நஞ்சுண்டு காத்த நாயனார் என்பது பற்றி.)

என்கிறார்.

சைவ சித்தாந்தக் கொள்கைக்கு மாறுபடாத வகையில் இயன்ற வழியில் எளிய முறைகளைத் தெரிவு செய்து அந்நெறியிலிருந்து சற்றும் பிறழாமல் வாழ்ந்து காட்டிய நாயன்மார்களின் சரியை சாதனமே இவ்வாய்வின் கோட்பாடாக அமைந்துள்ளது. சரியையில் தொண்டு தனிச்சிறப்புப் பெறுவதால் நாயன்மார்களின் தொண்டு இங்கு ஆராயப்பட்டுள்ளது. மேலும், தற்காலச் சூழ்நிலையில் தொண்டுணர்வோடு செயல்படும் அரசு சாரா இயக்கங்களின் சேவைகளும் சரியை அடிப்படையில் ஆராயப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

2.7.2.5.5 சித்தாந்தம் கூறும் சரியை

சரியை 'தொண்டு நெறி' அல்லது 'தாச நெறி' என்றும் சொல்லப்படுகிறது. திருக்கோயில் பணிகளும் இறைவன் அடியார்களுக்கும் செய்யப்படும் சேவையும் தொண்டு எனப்படும். தவிர, தாவரங்கள், பறவைகள், விலங்குகள், மனிதர்கள் என அனைத்து உயிர்களுக்கும் உதவி புரிவதும் தொண்டேயாகும் என்கிறார் நாகப்பன் ஆறுமுகம் (2008). ஏழைகள், நோயாளிகள், ஊனமுற்றவர்கள் ஆகியோருக்குச் செய்யும் தொண்டும் சரியையின் ஒரு பகுதியேயாகும் எனவும் அவர் கருத்துரைக்கிறார். இத்தகைய தொண்டுகள் அனைத்தும் சிவ வழிபாட்டின் ஓர் அங்கமாகத் திகழ்கின்றன. திருமூலர் உயிர்களிடத்தில் அன்பு பாராட்டுவதைச் சிவத்தொண்டாகவே கருதுகிறார். இதை,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந் திருந்தாரே

(திருமந்திரம், 257)

(**விளக்கம்**: அன்பாகிய திருவருளும் இன்பாகிய சிவனும் மணியும் ஒளியும்போல் ஒன்றே. அவற்றை இருவேறு பொருள்கள் என்று கூறுவார் மெய்யுணர்வு கைவரப் பெறாதார். மெய்ம்மையான் நோக்கின் அன்பாகிய திருவருளே இன்பாகிய சிவனுக்குத் திருமேனியாகும். அம் முறையான் அன்பே சிவமாகும். இவ்வுண்மையினையும் எவரும் உணர்கிலர். அன்பே சிவம் என்னும் உண்மையினை அருளால் அனைவரும் அறிந்தபின் தாம் இடையறாது திருவடிக்கண் வைக்கும் அன்பாகிய வித்தே சிவமாய் விளைந்து இன்பாய்க் கனிந்து அவ்வன்புடையார்க்கு என்றும் பொன்றாப் பேரின்ப நுகர்வாகும். அவ்வுண்மை 'சிவமாய் அமர்ந்திருந்தார்' என்னும் இம்மறை மொழியான் உணரலாம்.)

எனும் பாடல்வழி எடுத்துரைக்கிறார்.

திருக்கோயிலில் உள்ள குப்பைகளைக் கூட்டிச் சுத்தம் செய்வதைத் திருவலகு இடுதல் என்பார்கள். சாணம் கொண்டு மண் தரையை மெழுகுதல் திருமெழுக்கிடுதல் எனப்படும். இது போன்ற பணிகள் சரியை மார்க்கத்தைச் சாரும் என்பது நாகப்பன் ஆறுமுகம் (2008) அவர்களின் கூற்று. இன்றையக் காலக்கட்டத்தில் கோயில்கள் கல் தரையாய் இருப்பதால் கோயிலை நீரால் கழுவித் தூய்மை செய்யலாம். கோயிலில் உள்ள செப்புத் திருமேனிகளையும் சுத்தம் செய்வதற்கு உதவலாம் எனவும் அவர் (2008) கூறுகிறார். இவை யாவும் சரியை தொண்டேயாகும்.

இதைத் தவிர்த்துத், திருக்கோயிலில் தூபமிடுதல், திருவிளக்கேற்றுதல், வழிபாட்டுக்குரிய பால், நீர் போன்றவற்றை வழங்குவதும் சரியை தொண்டில் அடங்கும். நந்தவனம் அமைத்து இறைவழிபாட்டிற்குத் தேவையான பூக்களைக் கொடுப்பதும் இவ்வகைத் தொண்டேயாகும். இக்காலச் சூழலில் நந்தவனம் அமைக்க

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இயலாவிட்டாலும் வழிபாட்டுக்குரிய நல்ல மலர்களை வாங்கிக் கொடுப்பதன் மூலம் சரியை தொண்டாற்ற முடியுமென அவர் (2008) மேலும் கருத்துரைக்கிறார்.

அடியார்களை மகேஸ்வர மூர்த்தங்கள் எனச் சைவ ஆகமங்கள் கூறுகின்றன. எனவே, அடியார்களுக்குத் தொண்டு செய்வதும் சரியையே. அடியார்களுக்கு உணவு, உடை போன்றவற்றை வழங்குவது இதில் சேரும். மேலும், அடியார்கள் தங்குவதற்கு இடம் கொடுப்பதும் அடியார்களின் சிவபூசைக்கு உதவியாயிருப்பதும் சரியை தொண்டேயாகும். இத்தகைய தொண்டுகள் இக்காலத்திலும் செய்யத்தக்கவையே என்கிறார் அவர் (2008).

சரியை தொண்டு எல்லா உயிர்களுக்கும் கருணை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. திருமூலரும்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

யாவர்க்கு மாமிறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே

(திருமந்திரம், 109)

(**விளக்கம்**: எந்நிலையிலுள்ளார்க்கும் இன்பக் கூறாம் சிவனை அன்புடன் பச்சியிலையிட்டு வழிபடுதல் கூடும். பச்சிலையே செம்பைப் பொன்னாக்கும். அதுபோல் சிவ வழிபாடே ஆருயிரைச் சிவமாக்கும். அது போல் எல்லாராலும் ஆன்களுக்கு வாயுறையாகிய புல் முதலியன கொடுத்தல் இயலும். இது பொருட்கூறு ஆகும். இவ்வாயுறை கொடுப்பதன்கண் இருவேறு தொண்டுகள் அடங்கியுள்ளன. ஒன்று நந்தன வனத்துக்குக் களையெடுத்தல். மற்றொன்று பசுவினுக்குப் புற்கொடுத்தல். அதுபோல் யாவர்களாலும் உண்ணும்போது ஒரு கைப்பிடி யுணவு உவகையுடன் பிறர்க்குக் கொடுத்தல் இனிதின் இயலும். இஃது அறத்தின் கூறாகும். 'இரப்பவர்க்கு ஈயவைத்தார், ஈபவர்க்கு அருளும் வைத்தார்' என்பதனால் மேலது விளங்கும். அனைவர்க்கும் எல்லா இடத்தும் எல்லாக் காலத்தும் எல்லாருடனும் உயிர் தளிர்ப்ப, உணர்வு திருவடியில் மூழ்கிக் குளிர்ப்பச், சொல்லானும் பொருளானும் இனிமை பயப்பதாய் அதுபோல் கேள்வியினும் வினையினும் இனியதாய் உள்ள நன்மொழிகளை ஆராய்ந்து பார்த்துக் கூறும் இன்னுரை இயலும் என்க. இது வீட்டின் கூறாகும். பச்சிலையின் மாண்பு 'வில்லமறுகுக் கொவ்வா மென்மலர்கள்' என்னும் பிற்காலச் சான்றோர் மொழியானும் உணர்க.)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எனும் பாடல்வழி விளக்குகிறார். அவர் விலங்குகளுக்கு உணவிட வேண்டும் என்கிறார். மேலும், மனித நேயம் போற்ற வேண்டுமெனவும் கூறுகிறார். இதனால், பேதமின்றி அனைவருக்கும் உணவிட்டு அவர்களின் பசியைத் தீர்க்க வேண்டுமென்கிறார். பசியாற்ற இயலாத போதும் அவர்கள் மனத்துக்கு ஆறுதலாக இனியச் சொற்களையாவது கூற வேண்டுமென்கிறார்.

மனித நேயத்தைப் போற்றிய சான்றோர்கள் அக்காலத்தில் வாழ்ந்தனர். அத்தகு சான்றோர்களான நாயன்மார்களின் வரலாற்றையே பெரிய புராணம் தொகுத்து வழங்குகிறது. இவர்கள் 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' எனும் குறிக்கோளுடன் வாழ்ந்தனர் என்பதையும் பெரிய புராணம் சுட்டி நிற்கின்றது. திருக்கோயில் தொண்டு, அடியார் தொண்டு, உயிர்களைப் பேணுதல் ஆகியவை சரியை தொண்டுகளாகும். இதனைக் கருத்தில் கொண்டு செயல்பட்டால் இறைவனின் அருளுக்குப் பாத்திரமாகலாம். (நாகப்பன் ஆறுமுகம், 2008).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

2.8 பெரிய புராணம் தொடர்பான பிற ஆய்வுகள்

தமிழ் இலக்கிய ஆய்வுலகில் பெரிய புராணம் பன்முக நோக்கில் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், சைவ சிந்தாந்தம் காட்டும் சரியை அடிப்படையிலான தொண்டு நெறி பற்றிய ஆய்வுகள் குறைவாகவே உள்ளன. எது எப்படியாயினும் முந்தைய ஆய்வாளர்களின் கருத்துகள் தற்போதைய ஆய்வுக்குத் துணையாகவே அமைந்துள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

முதலாவதாக, 'பெரிய புராணத்தில் தொண்டுணர்வு' எனும் ஆய்வு தற்கால ஆய்வுக்கு மேற்கோளாக அமைகிறது. இவ்வாய்வினை ஆறுமுகம் அவர்கள் சென்னை பல்கலைக்கழகத்தில் 1989-ஆம் ஆண்டு மேற்கொண்டுள்ளார். ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு முந்தைய ஆய்வாக இருப்பினும் அவற்றின் சாரம் தொண்டுகளின் அடிப்படையில் அமைந்ததால் தற்போதைய ஆய்வுக்கு மிகவும் சாதகமாக உள்ளது. இவ்வாய்வு தொண்டு நெறியைப் பற்றிய முழுக் கண்ணோட்டத்தை வழங்குவது மட்டுமின்றி நாயன்மார்கள் கடைபிடித்த மார்க்கங்களையும் தெளிவாக விளக்கியுள்ளது.

'பெரிய புராணம் - சமூகவியல் திறனாய்வு' எனும் ஆய்வேடும் இங்குக் குறிப்பிடத்தக்கது. இவ்வாய்வு 1993-ஆம் ஆண்டு சீதாலக்ஷ்மி அவர்களால் தமிழகத்தின் பாரதியார் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் ஆய்வாளர் பெரிய புராணத்தைச் சமூகவியல் கோட்பாடுகளையொட்டிக் கருத்துரைத்துள்ளார். மேலும் அவர் சேக்கிழார் வரலாறு, சமூகவியல் போக, குடும்பம், கல்வி, பொருளாதாரம், அரசு, சமய நிறுவனம், சமுதாயம் என பல்வேறு கோணங்களில் ஆய்வினை மேற்கொண்டுள்ளார். இதில், சமயம், சமுதாயம் சார்ந்த நிறுவங்களின் பங்கு தற்கால ஆய்வுக்குத் துணையாக அமைந்தது.

மூன்றாவதாக, நடராசன் அவர்களின் 'பெரிய புராணம் காட்டும் சமுதாய அரசியல் நிலைகள்' எனும் ஆய்வு 1993-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழகத்தின் பாரதியார் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வு சமுதாயத்தையும் அதன் தேவைகளையும் சித்திரிக்கும் வகையில் ஆராயப்பட்டுள்ளது. பெரிய புராணத்தின் அடிப்படையில் சமுதாயத் தேவைகளையறிந்து தொண்டாற்றிய நாயன்மார்களின் குறிப்புகள் தற்கால ஆய்வுக்கு உதவியாக இருந்தன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொடர்ந்து, 'பெரிய புராணம் - சமூகம்சார் பின்னணி - மனிதநேய உறவு' எனும் தலைப்பிலான ஆய்வேடும் தற்கால ஆய்வுக்குத் துணை புரிகின்றது. இவ்வாய்வு தியாகராஜன் அவர்களால் 1996-ஆம் ஆண்டு தமிழகத்தின் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வு மனிதநேயத்தை அடிப்படையாகக் கொண்டே செயல்படுத்தப்பட்டுள்ளது. இதிலுள்ள மனித நேயத் தொண்டுகள், நாயன்மார்களின் வாழ்வியல் கோட்பாடுகள் அனைத்தும் குறிப்பெடுக்கப்பட்டுள்ளன.

அடுத்ததாக, 'பெரிய புராணத்தில் சமயக் குரவர் நால்வரின் அற்புதச் செயல்கள்' எனும் தலைப்பிலும் முந்தைய ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. சம்பூர்ணம் அவர்களால் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் 2004-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வு வரலாற்றுப் பார்வையில் சைவம் எனும் அடிப்படையில் அமைந்துள்ளது. இறை நம்பிக்கை அற்புதங்களை நிகழ்த்த வல்லது என்பதையும் இவ்வாய்வு மேற்கோள் காட்டியுள்ளது. இதிலிருந்து பக்தி நெறியில் நின்று தொண்டாற்றிய நாயன்மார்களின் அற்புதச் செயல்கள் குறிப்புகளாகத் தொகுக்கப்பட்டுத் தற்கால ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இதைத் தவிர்த்து, 'பெரிய புராணம் காட்டும் வாழ்வியல்' எனும் தலைப்பிலும் தமிழகத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. புவனேஸ்வரி அவர்கள் இவ்வாய்வினை பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் 2012-இல் மேற்கொண்டுள்ளார். நாயன்மார்கள் கடைபிடித்து ஒழுகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் வழிகளை அடிப்படையாகக் கொண்டே இவ்வாய்வு திகழ்கிறது. இதில் சரியை காட்டும் வாழ்வியல் நெறிகள் தற்கால ஆய்வின் அடிக்குறிப்புகளாகப் பெறப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சங்கர நாராயணனின் 'பெரிய புராணம் காட்டும் வாழ்வியல் அறம்' எனும் ஆய்வும் நாயன்மார்களின் வாழ்வியல் கொள்கைகளைப் பறைசாற்றுகிறது. இவர் பெரியார் பல்கலைக்கழகத்தில் தமது ஆய்வினை 2012-ஆம் ஆண்டு மேற்கொண்டுள்ளார். நாயன்மார்களின் தொண்டு நெறி அறத்தைச் சார்ந்தே இருந்தது என்பதை இவ்வாய்வின் மூலம் அறிய முடிந்தது.

பெரியார் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வான 'பெரிய புராணத்தில் வரலாற்றுச் செய்திகள்' எனும் ஆய்வும் இன்றியமையாததாக விளங்குகிறது. இவ்வாய்வு தீபா அவர்களால் 2012-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள சேக்கிழாரின் வரலாறு, நாயன்மார்களின் வரலாற்றுக் குறிப்புகள் ஆகியவை பெரிய புராண நூலாய்வுக்குப் பயனுள்ளதாக அமைந்தன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேலும், 'பன்னிரு திருமுறைகளில் வாழ்வியல் கோட்பாடுகள்' எனும் ஆய்வேடும் தற்கால ஆய்வுக்கு உதவியாக அமைகிறது. இது 2008-ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகத்தில் தனபாக்கியம் அவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வும் நாயன்மார்களின் வாழ்வியல் உண்மைகளைக் கூறுவதால் அவசியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. இதன்வழி, பல்வேறு வகையான சூழல்களில் நாயன்மார்கள் கடைபிடித்த வாழ்வியல் கோட்பாடுகளையும் அறிய துணை செய்தது.

இறுதியாக, 'பெரிய புராணத்தில் முக்தி நெறி' எனும் தலைப்பிலான ஆய்வேடும் இங்கு மேற்கோளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வு 2017-ஆம் ஆண்டு மலாயாப் பல்கலைக்கழகத்தில் இலங்கேஸ்வரி அவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவர் சரியை, கிரியை, யோகம், ஞானத்தின்வழி முக்திப் பேற்றை அடைந்த நாயன்மார்களைப் பற்றி விவரித்துள்ளார். தவிர, முக்திக்கு இட்டுச் சென்ற

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நாயன்மார்களின் தொண்டு நெறியையும் அவர் தெளிவாக விளக்கியுள்ளார். இவ்வாய்வு நாயன்மார்களின் சரியை தொண்டினை அடையாளம் காண்பதற்குப் பேருதவியாக இருந்தது.

2.9 அரசு சாரா இயக்கங்கள்

அரசு சாரா இயக்கங்கள் எனும் சொல் உலகளாவிய அமைப்பான ஐக்கிய நாட்டுச் சபை 1945-இல் தோற்றம் பெற்ற போதே அறிமுகப்படுத்தப்பட்டது. இஃது ஐக்கிய நாட்டுச் சபையின் அரசியலமைப்புச் சட்டத்தின் 10-வது அத்தியாயத்தில் 71-வது கூற்றாக விளங்குகிறது. ஆரம்பக் காலங்களில் இச்சொல் அரசு அமைப்பு, உலகத் தனியார் நிறுவனங்களுகிடையிலான பங்களிப்பை வேறுபடுத்திக்காட்டவே வழக்கிலிருந்தது என உலக (1950) வங்கி சுட்டிக் காட்டியுள்ளது.

அரசு சாரா இயக்கம் என்பது ஒரு தனியார் நிறுவனம் அல்லல்களையும் துயரங்களையும் துடைக்கவும், ஏழ்மையைப் போக்கவும், மக்களுக்குத் தேவையான தொண்டுகளைப் புரியவும் சமுதாய மேம்பாட்டிற்குப் பாடுபடவும் அமைக்கப்பெற்ற இயக்கமாகும். இஃது ஒருமித்த மனமுடைய மக்களின் கூட்டணியே என உலக வங்கி (1990) கூறுகிறது. மேலும், எவ்வித இலாபத்தையும் கருத்தில் கொள்ளாது செயலாற்றுபவையே அரசு சாரா இயக்கங்கள் எனவும் அது குறிப்பிட்டுள்ளது (1990).

பொதுவாக, அரசு சாரா இயக்கங்கள் நன்னெறிக் கூறுகளின் அடிப்படையில் நின்று ஒழுகி தன்னலம் கருதா மக்கள் தொண்டையே முதன்மையாகக் கொண்டு இயங்குகின்றன. கடந்த இருபது வருடங்களில் அரசு சாரா இயக்கங்கள் தொழில்சார்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இயக்கங்களாக உருவெடுத்தபின்பும் தொண்டு எனும் அதன் அடிப்படைக் கொள்கையிலிருந்து பின்வாங்குவதில்லை என 1988-ஆம் ஆண்டு பாங்கோக்கில் நடந்த ஆசியான் தொழில்நுட்ப நிறுவனங்களின் பணிமனையில் வெளியிடப்பட்ட ஆய்வறிக்கை கூறுகிறது.

அரசாங்கத்தின் நேரிடையான கண்காணிப்பு இல்லாத பல துறைகளில் அரசு சாரா இயக்கங்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. அரசு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு அடுத்து நாட்டின் மேம்பாட்டிற்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் துணைபுரியும் முக்கிய அமைப்பாக அரசு சாரா நிறுவனங்கள் விளங்குகின்றன என்பதை நோர்மா மன்சூர், Norma Mansor (2014) தெளிவுறுத்தியுள்ளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அரசு சாரா இயக்கங்கள் மூன்று வகையில் செயலாற்றுகின்றன என வில்லட்ஸ் பீட்டர் குறிப்பிட்டுள்ளார் (Willettes Peter, 2006). முதலாவதாக, மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு சமூகச் சேவையாற்றும் இயக்கங்களாக இவை அமைந்துள்ளன. இவ்வகை அரசு சாரா இயக்கங்களில் தன்னார்வலர்கள் சுயநலமின்றி சேவையாற்றுகின்றனர் என்பது அவரின் கருத்து. இரண்டாவதாக, அரசு சாரா இயக்கங்கள் வணிக நோக்கத்திற்காகச் செயல்படும் தனியார் நிறுவனங்களையும் அரசு நிறுவனங்களையும் இணைக்கும் பாலமாக அமைந்துள்ளன என்கிறார் அவர். மூன்றாவதாக, அரசு சாரா இயக்கங்கள் சமுதாய மலர்ச்சிக்கு வழிவகுக்கும் அமைப்புகளாகவும் அமைந்துள்ளன என்பது அவரின் கருத்து (2006).

கடந்த நூற்றாண்டில் அரசு சாரா இயக்கங்கள் உலக மேம்பாட்டிற்கும் பலவகையில் துணைபுரிந்துள்ளன. 1970-இல் வல்லரசு நாடுகளிலும் வளர்ந்து வரும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நாடுகளிலும் அரசு சாரா இயக்கங்களின் வளர்ச்சி இரு மடங்காக அதிகரித்துள்ளது. மேலும், உலக மேம்பாட்டில் அவற்றின் பங்கு பன்மடங்காகப் பரிணமிக்கின்றது. 1992-இல் ஏறத்தாழ 7.6 மில்லியன் டாலரை உலகளாவிய அரசு சாரா இயக்கங்கள் வளர்ந்து வரும் உலக நாடுகளுக்கு நிதியாக வழங்கியுள்ளன என அஸ்கேன் சினாகா இன் என் ஜி ஓஸ் (Asken Sinaga in NGO's) தெரிவித்துள்ளது (2017).

2.9.1 அரசு சாரா இயக்கங்களின் பங்கு

மக்களின் நல்வாழ்வுக்காகவும் அவர்களின் மேம்பாட்டிற்காகவும் அரசு சாரா இயக்கங்கள் முக்கியமானதாகத் திகழ்கின்றன. தனிநபர், நிறுவனங்கள், அரசாங்கம் ஆகியவற்றின் நிதியுதவிகளும் நன்கொடையும் அரசு சாரா இயக்கங்களின் மூலமாகவே மக்களை அடைந்துள்ளன. 1970 முதல் அரசாங்கத்தின் நேரடியான கவனத்தைப் பெறாத பல துறைகளில் அரசு சாரா இயக்கங்கள் உதவியை நல்கியுள்ளன என நோர்மா மன்சூர் (Norma Mansor, 2014) அவர்கள் கூறியிருக்கின்றார்.

மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருவதிலும் அரசு சாரா இயக்கங்கள் பெரும் பங்காற்றியுள்ளன. தவிர, இளையோர் முதல் முதியோர் வரைக்குமான பல செயல்திட்டங்களை அமல்படுத்துவதிலேயும் இவை ஆர்வம் காட்டியுள்ளன. இவ்வகை இயக்கங்கள் பொது மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இருவழி தொடர்பை ஏற்படுத்தும் ஒரு பாலமாக அமைந்துள்ளன என்பது அவர் கருத்து (2014). அரசு சாரா இயக்கங்கள் மக்களின் தேவைகளையும் குறைகளையும் அரசாங்கத்திடம் எடுத்துக் கூறிப் பற்பல பிரச்சினைகளைக் களைவதில் பெரும் பங்கு வகித்துள்ளன. மேலும், அரசாங்கத்தின் புதிய, பயனளிக்க வல்ல திட்டங்களை மக்களிடையே

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அறிமுகப்படுத்தி நாட்டின் வளர்ச்சிக்கும் வழிகோலுகின்றன எனவும் அவர் (2014) கூறியுள்ளார்.

மக்களின் ஏழ்மை நிலையைத் துடைத்தொழிப்பதிலும் அரசு சாரா இயக்கங்களின் பங்கு அளப்பரியது. தேவைப்படும்போது துன்பத்தில் உள்ளவர்களுக்குத் தங்களால் இயன்ற நிதியுதவிகளையும் இவ்வியக்கங்கள் செய்து வந்துள்ளன. குறிப்பாக மேம்பாட்டுத் திட்டங்கள் அதிகமாக இருக்கும் நகர்ப்புறங்களில் இது மக்களின் சுமையைப் பெருமளவில் குறைக்துள்ளது எனவும் பாங்கோக் பணிமனை ஆய்வறிக்கை (1988) கூறுகிறது.

2.10 மலேசியாவில் அரசு சாரா இயக்கங்களின் பதிவு இலாகா

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

உள்நாட்டு அமைச்சின்கீழ் இயங்கி வரும் மலேசிய அமைப்புகள் பதிவு இலாகா, அரசு சாரா இயக்கங்களைத் தம் கட்டுப்பாட்டுக்குள் வரையறுத்துள்ளது. இந்த இலாகா அரசு சாரா இயக்கங்களின் தோற்றத்தையும் அதன் ஆரோக்கியமான வளர்ச்சியையும் கண்காணிப்பதற்கே அமைக்கப்பட்டுள்ளது. மேலும், மக்களின் பொதுநலம், நாட்டின் அமைதி, பாதுகாப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு நல்ல நெறியின்பால் அரசு சாரா இயக்கங்கள் சேவையாற்றுவதை உறுதிபடுத்துவதிலும் இவ்விலாகாவின் பங்கு மிக முக்கியமானதாகும். 1966-ஆம் ஆண்டு சமூகவியல் சட்டத்தின்கீழும் 1984-ஆம் ஆண்டின் அமைப்புகளின் விதிமுறைகளுக்குக் கீழும் அரசு சாரா இயக்கங்களின் நடவடிக்கைகள் உட்பட்டிருக்கும் வகையில் இவ்விலாகா பங்காற்றுகிறது. தவிர, பதிவு பெற்ற அரசு சாரா இயக்கங்களின் எல்லா ஆவணங்களையும் முறையாகப்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பாதுகாப்பதும் இவ்விலாகாவின் தலையாயக் கடமையாகும் (மலேசிய அமைப்புகள் பதிவு இலாகா, 2017).

இவ்விலாகா புதிய அரசு சாரா அமைப்புகளைப் பதிவு செய்வதோடு மட்டுமின்றி அவற்றின் ஒழுங்குமுறைகளை மேற்பார்வையிடவும் செய்கிறது. புதிய அமைப்புகளின் மனுவைப் பரிசீலிப்பதும் இந்த இலாகாவின் கடமையாகும். மேலும், ஓர் இயக்கத்தின் பெயர் மாற்றம், விதிமுறைகள், இலச்சினை போன்றவற்றையும் இவ்விலாகாவே உறுதி செய்கிறது. அது மட்டுமின்றி, ஓர் இயக்கத்தின் செயலவை உறுப்பினர்களின் நியமனமும் இவ்விலாகாவின் அனுமதியுடனேயே நடக்கிறது. மலேசிய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் புதிதாகப் பதிவு பெறும் இயக்கங்களின் நடவடிக்கைகளும் இதில் அடங்கும் என்பது மலேசிய அமைப்புகளின் பதிவு இலாகாவின் (2017) தகவலாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

2.10.1 மலேசியாவில் அரசு சாரா இயக்கங்கள்

இவ்விலாகாவில் பதிவு பெற்ற உலகளாவிய நிலையில் பல சேவைகளை வழங்கி வரும் அரசு சாரா இயக்கங்கள் மலேசியாவிலும் தங்கள் தொண்டினை மேற்கொள்ள மறக்கவில்லை. தனியார் நிறுவனங்கள் பலவும் மலேசியாவிலும் கிளை நிறுவனம் அமைத்துச் சேவையாற்றி வருகின்றன. இதைத் தவிர்த்து, மலேசியாவில் மட்டுமே இயங்கக்கூடிய அரசு சாரா இயக்கங்களும் உண்டு. அவ்வரிசையில், இவ்விலாகாவின்கீழ் கடந்த 2017-ஆம் ஆண்டு மலேசியாவில் மொத்தம் 10, 969 அமைப்புகள் பதிவு பெற விண்ணப்பித்துள்ளன என மலேசிய அமைப்புகள் பதிவு இலாகா (2017) தகவல் வெளியிட்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இனம், மொழி, மதம், சுற்றுச்சூழல், கலை, பண்பாடு, விளையாட்டு, சீருடை இயக்கம், மொழியியல், மருத்துவம், அரச வம்சம், பயனீட்டாளர், பெண்கள், இளையோர், எழுத்தாளர்கள் என இவ்வியக்கங்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகும் எனச் சிலாங்கூர் இஸ்லாமிய இலாகாவும் கிளாந்தான் கலை பண்பாட்டு இயக்கமும் (2016) கருத்துத் தெரிவித்துள்ளன. மலேசியாவில் இயங்கி வரும் இத்தகைய இயக்கங்களில் சில இனம், மொழி, மதம் சார்ந்தும் தங்கள் பணிகளைச் செவ்வனே செய்து வருகின்றன. இன்னும் பல இனம், மொழி, மத, பேதமின்றி சீரிய சிந்தனையோடு செயலாற்றி வருகின்றன. எது எவ்வாறாயினும், இவற்றின் குறிக்கோள் ஒன்றே (நோர்மா மன்சூர், Norma Mansor, 2014).

சேவை மனப்பான்மை அல்லது தொண்டு நெறியிலிருந்து சற்றும் பிறழாது தத்தம் கடமைகளில் ஈடுபாடு காட்டி இயங்குகின்றன. மொத்தத்தில் அரசு சாரா இயக்கங்கள் சமயம் சார்ந்த தொண்டுகளையும் சமுதாயம் சார்ந்த சேவைகளையும் மக்களுக்கு வழங்குவதில் இன்றியமையாதவை எனவும் (2014) அவர் பகர்ந்துள்ளார்.

2.10.2 மலேசியாவில் அரசு சாரா இந்தியர் இயக்கங்கள்

இந்தியச் சமுதாயம் மேனிலை அடையவும் ஒழுக்க நெறியில் பீடு பெற்று வாழவும் மேற்கண்ட இயக்கங்கள் தங்களின் பங்கைச் சிறப்பாக ஆற்றி வந்துள்ளன. ஆதி காலந்தொட்டே தொண்டு நெறியில் வேரூன்றிப் போன சமயச் சுவடுகளைப் பின்னொற்றி இவ்வியக்கங்கள் மக்களின் நலன் கருதியும் பயன் கருதியும் பணி செய்துள்ளன என மலேசிய இந்து இளைஞர் இயக்கம் (2013) தனது வலைத்தளத்தில் தெரிவித்துள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மலேசியாவில் வாழும் இந்தியர்கள் உலகச் சவால்களை எதிர்கொள்ளும் வண்ணம் இவ்வியக்கங்கள் தத்தம் பணிகளைச் செவ்வனே ஆற்றி வந்துள்ளன. தன்னார்வமிக்க இளைஞர் சமுதாயத்தை உருவாக்குவதை இவ்வியக்கங்கள் தங்களின் தலையாயக் கடமையாகக் கொண்டுள்ளன. தவிர, தன்னம்பிக்கை, பொறுப்பு, சேவை மனப்பான்மை, கருணை, தொழில்முனைப்புப் போன்ற கூறுகளை முன்நிறுத்தி இந்தியச் சமுதாயம் உலகமயக் கொள்கைக்கு நிகராக வெற்றி காணவும் இவை உறுதுணையாகச் செயல்பட்டுள்ளன என்பதும் மலேசிய இந்தியர் இளைஞர் இயக்கத்தின் (2011-2017) கருத்தாகும்.

அரசு சாரா இந்தியர் இயக்கங்களில் சில தேசிய அளவில் இயங்கி வருவதோடு நின்று விடவில்லை. இவை நாட்டின் 14 மாநிலங்களிலும் குறிப்பிட்ட பல வட்டாரங்களிலும் தங்கள் தொண்டினை வழங்கி வந்துள்ளன (மலேசிய இந்து சங்கம், 2017). இவை இந்தியச் சமுதாயத்தின் வளர்ச்சிக்காகவும் மேம்பாட்டிற்காகவும் பெருமளவில் சேவையாற்றி வந்துள்ளன (சிலாங்கூர் இஸ்லாமிய இலாகா & கிளாந்தான் கலை பண்பாட்டு இயக்கம், 2016). மேலும், இது போன்ற அரசு சாரா இயக்கங்களும் கழகங்களும் வட்டாரங்களில் செயல்பட்டதால், அப்பகுதியில் வாழும் மக்களின் பல தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

எனவே, மலேசியாவில் இந்தியர்களுக்காகத் தொண்டாற்றி வரும் சில அரசு சாரா இயக்கங்களை இங்கு ஈண்டு காண்போம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

2.10.2.1 மலேசிய இந்து சங்கம்

மலேசிய இந்து சங்கம் இந்நாட்டில் இந்துக்களின் உரிமைகளை நிலைநிறுத்தும் நோக்கில் அமைக்கப்பட்டது. இச்சங்கத்தின் தலைமையகம் சிலாங்கூர், பெட்டாலிங் ஜயாவில் அமைந்துள்ளது. இச்சங்கம் 27 செயலவை உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வந்துள்ளது. 1965-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட மலேசிய இந்து சங்கம் இந்துக்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும் சமயக் கல்வியைப் போதிக்கவும் உலகளாவிய நிலையில் இந்துக்களின் தரத்தை உயர்த்திக் காட்டவும் பெரும் பங்காற்றி வந்துள்ளது. மலேசிய இந்து சங்கம் 14 மாநிலங்களிலும் 120 வட்டாரங்களிலும் கிளைகள் அமைத்துத் தொண்டாற்றி வந்துள்ளது (மலேசிய இந்து சங்கம், 2017).

மலேசிய இந்து சங்கம் பல்வேறு நோக்கங்களுக்காகத் தோற்றுவிக்கப்பட்டது. இந்துக்களின் ஆன்மிகம், நன்னெறி, கலை, பண்பாடு மற்றும் சமுதாய நெறிகளின் வளர்ச்சிக்கு ஊக்கமளித்தலே இவ்வியக்கத்தின் முதன்மை நோக்கமாகும். இதன் வழி இவ்வியக்கம் இந்து மதத்தின் முன்னேற்றத்திற்கான திட்டங்களை வகுத்தல், சமயம் சார்ந்த கூட்டங்கள், நடவடிக்கைகள் போன்றவற்றை ஏற்பாடு செய்தல் போன்றவையும் இதன் முக்கிய நோக்கங்களாக அமைந்துள்ளன. மேலும், சமயப் பண்டிகைகள் தொடர்பான விளக்கங்கள் வழங்குதல், இந்து சமயம் சார்ந்த பிற அமைப்புகளுக்கு வழிகாட்டுதல், சமயம் தொடர்பான எழுத்து மூலங்களைப் பிரசுரித்தல், சமய வளர்ச்சிக்கு நன்கொடை திரட்டுதல், நன்கொடைகளை இந்து சமய வளர்ச்சிக்குப் பயன்படுத்துதல் எனப் பல்வேறு நோக்கங்களைக் கொண்டும் இயங்கி வந்துள்ளது. மேற்கண்ட நோக்கங்களின் அடிப்படையில் மலேசிய இந்து சங்கம் இந்தியர்களின் சமயம், சமுதாயம் சார்ந்த பிரச்சினைகளைக் களைவதில் பங்காற்றியுள்ளது (மலேசிய இந்து சங்கம், 2017).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

2.10.2.2 மலேசிய இந்தியர் இளைஞர் இயக்கம்

மலேசிய இந்தியர் இளைஞர் இயக்கத்தைத் தோற்றுவிப்பதற்கான மனு திரு. விவேக ஸ்ரீ இராஜரத்னம் ஆறுமுகம் அவர்களால் 1991-ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் இவ்வியக்கம் 1993-ஆம் ஆண்டு அதிகாரப்பூர்வமாகத் தொடங்கப்பட்டது. திரு. விவேக ஸ்ரீ முத்துவேலு அவர்கள் தலைவராகவும் திரு.விவேக ஸ்ரீ இராஜரத்னம் ஆறுமுகம் அவர்கள் செயலாளராகவும் பொறுப்பேற்க இவ்வியக்கம் 1994-ஆம் ஆண்டு தனது முதல் பொதுக்கூட்டத்தை நடத்தியதாகத் தனது வலைதளத்தில் அறிக்கை வெளியிட்டுள்ளது (2011-2017).

மலேசிய இந்து இளைஞர்களின் மேம்பாட்டினைக் கருத்தில் கொண்டு இயங்கும் அரசு சாரா இயக்கத்தை உருவாக்குவதே இவ்வியக்கத்தின் முதன்மை நோக்கமாகும். மேலும், பொருளாதார ரீதியாக இந்து இளைஞர்கள் எதிர்கொள்ளும் சவால்களைச் சமாளிக்கும் தன்னம்பிக்கையையும் திறனையும் மேம்படுத்துவதும் தங்களது கோட்பாடாகும் எனவும் இவ்வியக்கம் தெரிவித்துள்ளது (2011-2017).

இந்திய இளைஞர்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் இவ்வியக்கம் இளைஞர்களிடையே தொண்டுணர்வையும் ஜனநாயகச் செயல்முறைகளையும் ஊக்குவிப்பதைத் தமது முதல் நோக்கமாகக் கொண்டு இயங்கியுள்ளது. அடுத்ததாகக், குழந்தைகள் இளைஞர்கள், பெண்கள் பற்றிய சமுதாயப் பிரச்சினைகளைக் களைவதில் அரசாங்கத்திற்கும் பிற அமைப்புகளுக்கும் கருத்துரைக்கும் நோக்கோடும் இவ்வியக்கம் செயல்பட்டு வந்துள்ளது. இதைத் தவிர்த்து, உள்நாட்டிலும் உலகளாவிய நிலையிலும் இளைஞர்கள் அமைப்போடு நட்புறவைப் பேணுதல், தன்னலம் கருதா ஆற்றல்மிக்க இளைஞர் சமுதாயத்தை உருவாக்குதல்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மனித உரிமை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல், உலகளாவிய நிலையில் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்குத் துணைபுரிதல், அமைதியும் நல்லெண்ணமும் நிலைபெற உதவுதல், நாட்டின் மேம்பாட்டிற்கு இளைஞர்கள் சமுதாயத்தை உருவாக்குதல் ஆகிய நோக்கங்களின் அடிப்படையிலும் இவ்வியக்கம் செயலாற்றி வந்துள்ளது (மலேசிய இந்தியர் இளைஞர் இயக்கம், 2011-2017).

2.10.2.3 மலேசிய இந்து இளைஞர் இயக்கம்

மலேசிய இந்து இளைஞர் இயக்கம் கே.சற்குணம் அவர்களால் 1949-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. ஆன்மிகம், கலை, பண்பாடு, நன்னெறி ஆகிய கூறுகளில் இந்து இளைஞர்களை உருவாக்குவதை இவ்வியக்கம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது என அதன் தலைவர் அருண்குமார் (2014) கூறியிருக்கிறார். இளைஞர்களின் சமூகத் தொண்டுகள் நாட்டின் வளர்ச்சிக்கும் இன்றியமையாத ஒன்றாகியிருப்பதையும் அவர் தமதுரையில் சுட்டிக் காட்டியுள்ளார். மேலும், கல்வியிலும் வணிகத்திலும் சிறந்த தலைமைத்துவமிக்க இந்து இளைஞர்களை உலகுக்கு அறிமுகம் செய்வதிலும் இவ்வியக்கத்தின் பணி அளப்பரியது என்றார் அவர் (2014).

இவ்வியக்கம் மேலும் சில நோக்கங்களின் அடிப்படையில் இயங்கி வருகின்றது. சவால்களை எதிர்கொள்ளும் இளைஞர் சமுதாயத்தை உருவாக்குதலும். சமயம் சார்ந்த அறிவார்ந்த இளைஞர் சமுதாயமாக உருமாற்றுதலுமே இவ்வியக்கத்தின் முக்கிய நோக்கமாகும். தவிர, இளைஞர்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுதல், இந்து இளைஞர்களுக்கான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல், உலகளாவிய நிலைக்கு இந்து இளைஞர்களை உயர்த்துதல், இளைஞர் விளையாட்டுத் துறை அமைச்சின்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நடவடிக்கைகளில் ஈடுபடுதல் எனப் பல நோக்கங்களையும் இவ்வியக்கம் கொண்டுள்ளது.

2.10.3 போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்கள்

உள்நாட்டில் தேசிய அளவில் இயங்கி வரும் சில இந்திய அரசு சாரா இயக்கங்கள் போர்ட்டிக்சனிலும் கிளை அமைத்து இயங்கி வந்துள்ளன. இது போன்ற அரசு சாரா இயக்கங்கள் இப்பகுதிவாழ் மக்களுக்குப் பலவகையிலும் தொண்டாற்றி வந்துள்ளன. இவ்வியக்கங்களின் தொண்டு சமயம் சார்ந்தும் சமுதாயம் சார்ந்தும் அமைந்துள்ளது. இந்தியர்கள் அதிகமாக வாழும் போர்ட்டிக்சனில் சில அரசு சாரா இந்தியர் இயக்கங்கள் தங்கள் பொதுநலத் தொண்டினைச் சீரிய முறையில் செய்து வந்துள்ளன. அவற்றுள் இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்ட மூன்று இயக்கங்களைப் பற்றியக் கண்ணோட்டம் இங்கு வழங்கப்படுகிறது.

2.10.3.1 மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை

இந்து மாணவர்களிடையே சமய ஞானத்தினை ஊட்டவும் சமயத்தின் வரலாற்றினைத் தெளிவு படுத்தவும் இறை நம்பிக்கையை வளர்க்கவும் முறையான ஆலய வழிபாட்டினை மேற்கொள்ளவும் தோற்றுவிக்கப்பட்டதே போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவையின் மலேசிய இந்து சங்கம் என கிருஷ்ணமூர்த்தி (2018) கூறியுள்ளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை, 1969-ஆம் ஆண்டு போர்ட்டிக்சன் மகா மாரியம்மன் ஆலயத்தில் சைவ சமய வளர்ச்சிக் குழு எனும் பெயரிலேயே தோற்றுவிக்கப்பட்டது. அப்போது கோயில் தலைவராக இருந்த காலஞ்சென்ற திரு.தி.எஸ் நாயர் அவர்கள் இதற்கு உறுதுணையாக இருந்தார். திரு.கோ.பூபாளப்பிள்ளை அவர்கள் இவ்வியக்கத்திற்கு முழுப்பொறுப்பேற்றுத் திறம்பட நடத்தி வந்ததாகவும் அவர் தெரிவித்தார் (2018). 1965-ஆம் ஆண்டு மலேசிய இந்து சங்கம் அதிகாரப்பூர்வமாகத் தோற்றம் கண்ட பின்பு போர்ட்டிக்சன் சைவ சமய வளர்ச்சிக் குழு அதில் இணைய ஆர்வம் காட்டியதாகத் தெரிய வந்துள்ளது. எனவே, 1969-ஆம் ஆண்டு போர்ட்டிக்சன் சைவ சமய வளர்ச்சிக் குழு மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவையாக உருமாறியது என அவர் மேலும் கூறினார் (2018).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை, ஆரம்பக் காலங்களில் பல சமயப் பணிகளையும் நிகழ்ச்சிகளையும் இடைவிடாமல் இவ்வட்டார மக்களுக்குச் செய்து வந்தாலும் சமய வகுப்புகள் (தேவார வகுப்புகள்) நடத்துவதுதான் இவர்களின் முக்கியப் பணியாக அமைந்திருந்தது. 1969-ஆம் ஆண்டு ஏறத்தாழ 40 முதல் 50 மாணவர்கள் வரை இந்தச் சமய வகுப்பில் சேர்ந்து பயனடைந்து வந்துள்ளனர். இதன் தொடர்பாக ஆண்டுதோறும் உள்ளூர் மாணவர்களுக்குத் தேவாரப் போட்டிகளும் நடத்தப்பட்டு வந்துள்ளன. மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை 1972-ஆம் ஆண்டு தேசிய அளவிலான தேவாரப் போட்டியையும் பொறுப்பேற்று நடத்தியுள்ளது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது (கிருஷ்ணமூர்த்தி, 2018).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1984-ஆம் ஆண்டு இவ்வியக்கத்திற்குத் தலைவராக திரு.எ.கிருஷ்ணன் அவர்களும் செயலாளராக திரு.எம்.பரமசிவம் அவர்களும் பொறுப்பேற்றனர். இஃது மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவையின் பொற்காலம் என்றே கூறலாம். இவர்களின் சிரத்தையினால் சமய வகுப்பில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை 400-ஆக உயர்ந்தது. மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பினால் சமய வகுப்புக்காக அருகிலிருந்த போர்ட்டிக்சன் தமிழ்ப்பள்ளி வகுப்பறைகளும் பயன்படுத்தப்பட்டன. இந்தச் சமய வகுப்பில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கென இலவசப் பேருந்து சேவையும் 18.11.1984-இல் தொடங்கப்பட்டது (மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை, 2018).

சமய ஆசிரியர்கள் சிறந்த முறையில் தங்களது சமய போதனையை மாணவர்களுக்குச் செலுத்த வேண்டுமென்பதைக் கருத்தில் கொண்டு சமய போதனை பயிற்சி வகுப்பினை 1985-ஆம் ஆண்டிலும் 1987-ஆம் ஆண்டிலும் இவ்வியக்கம் நடத்தியுள்ளது. மேலும், போர்ட்டிக்சன் வட்டார இடைநிலைப்பள்ளி மாணவர்களுக்கும் 1985-ஆம் ஆண்டிலும் 1986-ஆம் ஆண்டிலும் சமயப் பயிற்சி வகுப்புகளை நடத்தி வந்துள்ளது (கும்பாபிஷேக மலர், 1987).

1990-ஆம் ஆண்டுகளில் மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை சற்றுச் சோர்ந்த நிலையிலேயே இயங்கத் தொடங்கியது. உள்ளூர் இந்து பெருமக்களில் பலர் வேலை நிமித்தம் பல்வேறு இடங்களுக்கு மாற்றலாகிச் சென்றமையால் சமய வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கை சரிய ஆரம்பித்தது. மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை மீண்டும் 2008-ஆம் ஆண்டு திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் தலைமையில் எழுச்சி கண்டது. இதன் செயலாளராகத் திரு.ஜெகதிஸ் அவர்கள் பணியாற்றி வருகிறார். தற்போது இவ்வியக்கம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சமயப் பணிகள் மட்டுமின்றி சமுதாயப் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றது என அதன் செயலாளர் ஜெகதிஸ் அவர்கள் தெரிவித்தார் (2018). போர்ட்டிக்சன் வட்டார இந்து குழந்தைகள், இளைஞர்கள், பெண்கள் எனப் பல தரப்பினருக்கும் இவ்வியக்கம் தொண்டாற்றி வந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார் (2018).

2.10.3.2 போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம்

போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம் 2009-ஆம் ஆண்டு தொடங்கி தனது சேவையை வழங்கி வந்துள்ளது. இருப்பினும், இக்கழகம் 2011-ஆம் ஆண்டு அதிகாரப்பூர்வமாக மலேசிய அமைப்புகள் பதிவு இலாகாவில் (ROS) அங்கீகாரம் பெற்றுத் தோற்றுவிக்கப்பட்டது. பல்வேறு நோக்களுக்காக இக்கழகம் போர்ட்டிக்சன் வட்டாரத்தில் தோற்றம் கண்டது என அக்கழகம் தெரிவித்தது 2011).

இந்திய இளையோர் சமுதாயம் கல்வியிலும் பொருளாதாரத்திலும் சுய மேம்பாடு காண வேண்டும் என்பதே இக்கழகம் தோற்றுவிக்கப்பட்டதன் முதன்மை நோக்கமாகும் என்பது இக்கழகத் தலைவர் .கந்தையா அவர்களின் கருத்து (2018). இந்த நோக்கம் வெற்றியடைய இடைநிலைப்பள்ளி மாணவர்களாகிய பதின்ம வயதினரே இக்கழகத்தின் இலக்காகத் திகழ்ந்துள்ளனர். காரணம், மக்கள் மத்தியில் அதிக மறையிடர் கொண்ட பிரிவினராக இவர்களே இருந்துள்ளனர். இதனைக் கருத்தில் கொண்டே இக்கழகம் 2009-ஆம் ஆண்டு முதல் சமுதாயப் பணிகளைத் தன்னிச்சையாக மேற்கொண்டு வந்தது என மேலும் அவர் (2018) கூறினார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சமுதாய ஆர்வலர்கள் பலரும் தன்னலம் கருதாது இக்கழகத்தில் தொடர்ந்து தொண்டாற்றி வந்துள்ளனர். இக்கழகம் இளையோர்களுக்கென பல சொற்பொழிவுகளையும் முகாம்களையும் ஏற்பாடு செய்துள்ளது. அது மட்டுமின்றி, இளைஞர்களைப் பற்றிய பலதரப்பட்ட ஆய்வுகளையும் இக்கழகம் மேற்கொண்டுள்ளது. இதன் பின்னணியே இக்கழகத்தின் தோற்றத்திற்கும் வித்திட்டது என்பதே போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகத்தின் கூற்றாகும் (2011).

போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம் உள்ளூர் இந்தியச் சமுதாயத்திற்காகப் பல நலன்சார் நடவடிக்கைகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்த அமைக்கப்பட்டது. இத்தகைய திட்டங்கள் குறிப்பாக இந்திய இளைஞர்களைச் சென்றடைய வேண்டும் என்பதை இக்கழகம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது என அது தெரிவித்தது (2018). தவிர, நாட்டின் வளர்ச்சிக்கேற்ப சவால்களை எதிர்கொள்ளும் நன்னெறி கொண்ட இளையச் சமுதாயம் உருவாகவும் இக்கழகம் திட்டமிட்டுள்ளது எனப் போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகச் செயலாளர் கூறினார் (2018).

மேலும், இவ்வகையான திட்டங்களின் மூலம் இளையத் தலைமுறையினர் சுயக்கட்டுப்பாட்டுடன் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள இக்கழகம் வழிவகுத்துள்ளது. இதன்வழி, அவர்கள் தங்களின் தனித்திறனையும் ஆளுமையையும் வளர்த்துக் கொள்ளவும் சமுதாயச் சீர்க்கேடுகளில் சிக்கித் தவிக்காமல் இருக்கவும் இக்கழகம் துணை செய்துள்ளது. இறுதியாக, குடும்பச் சூழலினால் சிக்குண்டு தவிக்கும் இந்திய ஏழை மாணவர்களும் உயர்கல்வியைப் பெற்றுச் சகல வசதிகளுடன் இந்நாட்டில் வாழ்வதற்கும் இக்கழகம் வழிகாட்டியுள்ளது (போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம், 2011).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

2.10.3.3 போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம்

போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம் மிகக் குறுகிய காலமாகவே இவ்வட்டாரத்தில் செயல்பட்டு வந்துள்ளது. இக்கழகம் இவ்வட்டார மக்களின் பொது நலம் கருதியே தோற்றுவிக்கப்பட்டது என அதன் தலைவர் மோஹனதாஸ் (2018) தெரிவித்தார் . இவ்வட்டார மக்களின் குடும்பம், பொருளாதாரம் ஆகிய இரண்டுமே இக்கழகத்தின் தோற்றத்திற்கான முதன்மை காரணங்களாகவும் அமைந்துள்ளன என்றும் அவர் (2018) தெரிவித்தார்.

இக்கழகம் சில ஆண்டுகளாகவே போர்ட்டிக்சன் வட்டார மக்களுக்குப் பல பயனுள்ள நடவடிக்கைகளை நடத்தி வந்துள்ளது. இருப்பினும், கடந்த 2016-ஆம் ஆண்டு மார்ச் மாதம் இது அதிகாரப்பூர்வமாக மலேசிய அமைப்புகளின் பதிவு இலாகாவின்கீழ் பதிவு பெற்ற பிறகு மேலும் பீடு நடை போடுகின்றது என அவர் (2018) மேலும் கூறினார். அது முதல், இக்கழகம் குழந்தைகள், சிறுவர்கள், பெரியவர்கள், பெண்கள், இளையோர்கள் எனப் பல தரப்பினருக்கும் உதவிகளை வழங்கி வந்துள்ளது. இக்கழகம் போர்ட்டிக்சன் வட்டார மக்களின் குறிப்பாக இந்தியர்களின் குடும்ப நலனில் அக்கறை கொண்டு செயல்பட்டுள்ளது (மோஹனதாஸ், 2018).

போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம் குறிப்பிட்ட சில நோக்கங்களின் அடிப்படையில் செயலாற்றி வந்துள்ளது. இந்தியக் குடும்பங்களிடையே சமூகப் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துதல், தேசியக் கல்வித் தத்துவத்தின் அடிப்படையில் மாணவர் சமுதாயத்தை உருவாக்குதல் ஆகியன இரண்டும் இக்கழகத்தின் முக்கிய நோக்கங்களாக அமைந்துள்ளன. மேலும், சமயம், கலை, பண்பாடு ஆகிய கூறுகளில் இளையோர் சமுதாயத்தைப் பயிற்றுவித்தல்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இளையோர்களிடையே பண்புமிக்க வாழ்வியல் நெறிகளைப் புகுத்துதல், சுற்று வட்டார மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துதல் போன்ற நோக்கங்களைக் கருத்தில் கொண்டும் இக்கழகம் செயலாற்றி வந்துள்ளது.

மேற்குறிப்பிட்ட நோக்கங்களின் அடிப்படையில் இக்கழகம் போர்ட்டிக்சன் இந்திய மக்களின் பெரும்பான்மையிலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் துணை செய்துள்ளது (மோஹனதாஸ், 2018).

2.11 அரசு சாரா இயக்கங்கள் பற்றிய பிற ஆய்வுகள்

'அரசு சாரா இயக்கங்களின் நடவடிக்கைகளில் ஒற்றுமை கூறுகள்' எனும் தலைப்பிலான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வு மலேசிய சபா பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் ஆய்வாளர்கள் ஐவரும் சபா மாநில மக்களிடையே தேசிய ஒற்றுமையை விதைப்பதில் அரசு சாரா இயக்கங்களின் பங்கினை ஆராய்ந்தறிந்துள்ளனர். இவ்வாய்வு ஒற்றுமையை வலுப்படுத்த எத்தகைய நடவடிக்கைகள் வழிகோலும் என்பதையும் புலப்படுத்துகின்றது (ரோஸ் ஐஜா முகமது மொக்தார், Ros Aiza Mohd Mokhtar, 2018).

தொடர்ந்து, மஸ்லான் செ சோ என்பவரால் 2015-ஆம் ஆண்டு சுகாதாரம் சார்ந்த அரசு சாரா இயக்கங்களைப் பற்றிய ஆய்வொன்றும் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாய்வு மலேசியாவில் சுகாதாரப் பிரச்சினைகளைக் களைவதற்காக தோற்றம் கண்ட அரசு சாரா இயக்கங்களைப் பற்றி ஆராய்ந்துள்ளது. மேலும், அவற்றின் நோக்கம் சுகாதாரம் சார்ந்த அதன் நடவடிக்கைகள் ஆகியவற்றையும் விவரித்துள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மலேசியாவில் சுகாதாரப் பிரச்சினைகளைக் களையும் நோக்கில் இந்த அரசு சாரா இயக்கங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளையும் இது பட்டியலிட்டுக் காட்டுகிறது (மஸ்லான் செ சோ, Mazlan Che Soh, 2017).

இதைத் தவிர்த்து, 'கோலாலம்பூர் இளைஞர்களின் தன்னார்வ உணர்வு' எனும் ஆய்வும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வு மலாயாப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த அஸ்ரினா மஸ்லின் அலியாஸ் அவர்களால் 2016-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வு கோலாலம்பூரில் வசிக்கும் இளைஞர்களிடையே நடத்தப்பட்டுள்ளது. இளைஞர்களின் தன்னார்வ உணர்வு பற்றிய விவரங்களைத் திரட்ட உதவியுள்ளது. மேலும், இளைஞர்களின் பண்புகள், கருத்துகள், அனுபவங்கள், விழிப்புணர்வு எனப் பல்வேறு கோணங்களில் இது பகுக்கப்பட்டுள்ளது (அஸ்ரினா மஸ்லின் அலியாஸ், Azrina Mazlin Alias, 2016).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

'இளைஞர்களும் தொண்டுணர்வும்' எனும் தலைப்பில் மற்றுமொரு ஆய்வுக் கட்டுரை மலேசிய சமுதாய ஆய்வேட்டில் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாய்வு துவான் பாக் ரோக்கியா ஷெட் ஹுசேன் அவர்களால் 2016-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இளைஞர்களின் சேவை மனப்பான்மையும் தொண்டுணர்வும் இவ்வாய்வின் முக்கியக் கூறுகளாகத் திகழ்ந்துள்ளன. மக்களின் இடம், பொருள் தேவையறிந்து தொண்டாற்றும் இளைஞர்களின் மனத்திருப்தியும் இதில் ஓர் அங்கமாக இருந்திருக்கிறது (துவான் பாக் ரோக்கியா ஷெட் ஹுசேன், Tuan Pak Rokiah Syed Hussain, 2016).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

2.12 தொகுப்புரை

பெரிய புராணத்தின் பெருமை, பெயர்ச் சிறப்பு, நூலமைப்பு, காப்பிய இலக்கணம், மூல நூலாசிரியர் வரலாறு ஆகியவை இவ்வியலில் சான்றுகள் வழி மெய்ப்பித்துக் காட்டப்பட்டுள்ளன. மேலும் பெரிய புராணத்தில் காணப்படும் சைவ சமயத்தின் பல்வேறு நெறிகள் இங்கு விளக்கப்பட்டுள்ளன. சமயத் தொண்டுகளும் சமுதாயத் தொண்டுகளும் செய்த அடியார்களைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன. அடியார்கள் செய்த எளிமையான பூசனை முறைகளும் அவர்கள் கடைபிடித்த மார்க்கங்களும் பட்டியலிடப்பட்டுள்ளன.

சமயம் சமுதாயத்திற்குப் பல நன்னெறிகளைக் காட்டியுள்ளது. மறந்தும் பிறருக்குக் கெடுதல் செய்யக்கூடாது என்பதையும் எல்லாரும் துன்பமின்றி வாழ ஒருவருக்கொருவர் துணையாயிருத்தல் வேண்டும் என்பதையும் சமயம் சுட்டி நிற்கிறது. சாதி, மத, இன பேதமின்றித் தன்னலமற்றச் சமுதாயத்தை உருவாக்குவதில் சமயம் முக்கியப் பங்காற்றியுள்ளது. இதற்குத் தலையாயதாக விளங்கியது தொண்டு நெறியேயாகும். இத்தொண்டு நெறி இன்றளவும் மக்களால் போற்றப்பட்டு பல நிறுவனங்களும் இயக்கங்களும் இதனைச் செயல்படுத்தி வந்துள்ளன. அத்தகு தொண்டுகளை வழங்கி வரும் இயக்கங்கள் பற்றியக் கண்ணோட்டமும் இவ்வியலில் இணைக்கப்பட்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இயல் 3

ஆய்வு நெறிமுறை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

3.1 முன்னுரை

இவ்வியல் ஆய்வின் நெறிமுறையை முழுமையாக விளக்கும் வகையில் அமைந்துள்ளது. ஆய்வு வடிவமைப்பு, தரவுகள் சேகரிப்பு முறை, தரவுகள் பகுப்பாய்வு முறை ஆய்வுக் கோட்பாடு ஆய்வு நடைமுறை ஆகியவற்றை இவ்வியல் உள்ளடக்கியுள்ளது.

ஆய்வின் முடிவுகள் ஆய்வின் வடிவமைப்பையும் அணுகுமுறைகளையும் (தரவு சேகரிப்பு முறை) சார்ந்தே கிடைக்கப்பெற்றது. எனவே, இந்த ஆய்வு வடிவமைப்பு ஆய்வின் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வில் தரவுகள் சேகரிப்பதற்காக நூலக ஆய்வும் நேர்க்காணலும் அணுகுமுறைகளாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை தரவுகளைப் பெறத் துணையாக

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இருந்த வழிமுறைகளாகும். இவை சாதகமான ஆய்வு முடிவுகளைப் பெற உதவும் வகையில் வரையறுக்கப்பட்டுள்ளன.

மேலும், இப்பகுதி ஆய்வுக்குட்பட்டோரைப் பற்றிய விவரங்களையும் உள்ளடக்கியுள்ளது. தவிர, இந்த ஆய்வுக்கு உதவியாக இருந்த பிற மூலங்களையும் விளக்கியுள்ளது. தரவுகள் பகுப்பாய்வு பகுதி விளக்க முறையைத் துணைகொண்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து, ஆய்வு நடைமுறை நேர்த்தியான ஆய்வை மேற்கொள்ளக் கையாளப்பட்ட வழிமுறைகளைச் சுட்டியுள்ளது. இறுதியாக, முடிவுரை ஆய்வின் நெறிமுறைகளைத் தொகுத்து வழங்கப்பட்டுள்ளது.

3.2 ஆய்வு வடிவமைப்பு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆய்வு வடிவமைப்பு என்பது ஆய்வில் பயன்படுத்தப்பட்ட மாறிகளின் அடிப்படையில் சேகரிக்கப்பட்டத் தரவுகளை நேர்த்தியாக வழங்குவதேயாகும் என்கிறார் கர்லிங்கர் (Kerlinger, 1970). இதன் அடிப்படையில் இந்த ஆய்வு பண்புசார் ஆய்வாகவே அமைந்துள்ளது. இவ்வடிவமைப்பு ஆய்வுச் சிக்கலையும் ஆய்வு நோக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டே தெரிவு செய்யப்பட்டுள்ளது உண்மையான ஆய்வுச் சூழலின் அடிப்படையில் தரமான ஆய்வு முடிவுகளைப் பெறுவதற்கு இந்த வடிவமைப்பு உதவியுள்ளது.

இந்த ஆய்வில் பண்புசார் வடிவமைப்புச் சூழலுக்கு ஏற்பத் திரட்டப்படும் தகவல்களை ஒருங்கிணக்கப் பேருதவியாக இருந்தது. இந்த ஆய்வில் பெரிய புராணம் மூல நூலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பெரிய புராணத்தில் நாயன்மார்களின் சரியை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சரியை தொண்டுகளும் ஓர் ஆய்வு எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வு நாயன்மார்களின் தொண்டுகளை ஒருங்கே ஆராய்ந்தறிந்து தொகுக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் 63 நாயன்மார்களின் வரலாறும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மேலும், திருமந்திரம், சைவ சித்தாந்தம் போன்ற இலக்கிய மூலங்களும் இவ்வாய்வின் கோட்பாட்டினைத் தெளிவுபடுத்தப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட மூலங்களை ஆராய்ந்தறியும் பொருட்டு இவ்வாய்வில் விளக்கமுறைகளும் கையாளப்பட்டுள்ளன. மேலும், ஆய்வு வினாக்களுக்கான பதில்களைத் தேடுவதில் பயன்படுத்தப்பட்ட நெறிமுறையும் இந்த ஆய்வில் பண்புசார் அடிப்படையிலேயே விளக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வில் தகவல்கள் தொடர்ந்தாற்போல் திரட்டப்பட்டுள்ளன. மேலும், ஆய்வாளர் நேரிடையாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டோரின் கருத்துகளையும் அனுபவங்களையும் திரட்ட இந்தப் பண்புசார் ஆய்வு துணைபுரிந்துள்ளது. பெரிய புராணத்தை அடிப்படையாகக் கொண்டு நாயன்மார்களின் சரியை தொண்டுகளையும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் தொண்டுகளையும் ஆய்வு செய்ய இவ்வடிவமைப்பு உதவியாக இருந்தது. மேற்குறிப்பிட்டச் சூழலில் நேர்க்காணலின் மூலம் தேவையான தகவல்களைத் திரட்ட இயன்றது. தவிர, முக்கிய ஆவணங்களைப் பதிவு செய்யவும் இந்த முறை பின்பற்றப்பட்டுள்ளது. **படவரைவு 3.1** ஆய்வு வடிவமைப்பைக் காட்டுகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



படவரைவு 3.1. ஆய்வு வடிவமைப்பு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

3.3 தரவுகள் சேகரிப்பு முறை

பண்புசார் ஆய்வில் உற்றறியும் முறை, கலந்துரையாடல்கள், எழுத்து வடிவங்கள் ஆகிய மூன்றும் முக்கியப் பங்கு வகிக்கின்றன என்கிறார் பத்தோன் (Batton, 1990). இவ்வாய்வும் பண்புசார் ஆய்வாகவே அமையப்பெற்றுள்ளது. இவ்வாய்வு ஆய்வு நோக்கத்தையும் ஆய்வு வினாவையும் அடிப்படையாகக் கொண்டே மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனையொட்டித் தரவுகள் சேகரிப்பதில் ஆய்வாளரும் ஒரு பகுதியாக இருந்துள்ளார்.

இந்த ஆய்வில் பெரிய புராணம் எனும் நூல் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. பெரிய புராணச் செய்யுள்களுக்குப் பல அறிஞர்கள் உரை எழுதியிருப்பினும் மங்கையர்கரசி (1972) அவர்கள் உரை எழுதி தமிழ் இணையப் பல்கலைக்கழகம் வெளியிட்ட 'சேக்கிழார் பெருமான் அருளிய திருத்தொண்டர் புராணம்' எனும் நூலே இவ்வாய்வில் முதன்மை ஆதாரமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நூலைப் பின்னொற்றியே பெரிய புராணச் செய்யுள்களுக்கு விளக்கங்கள் பெறப்பட்டுள்ளன. இந்தச் செய்யுள்களின் விளக்கவுரை மூலமே 63 நாயன்மார்களின் சரியை தொண்டுகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும், ஆய்வுக்குத் தேவையான பிறத் தகவல்களும் பெரிய புராணத்தின் மூலமாகவே திரட்டப்பட்டுள்ளன.

பெரிய புராணத்தில் வரும் 63 நாயன்மார்களின் தொண்டுகளும் மக்களின் நல்வாழ்வுக்கு வித்திட்டுள்ளன. இந்தப் பெரிய புராணத்தை மூலமாகக் கொண்டு இந்த ஆய்வானது தொண்டுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வு அக்கால நாயன்மார்களின் சரியை தொண்டுகளையும் இக்கால அரசு சாரா இயக்கங்களின் தொண்டுகளையும் ஆராயும் நோக்கில் வரையறுக்கப்பட்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பண்புசார் அடிப்படையிலான இந்த ஆய்வு போர்ட்டிக்சன் வட்டாரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

போர்ட்டிக்சன் வட்டாரத்தில் பல்வேறு வகையான அரசு சாரா இயக்கங்கள் இன, மத, பேதமின்றி இயங்கி வந்துள்ளன. இவற்றுள் அரசு சாரா இந்தியர் இயக்கங்களும் விதிவிலக்கல்ல. 2010-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி போர்ட்டிக்சன் வட்டாரத்தில் 14.3% இந்தியர்கள் வாழ்கின்றனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்களுக்குச் சேவையாற்றும் நோக்கில் பல அரசு சாரா இந்தியர் இயக்கங்கள் இங்குப் பணியாற்றி வந்துள்ளன. இதனால் இந்த ஆய்வு போர்ட்டிக்சனை ஆய்வுத் தளமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், ஆய்வு நோக்கம், ஆய்வு வினா ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு போர்ட்டிக்சனில் செயல்படும் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் தொண்டுகளையும் ஆராயவும் இவ்வாய்வு முற்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டதுபோல் போர்ட்டிக்சன் மாவட்டத்தில் பல அரசு சாரா இந்தியர் இயக்கங்கள் இயங்கி வந்தாலும் இவ்வாய்வு மூன்று இயக்கங்களை மட்டுமே முன்னோடியாகக் கொண்டு ஆராயப்பட்டுள்ளது. இவ்வாய்வில் தெரிவு செய்யப்பட்ட மூன்று இயக்கங்களும் இவ்வட்டார மக்களிடையே அதிக வரவேற்பைப் பெற்றவையாகும். தவிர, இவ்வியக்கங்களின் தொண்டுகள் பெருமளவில் இங்குள்ளோரின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கும் பங்காற்றியுள்ளன. மேலும், குறிப்பிட்ட ஒரு தரப்பினரை மட்டுமே இலக்காகக் கொண்டிராமல் குழந்தைகள், சிறுவர்கள், இளையோர், முதியோர், பெண்கள் என அனைத்துத் தரப்பினருக்கும் சேவையாற்றும் மனப்பக்குவம் இவ்வியக்கங்களிடையே காணப்பட்டுள்ளது. இவற்றுக்கு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேலாக ஆய்வின் காலம் கருதியும் போர்ட்டிக்சனில் செயல்படும் இந்த மூன்று அரசு சாரா இந்தியர் இயக்கங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:

i. மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை

ii. போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம்

iii. போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம்

மேற்கண்ட அரசு சாரா இந்தியர் இயக்கங்களைப் பற்றிய பின்னணிகள், செயல்பாடுகள், தொண்டுகள் ஆகியவை குறித்தும் இந்த ஆய்வில் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன.

இதைத் தவிர்த்து, இவ்வாய்விற்கு வலுசேர்க்கப் பிற மூலங்களும் மேற்கோள்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சைவ சித்தாந்தம், திருமந்திரம் உள்பட பல தமிழ் இலக்கிய அறிஞர்களின் ஆய்வு நூல்களும் ஆய்வுக் கட்டுரைகளும் தகவல் சேகரிக்கப் பயனாக அமைந்தன. மேலும், இணைய ஆய்வேடுகள், இணைய வலைத்தளங்கள், அறிவுசார் நூல்கள் போன்ற பிறவும் ஆய்வுக்குத் துணையாக நின்றன.

இந்த ஆய்வு முதன்மை ஆதாரங்களையும் துணை ஆதாரங்களையும் முன்நிறுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வில் முதன்மை ஆதாரமாகிய பெரிய புராணம் தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்கு நூலக ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களைப் பற்றியத் தகவல் சேகரிக்கும் நோக்கில் நேர்க்காணலையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. மேற்கண்ட தகவல் சேகரிப்பு முறைகள் பண்புசார் ஆய்வில் தகவல் திரட்டப் பேருதவியாக அமைந்தன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

3.3.1 நூலக ஆய்வு

ஒவ்வோர் ஆய்வும் பல அணுகுமுறைகளை அடிப்படையாகக் கொண்டே செயல்படுத்தப்படும். அந்த வகையில் இவ்வாய்வானது நூலக ஆய்வை முதன்மையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தமிழ் இலக்கிய நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், இணைய ஆய்வேடுகள் போன்ற பல எழுத்து மூலங்களின் துணைகொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆவணங்கள் நேர்த்தியான ஆய்வை மேற்கொள்வதற்கு இந்த ஆய்வில் ஆய்வாளருக்குத் துணை செய்தன.

நூலக ஆய்வின் துணையுடன் இவ்வாய்வில் பலதரப்பட்ட புத்தகங்களும் சஞ்சிகைகளும் வார மாத இதழ்களும் கையேடுகளும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. பெரிய புராணம், சைவ சித்தாந்தம் , திருமந்திரம் எனப் பல இலக்கிய மூலங்கள் இந்த ஆய்வில் நுணுக்கமாகக் கையாளப்பட்டுள்ளன. அந்த வகையில் ஆய்வுக்குத் தேவையான சான்றுகளும் ஆதாரங்களும் பொது நூலகங்களிலும் பல்கலைக்கழக நூலகங்களிலும் திரட்டப்பட்டுள்ளன. இதைத் தவிர்த்து, இந்த ஆய்வுக்கு மின்னியல் நூலகங்களும் துணைபுரிந்துள்ளன. இணையத் தளங்களில் பிரசுரிக்கப்பட்ட நூல்கள், ஆய்வேடுகள், கட்டுரைகள், குறிப்புகள் போன்றவையும் இவ்வாய்வுக்குப் பயனாக அமைந்தன. அந்த வரிசையில் மின்னியல் நூலகங்களும் வலைத்தளங்களும் ஆய்வாளரின் தரவுகள் சேகரிப்புக்குப் பெரும் உதவியாக இருந்தன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இந்த நூலக ஆய்வு 'பெரிய புராணத்தில் நாயன்மார்களின் சரியை தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சரியை தொண்டுகளும் ஓர் ஆய்வு' எனும் தலைப்பையொட்டிய கலைச்சொற்களின் விளக்கம் பெறவும் உறுதுணையாக இருந்தது. தவிர, இந்த ஆய்வையொட்டிய பிற ஆய்வுகள், அறிஞர்களின் கூற்றுகள், ஆய்வுக் கோட்பாடுகளான சரியை மார்க்கம், பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் தத்துவம் போன்றவற்றைத் தெரிந்து கொள்வதற்கும் நூலக ஆய்வு மேற்கோள் காட்டியது. இவ்வாய்வில் பெரிய புராணம் முதன்மை ஆதாரமாகத் திகழ்வதால் அதனையொட்டிய கருத்துகள் தக்க சான்றுகளுடன் நூலக ஆய்வின் மூலம் விளக்கப்பட்டுள்ளன. ஆய்வு நோக்கம், ஆய்வு வினா ஆகியவற்றின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வண்ணம் நூலக ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

3.3.2 நேர்க்காணல்

பண்புசார் ஆய்வில் நேர்க்காணல் என்பது ஆய்வாளருக்கும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டோருக்குமான கருத்துப் பரிமாற்றமேயாகும் என டெய்லர் & போக்டான் கூறுகின்றனர் (Taylor & Bogdan, 1984). இந்த ஆய்வில் நேர்க்காணல் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களைப் பற்றிய தகவல்களைத் திரட்டும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த ஆய்வில் நேர்க்காணல் மேற்கொள்ளப்படுவதற்கு முன்பாக உள்நாட்டில் இயங்கி வரும் சில அரசு சாரா இந்தியர் இயக்கங்களைப் பற்றிய மேலோட்டமான தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் போர்ட்டிக்சன் வட்டாரத்தில்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இயங்கி வரும் மூன்று அரசு சாரா இந்தியர் இயக்கங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த நேர்க்காணல் மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை, போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம், போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம் ஆகியோரிடம் நடத்தப்பட்டது. இவ்வியக்கங்களின் தோற்றம், அவற்றின் நோக்கம், நடவடிக்கைகள், திட்டங்கள் எனப் பல்வேறு தகவல்களைச் சேகரிக்கும் வண்ணம் இந்த நேர்க்காணல் மேற்கொள்ளப்பட்டது.

நேர்த்தியான நேர்க்காணலாக விளங்கிய இதில் மேற்குறிப்பிட்ட இயக்கங்களின் தலைவர்களும் செயலாளர்களும் பேட்டி எடுக்கப்பட்டனர். தலைவர், செயலாளர் எனும் பொறுப்பிலுள்ள இருவரும் ஓர் இயக்கத்தில் முக்கியப் பொறுப்பு வகிப்பவர்களாக இருப்பதினால் இவர்களிடம் மட்டுமே இந்த நேர்க்காணல் நடத்தப்பட்டது. **அட்டவணை 3.1** ஆய்வுக்குட்படுத்தப்பட்ட இயக்கங்களில் தகவல் கொடுத்தோரின் பெயர்களையும் அவர்களின் பொறுப்பு அல்லது பதவியையும் விவரிக்கின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அட்டவணை 3.1

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட இயக்கங்களில் தகவல் கொடுத்தோரின் பெயர்களும் அவர்களின் பொறுப்பு அல்லது பதவியும்

எண்	பெயர்	பொறுப்பு/ பதவி /இயக்கம்
1	திரு.ந.கிருஷ்ணமூர்த்தி	தலைவர், மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை
2	திரு.ஜெகதிஸ் கிருஷ்ணன்	செயலாளர்,மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை
3	திரு.நா.கந்தையா	தலைவர், போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம்
4	திரு. சரவணன் கந்தையா	செயலாளர், போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம்

இவ்வாய்வில் நேர்க்காணலுக்கான கேள்விகள் இரு பிரிவுகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. முதல் பிரிவு நேர்க்காணல் செய்யப்படுவோரின் தகவல்களைப் பெற உதவியாக இருந்தது. இரண்டாம் பிரிவு, இயக்கங்களைப் பற்றிய தகவல்களாக அமைந்துள்ளது. அவை பின்வருமாறு:

i. இயக்கங்களின் தோற்றம், நோக்கம், வரலாறு ஆகியவற்றைக் கூறச் செய்தல்.

ii. இயக்கங்களின் நடவடிக்கைகள், செயல்பாடுகள், திட்டங்கள் ஆகியவற்றை அடையாளம் காணுதல்.

iii. இயக்கங்களின் நடவடிகைகள்/ திட்டங்களினால் கிடைக்கப்பெறும் பயன்களைத் தொகுத்தளித்தல்.

iv. திட்டங்களைச் செயல்படுத்துவதில் எதிர்நோக்கும் சவால்களைக் கலந்துரையாடுதல்.

மேற்குறிப்பிட்ட கேள்விகள் அனைத்தும் ஆய்வின் தலைப்பையொட்டிய நோக்கத்தை அடையும் பொருட்டு அமைக்கப்பட்டன. எனவே, இந்த நேர்க்காணலின்வழி அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் தொண்டுகளை அடையாளம் காண முடிந்தது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

3.4 ஆய்வுக் கருவி

பெரிய புராணத்தில் நாயன்மார்களின் சரியை தொண்டுகளையும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சரியை தொண்டுகளையும் அடையாளம் காண்பதற்கு அட்டவணைகள் ஆய்வுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டன.

3.4.1 நூலக ஆய்வுக்கான ஆய்வுக் கருவி

நாயன்மார்களின் சரியை தொண்டுகள், அவர்களின் வரலாற்றுக் குறிப்புகள், பெரிய புராணப் பாடல்களின் எண் வரிசை ஆகியவை **அட்டவணை 3.2, அட்டவணை 3.3, அட்டவணை 3.4, அட்டவணை 3.5, அட்டவணை 3.6, அட்டவணை 3.7, அட்டவணை 3.8** ஆகியவற்றின் துணையுடன் தொகுக்கப்பெற்றன.

அட்டவணை 3.2

சரியை மார்க்கத்தைக் கடைபிடித்துத் தொண்டாற்றிய நாயன்மார்கள்

எண்	பெயர்	கடைபிடித்த மார்க்கம்
1 ↓ 63		

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அட்டவணை 3.3

சரியை நெறியில் ஒழுகிய நாயன்மார்களும் பெரிய புராணப் பாடல் எண்ணிக்கையும்

எண்	பெயர்	கடைபிடித்த மார்க்கம்	பெரிய புராணப் பாடல் எண் வரிசை	மொத்தப் பாடல்கள்
1 ↓ 63				

அட்டவணை 3.4

சரியை தொண்டுகளும் அதனைக் கடைபிடித்த நாயன்மார்களும்

எண்	சரியை தொண்டுகள்	நாயன்மார்களின் எண்ணிக்கை
1 ↓ 47		

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அட்டவணை 3.5

அடியார்களுக்கு அமுது படைத்த நாயன்மார்கள்

எண்	பெயர்	குறிப்புகள் / தொண்டுகள்
1 ↓ 9		

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அட்டவணை 3.6

அடியார்களுக்குப் பொருளுதவி செய்த நாயன்மார்கள்

எண்	பெயர்	குறிப்புகள் / தொண்டுகள்
1 ↓ 4		

அட்டவணை 3.7

ஆலயத் திருப்பணிகள் ஆற்றிய நாயன்மார்கள்

எண்	பெயர்	குறிப்புகள் / தொண்டுகள்
1 ↓ 18		

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அட்டவணை 3.8

பிறத் தொண்டுகளாற்றிய நாயன்மார்கள்

எண்	பெயர்	குறிப்புகள் / தொண்டுகள்
1 ↓ 15		

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

3.4.2 நேர்க்காணலுக்கான ஆய்வுக் கருவி

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட இயக்கங்களைப் பற்றிய தகவல்களைத் திரட்டும் பொருட்டு மொத்தம் எட்டு கேள்விகள் வரையறுக்கப்பட்டன. இக்கேள்விகள் ஆய்வு நெறியாளர் முனைவர் கார்த்திகேஸ் பொன்னையா அவர்களால் மெருகூட்டப்பட்டன. மேலும், முனைவர் இளங்குமரன் அவர்களாலும் முனைவர் முனிஸ்வரன் அவர்களாலும் அங்கீகரிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டன. அவை பின்வருமாறு:

1. குறிப்பிட்ட கழகம் / இயக்கம் போர்ட்டிக்சன் வட்டாரத்தில் இயங்கி வரும் கால அளவைக் கூறச் செய்தல்.

2. இயக்கங்களின் சமயத் தொண்டுகளைக் கூறச் செய்தல்.

   - ஆலயத் தொண்டுகள்
   - மக்களுக்கான சமயத் தொண்டுகள்

3. இயக்கங்களின் சமுதாயத் தொண்டுகளைக் கூறச் செய்தல்.

   - எந்தப் பிரிவினரைக் குறிக்கோளாகக் கொண்டது?
   - எத்தகைய தொண்டுகள் / திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன?
   - எம்மாதிரியான சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது?

4. இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகள் / திட்டங்கள் எந்த அளவுக்கு மக்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளன?

5. இயக்கங்களின் ஆர்வலர்கள் எவ்வகை பிரிவினரைச் சேர்ந்தவர்கள்?

6. இயக்கங்களுக்கான நிதியுதவி எங்கிருந்து பெறப்படுகின்றது?

7. இயக்கங்களின் ஒவ்வொரு நடவடிக்கையும் நல்ல ஆதரவை பெறும் பட்சத்தில் விளைபயன் எப்படி இருக்கும்?

8. இயக்கங்களின் எதிர்காலத் திட்டங்கள் யாவை?

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேற்குறிப்பிடப்பட்ட கேள்விகளின் துணையுடன் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட போர்ட்டிக்சன் அரசு சாரா இயக்கங்களின் தகவல்கள் அவற்றின் தொண்டுகளைக் கண்டறிய கீழ்க்காணும் **அட்டவணை 3.9**, **அட்டவணை 3.10** ஆய்வுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டன.

அட்டவணை 3.9

போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமயத் தொண்டுகளின் ஒப்பீடு

எண்	சமயத் தொண்டு	இயக்கம்		
		மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை	போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம்	போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம்
1 ↓ 11				

அட்டவணை 3.10

போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமுதாயத் தொண்டுகளின் ஒப்பீடு

எண்	சமுதாயத் தொண்டுகள்	இயக்கம்		
		மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை	போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம்	போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம்
1 ↓ 8				

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

3.5 தரவுகள் பகுப்பாய்வு முறை


இவ்வாய்வு பண்புசார் ஆய்வாக அமைந்ததால் மேற்குறிப்பிட்டதுபோல் நூல் மூலங்களே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதைத் தவிர்த்து, ஆய்வுக் கட்டுரைகள், குறிப்பேடுகள், இலக்கியக் கையேடுகள் போன்ற எழுத்து மூலங்களும் தகவல் திரட்ட ஏதுவாக அமைந்தன. இதன் அடிப்படையில், இந்த ஆய்வில் கிடைக்கப்பெற்ற தரவுகள் அனைத்தும் விளக்க முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

3.5.1 விளக்க முறை

நூல்நெறி (ஹெர்மெநியூதிக்) எனும் விளக்கவியல் (வேத புத்தகங்களுக்கு விளக்கம் கொடுக்கும் ஆய்வியல் துறை) இவ்வாய்வுக்கு மேலும் துணைபுரிந்தது. இந்த ஆய்வு பெரிய புராணம், சைவ சித்தாந்தம், திருமந்திரம் போன்ற தமிழ் பக்தி இலக்கிய நூல்களை ஆதாரமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதால் நூல் மூலங்களின் உள்ளடக்கத்தைப் புலனாய்வு செய்ய இம்முறை பெரிதும் உதவியது. இந்த ஆய்வில் நான்கு அணுகுமுறைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. **படவரைவு 3.2** அந்த நான்கு அணுகுமுறைகளையும் விளக்குகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



படவரைவு 3.2. தகவல் புலனாய்வு முறை

மேற்குறிப்பிடப்பட்டதில் முதல் அணுகுமுறை பெரிய புராணத்தில் இடம்பெறும் செய்யுள்களை ஆய்வு செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டது. இங்கு மங்கையர்கரசி (1972) அவர்களால் உரை எழுதப்பெற்று தமிழ் இணையப் பல்கலைக்கழகம் வெளியீடு செய்த 'சேக்கிழார் பெருமான் அருளிய திருத்தொண்டர் புராணம்' எனும் நூல் முதன்மை ஆதாரமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், சேக்கிழாரின் பெரிய புராணத்திற்கு உரை எழுதிய இன்னும் பல தமிழ் இலக்கிய அறிஞர்களின் நூல்களும் மேற்கோள் நூல்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. தவிர, திருமந்திரம், தேவாரம், ஆய்வுக் கட்டுரைகள், இலக்கியக் கையேடுகள் என இன்னும் பலவும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இரண்டாம் அணுகுமுறை பெரிய புராணச் செய்யுள்களின்வழி தரவுகளை வகைப்படுத்த ஏதுவாக அமைந்தது. பெரிய புராணம், திருமந்திரம், தேவாரம் போன்ற ஆவணங்களிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகள் இங்கு முறையாகத் தொகுக்கப்பெற்று ஆய்வு செய்யப்பட்டன. மூன்றாவது அணுகுமுறை மேற்குறிப்பிட்ட நூல் மூலங்களின் செய்யுள்களுக்குப் பொருள் விளக்கம் காணத் துணை செய்தது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பெரிய புராணத்தில் நாயன்மார்களின் சரியை தொண்டுகளையும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சரியை தொண்டுகளையும் அடையாளம் காண்பதே இந்த ஆய்வின் முதன்மை நோக்கமாகும். இதன் அடிப்படையில் இவ்வாய்வு பெரிய புராணம் எனும் வரலாற்று எழுத்து மூலத்தைப் பின்னணியாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால், பெரிய புராணத்தில் வரும் செய்யுள்களைக் கருத்துப் பிழையின்றிக் கையாள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதனால் மட்டுமே பெரிய புராணச் செய்யுள்களின் தெரிநிலை, மறைநிலை உண்மைகளை ஆராய முடிந்தது. மேலும், இவ்வாய்வுக் கோட்பாடுகளான சித்தாந்தத்தின் முப்பொருள் தத்துவமும் முக்கியக் கூறுகளாகத் திகழ்வதால் பகுப்பாய்வு முறையே இதற்குச் சாலப் பொருந்தியது. பதி, பசு, பாசம் எனும் தத்துவங்களை விளக்க இந்த முறை சிறந்ததாக அமைந்தது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இந்தப் பகுப்பாய்வு முறை தரவுகளை ஆராயும்பொழுது மேற்கொள்ளப்பட்டது. இம்முறை ஆய்வு நோக்கத்தையும் ஆய்வு வினாவையும் கருத்தில் கொண்டே செயல்படுத்தப்பட்டது. சீரான, தரமான ஆய்வு முடிவினைப் பெறுவதற்கு இந்தப் பகுப்பாய்வு முறை உதவியது. இறுதியாக, மேற்கண்ட அணுகுமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட தரவுகள் ஒருங்கிணைக்கப்பட்டு அனைவரும் உய்த்துணரும் வண்ணம் முடிவுரை அமைக்கப்பட்டது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

3.6 ஆய்வுக் கோட்பாடு

இவ்வாய்வு ‘பெரிய புராணத்தில் நாயன்மார்களின் சரியை தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சரியை தொண்டுகளும் ஓர் ஆய்வு’ எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொண்டு நெறி அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வுக்கு மெய்கண்டாரின் சித்தாந்த நெறி காட்டும் சரியை மார்க்கமே ஆய்வுக் கோட்பாடாக அமைந்துள்ளது. சைவ சித்தாந்தம் கூறும் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள் தத்துவங்கள் சரியை மார்க்கத்தின் வாயிலாக அடையாளம் காணப்பட்டன.

பழந்தமிழரின் வழிபாடு சிவ வழிபாடே என ஜி. யு. போப் கூறியுள்ளார். இவர்கள் சிவனைத் தியான வடிவிலும் இலிங்க வடிவிலும் வழிபட்டனர் என்பது ஸ்டிபின்சன் என்பவரின் கூற்று என ந.சி. கந்தையா பிள்ளை (2010) கூறுகிறார் .சிவ வழிபாடு ஆகமங்களின் அடிப்படையில் உயர்ந்திருந்தபோது தென்னிந்திய தமிழ் மக்களின் பேரறிவின் பயனாகக் கிடைத்ததே சைவ சித்தாந்தமாகும் என்கிறார் நாகப்பன் ஆறுமுகம் (2008). மேலும், பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்கள் பற்றிய ஆய்வின் முடிவுகளே சைவ சித்தாந்தம் என்றும் அவர் (2008) கூறுகிறார்.

பதி என்பது இறைவனையும் பசு என்பது உயிர்களையும் பாசம் என்பது உயிர்களைப் பிணித்துள்ள மலங்களையும் குறிக்கும்.பதியைப் போன்றே பசுவும் பாசமும் என்றும் நிலையான பொருள் என்பதே சித்தாந்தத்தின் கருத்து. உயிர்களானது இறைவனை அடைய முதலில் தங்களைப் பிணித்துள்ள ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களையும் விட்டொழிக்க வேண்டும் என்கிறார் ந.தர்மலிங்கம் (2012). இந்தப் பிறவிப் பிணி நீங்கப் பெறச் சற்குருவினரும் திருவைந்தெழுத்து மந்திரமும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

திருநீரும் மட்டுமே துணையன்றி வேறில்லை. இவற்றைத் துணைகொண்டு சைவ நன்னெறிகளில் சென்றால் இறைவனின் திருவடியில் சேரலாம் என்பதே சித்தாந்தத்தின் உண்மை நெறியாகும் எனச் சி.கே.சுப்ரமணிய முதலியார் (1954) தமது பெரிய புராண உரை எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

சி.கே.சுப்ரமணிய முதலியார் (1954) அவர்கள் கூறியதுபோல் அக்காலத்தில் அடியார்கள் வாழ்ந்து காட்டிய நன்னெறிகளையும் சைவ சித்தாந்தம் தெளிவுறுத்துகிறது (தர்மலிங்கம், 2012). இந்த நன்னெறிகள் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்காகப் பகுக்கப்பட்டுள்ளன. அடியார்கள் பின்பற்றிய வழிகளில் நம்மால் இயன்ற வழியைத் தேர்ந்தெடுத்து முயன்றால் நம் கர்ம வினைகள் நீங்கி இறைவனை அடையலாம் என்கிறார் ந.தர்மலிங்கம் (2012). இதனையே,

அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரிசாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரிசு ஈசன் அருள் பெறலாமே

(திருமந்திரம், 36)

(**விளக்கம்**: அனைத்துயிர்க்கும் தந்தையொப்பானை, அழியாச் செல்வ நந்தியை, உண்ணத் தெவிட்டாப் பண்ணப்படாத இயற்கை அமுதனை, ஒப்பில்லாத பிழைபொறுத்தாளும் விழைதகு வள்ளலை, பேரூழிக் காலத்தும் ஒடுக்கமின்றி நின்று மீண்டும் உலகினைப் படைப்பிக்கும் முழுமுதல்வனை, எந்த வகையானும் - அருள் உந்தும் வழியில் தொழுங்கள். தொழுதால் அந்த வகையால் அச் சிவனும் வந்து அருள்புரிவன். வள்ளலென்றார், நஞ்சுண்டு காத்த நாயனார் என்பது பற்றி.)

எனத் திருமூலரும் குறிப்பிடுகின்றார்.

எனவே, இந்த ஆய்வு, இறைவனுக்கும் அவன் அடியார்களுக்கும் தொண்டு செய்து இவ்வுலகிலேயே இறைவனைக் கண்டு அவனோடு இரண்டறக் கலந்த அடியார்களின் வாழ்க்கை நெறியைப் பரிந்துரைக்கிறது. இதுவே சரியை எனப்படும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொண்டு நெறியாகும் (தர்மலிங்கம், 2012). சரியை, சித்தாந்தம் காட்டும் நன்னெறிகள் நான்கில் முதற்படி.

அன்பு வழியில் நின்று உடலால் பிற உயிர்களின் நல்வாழ்விற்காகத் தொண்டாற்றுவதும் இறைபணிகள் செய்வதும் சரியை நெறியாகும் என்கிறார் பரமசிவம் (2018). இந்நெறியைக் கடைப்பிடிப்பவர்கள் தம்மை அடிமையாக ஏற்கும் தாச மார்க்கத்தைக் கடைப்பிடிப்பவர்களாவர். இவர்கள் தூய தெய்வ பக்தியும் இவர்களுக்குத் துணை நின்றது எனலாம். இதுவே இறைவனை அடைவதற்குரிய இலகுவான வழி என்பதும் இவரின் கருத்து (2018).

சரியை மார்க்கத்தின் அடிப்படையில் பெரிய புராணத்தில் வரும் நாயன்மார்கள் பலரும் இறைவனுக்கும் அடியார்களுக்கும் தொண்டுணர்வோடு சேவை செய்துள்ளனர். நாயன்மார்களின் தொண்டுகள் சமயம் சார்ந்தும் சமுதாயம் சார்ந்தும் இருப்பதைப் பெரிய புராணத்தின்வழி அறிய முடிகிறது. கோயில்களில் இறைவனை வழிபடுதல், திருக்கோயிலைக் கூட்டுதல், மெழுகுதல், கழுவுதல், பாழடைந்த கோயில்களை வேண்டிய அளவில் புதுப்பித்தல் போன்றவை சரியை மார்க்கமேயாகும். இறைவன் குடிகொண்டுள்ள திருக்கோயில் எப்பொழுதும் தூய்மையாக இருக்க வேண்டுமென்றெண்ணிப் பணி செய்வதும் சரியையே. இதைத்தான் திருநாவுக்கரசரும் உழவாரப் பணி செய்து உலகுக்கு உணர்த்தினார் (மஞ்சுளா, 2004).

மேலும் விளக்கு ஏற்றுதல், பூமாலை தொடுத்தல், வாசனைத் திரவியங்களை வழங்குதல், தீவர்த்தி ஏந்துதல், நந்தவனம் அமைத்தல், போன்றவையும் சரியை தொண்டில் அடங்கும். இதைத் தவிர்த்து, புராணப் பாராயணம் செய்தல், கேட்டல், புராணக் கதை படித்தல், யாத்திரை சென்று இறைவன் புகழ் பாடுதல்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


திருவைந்தெழுத்தை மறவாது கூறுதல் ஆகியவையும் சரியை தொண்டுகளேயாகும் (பரமசிவம், 2018).

அக்கால அடியார்களின் சரியை தொண்டுகள் இன்று மனிதக் குல மேம்பாட்டிற்காகத் துணைபுரியும் நோக்கில் மேற்கொள்ளப்படுகின்றன. தனிமனிதனாகச் செயல்படுவதன்றி ஓர் அமைப்பாகச் செயல்படும் அரசு சாரா இயக்கங்களின் தொண்டும் அடியார்களின் வாழ்வோடு நோக்கத்தக்கது. எனவே, இவ்வாய்வின் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு சரியை மார்க்கத்தின் வாயிலாக நாயன்மார்களின் தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் தொண்டுகளும் ஆராயப்பட்டுள்ளன. இதனைக் கருத்தில் கொண்டே ஆய்வுக் கோட்பாடும் அமையப்பெற்றுள்ளது. **படவரைவு 3.3** ஆய்வுக் கோட்பாட்டைக் காட்டுகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi




படவரைவு 3.3. ஆய்வுக் கோட்பாடு கட்டமைப்பு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

3.7 ஆய்வு நடைமுறை

இவ்வாய்வை மேற்கொள்ள **படவரைவு 3.4** இல் உள்ள படிநிலைகள் பின்பற்றப்பட்டன.



படவரைவு 3.4: ஆய்வு நடைமுறை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

3.8 தொகுப்புரை

இவ்வியலில் ஆய்வு நெறிமுறைகள் முழுமையாக விளக்கப்பட்டுள்ளன. ஆய்வு வடிவமைப்பு, தரவுகள் சேகரிப்பு முறை, தரவுகள் பகுப்பாய்வு முறை, ஆய்வுக் கோட்பாடு, ஆய்வு நடைமுறை முதலான கூறுகள் இவ்வியலின் முக்கிய அங்கமாக உள்ளன. பண்புசார் ஆய்வு, ஆய்வுக்கு உட்பட்டோரின் கருத்துகளையும் அனுபவங்களையும் பெறுவதற்கு உறுதுணையாக இருந்தது. மேலும், இதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள தரவு சேகரிப்பு முறைகள் ஆய்வு முடிவுகள் வளமானதாகவும் வலுவானதாகவும் அமைய உதவி புரிந்துள்ளன. இவ்வியலில் விளக்கப்பட்ட மேற்கண்ட கூறுகள் அனைத்தும் உண்மையான ஆய்வுக்கு நெறிபடுத்தப்பட்ட ஓர் ஆயத்தமாகவே அமைந்தன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேலும், இந்த ஆய்வு பெரிய புராணத்தில் நாயன்மார்களின் சரியை தொண்டுகளைப் பற்றிய முழுக் கண்ணோட்டத்தை வழங்கியுள்ளது. நாயன்மார்களின் தொண்டு நெறி மக்களின் நல்வாழ்வுக்கு வளம் சேர்த்ததையும் காண உறுதுணையாக இருந்தது. இதன் அடிப்படையில் இன்றையச் சூழலில் வழங்கப்படும் தொண்டுகளும் இந்த ஆய்வில் ஆராயப்பட்டுள்ளன. இன்று பல அரசு சாரா இயக்கங்களின் மூலம் உயிர்ப்பெற்றுப் போற்றப்படுகின்ற தொண்டுகள் நாயன்மார்களின் சரியை தொண்டுகளை ஒத்திருப்பினும் அதைப் பற்றிய நடைமுறை ஆய்வுகள் குறைவாகவே உள்ளன. எனவே, இந்த ஆய்வு முந்தைய ஆய்வுகளையொட்டிப் போர்ட்டிக்சனில் இயங்கி வரும் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் தொண்டுகளையும் அடையாளம் காட்டும் வகையில் அமையப்பெற்றுள்ளது. இவ்வாய்வு பிற்காலத்தில் அரசு சாரா இயக்கங்களின் தொண்டுகளை விமர்சிக்கும் பல ஆய்வுகளுக்கு முன்னோடியாக அமையும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இயல் 4

ஆய்வு முடிவுகள்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.1 முன்னுரை

இவ்வியல் ஆய்வின் முடிவுகளைத் தொகுத்து வழங்குகிறது. பெரிய புராணத்தை அடிப்படையாகக் கொண்டு போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் தொண்டுகளை ஆராய்ந்து கிடைத்த தகவல்கள் இதில் பல கூறுகளில் தொகுக்கப்பட்டுள்ளன.

பெரிய புராணத்தில் நாயன்மார்களின் சரியை தொண்டுகளை ஆராயும் பொருட்டு அவர்கள் கடைபிடித்த சித்தாந்த நெறி மார்க்கங்கள் இங்குச் சுட்டப்பட்டுள்ளன. இதற்கு வலுசேர்க்கும் வகையில் பெரிய புராணப் பாடல் எண் வரிசையும் குறிக்கப்பட்டுள்ளது. மேலும், நாயன்மார்களின் சரியை தொண்டுகள் ஐந்து

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கூறுகளாக வகுக்கப்பெற்று ஒவ்வொரு தொண்டுகளையும் ஆற்றிய நாயன்மார்களின் வாழ்க்கை குறிப்புகளும் இணைக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து இவ்வியலில் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் தொண்டுகள் சமயத் தொண்டு, சமுதாயத் தொண்டு எனும் நோக்கில் ஆராயப்பட்டுத் தொகுக்கப்பட்டுள்ளன. நாயன்மார்களின் சரியை தொண்டுகளை இவ்வியக்கங்களின் சரியை தொண்டுகளோடு பொருத்திப் பார்க்கும் நோக்கில் ஒப்பீடும் செய்யப்பட்டுள்ளது.

4.2 சரியை தொண்டு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சமயம் சார்ந்த கொள்கைகளின் அடிப்படையில் நின்று தொண்டாற்றுவதே சரியை எனக் கருத்துரைக்கிறார் கௌசல்யா (1996). சைவ சமயத்தவர் இத்தகைய தொண்டுகளைத் திருத்தலங்களில் மேற்கொண்டு வந்துள்ளனர் என்பது நந்தலாலா (2008) அவர்களின் கூற்று. மேலும், இத்தகு திருப்பணிகள் யாவும் இறைவனை எளிதில் அடைவதற்காகக் கோயில்களில் மட்டுமல்லாது அவனது அடியவர்களுக்கும் ஆற்றப்படும் தொண்டாகவே போற்றப்படுகிறது என்பது குமரேசமூர்த்தி என்பவரின் கருத்து (2004).

சைவ சமயத்தில் தொண்டு நெறி என்றே போற்றப்படும் சரியை இறைவன் குடிகொண்டுள்ள திருக்கோயில்களில் மட்டுமின்றி உலக ஜீவராசிகள் அனைத்திற்கும் தன்னலம் கருதாமல் பணி செய்வதைக் குறிக்கின்றது. எல்லையற்ற அன்பினால் உயர்ந்தோர் தாழ்ந்தோர், ஏழை பணக்காரன், ஆண்டான் அடிமை என்றில்லாது

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தாவரங்கள், விலங்குகள் என்ற பேதங்கள் நீங்கியும் தொண்டாற்றுவதுதான் சரியை எனப்படும் (சம்பந்தன், 2004).

சைவ சித்தாந்தத்தின் அடிப்படை மெய்ஞானமாகிய பதி, பசு பாசம் ஆகியன மூன்றும் ஆன்மா இறைவனை அடையும் வழிகளைக் கூறுகின்றன. பசுவாகிய ஆன்மா பதியாகிய இறைவனை அடைய தம்மைப் பற்றியிருக்கும் பாசத்தினை (ஆணவம், கன்மம், மாயை) விட்டாலொழிய முக்தி கிட்டாது என்பதும் சித்தாந்தத்தின் கொள்கையாகும். எனவே சைவ சித்தாந்தம் காட்டும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றில் ஏதாகிலும் ஒன்றனைக் கடைபிடித்து இறைவனை அடைய முயற்சி செய்ய வேண்டும் (நாராயணவேலுபிள்ளை, 1995).

சிவஞானி கட்குஞ் சிவயோகி கட்கும்
அவமான சாதனம் ஆகாது தேரில்
அவமா மவர்க்கது சாதன நான்கும்
உவமான மில்பொருள் உள்ளூற லாமே

(திருமந்திரம், 1642)

(**விளக்கம்**: மதிக்கத்தகாத தீயசெயல்களைத் துணையாகிய சாதன மெனக்கொண்டு நடப்போர் அரிய மக்கட்பிறப்பின் பயனை வீணாக்குகின்றனர். ஆராயின் சிவஞானிகட்கும் சிவயோகிகட்கும் அவை பொருந்தாதன. அவர்கட்குப் பொருந்திய துணை நான்காகும். அவை: சீலம், நோன்பு, செறிவு, அறிவென்பன. தனக்குவமை இல்லாதானாகிய சிவன் மேற்கூறிய நானெறியால் வழிபடுவோர் உள்ளத்து வீற்றிருந்தருள்வன்.)

எனும் பாடல் சைவ சித்தாந்தம் காட்டும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நன்னெறிகள் நான்கில் வழிபட்டு சிவனடியார்கள் முக்தியின்பம் பெறுவர் என்றுரைக்கின்றது. சிவஞானசித்தியாரும்,

நன்மார்க்க நாலவைதா ஞானயோக
நற்கிரியை சரியையென நவிற்றுஞ் செய்வர்

(சிவஞானசித்தியார், 270)

எனும் பாடல் வழி இதனையே உணர்த்துகிறது. பெரிய புராணம் காட்டும் 63 நாயன்மார்களும் இந்த உண்மை நிலையை உலகத்தவர்க்கு உணர்த்தியவர்களாவர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இவர்கள் சைவ சித்தாந்தம் காட்டும் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு வழிகளில் ஏதேனும் ஒன்றனைப் பின்பற்றியே முக்தி அடைந்துள்ளனர். இதில் சரியை மார்க்கம் மனிதனைப் பற்றியுள்ள மலத்தை அறுத்து முக்திக்கு வழிகாட்டும் உயரிய சாதனமாக விளங்குகிறது (நாகப்பன் ஆறுமுகம், 2008). இதனையே பெரிய புராணமும் நமக்குச் சுட்டுகின்றது. 63 நாயன்மார்களுள் 47 பேர் சரியை மார்க்கத்தின் அடிப்படையில் முக்தி அடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது (கலியாணசுந்தரனார், 2000).

சரியையில் தொண்டுக்கே முதலிடம் எனும் கண்ணாத்தாளின் (2011) கூற்றுபடி நாயன்மார்கள் கோயில் தொண்டுகள் மட்டுமின்றி அடியார் தொண்டுகளையும் முதன்மையாகக் கொண்டே முக்தியடைந்துள்ளனர் என்பது நோக்கத்தக்கது. 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்ற இவர்களின் எண்ணமும் இங்கு மேலோங்கி நிற்கின்றது. மக்களுக்குச் செய்யும் தொண்டை இறைவனைப் பூஜிக்கும் மந்திரமாகவே பாவித்துப் பிறவிப் பெருங்கடலைக் கடந்தவர்கள் இந்த நாயன்மார்கள். எனவே, மக்களுக்குச் செய்யப்படும் தொண்டுகள் இறைவனுக்கான தொண்டாகவும் இங்குச் சிந்திக்கவல்லது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.3 நாயன்மார்களின் தொண்டு மார்க்கங்கள்

பெரிய புராணம் 63 நாயன்மார்களின் வரலாற்றைத் தொகுத்துக் கூறும் சைவ நூலாக அமைவதோடன்றி அடியார்களின் தொண்டுணர்வையும் எடுத்தியம்பும் களஞ்சியமாகத் திகழ்கிறது. இதில் நாயன்மார்களின் தொண்டுகள் சமயம், சமுதாயம் சார்ந்ததாக அமையப்பெற்றுள்ளன. இவர்கள் ஒவ்வொருவரும் சைவ சித்தாந்தம் கூறும் சரியை,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கிரியை, யோகம், ஞானம் ஆகிய ஏதாகிலும் ஒரு மார்க்கத்தின் அடிப்படையில் தொண்டாற்றி இறைவனின் அன்புக்குப் பாத்திரமாகியுள்ளனர்.

இவர்களுள் திருநீலகண்டர், இயற்பகையார், இளையான் குடி மாறனார், மெய்ப்பொருளர், அமர்நீதியார், எறிபத்தர், ஏனாதிநாதர், குங்கிலியக் கலயர், மானக்கஞ்சாரர், அரிவாள்தாயர், மூர்த்தியார், முருகனார், திருநாளைப்போவார், திருக்குறிப்புத் தொண்டர், குலச்சிறையார், அப்பூதியடிகள், ஏயர்கோன் கலிகாமர், தண்டியடிகள் ,மூர்க்கர், சாக்கியர், சிறப்புலியார், சிறுதொண்டர், புகழ்சோழர், நரசிங்க முனையரையர், அதிபத்தர், கலிகம்பர், கலியர், சக்தியார், ஐயடிகள் காடவர்கோன், கணம்புல்லர், காரியார், நின்ற சீர் நெடுமாறர், முனையடுவார், கழற்சிங்கர், இடங்கழியார், செருத்துணையார், கோட்புலியார், நேசர், கோட்செங்கட் சோழர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், சடையர், இசைஞானியார், திருநாவுக்கரசர், மங்கையர்கரசியார், விறன்மிண்டர் ஈராகச் சரியை தொண்டாற்றிய நாயன்மார்கள் மொத்தம் 45 பேர் என வெள்ளைவாரணர் (2016) வகைப்படுத்திக் காட்டுகிறார். அதே வேளையில் இந்தப் பட்டியலை மறு ஆய்வு செய்யும்பொழுது கணநாதர், நமிநந்தியடிகள் உட்பட 47 நாயன்மார்கள் சரியை தொண்டு புரிந்துள்ள நிலையைக் காண முடிகின்றது. **அட்டவணை 4.1** சரியை மார்க்கத்தைக் கடைபிடித்துத் தொண்டாற்றிய நாயன்மார்களின் வரிசையைக் காட்டுகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அட்டவணை 4.1

சரியை மார்க்கத்தைக் கடைபிடித்துத் தொண்டாற்றிய நாயன்மார்கள்

எண்	பெயர்	கடைப்பிடித்த மார்க்கம்
1	திருநீலகண்டர்	சரியை
2	இயற்பகையார்	சரியை
3	இளையான்குடி மாறனார்	சரியை
4	மெய்ப்பொருளர்	சரியை
5	அமர்நீதியார்	சரியை
6	எறிபத்தர்	சரியை
7	ஏனாதிநாதர்	சரியை
8	குங்கிலியக்கலயர்	சரியை
9	மானக்கஞ்சாரர்	சரியை
10	அரிவாள்தாயர்	சரியை
11	மூர்த்தியார்	சரியை
12	முருகர்	சரியை
13	திருநாளைப்போவார்	சரியை
14	திருக்குறிப்புத் தொண்டர்	சரியை
15	குலச்சிறையார்	சரியை
16	அப்பூதியடிகள்	சரியை
17	ஏயர்கோன் கலிகாமர்	சரியை
18	தண்டியடிகள்	சரியை
19	மூர்க்கர்	சரியை
20	சாக்கியர்	சரியை
21	சிறப்புலியார்	சரியை
22	சிறுதொண்டர்	சரியை
23	புகழ்சோழர்	சரியை
24	நரசிங்க முனையரையர்	சரியை
25	அதிபத்தர்	சரியை
26	கலிகம்பர்	சரியை
27	கலியர்	சரியை
28	சக்தியார்	சரியை
29	ஐயடிகள் காடவர்கோனார்	சரியை
30	கணம்புல்லர்	சரியை
31	காரியார்	சரியை
32	நின்ற சீர் நெடுமாறர்	சரியை
33	முனையடுவார்	சரியை
34	கழற்சிங்கர்	சரியை
35	இடங்கழியார்	சரியை
36	செருத்துணையார்	சரியை
37	கோட்புலியார்	சரியை
38	நேசர்	சரியை
39	கோட்செங்கட்சோழர்	சரியை
40	திருநீலகண்ட யாழ்பாணர்	சரியை
41	சடையர்	சரியை
42	இசைஞானியார்	சரியை
43	திருநாவுக்கரசர்	சரியை
44	மங்கையர்கரசியார்	சரியை
45	விறன்மிண்டர்	சரியை
46	கணநாதர்	சரியை
47	நமிநந்தியடிகள்	சரியை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பெரிய புராணத்தின் வாயிலாக 63 நாயன்மார்களின் வரலாற்றை அறியும் அதே சமயம் ஒவ்வொரு நாயன்மாரும் கடைப்பிடித்த சைவ சித்தாந்த நாற்பதங்களின் படிநிலைகளான சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றையும் தெரிந்து கொள்ள முடிகின்றது. சேக்கிழாரால் பாடப்பெற்ற 63 நாயன்மார்களுள் 47 பேர் சரியை மார்க்கத்தின் அடிப்படையில் நின்று இறைத்தொண்டு புரிந்துள்ளனர் என்பதை மேற்காணும் பட்டியலின்ழி அறிய முடிகின்றது. இறைவனிடத்தும் அவன் உறையும் உயிர்களிடத்தும் அன்பு மேலிட அருந்தொண்டாற்றியவர்கள் இந்நாயன்மார்கள். இவர்கள் ஆரவாரத்திற்கும் ஆடம்பரத்திற்கும் பகட்டிற்கும் பார்ப்பவர்க்கும் என்று அன்பு செய்யாமல் உயிரில் உறையும் இறைவனைக் கண்டு இன்புற்று வாழ்ந்து முக்தியடைந்தவர்கள் (தர்மலிங்கம், 2012).

இந்நாயன்மார்கள் சைவ சித்தாந்தம் கூறும் சரியை மார்க்கத்தில் நின்று அவர்கள் விரும்பும் வண்ணம் எளிய முறையில் சுதந்திரமாகத் தொண்டுகள் புரிந்தவர்கள். இவர்களின் தொண்டு இறைவனிடத்தில் ஓர் உறவினை ஏற்படுத்திக்கொள்ள உதவியது. இவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் அகப்புற ஆற்றலுக்கும் புறத்திற்கும் ஏற்பத் தொண்டுகளைத் தெரிவு செய்து அதிலே உறைப்பாய் நின்று, இறைவனை இவ்வுலகிலேயே கண்டு அவனது திருவடி நீழலில் சேர்ந்தவர்கள் எனக் குறிப்பிடுகிறார் ந.தர்மலிங்கம் (2012).சேக்கிழாரின் பெரிய புராணமும் இதை நன்கு தெளிவுபடுத்துகிறது. நாயமார்களின் சரியை தொண்டுகளையும் இறைவன் அவர்களை ஆட்கொண்ட திறத்தையும் பெரிய புராணப் பாடல்கள் உணர்த்துகின்றன. தொடர்ந்து வரும் **அட்டவணை 4.2** அடையாளம் காணப்பட்ட சரியை தொண்டுகள் புரிந்த நாயன்மார்களையும் பெரிய புராணத்தில் அவர்களின் வாழ்க்கை சரிதத்தைக் குறிக்கும் பாடல்களின் எண்ணிக்கையையும் காட்டுகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அட்டவணை 4.2

சரியை நெறியில் ஒழுகிய நாயன்மார்களும் பெரிய புராணப் பாடல் எண்ணிக்கையும்

எண்	பெயர்	கடைபிடித்த மார்க்கம்	பெரிய புராணப் பாடல் எண் வரிசை	மொத்தப் பாடல்கள்
1	திருநீலகண்டர்	சரியை	360-403	44
2	இயற்பகையார்	சரியை	404-439	36
3	இளையான்குடி மாறனார்	சரியை	440-466	27
4	மெய்ப்பொருளர்	சரியை	467-490	24
5	விறன்மிண்டர்	சரியை	491-501	11
6	அமர்நீதியார்	சரியை	502-550	49
7	எறிபத்தர்	சரியை	551-607	57
8	ஏனாதிநாதர்	சரியை	608-649	42
9	குங்கிலியக்கலயர்	சரியை	836-870	35
10	மானக்கஞ்சாரர்	சரியை	871-907	37
11	அரிவாள்தாயர்	சரியை	908-930	23
12	மூர்த்தியார்	சரியை	973-1021	49
13	முருகர்	சரியை	1022-1035	14
14	திருநாளைப்போவார்	சரியை	1046-1082	37
15	திருக்குறிப்புத் தொண்டர்	சரியை	1083-1210	128
16	திருநாவுக்கரசர்	சரியை	1266-1694	429
17	குலச்சிறையார்	சரியை	1695-1705	11
18	அப்பூதியடிகள்	சரியை	1783-1827	45
19	நமியந்திடிகள்	சரியை	1866-1898	33
20	ஏயர்கோன் கலிகாமர்	சரியை	3155-3563	409
21	தண்டியடிகள்	சரியை	3592-3617	26
22	மூர்க்கர்	சரியை	3618-3629	12
23	சாக்கியர்	சரியை	3636-3653	18
24	சிறப்புலியார்	சரியை	3654-3659	6
25	சிறுதொண்டர்	சரியை	3660-3747	88
26	கணநாதர்	சரியை	3923-3929	7
27	புகழ்சோழர்	சரியை	3942-3982	41
28	நரசிங்க முனையரையர்	சரியை	3983-3991	9
29	அதிபத்தர்	சரியை	3992-4011	20
30	கலிகம்பர்	சரியை	4012-4021	10
31	கலியர்	சரியை	4022-4038	17
32	சக்தியார்	சரியை	4039-4045	7
33	ஐயடிகள் காடவர்கோனார்	சரியை	4046-4053	9
34	கணம்புல்லர்	சரியை	4055-4063	9
35	காரியார்	சரியை	4064-4068	5
36	நின்ற சீர் நெடுமாறர்	சரியை	4069-4078	10
37	முனையடுவார்	சரியை	4089-4095	7
38	கழற்சிங்கர்	சரியை	4096-4108	13
39	இடங்கழியார்	சரியை	4109-4119	11
40	செருத்துணையார்	சரியை	4120-4126	7
41	கோட்புலியார்	சரியை	4134-4145	13
42	மங்கையர்கரசியார்	சரியை	4189-4191	3
43	நேசர்	சரியை	4192-4196	5
44	கோட்செங்கட்சோழர்	சரியை	4197-4214	18
45	திருநீலகண்ட யாழ்பாணர்	சரியை	4215-4226	12
46	சடையர்	சரியை	4227	1
47	இசைஞானியார்	சரியை	4228	1

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

63 நாயன்மார்களுள் 47 பேர் சைவ சித்தாந்தம் கூறும் சரியை மார்க்கத்தைப் பின்பற்றிப் பல தொண்டுகள் புரிந்துள்ளனர்.

எளியனல் தீப மிடல்மலர் கொய்தல்
அளிதின் மெழுக லதுதூர்த்தல் வாழ்த்தல்
பளிமணி பற்றல் பன்மஞ் சனமாதி
தளிதொழில் செய்வது தான் தாச மார்க்கமே
(திருமந்திரம், 1475)

(**விளக்கம்**: அடியார்க்கு எளியனாய் ஒழுகுதல், திருக்கோவில்களில் நல்ல விளக்கிடுதல், திருநந்தனவனத்தில் மலர்கொய்தல், அன்புடன் மெழுகல், திருவலகிடுதல், திருமுறைத் திருப்பதிகம் பாடியபடி பொருள் சேர் புகழை ஓதி வாழ்த்தல், திருக்கோவிற்கண் உள்ள அசையா மணி போன்ற விளக்கமிக்க பெரிய மணிகளை அடித்தல், திருமுழுக்குக்கு வேண்டிய திருத்தநீர் முதலியன கொணர்தல் இன்னும் திருக்கோவில் திருத்தொண்டு பலவும் புரிதல் அடிமைநெறி என்ப. பளி: பள்ளி என்பதன் இடைக்குறை. பள்ளி - திருக்கோவில். தளி - திருக்கோவில். அடிமைநெறி - தாசமார்க்கம்.)

எனும் திருமந்திரப் பாடலுக்கேற்பச் சரியை மார்க்கத்தின் வழிநின்ற இவர்களின் தொண்டுகள் சிவாலயங்களில் திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், திருவிளக்கேற்றல், நந்தவனம் அமைத்தல், பூமாலை கட்டுதல் போன்ற கோயில் திருப்பணிகளை மட்டுமே உள்ளடக்கியதன்று. மாறாக, இறையடியார்கள் குறிப்பாகச் சிவனடியார்களுக்குத் தொண்டுகள் செய்வதையும் இவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கை குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து வந்துள்ளனர் என்பதைப் பெரிய புராணம் வழி அறிய முடிகின்றது.

இந்நாயன்மார்கள் அனைவரும் சமயத் தொண்டு, சமுதாயத் தொண்டு எனச் சரியை வழியில் இறைவனுக்கும் அவனது அடியார்களுக்கும் தன்னலம் கருதாமல் தொண்டாற்றி இறையின்பம் எய்தியவர்கள். இதுவே இவர்களை முக்திக்கும் இட்டுச் சென்றுள்ளது எனச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார் (தர்மலிங்கம், 2012). பெரிய புராணம் மேற்குறிப்பிடப்பட்ட நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றை மட்டும் கூறாது

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அவர்களின் தொண்டுகளையும் இறைவன்பால் அவர்கள் கொண்டிருந்த அளவற்ற பக்தியையும் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

4.4 நாயன்மார்களின் சரியை தொண்டுகள்

சைவ சித்தாந்தம் காட்டும் சரியை மார்க்கத்தின் அடிப்படையில் பலரும் பல தொண்டுகள் புரிந்திருப்பினும் திருநாவுக்கரசரின் திருப்பணி போற்றுதற்குரியது. தள்ளாத வயதிலும் இறைவனுக்கும் அவன் அடியார்கட்கும் தொண்டு புரிவதையே தமது வாழ்வின் இலக்காகக் கொண்டிருந்தவர் அவர். இதனை, 'என் கடன் பணி செய்து கிடப்பதே' (திருமுறை 5:19:1262) என்ற அவரது கூற்றிலிருந்து அறிய முடிகிறது. இறைவனைத் தலைவனாகவும் தன்னை அவனது பணியாளனாகவும் எண்ணி வாழ்ந்த திருநாவுக்கரசர் தொண்டு நெறியில் சிறப்பிடம் பெற்றவர்.

இவரைப் போன்றே ஏனைய நாயன்மார்களும் இறைவனின் திருவருளைப் பெற வேண்டிச் சரியை எனப்படும் தொண்டு நெறியில் இறைவனிடம் அன்பு பாராட்டி வந்துள்ளனர். திருவிளக்கிடுதல், திருமெழுக்கிடுதல், திருவலகிடுதல், பூமாலை கட்டுதல், பாமாலை தொடுத்தல், அடியார்களுக்குத் தொண்டு புரிதல் போன்ற சரியை நெறிகள் யாவும் இந்நாயன்மார்களின் அன்றாடக் கடமைகளின் முதன்மை வகித்துள்ளன (நாகப்பன் ஆறுமுகம், 2008). பெரிய புராணத்தில் குறிப்பிடப்பட்ட 47 நாயன்மார்களும் இந்தச் சரியை மார்க்கத்தின் நெறிகளில் ஏதாகிலும் ஒன்றனைத் தம் அன்றாட வாழ்வில் முதன்மை பணியாகக் கொண்டு வாழ்ந்து வந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேற்குறிப்பிடப்பட்ட 47 பேரும் தமது சிவத்தொண்டில் மாறுபட்ட சோதனைகளைத் தாங்கி இறுதியில் முக்தி பெற்றுள்ளனர். நாயன்மார்களின் சிவத்தொண்டு மக்களின் நலம் காப்பதோடன்றி உலக நன்மை கருதிச் செய்த செம்மை தொண்டாகவும் கருதப்படுகிறது. மேலும், மக்களிடையே பக்தியை மேலிடச் செய்த சைவத் தொண்டாகவும் போற்றப்படுகிறது. இதனாலேயே இவர்களின் சிவத்தொண்டு தெய்விகம் நிறைந்ததாகச் சித்திரிக்கப்படுகின்றது (இலங்கேஸ்வரி அர்ச்சுனன், 2015).

அந்த வரிசையில் இந்த ஆய்வு நோக்கில் நாயன்மார்களின் சரியை தொண்டுகள் ஐந்து கோணங்களாகப் பிரித்துப் பார்க்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நாயன்மாரும் பலதரப்பட்ட சரியை தொண்டுகளைத் தங்களின் வாழ்க்கை இலக்காகக் கொண்டு வாழ்ந்து வந்துள்ளனர். இருப்பினும் அவர்களின் முதன்மை தொண்டுகளே இங்குப் பகுத்தாளப்படுகின்றன. இதுவே இறைவனை அடைவதற்கான கருவியாகவும் இவர்களுக்குப் பயன்பட்டது என்பதும் தகும். இந்நாயன்மார்களின் சரியை தொண்டுகளைப் பின்வரும் **அட்டவணை 4.3** விளக்குகிறது.

அட்டவணை 4.3

சரியை தொண்டுகளும் அதனைக் கடைபிடித்த நாயன்மார்களும்

எண்	சரியை தொண்டுகள்	நாயன்மார்களின் எண்ணிக்கை
1	அடியார்களுக்கு அமுது படைத்தல்.	9
2	அடியார்களுக்குப் பொருளுதவி செய்தல்.	4
3	அடியார்களுக்கு உடல் உழைப்பால் தொண்டுகள் புரிதல்.	1
4	ஆலயத் திருப்பணிகள் செய்தல்.	18
5	பிறத் தொண்டுகள்	15
	மொத்தம்	47

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பெரிய புராணத்தில் சரியை தொண்டுகள் புரிந்த நாயன்மார்கள் பெரும்பாலோர் ஆலயத் திருப்பணிகளில் அதிக ஈடுபாடு காட்டி வந்துள்ளனர். இறைவனுக்கும் அவன் குடிகொண்டிருக்கும் திருக்கோயிலுக்கும் எப்போதும் தொண்டுகள் புரிவதைத் தங்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர். இதன்வழி இறைவனுக்கு மிக அருகில் தங்களைக் கொண்டு சென்று இந்நாயன்மார்கள் இன்புற்றிருந்தனர். சிவனடியார்களையும் சிவனாகவே காணும் மனப்பக்குவம் பெற்றவர்கள் நாயன்மார்கள் என்பதால், அடியார்களை உபசரித்து அவர்களுக்குத் திருவமுது படைப்பதையும் தவறாது செய்து வந்துள்ளனர்.

அதுமட்டுமின்றி, தங்களிடமிருந்த செல்வங்களை அடியார்களின் குறிப்பறிந்து அவர்களுக்குக் கொடுத்தும் மகிழ்ந்துள்ளனர். ஏனையோர் சிவத்தொண்டையே சிந்தையில் நிறுத்தி, அடியார்களுக்கு உதவி செய்வதையே தங்களின் வழக்கமாகக் கொண்டிருந்தனர். இதுபோன்ற சேவைகளும் உதவி புரிதலுமே அவர்கள் இறைவனை அடைவதற்கும் துணையாக இருந்துள்ளன. அவ்வகையில், சிவனடியார்களுக்குச் சரியையின் வழியில் செய்யப்பட்ட தொண்டுகள் குறித்து இப்பகுதியில் மேலும் விளக்கப்படுகிறது.

4.4.1 அடியார்களுக்கு அமுது படைத்தல்.

திருத்தொண்டு என்பது சைவ சமயத்தில் கடவுள் தொண்டாகவே போற்றப்படுகிறது. சைவ சமயம் தழைக்க மேற்கொள்ளப்படும் பணிகள் யாவும் திருத்தொண்டு நெறியாகும். இந்தத் திருத்தொண்டாவது தன்னலம் கருதாமல் சமுதாயம் சார்ந்த தொண்டுகளைச் செய்வதேயாகும். இறைவன் படைப்பில் சிறப்பாக

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மக்களிடத்தும் பொதுவாக உயிர்களிடத்தும் காட்டப்படும் அன்பும் செய்யப்படும் உதவிகளுமே இறைவனை மகிழ்விக்கும்; அவனை அடையவும் வழிவகுக்கும். இதனையே சிவஞான சித்தியார், 'ஈசனுக்கள் பில்லார் அடியவர்கள் பில்லார்' (சிவஞானசித்தியார், 12) என்று விளக்குகிறது.

சரியையின் வழியில் நின்று அடியார்களுக்கு அமுது படைத்தலை முக்கியப் பணியாகக் கொண்டு இறையின்பம் எய்திய நாயன்மார்களின் தொண்டுணர்வும் அன்பின் அடிப்படையில்தான் அமைந்தது. உணவு என்பது மனிதர்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகத் திகழ்கிறது. பசிப்பிணியே சமுதாயத்தில் மிகவும் கொடிய நோயாகக் கருதப்படுகிறது. பசி, ஒருவனை அறிவிழக்கச் செய்து எத்தகைய இழிந்த நிலைக்கும் அவனைத் தள்ளிவிடும் என்பது அருள்பிரகாச வள்ளலாரின் வாக்காகும் (2013). 'தானே சமைத்துத் தானே உண்பவன் பாவி' என்பது ஸ்ரீ கிருஷ்ணரின் போதனை (சுஜாதா சுகுமாறன், 2015). அதனால்தான் பசிப்பிணி போக்குதல் மிக உயர்ந்த பண்பாகப் பழந்தமிழர் நாகரிகத்தில் போற்றப்பட்டுள்ளது. இதனையே பெரிய புராணத்தில் ஒன்பது நாயன்மார்கள் செய்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

சைவ சமயத்தைப் பொருத்த மட்டில், சிவபெருமானின் 64 சிவமூர்த்தங்களுள் மகேசுவர மூர்த்தமானது உயிர்களின் பசிப்பிணியைப் போக்கி அருளும் மூர்த்தமாகவே போற்றப்படுகின்றது. அதனால்தான் இன்றும் கோயில்களில் நடத்தப்படும் அன்னதானம் மகேசுவர பூஜை என்றே அழைக்கப்படுகிறது என்கிறார் இராமதாஸ் (2015). இறைவனே உயிர்களுக்குப் படியளக்கத் தனித்த ஒரு திருக்கோலத்தில் அருள்பாலிக்கிறார் என்பதைக் காணும்போது அன்னதானத்தின் மேன்மை நன்கு புலப்படுகிறது. இதனையே தங்கள் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு சிவனடியார்களுக்கு உணவளித்த

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நாயன்மார்கள் அந்த மகேசுவர மூர்த்தியின் தொழிலையே தம் பணியாகக் கொண்டு வாழ்ந்தனர் என்றே கூறலாம் (இலங்கேஸ்வரி அர்ச்சுனன், 2015).

பசிப்பிணி ஒருவனின் வாழ்க்கையில் ஏற்படும் கொடிய நோய் எனச் சைவ சமயம் குறிப்பிடுவதாகக் கூறுகிறார் அ.ச.ஞானசம்பந்தன் (1999). இந்தப் பசிக் கொடுமை ஒருவனை ஒழுக்கமற்றச் செயல்களில் ஈடுபடச் செய்யும் என்பது வள்ளலாரின் (2013) கருத்தாகும். இதைத்தான் ஔவையாரும்,

மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் உயர்ச்சி தாளான்மை தெனின்
கசிவந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்
பசி வந்தாப் பறந்து போகும்

(நல்வழி, 26)

(**விளக்கம்**: ஒருவனுக்கு பசி தோன்றிய போது அவனிடத்தில் உள்ள சிறந்த குணங்கள் அனைத்தும் போய்விடும். இதை தான் "பசி வந்தால் பத்தும் பறக்கும்" என்பார்கள். அவை மானம், குலப்பெருமை, கல்வி, வலிமை, அறிவு, பிறருக்கு கொடுக்கும் குணம், தவம், பெருந்தன்மை, தளராத முயற்சி, தேன் போல் பேசும் மங்கையர் மேல் உள்ள ஆசை ஆகிய பத்தும் பறந்து போகும்.)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

என்று விளக்குகிறார். எனவே, உணவென்பது வாழத் தேவைப்படும் அத்தியாவசியப் பொருளாக அமைகின்றது என்பது தெளிவாகிறது.

உயிர்களுக்கு அமுது படைக்கும் தொண்டானது புண்ணியத்தைச் சேர்க்கும் என்கிறார் குப்புசாமி (2012). அதிலும் அடியார்களுக்கு அமுது படைத்தல் என்பது எல்லையில்லாத புண்ணியத்தைச் சேர்க்கும் (ஜனசக்தி, 2011). எந்நேரமும் இறைச் சிந்தனையிலேயே மூழ்கிக் கிடக்கும் அடியார்கள் உலக நன்மைக்காகத் தவம் இயற்றுபவர்களாவர். சிவனைத் தவிர வேறெந்த பொருளின் மீதும் பற்றற்றவர்கள்.

தொல்லுலகில் நல்லார் ஒருவர் உளரேல்
அவர்பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை

(மூதுரை, 10)

(**விளக்கம்**: இந்தப் பழமையான உலகில் நல்லவர் ஒருவர்க்காகப் பெய்யும் மழை (பலன்கள்) எல்லாருக்குமே பயனைத் தரும்)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

என்பதற்கொப்ப இது போன்றோரின் அருளினாலேயே உலகம் இன்றும் நிலைபெற்று விளங்குகிறது. மேலும் சிவனடியார்களின் வருகையினால் ஒவ்வோர் இடத்திலும் பருவ மழை தவறாது பெய்து விளைச்சலும் பெருகும்: பஞ்சமும் நிலவாது என்பதைத்

திகைக்கு உரியான் ஒரு தேவனை நாடும்
வகைக்கு உரியான் ஒருவாதி இருக்கில்
பகைக்கு உரியார் இல்லை பார் மழை பெய்யும்
அகக் குறைக் கேடு இல்லை அவ் உலகுக்கே
(திருமந்திரம், 1831)

(**விளக்கம்**: பத்துப் புலத்துக்கும் ஒத்து ஒருவனாய் நிற்கும் முழுமுதற் சிவனை, அவனருளால் இடையறாது எண்ணும் மெய்யடியார் வேந்தருள்ளிட்டுச் சிவனுக்கு மாறா நிற்போர் எவரையும் மதியார். ஆளுடைய பிள்ளையார் போன்று எவரையும் வழக்கிட்டு வெல்லவும் வல்லர். அவ்வுண்மையாளர் வாழும் நாட்டில் பகைமையாளராம் தீயோர் இரார். அவர் இலராகவே பருவ மழை பொய்யாது; பொய்யாதாகவே விளைவுங் குன்றாது. குன்றாதாகவே கூலம்செழிக்கும்; பஞ்சமும் இல்லையாகும்.)

எனத் திருமூலர் கூறுகிறார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இத்தகைய அடியார்களின் தவத்தினால் உலகம் உய்ய வேண்டுமெனில் உடலும் உள்ளமும் பேணிக்காக்கப்பட வேண்டும் என்பதை

உடம்பினை முன்னம் இழுக் கென்றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்று
உடம்பினை யானிருந் தோம்புகின்றேனே
(திருமந்திரம், 705)

(**விளக்கம்**: பாற்கலத்தைப் பால்நோக்கிப் பேணுவதுபோல் உடம்பினுள் சிவபெருமான் உயிர்க்குயிராய்க் கோவில் கொண்டருளினன் என்னும் உண்மையுணர்ந்து அதனை அவனுடைமை என்று பேணுகின்றேன். இவ் வுண்மையுணராதகாலத்து அதனை இழுக்குடையதென்று எண்ணினேன்.)

என்று திருமந்திரமும் கூறுகிறது. தவம் இயற்றும் அடியார்களுக்கு உடலானது எத்துணை முக்கியமானதாகக் கருதப்படுகின்றது என்பது இதன்வழி தெரிய வருகின்றது. எனவே, உடலைப் பாதுகாக்க ஆதாரமாக விளங்கும் அமுது படைக்கும் தொண்டு பெருமை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

வாய்ந்ததாகச் சிந்திக்க வல்லது. மேலும், சிவனடியார்களுக்கு அமுதிடும் தொண்டு வேள்வியின்போது ஆயிரக்கணக்காணோருக்கு உணவளிப்பதற்குச் சமம். இதை,

ஆறிடும் வேள்வி அருமறை நூல் அவர்
கூறிடும் அந்தணர் கோடி பேர் உண்பதில்
நீறுஇடும் தொண்டர் நினைவின் பயன் இல்லை
பேறு எனில் ஓர் பிடி பேறு அது ஆகுமே
(திருமந்திரம், 1825)

(**விளக்கம்**: அருமறை நூலவர் எனச் சொல்லிக்கொள்வோர் சொல்லும் வழியில் வேள்வி செய்வோர் அவர்களால் அந்தணர் என்று கூறப்படுவர். அத்தகைய பேர்கொண்டோர், கோடிக்கணக்கானவர் உண்பதற்கு ஒரு பயன் உண்டென்றால் அப் பயன் திருவெண்ணீறணியும் சிவத்தொண்டர்க்கு ஒரு பிடி சோறு அளிக்க வேண்டுமென்று அன்புடன் நினைக்கும் நினைவின் பயனுக்கு ஒருசிறிதும் ஒவ்வாதென்க. எனவே சிவனடியார்களுக்கு விருந்தயர்தலே பெரும்பேறென்க.)

எனும் திருமந்திரப் பாடல் தெளிவுறுத்துகிறது.

இவற்றுக்கும் மேலாக, அடியார்களுக்கு அமுதிடும் தொண்டு சைவ சித்தாந்தம் காட்டும் பதி, பசு, பாசம் ஆகிய கோட்பாடுகளையும் அடிப்படையாகத் தாங்கி நிற்கிறது. பதியாகிய இறைவன் ஒவ்வோர் ஆன்மாவுக்குள்ளும் உறைகின்றான் என்பது சைவ சித்தாந்தம் கூறும் உண்மை. ஆயினும் பசுவாகிய ஆன்மா பதியினைக் கண்டு கொள்ள பாசம் எப்பொழுதும் தடையாகவே உள்ளது (ஆனந்தரசன், 2003). ஆன்மாவானது இறைவனை அடைய மும்மலங்களான ஆணவம், கன்மம், மாயை எனப்படும் பாசத்தை விட்டொழிக்க வேண்டும். அப்போதுதான் இறையின்பமாகிய முக்தி பேற்றைச் சுவைக்க இயலும். மும்மலங்களை அகற்ற அடியார்களுக்கு அமுதிடும் தொண்டு அளவில்லாததாகும். இதனைப்

பகரும் ஞானி பகல் ஊண் பலத்துக்கு
நிகர் இலை என்பது நிச்சயம் தானே
(திருமந்திரம், 1824)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

(**விளக்கம்**: சிவஞானிக்கு ஒரு பகலுணவு அளிக்கும் பேறு அளவிலாததாகும். அவ்விரண்டும் இப்பேற்றுக்கு ஒப்பாகாவென்பது ஒருதலை. ஒருதலை - நிச்சயம். ஈண்டுப் 'பகரும் ஞானி' என்பது புறத் திருக்கோலத்தால் மட்டுமன்றி அகத்தே இடையறா நினைவால் எழுந்தருளிவித்துள்ள சிவப்பொலிவால் அவர்தம் திருமேனி இவர் சிவஞானி என முன்வந்து தானே நவிலும் என்பதாம். திருவாயும் 'சிவசிவ' எனச் செப்பும்.)

எனும் பாடல்வழி அறியலாம். இதனாலேயே அடியார்களுக்கு அமுது படைத்தல் மேன்மையானதாகப் போற்றப்படுகின்றது.

எனவேதான், பெரிய புராணத்தில் நாயன்மார்களும் அடியார்களுக்கு அமுது படைக்கும் தொண்டினைச் செய்தனர். இறைவனும் அடியவர்களின் உறுதியைச் சோதித்து அருள் புரிந்திருக்கின்றான் என்பது பெரிய புராணம் காட்டும் உண்மையாகும். அந்த வரிசையில் நாயன்மார்கள் ஒன்பதின்மரும் சிவனடியார்களுக்கு அமுதளிக்கும் பொருட்டு எத்தகைய இடர்களையும் எதிர்கொள்ளத் தயங்காதவர்கள் எனலாம். எல்லையற்ற பக்தியும் வைராக்கியமும் தியாக உள்ளமும் இவர்களுக்கு மேலும் பெருமை சேர்த்தது என்பதும் தகும். சிவனடியார்களுக்கு அமுது படைத்தலை இறைவனுக்கே செய்யும் தொண்டாக எண்ணிச் செயலாற்றிய இவர்கள் இறுதியில் பேரின்பமாகிய முக்திப் பேற்றையும் பெற்றுள்ளனர்.

மேலும், திருத்தொண்டர்க்கு உதவுவது இறைவனுக்குச் செய்யும் உண்மையான பணியாகும். அடியார்களுக்கு அமுது படைத்தலைச் சைவம் 'மகேசுவர பூஜை' என்று குறிப்பிடுவதற்கும் இதுதான் அடிப்படை காரணம். அடியார்களுக்குச் செய்தோம் என்று எண்ணாமல் சிவபெருமானுக்குச் செய்வதாகவே எண்ணி உணவளித்தலை இஃது உணர்த்துகிறது. **அட்டவணை 4.4** அடியார்களுக்கு அமுது படைக்கும் தொண்டினை முதன்மையாகக் கொண்ட நாயன்மார்களைப் பற்றியக் குறிப்புகளை மேலோட்டமாக விளக்குகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அட்டவணை 4.4

அடியார்களுக்கு அமுது படைத்த நாயன்மார்கள்

எண்	பெயர்	குறிப்புகள் / தொண்டுகள்
1	இளையான்குடி மாறனார்	இளையான்குடி மாறனார் வேளாளர் மரபில் வந்தவராவார். இவரது ஊர் சோழ நாட்டைச் சேர்ந்த இளையான்குடி என்பதாகும். இவரது காலம் கி.பி. 660-840. இவர் சிவனடியார்களுக்கு அமுது படைக்காது உண்பதில்லை. ஒருமுறை கடும் மழையில் விதை நெல்லைக் குற்றிச் சமைத்துச் சிவனடியார்க்கு உணவு படைத்தவர்.
2	குலச்சிறையார்	குலச்சிறையார் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர். இவர் பாண்டிய மன்னனின் அமைச்சராகப் பணியாற்றியவருமாவார். இவரது காலம் கி.பி.640-680. சம்பந்தரின் துணையுடன் சமண மதத்திலிருந்து மன்னனை மீண்டும் சைவத்திற்கு மாற்றியவர். சிவனடியார்களுக்கு உணவு படைப்பதே இவரது கொள்கை.
3	அப்பூதியடிகள்	அப்பூதியடிகள் பிராமணர் மரபைச் சேர்ந்தவர். இவர் சோழ நாட்டில் திங்களூரில் வாழ்ந்தவர். இவருடைய காலம் கி.பி. 600-660. இவர் திருநாவுக்கரசரின் மீது அளவற்ற அன்பு கொண்டவர். திருநாவுக்கரசரின் பெயரில் பந்தல்கள் அமைத்து நீர், உணவு அளித்தவர். தனது பிள்ளை இறந்தபோதிலும் திருநாவுக்கரசருக்கு உணவளிக்க முற்பட்டவர்.
4	மூர்க்கர்	மூர்க்கர் வேளாளர் குலத்தைச் சேர்ந்தவர். தொண்டை நாட்டைச் சேர்ந்த திருவேற்காடு இவரது ஊர். இவரது காலம் கி.பி. 660-840. வறுமை ஏற்பட்ட போதும் சூதாட்டத்தின்வழி வரும் வருமானத்தில் சிவனடியார்களுக்கு உணவு படைத்தவர்.
5	சிறப்புலியார்	சிறப்புலியார் பிராமண மரபைச் சேர்ந்தவர். இவரது ஊர் சோழ நாட்டைச் சேர்ந்த திருஆக்கூர். இவரது காலம் கி.பி. 660-840. பஞ்சாட்சரம் ஜெபிப்பது மட்டுமின்றி சிவனடியார்களுக்கு உணவளித்தலை மிக நீண்ட காலம் மேற்கொண்டவர்.
6	சிறுத்தொண்டர்	சிறுதொண்டர் மாமாத்தியர் மரபினைச் சேர்ந்தவர். சோழ நாட்டைச் சேர்ந்த திருவெண்காடே இவரது ஊர். இவரது காலம் கி.பி. 600-660. சிவனடியாரின் மனங்கோணாமல் அவரது வேண்டுகோளுக்கிணங்க தனது பிள்ளையை அறுத்துக் கறி சமைத்து உணவு படைத்தவர்.
7	கலிகம்பர்	கலிகம்பர் வணிக மரபினைச் சேர்ந்தவர். இவர் நடுநாட்டச் சேர்ந்த பெண்ணாகடம் என்ற ஊரில் வாழ்ந்தவர். இவரது காலம் கி.பி. 660-840. சிவனடியார்களுக்குப் பாதப்பூஜை செய்த பின்னர் உணவளிக்கும் தொண்டினைப் புரிந்தவர்.
8	நரசிங்க முனையரையர்	நரசிங்க முனையரையர் அரச மரபினைச் சேர்ந்தவர். இவரது ஊர் நடுநாட்டைச் சேர்ந்த திருநாவலூர். இவரது காலம் கி.பி. 840-865. இவர் சுந்தரரை வளர்த்தத் தந்தையாவார். சிவனடியார்களின் பசியைப் போக்க உணவளித்து 100 பொற்காசுகள் கொடுத்தவர். மேலும், தூர்த்த வேடரான அடியார்க்குப் பொன்னும் உணவும் தந்தவர்.
9	முனையடுவார்	முனையடுவார் வேளாளர் மரபைச் சேர்ந்தவர். இவர் சோழ நாட்டைச் சேர்ந்த திருநிடூர் என்ற ஊரைச் சேர்ந்தவர். இவரது காலம் கி.பி. 660-840. போரில் பகைவரிடம் தோற்றவர்கள் பெருநிதியைக் கொடுத்து இவர் துணையை வேண்டினால் அறநெறியால் ஆய்ந்து பின் போர் செய்து வெற்றிப் பெற்றுத் தருவார். அதிலிருந்து கிடைத்த பொன்னைச் சிவனடியார்களுக்கு அளித்து நல்வகையில் அமுது செய்விப்பார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேற்கண்ட அட்டவணை சரியையின் வழியில் சிவனடியார்களுக்கு அமுது படைத்தலையே தங்களின் வாழ்க்கை குறிக்கோளாகக் கொண்டு திகழ்ந்தவர்களைக் காட்டுகின்றது. இந்நாயன்மார்கள் அனைவரும் ஈசன்பால் காதல் கொண்டு அவன் அடியார்களுக்கு அமுது படைத்து மகிழ்ந்துள்ளனர். இவர்கள் அடியார்களின் பசிப்பிணியைப் போக்கியவர்கள் மட்டுமின்றி பொருளுதவியும் செய்துள்ளனர். நரசிங்க முனையரையர், முனையடுவார் ஆகியோர் இதில் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்களுள் சிறப்புலியார் திருவைந்தெழுத்தை இடையறாது ஓதியவர் என்ற பெருமையும் உண்டு (இராமசந்திரன், 2013).

இப்படிப் பலதரப்பட்ட தொண்டுகளை இந்நாயன்மார்கள் இறைவனுக்கும் அவன்பால் காதலுற்ற அடியார்களுக்கும் செய்திருந்த போதிலும் அமுது படைக்கும் தொண்டின் மாண்பே மேலோங்கி நிற்கின்றது. வறுமை வாட்டியபோதும் சோதனைகள் சூழ்ந்தபோதும் தமது இறைத்தொண்டிற்கு எவ்வித பங்கமும் நேராமல் அமுதிடும் தொண்டினைப் புரிந்தவர்கள் இந்த நாயன்மார்கள். இதனை மெய்ப்பிக்கும் வகையில் இளையான்குடி மாறனாரின் வரலாறும் அப்பூதியடிகளின் வரலாறும் இங்கு விவரிக்கப்பட்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.4.1.1 இளையான்குடி மாறனார்

வேளாளர் குலத்தில் தோன்றிய இளையான்குடி மாற நாயனார், வேளாண்மையினால் பெறப்படும் வருவாயைக் கொண்டு சிவனடியார்களுக்கு உணவளிப்பதைப் பெருந்தொண்டாகச் செய்தவராவார். சிவனடியார்பால் பேரன்பு கொண்டு அவர் குலம், குடி, பண்பு, நிலைமை, பதவி ஒன்றும் கருதாது அவரிடம் அன்பு கொண்டு அவர்களுக்கு

> உண்டி நாலு விதத்தி லாது சுவைத்தி றத்தினில் ஒப்பிலா
> அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில் அமுது
> (தி.தொ.பு. 443)

(**விளக்கம்**: அதன்பின் நான்கு விதத்தில் இயன்ற ஆறுசுவை யுணவுகளையும், ஒப்பில்லாத சிவபெருமானடியவர்களிச்சையில் அமுது செய்தருளுமாறு கொடுத்துள்ளார்.)

என்பதற்கேற்பச் செய்யும் தன்மையாளர். செல்வம் சுருங்கியக் காலத்திலும் தம்மிடம் உள்ளதைக் கொண்டும் கடன் வாங்கியும் முன்பு செய்து வந்தது போலவே ஒப்பற்ற அடியார் பூஜையைச் சிறப்புறச் செய்து வந்தவர்.

நாயனார் அடியார்களுக்குத் திருத்தொண்டாற்றி வரும்போது மழைக்காலத்தில் ஒரு நாளிரவில் இறைவனே அடியார் வேடம் பூண்டு நாயனாரின் இல்லம் வந்தார். அத்தகு வறுமை நிலையிலும் சிவனடியார்க்கு உணவு படைக்க வேண்டுமென்பதையே குறிக்கோளாகக் கொண்ட நாயனார் கொட்டும் மழையில் விதை நெல்லை அள்ளி வந்து தம் மனைவியிடம் தந்தார். அடுப்பெரிக்க தம் வீட்டின் கூரையை அறுத்துக் கொடுத்தார். கறிக்குக் குறும்பயிர்களைப் பறித்து வந்து தந்தார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இதனைச் சேக்கிழார்,

குழிநிரம் பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார்ப் போல பறித்தவை கறிக்கு நல்ல
(தி.தொ.பு. 460)

(**விளக்கம்**: முளைக்கவைத்த குழிகளினின்றும் மேலே கிளம்பும்பருவம் உறாத சிறிய இலைக்கறிப் பயிர்களைக் கையினாற்றடவிப்பாசப் பழிமுதலை அறவே பறிப்பவர்போல அவற்றை வேரோடும் பிடுங்கி வந்து கறிக்காக (நாயனார்) மனைவியார் கையிற் கொடுக்க,)

எனப் பகர்கின்றார்.

கறி சமைத்து முடித்த பின்னர் திருவமுது செய்வதற்காகச் சிவனடியாரை எழுப்பினார் நாயனார். நாயனாரும் அவரது துணைவியாரும் திகைத்து நிற்க வந்த சிவனடியார் சோதிப்பிழம்பாய்த் தோன்றினார். இறைவன் நாயனாருக்குத் தமதுலகில் குற்றேவல் செய்து இன்புற்று வாழும் பேறளித்து அருள் புரிந்தான். பொதுவாக, அன்பு ஒன்றே கொடைக்கு அடிப்படையாய் அமைகிறது. இதனை,

அன்பிலார் எல்லாம் தமக்குரியர்;அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு
(குறள், 72)

என்று வள்ளுவரும் மெய்ப்பிக்கிறார். இளையான்குடி மாறனாரின் வரலாற்றிலும் இரக்கம், பணிவு, அடக்கம், நன்றி, தன்னலம் கருதாமை போன்ற நற்பண்புகளுக்கு அன்பே காரணமாக அமைந்தது. இறைவன்பால் அவர் கொண்ட அன்பின் காரணமாகவே 'செல்வத்தின் பயன் ஈதலே' (புறம், 189) எனும் புறப்பாடலுக்குச் சான்றாக வாழ்ந்து காட்டினார்.

இவ்வடியார் வறுமையிலும் சிறுமையின்றி அடியார்களுக்கு அமுது படைத்தவர். தொண்டர் உள்ளத்தில் எப்பொழுதும் உறைகின்றவன் இறைவன். அதனால்தான் தொண்டர் வழிபாட்டில் இறைவனைக் கண்டு அகமகிழ்ந்தார் இந்த நாயனார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இறைவனின் திருவருளைப் பெற வேண்டுமாயின் அடியார் துணை கொள்ள வேண்டும் என்ற நிலையில்,

மண்ணிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்
(தி.தொ.பு. 1087)

என்பதற்கிணங்க வாழ்ந்து காட்டியவர் இளையான்குடி மாறனார்.

தொண்டர்கள் தமக்கு எவ்வளவு இடர் வந்த போதிலும் சிவபிரானிடத்திலும் சிவனடியார்களிடத்திலும் வைத்த அன்பில் சிறிதும் குறைபடாது ஒழுகுபவர் என்பதை இந்நாயனாரின் வரலாற்றிலிருந்து அறிய முடிகிறது. இந்நாயன்மார் திருத்தொண்டர்களுக்கு அமுது படைத்து வரும் நாளில் தமது செல்வம் முழுவதும் குறைந்தபோதும் சற்றும் மனம் கலங்காதவர். இறைவன் தமக்கு ஏன் வறுமையைக் கொடுத்தார் என ஒருபோதும் சிவநிந்தனை செய்யாமல் தம் திருப்பணியை முழுமையாகச் செய்தவர். நாயனாரும் அவர் மனைவியாரும் பசியால் வருந்தும் நேரத்திலும் மழையென்றும் பாராமல் சிவனடியார்க்கு உணவளித்தது செயற்கரியச் செயலாகும். இது சிவபெருமானிடத்திலும் அவனது அடியார்களிடத்திலும் அவர்கள் அன்பு குறையாது தொண்டு புரிந்ததைக் காட்டுகிறது. சரியை வழியில் அமுது படைத்த அரும்பணியினாலேயே முக்தியின்பம் அடைந்தார் இளையான்குடி மாறனார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.4.1.2 அப்பூதியடிகள்

வளமிக்கச் சோழ நாட்டில் வேதியர் மரபில் தோன்றியவர் அப்பூதியடிகள். இந்நாயனார் திருநாவுக்கரசரைக் காணாமலேயே அவர் திருப்பெயரில் பேரன்பு பூண்டிருந்தார். திருநாவுக்கரசரின் பெயரையே தமக்கு வீடுபேறு நல்கும் தாரக மந்திரமாகக் கொண்டு பல்வேறு அறத்தொண்டுகள் ஆற்றி வந்தார்.

ஒருமுறை திங்களூரை வந்தடைந்த நாவுக்கரசர். அங்குத் தண்ணீர்ப் பந்தலில் திருநாவுக்கரசர் என்று தமது பெயர் எழுதியிருப்பதைக் கண்டு திகைத்து நின்றார். அங்கிருந்தவர்களை அணுகி நாயனாரின் திருத்தொண்டுகள் குறித்து அவர் இல்லம் அடைந்தார். திருநாவுக்கரசர் நாயனாரிடம் தண்ணீர்ப் பந்தல், குளம், சோலை, அன்னச்சாலை போன்று எல்லா அறச்செயல்களுக்கும் தனது பெயரைச் சூட்டாமல் வேறு ஒருவரின் பெயரைச் சூட்டக் காரணம் யாது என வினவினார். அதனைக் கேட்டதும்,

> நின்றமறை யோர்கேளா நிலையிழந்த சிந்தையராய்
> நன்றருளிச் செய்திலீர்;நாணிலமண் பதகருடன்
> ஒன்றியமன் னவன்சூழ்ச்சி திருத்தொண்டி னுறைப்பாலே
> வென்றவர்தந் திருப்பேரொ “வேறோருபேர்?” எனவெகுள்வார்
> (தி.தொ.பு. 1795)

(**விளக்கம்**: நின்ற...சிந்தையராய் - நின்ற அப்பூதி மறையவர் அதனைக் கேட்டுச் சிந்தைதன் னிலை யழிந்தவராகி; "நன்றருளிச் செய்திலீர்...வேறொரு பேர்?" என வெகுள்வார் - நீர் நன்கான மொழிகளை அருளிச் செய்திலீர்! நாணமில்லாத சமணர்களாகிய சண்டாளர்களுடன் சேர்ந்தஅரசன் செய்த சூழ்ச்சிகளையெல்லாம் திருத்தொண்டினது உறைப்பினையே துணையாகக் கொண்டு வென்ற அவரது திருப்பெயரோ வேறொரு பேர் என்று சொல்லத்தக்கது?" என்று வெகுள்வாராகி,)

எனக் கோபமுற்றார் அப்பூதியடிகளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேலும், உளம் தடுமாறி,

மங்கலம்ஆம் திருவேடத்துடன் இன்று இவ்வகை மொழிந்தீர்
எங்கு உறைவீர் நீர்தாம் யார் இயம்பும் என இயம்பினார்
(தி.தொ.பு. 1797)

(**விளக்கம்**: மங்கலமாம் திருவேடத்துடன் நின்றும் இவ்வகையாக மொழிந்தீர்; எங்கு உறைவீர் - நீர் எவ்விடத்துள்ளவர்?; நீர்தாம் யார்? - நீர்தாம் யாவர்?; இயம்பும் - சொல்வீராக; என இயம்பினார் - என்ற சொன்னார்.)

எனத் திருநாவுக்கரசரை வினவினார்.

திருநாவுக்கரசரே தம் இல்லம் தேடி வந்த அடியார் என்பதை அறிந்ததும் நாயனார் அடைந்த மகிழ்ச்சியினை,

உரைகுழறி உடம்பு எல்லாம்உரோம புளகம் பொலியத்
தரையின் மிசை வீழ்ந்து அவர் தம் சரண கமலம் பூண்டார்
(தி.தொ.பு. 1799)

(**விளக்கம்**: உரை குழறி...பொலிய - மொழி தடுமாறி உடம்பு முழுதும் மயிர்க்கூச்செறிந்து விளங்கவும் (இவ்வண்ணம் மெய்ப்பாடுகள் உண்டாகும் நிலையினை அடைந்து); தரையின்...பூண்டார் - நிலத்தின் மேல் உடல் பொருந்தக் கீழே வீழ்ந்து அவருடைய திருவடித்தாமரைகளைத் தலையிற் பொருந்தப் பூண்டனர்.)

எனும் பாடல்வழி பெரிய புராணத்தில் குறிப்பிடுகின்றார் சேக்கிழார்.

அப்பூதியடிகள் திருநாவுக்கரசரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். அவர் பாதங்களை நீரால் கழுவிப் பூஜித்தப்பின் திருவமுது செய்ய வேண்டினார். நாவுக்கரசரும் ஒப்புக்கொண்டார். அறுசுவை உணவு தயாராகியதும் நாயனார் தம் மூத்த மகனை வாழையிலை கொண்டுவர அனுப்பினார். மூத்தத் திருநாவுக்கரசு வாழையிலை அரியும்போது ஒரு பாம்பு தீண்டிற்று. கீழே விழுமுன் தன் அன்னையிடம் இலையைக் கொடுத்தான். விஷம் தலைக்கேறியதால் மயங்கி விழுந்தான். அதைக் கண்ட தாயும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தந்தையும் துக்கத்தை மறைத்து மகனைச் சுருட்டி பாயினுள் வைத்தனர். திருநாவுக்கரசருக்குத் திருவமுது செய்ய ஏற்பாடுகள் செய்தனர். இதனை,

பெறல் அரும் புதல்வன் தன்னைப் பாயினுட் பெய்து மூடி
புறமனை முன்றில் பாங்கு ஓர் புடையினில் மறைத்து வைத்தே
அறஇது தெரியா வண்ணம் அமுது செய்விப்போம் என்று
விறல் உடைத் தொண்டனார் பால் விருப்பொடு விரைந்து வந்தார்
(தி.தொ.பு. 1811)

(**விளக்கம்**: பெறல் அரும்...மூடி - பெறுதற்கரிய புதல்வனைப் பாயினுட் பொதிந்து மூடி; புறமனை...வைத்தே - மனையின் புறத்தின் முற்றத்தினிடத்து ஒரு புடையில் மறைத்து வைத்தே; "அற இது...செய்விப்போம்" என்று - "இது சிறிதும் தெரியாத வண்ணமாக அவரை நாம் அமுது செய்விப்போமாக" என்று துணிந்து உறுதிகொண்டு; விறலுடை...வந்தார் - விறலுடைய தொண்டராகிய திருநாவுக்கரசரை நோக்கி விருப்பினோடும் விரைந்து வந்தார்.)

எனும் பாடல்வழி அழகாகக் காட்டுகிறார் சேக்கிழார்.

அதன்பின் நாயனார் திருநாவுக்கரசரை அமுதுண்ண அழைத்தார். உணவருந்துமுன் திருநாவுக்கரசர் வெண்ணீறு அணிந்து மற்றவர்களுக்கும் அளிக்கும்போது மூத்தப் புதல்வரையும் அழைக்கக் கோரினார். “அவன் இப்போது இங்கே உதவான்” என்றார் அப்பூதியடிகளார். அதைக் கேட்டுத் தடுமாற்றம் அடைந்த நாவுக்கரசரிடம் உண்மையை மறுக்காமல் மறைக்காமல் கூறினார் நாயனார். நாயனாரின் செயலைக் கண்டு வியந்த நாவுக்கரசர்,

ஒன்றுகொலாம் அவர் சிந்தையுயர் வரை
ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்
ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது
ஒன்றுகொ லாமவர் ஊர்வது தானே
(திருமுறை 4:18:177)

(**விளக்கம்**: பொ-ரை: எம்பெருமானுடைய உள்ளத்தைப்போல உயர்ந்த கயிலை மலையும், அவர் சூடும் உயர்ந்த பிறையும் அவர் பிச்சை எடுக்குமாறு கையில் ஏந்திய மண்டையோடும், அவர் இவரும் காளையும் எண்ணிக்கையில் ஒன்று ஒன்றே போலும்.)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எனும் 'விடந்தீர்த்த திருப்பதிகம்' பாடி இறையருளால் சிறுவனைப் பிழைக்க வைத்தார். தம் மகன் உயிர்ப்பெற்றெழுந்த மகிழ்ச்சியைக் காட்டிலும் திருநாவுக்கரசர் இன்னும் தம் மனையில் திருவமுது செய்யவில்லையே என்ற கவலையே நாயனாரிடம் மேலோங்கி நின்றது. திருத்தொண்டருக்குத் திருவமுது செய்விப்பதில் நாயனார்க்கு இருந்த உன்னதத் தன்மையினை,

பிரிவுஉறும் ஆவி பெற்ற பிள்ளையைக் காண்பார் தொண்டின்
நெறியினைப் போற்றி வாழ்ந்தார் நின்ற அப் பயந்தார் தாங்கள்
அறிவு அரும் பெருமை அன்பர் அமுது செய்து அருளுதற்குச்
சிறிது இடையூறு செய்தான் இவன் என்று சிந்தை நொந்தார்
(தி.தொ.பு. 1819)

(**விளக்கம்**: பிரிவு உறும்....வாழ்ந்தார் - பிரிந்த உயிரை மீளப்பெற்ற பிள்ளையைக் காண்பார்கள் எல்லாம் தெய்வத்திருத்தொண்டினது செந்நெறிச் சிறப்பினைப் போற்றி வாழ்வடைந்தனர்; நின்ற...நொந்தார் - அங்கு நின்ற, அப்பெற்றோர்கள் "தாங்கள் அறிதற்கரிய பெருமையுடைய அன்பர் திருவமுது செய்வதற்கு இவன் சிறிது இடையூறு செய்தான்" என்று மனம் நொந்தார்கள்.)

என்று சேக்கிழார் பாடியுள்ளார். இந்நாயனாரின் திருத்தொண்டின் சிறப்பினை அப்பரும்,

வஞ்சித்து என் வளை கவர்ந்தான் வாரானே ஆயிடினும்
பஞ்சிக்காமல் சிறகு அன்னம் பரந்து ஆர்க்கும் பழனத்தான்
அஞ்சிப் போய்க் கலி மெலிய அழல் ஓம்பும் அப்பூதி
குஞ்சிப் பூ ஆய் நின்ற சேவடியாய் கோடு இயையே
(திருமுறை 4:12:123)

(**விளக்கம்**: அஞ்சிப்போய்க் கலியின் துயரம் நீங்குமாறு முத்தீயை ஓம்பும் அப்பூதியின் குடுமிக்குத் தாமரைப் பூவாக இருக்கும் சிவந்த அடிகளை உடைய கூடல் தெய்வமே! என் வளைகளை வஞ்சித்துக் கவர்ந்த, செம்பஞ்சு போன்ற சிவந்த கால்களையும் வெண்சிறகுகளையும் உடைய அன்னப் பறவைகள் பரவி ஆரவாரிக்கும் பழனத்து எம் பெருமான் அடியேனுக்கு அருள் செய்ய வாரானே என்றாலும், கூடல் சுழியின் இரண்டு முனைகளும் இணைந்து ஒன்று சேருமாறு செய்வாயாக.)

எனப் புகழ்ந்து பாடியுள்ளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

வேதியர் குலத்தில் பிறந்த அப்பூதியடிகளும் வேளாளர் குலத்தில் பிறந்த திருநாவுக்கரசரும் ஒன்றாக விருந்துண்டது சிவனடியார்களிடம் நாயனார் கொண்டிருந்த மெய்யான பற்றை விளக்குகிறது. தம் புதல்வரை இழந்ததுகூட இந்நாயனாருக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. மகன் உயிர்ப்பெற்ற பின்பும் நாவுக்கரசருக்கு அமுது செய்யாமையே அவருக்குத் தளர்வை ஏற்படுத்தியது. இஃது அவரது தொண்டின் ஒப்பற்ற உயர்நிலையைக் குறிக்கிறது என்கிறார் சுப்ரமணியம் பிள்ளை (1940).

இந்நாயனார் சிவனடியார்களுக்கு மகேசுவர பூஜை செய்து திருவமுது செய்து வரும் நாளில் இறையருளால் தம் மகன் மூலம் அதற்குத் தடை வருகின்றது. திருநாவுக்கரசரின் திருப்பெயரைத் தினந்தோறும் போற்றி வந்ததாலும் அவர் பெயரால் செய்த திருத்தொண்டுகளினாலும் அத்தடைகள் நீங்கின. திருநாவுக்கரசர் பெயரில் தண்ணீர்ப் பந்தல் அமைத்தது, சிவனடியார்களைப் பற்றி மக்கள் தெரிந்து கொள்வதற்கு ஏதுவாக அமைந்தது. திருநாவுக்கரசரின் திருப்பெயரே அப்பூதியடிகளாருக்குத் திருவைந்தெழுத்திலும் மேலான மந்திரமாக இருந்திருக்கிறது. திருநாவுக்கரசர் வழிபாடே அப்பூதியடிகளார் முக்திப் பேற்றிற்கும் காரணமாக அமைந்தது.

இதனைச் சிவப்பிரகாச சுவாமிகள்,

> உற்றா னலன்தவந் தீயில்நின் றான்அலன் ஊண்புனலா
> அற்றா னலன் நுகர் வுந்திரு நாவுக் கரசெனுமோர்
> சொற்றான் எழுதியுங் கூறியு மேஎன்றுந் துன்பில்பதம்
> பெற்றான் ஒருநம்பி அப்பூதி என்னும் பெருந்தகையே
>
> (நால்வர் நான்மணி மாலை, 38)

எனப் பாடியுள்ளது குறிப்பிடத்தக்கது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.4.2 அடியார்களுக்குப் பொருளுதவி செய்தல்.

பெரிய புராணத்தில் இடம்பெற்றுள்ள நாயன்மார்களுள் நால்வர் சிவனடியார்களுக்குப் பொருளுதவி செய்து சரியை தொண்டாற்றியுள்ளனர். இந்நாயன்மார்கள் தங்களின் சக்திக்கு ஏற்றவாறு தங்களால் இயன்ற பொருளுதவியைச் சிவனடியார்களுக்கு அளித்துள்ளனர். இவர்கள் கோவணம், திருவோடு மட்டுமல்லாது பொற்காசுகளையும் அடியார்களுக்குக் கொடுத்துத் தொண்டாற்றியுள்ளனர். சிவனடியார்களுக்கு அளிக்கப்படும் பொருள்கள் சிவபெருமானுக்கு அளிக்கப்பட்ட பொருள்கள் எனும் பெருமைக்குரியவை. தவிர, தந்தை, தாய், மனைவி ஆகியோரின் குடிவழியில் ஏழு தலைமுறையினர்களில் உள்ள மூதாதையர்களின் நன்னிலைக்கும் உதவிய பொருளாக அமைகின்றது. திருமந்திரமும்,

மாத்திரை ஒன்றினில் மன்னி அமர்ந்து உறை
யாத்தனுக்கு ஈந்த அரும் பொருள் ஆனது
(திருமந்திரம், 1823)

(**விளக்கம்**: நுழைவு, நோன்பு, நுண்மை என்று சொல்லப்படும் சமயம், விசேடம், நிருவாணம் ஆகிய மூன்றும், குரு முழுக்கு என்று சொல்லப்படும் ஆசாரியபிடேகமும் பெற்ற நல்லாரை ஆத்தன் என்பர். அத்தனுக்கு உரியோன் ஆத்தன் என்பர். அந்நல்லார் உலகியலை ஆளுதலால் ஏற்படும் ஆண் என்னும் இரு மாத்திரையினின்றும் நீங்கித் திருவடியைப் பேணுவதால் அமையும் பெண்ணென்னும் ஒரு மாத்திரையாய் ஓங்கினர். அதனால் அவர் மாத்திரை எனவும் பெயர் பெறுவர். அவர்பால் சிவபெருமானும் இடையீடின்றி மாத்திரைக்குள் வெளிப்பட்டு நிலை நிற்பன். அத்தகைய நல்லார்க்கு அன்புடன் ஈந்த அரும்பொருள்கள் சிவபெருமானுக்கு நேராக ஈந்தனவேயாகும்.)

எனும் பாடலில் இக்கூற்றை மெய்ப்பிக்கிறது. இத்தகைய பொருளுதவியே இந்நாயன்மார்களின் முக்திக்கும் காரணமாக அமைந்தது.

முதலாவதாக, மனிதனின் அடிப்படைத் தேவைகளில் உணவுக்கு அடுத்தப்படியாக உடை மிக முக்கியமானதாகத் திகழ்கின்றது. அதிலும் சைவ சமயத்தில்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

உலகப் பற்றைத் துறந்த சிவனடியார்களுக்குக் கோவணம் மட்டுமே உடையாக இருந்துள்ளது. எனவே, இவ்வடியார்களுக்குக் கோவணமாகிய உடையைக் கொடுப்பது சிவப் புண்ணியமாகக் கருதப்படுகிறது. ஜேம்ஸ் (2002) என்பவர் வேள்வித்தீயில் சேர்க்கப்படும் ஆடைகள் இறைவனுக்கே சாற்றப்படுகின்றன எனக் கருதப்படுவதாகக் கூறுகிறார். இதன் அடிப்படையிலேயே இறையடியார்களுக்குக் கொடுக்கப்படும் ஆடைகளும் சிவபெருமானுக்குக் கொடுக்கப்பட்டதாகவே போற்றப்படுகின்றது.

பொதுவில், உடை என்பது மனிதனின் மானத்தைக் காக்கும் சாதனம் என்கிறார் மு.இராஜேந்திரன் (2011). இருப்பினும் சிவனடியார்கள் பகட்டான ஆடைகளை விரும்புவதில்லை. மாறாக, முப்போதும் சிவன்பால் சிந்தையைச் செலுத்தும் சிவனடியார்களுக்கு உள்கட்டாகிய கோவணமே அடையாளமாகத் திகழ்கிறது என்பதை,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

யோகிக் கிடுமது வுட்கட்டுக் கஞ்சுளி
தோகைக்குப் பாசத்துச் சுற்றஞ் சடையதொன்
றாகத்து நீறணி யாங்கக் கபாலஞ்
சீகத்த மாத்திரை திண்பிரம் பாகுமே

(திருமந்திரம், 1635)

(**விளக்கம்**: உட்கட்டாகிய கோவணமும், கஞ்சுளியாகிய போர்வையும், திருச்சடையின்கண் மயிலிறகாலாகிய குல்லாவும், முழுவுடம்பும் அணியும் திருவெண்ணீறும், கையில் மண்டையோடும், அழகிய வலத் திருக்கையில் பிரப்பங்கோலும் சிவயோகியின் அடையாளங்களாகும். சீலத்தின் அடிப்படை என்பதை விளக்கத் தாய்ச்சீலை என்றும் முதன்மைக்காவல் என்பதை விளக்கக் கோவணம் என்றும் அற்ற மறைக்கும் துணிக்குப் பெயராயின. கோஅரணம் கோவணம் என்றாயிற்று.)

எனத் திருமூலர் கூறுகிறார்.

மக்களிடையே சேர்ந்து வாழும் காரணத்தால் மட்டுமே சிவனடியார்கள் கோவணத்தை உடுத்தி வாழ்ந்துள்ளனர். எனவே, சிவனடியார்களுக்குக் கோவணம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

வழங்குவது போற்றுதற்குரிய சரியை தொண்டாகவும் விளங்குகின்றது என்பதை மேற்காணும் பாடல் தெளிவுறுத்துகிறது. இச்சிவனடியார்களின் அருள் பெற்று முக்தியின்பத்தையும் அடைய இயலும் என்பதனை 'அவன்பால் அணுகியே அன்பு செய்வார்' (திருமந்திரம், 1843) எனும் பாடலும் விளக்குகிறது.

அதனைத் தொடர்ந்து, சைவ சமயத்தில் திருவோடும் மிக உயர்ந்த ஒன்றாகவே திகழ்கின்றது. பிரம்ம கபாலத்தைக் கையிலேந்தும் பிச்சாடனர் திருக்கோலம் சிவபெருமானின் அறுபத்து நான்கு மூர்த்தங்களுள் ஒன்றாகும். உலகிற்கே படியளக்கும் பரம்பொருள் ஏன் பிச்சை கேட்க வேண்டும் என்ற கேள்வி நம்மில் பலருக்குத் தோன்றும். இறைவன் நம்மிடம் எதிர்பார்ப்பது உணவோ பொருளோ அல்ல. 'தான்' என்ற எண்ணத்தை உண்டாக்கும் ஆணவத்தைப் பெற்று முக்தி பேறு அருளுவதற்காகவே திருவோடு தாங்கி வருகின்றார். பிரம்மக் கபாலமாகிய திருவோடு ஆணவத்தைக் காட்டுகிறது. பசுக்களாகிய உயிர்கள் ஆணவ மலத்தை விட்டொழித்தால் மட்டுமே இறைவனை அடைய முடியும் என்பதே இதன் தத்துவம் (தர்மலிங்கம், 2012).

ஒவ்வோர் ஆன்மாவும் பாசம் எனும் மும்மலங்களிலிருந்து விடுபட்டு முக்தியடைய வேண்டும் என்பதுதான் சைவ சித்தாந்தத்தின் நியதி. இதன் பொருட்டே சிவனடியார்கள் திருவோடு ஏந்தி வந்தனர். முற்றும் துறந்த இவர்கள் தங்களின் ஆணவத்தை இறைவனின் கபாலத்தில் இட்டு அருள் பெற்றவர்களாயினர். இதன்வழி பிறப்பு, இறப்பு ஆகிய பந்தங்களிலிருந்து ஒவ்வொருவரும் விடுபட வேண்டிய நிலையைப் பாமர மக்களுக்கும் உணர்த்தினர் (நிர்மலா தேவி, 2013). இத்தகைய பெருமைக்குரிய திருவோடே சிவனடியார்களில் பலரும் விரும்பி ஏற்கும் பொருளாகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இதனைத் தவிர்த்து, சிவனடியார்கள் தங்களுக்கான உணவினைப் பெற்றுக் கொள்ளவும் திருவோடு உதவியாக இருக்கிறது. சிவனடியார்கள் ஓரிடத்திலேயே தங்கி தவம் இயற்றுபவர்கள் அல்லர். அவர்கள் ஈசன் அருள் தேடி அவன் உறையும் எல்லா இடங்களுக்கும் செல்பவர்கள். இதனால், திருவோட்டைத் தாங்கி வரும் அவர்களுக்கு உணவு பிச்சையாக அதில் இடப்படும். இவ்வழக்கம் இன்றுவரை தொடர்கிறது (கைலாசசாமி, 2003). மேலும், சிவனடியார்களின் தாகத்தைத் தீர்த்துக் கொள்ளவும் திருவோடு உதவுகிறது.

இந்த வரிசையில், சிவபெருமானுக்கு உகந்த திருநீறு வைத்துக் கொள்ளும் கலயமாகவும் திருவோடு விளங்குகிறது. திருநீறு சைவர்களின் அடையாளச் சின்னமாகத் திகழ்கிறது. பசுவாகிய உயிர்கள் உய்வதற்குரிய கவசமாகத் திகழ்வது திருநீறு என்பதையுணர்த்த சிவபெருமானும் திருவெண்ணீறு அணிந்துள்ளார். இதனால், சிவனடியார்களும் உலக வாழ்க்கையிலிருந்து விடுபட்டு முக்தி பேறு அடைய எப்போதும் திருமேனி முழுவதும் திருநீறு தரித்துள்ளனர்.

> கங்காளன் பூசுங்கவசத் திருநீற்றை
> மங்காமற் பூச மகிழ்வாரே யாமாகில்
> தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
> சிங்கார மான திருவடி சேர்வரே
>
> (திருமந்திரம், 1638)

(**விளக்கம்**: அயன், அரி என்னும் இருவர்தம் முழு எலும்புக் கூட்டினைச் சுமக்கும் சிவபெருமான் கங்காளன் எனப்படுவன். அவன் ஆருயிர்கள் உய்வதற்குக் காவலாயுள்ளது - திருவெண்ணீறு என்றுணர்த்தக் கவசமாக அத் திருவெண்ணீற்றை அணிந்துகொள்கின்றனன். அத் திருநீற்றை எப்பொழுதும் மங்காமல் பூசுதற்கு மகிழ்வாரிடம் எத்தகைய வினைத் துன்பங்களும் தங்கா; சிவநிலையும் சாரும் - அழகிய திருவடிப்பேறும் கைகூடும்.)

எனும் திருமூலரின் பாடலும் இதை மெய்ப்பிக்கின்றது. இத்தகு பெருமைக்குரிய திருநீற்றைத் திருவோட்டில் வைத்திருப்பவர்கள் சிவனடியார்கள். எனவே, சிவச்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சின்னமாகத் திகழும் திருவோட்டினைச் சிவனடியார்களுக்கு அளிக்கும் திருத்தொண்டு இறைவனுக்கு உகந்த தொண்டாகவே அமைகிறது.

திருவோட்டை வழங்குவதைத் தவிர, சிவனடியார்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நிதி வழங்குதலும் சிறந்த தொண்டாகவே போற்றப்படுகின்றது. பொருட்செல்வம் கொண்ட நாயன்மார்கள். சிவனடியார்களின் துயர் களையவும் வறுமை நிலையைப் போக்கவும் நெல்லையும் பொற்காசுகளையும் வழங்கித் தொண்டாற்றியுள்ளனர். சிவனடியார்கள் உலகியல் இன்பங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காதவர்களாதலால் பிறரிடமிருந்து பெறப்படும் பொருளுதவி அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஏதுவாக அமைந்தது.

மேலும், சிவனடியார்கள் முப்போதும் மக்கள் நலன் காக்கும் பணியிலும் இறைத்தொண்டிலும் சிந்தையை நிலைபெறச் செய்தவர்கள். தங்களுக்குக் கிடைத்த பொருளுதவியின் மூலம் சுற்றியுள்ள மக்களின் இன்னல்களைத் தீர்க்கவும் செய்தனர். இச்சிவனடியார்களின் அருளால் அவர்கள் வாழும் நாடு உன்னத நிலையை அடையும். அந்நாட்டிலுள்ளவர்களுக்கும் எவ்விதக் கேடும் நிகழாது என்பது,

சிவயோகி ஞானி செறிந்தஅத் தேசம்
அவயோகம் இன்றி அறிவோருண் டாகும்
நவயோகங் கைக்கூடு நல்லியல் காணும்
பவயோகம் இன்றிப் பரலோக மாமே

(திருமந்திரம், 1845)

(**விளக்கம்**: சிவன் திருவடியை மறவா நினைவுடையோன் சிவயோகியாவன். சிவனிறைவில் அழுந்தித் தற்செயலற்றுச் செய்வனவெல்லாம் சிவன் செயலாப் புரிபவன் சிவஞானியாவன். அத்தகையோர் வாழும் நாடு சிவநாடு ஆகும். அந் நாட்டில் மெய்யுணர்வுடையோர் வாழ்வர். அங்குக் கேட்டைத் தரும் தீவினைகள் ஏதும் நிகழா. ஆண்டு அருளால் எய்தும் புதுமை யுண்டாகும். மேலும் எவ்வகையான நன்மையும் பெருகும். ஆண்டு வாழ்வோர் மீண்டும் பிறவார்; சிவவுலகம் உறுவர்.)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எனும் திருமந்திரம் காட்டும் உண்மை. அதனால், சிவனடியார்களுக்குச் செய்யும் அறமே நாடு வளம் பெறச் செய்யும் என்றுணர்ந்த நாயன்மார்கள் அவர்களுக்குப் பொருள் கொடுத்து உதவினர். நாயன்மார்களின் இத்தகைய தொண்டினால் மக்களிடையே சிவச் சிந்தனையும் மேலோங்கியது என்பதைப் பெரிய புராணத்தின்வழி அறியலாம்.

பெரிய புராணத்தில் திருநீலகண்டர், அமர்நீதியார், இடங்கழியார், நேசர் ஆகியோர் அடியார்களுக்குப் பொருள் கொடுத்துத் தொண்டாற்றியுள்ளனர். இவர்களுள் அமர்நீதியாரும் நேச நாயனாரும் சிவனடியார்களுக்குக் கோவணம் அளித்தத் திருத்தொண்டினால் முக்திநிலையை அடைந்தனர் என்கிறார் துர்காதாஸ் (2003). திருநீலகண்டரோ சிவனடியார்களுக்குத் திருவோடு தந்து தொண்டு செய்துள்ளார். இடங்கழியார் சிவனடியார்களுக்கு நெல்லையும் பொன்னையும் கொடுத்து அடியார்களின் துயர் களைந்துள்ளார். **அட்டவணை 4.5** பொருளுதவி செய்த நாயன்மார்களைப் பற்றியக் குறிப்புகளை விவரிக்கின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அட்டவணை 4.5

அடியார்களுக்குப் பொருளுதவி செய்த நாயன்மார்கள்

எண்	பெயர்	குறிப்புகள் / தொண்டுகள்
1	திருநீலகண்டர்	திருநீலகண்டர் குயவர் மரபைச் சேர்ந்தவர். இவரது ஊர் சோழ நாட்டைச் சேர்ந்த சிதம்பரம். இவரது காலம் கி.பி. 660-840. இவர் தன் வாழ்க்கைக்கு வேண்டிய அளவே மட்பாண்டங்களைச் செய்து விற்பவர். பிற வேளைகளில் சிவனடியார்களுக்குத் திருவோடு செய்து வழங்குபவர். இவர் பரத்தையிடம் போனதால் உண்டான ஊடலைச் சிவபெருமானால் தீர்க்கப் பெற்றவர்.
2	அமர்நீதியார்	அமர்நீதியார் வணிக மரபைச் சேர்ந்தவர். இவரது ஊர் சோழ நாட்டைச் சேர்ந்த பழையாறை.இவரது காலம் கி.பி. 400-600. இவர் தமது செல்வம் முழுமையும் சிவனடியார்கட்குக் கந்தை, கீழுடை, கோவணம் அளித்தலிலும் பயன்படுத்தினார். சிவபிரான் தந்த கோவணச் சண்டையினால் மனைவி மகனுடன் இறையடிச் சேர்ந்தவர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

3	நேசர்	நேச நாயனார் சாலியர் மரபினைச் சேர்ந்தவர். காம்பீலியில் வாழ்ந்தவர். இவரது காலம் கி.பி.660-840. அடியார்களுக்குப் பலவகை ஆடைகளை நெய்து கொடுத்துச் சிவதொண்டாற்றியவர்.
4	இடங்கழியார்	இடங்கழியார் அரச மரபினைச் சேர்ந்தவர். இவரது ஊர் சோழ நாட்டைச் சேர்ந்த கொடும்பாளூர். இவரது காலம் கி.பி.600-840. ஆலயப் பூசனைகள் செய்தவர். நெல் திருட வந்த அடியார்க்குப் பொன்னும் பொருளும் கொடுத்து அனுப்பியவர்.

அடியார்கள் என்பார் எப்போதும் தமது சுகத்தை மட்டும் பெரிதாக நினையாது தம்மைச் சுற்றியுள்ளவர்களின் நலனிலும் அக்கறை கொண்டு வாழ்பவர்கள். இதனையே ‘அவன்பால் அணுகியே அன்பு செய்வார்’ (திருமந்திரம், 1843) எனும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது. அதனால்தான் மேற்குறிப்பிடப்பட்ட நாயன்மார்கள் சிவனடியார்களின் தேவையறிந்து சரியை தொண்டு புரிந்துள்ளனர். இதற்குச் சான்றாக அமர்நீதியாரின் வரலாற்றைக் காணலாம்.

4.4.2.1 அமர்நீதியார்

சோழவள நாட்டில் பழையாறை எனும் ஊரில் பிறந்தவர் அமர்நீதியார். இவர் வணிகர் குலத்தில் அவதரித்தவர். இவர் சிவனடியார்களுக்குக் கந்தை, கீழுடை, கோவணம் போன்றவற்றை அளித்து உதவியதோடு அமுது அளித்தும் பெருந்தொண்டாற்றி வந்தார். இவர் தம் குலத்தொழிலை,

> வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
> பிறவும் தமப்போல் செயின்
>
> (குறள், 120)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எனும் வள்ளுவரின் வாக்கிற்கிணங்க அறவழியில் நின்று மேற்கொண்டொழுகினார்.

சிந்தை செய்வது சிவன்கழல் அல்லது ஒன்று இல்லார்
அந்தி வண்ணர் தம் அடியவர்க்கு அமுது செய்வித்துக்
கந்தை,கீழுடை,கோவணம் கருத்து அறிந்து உதவி
வந்த,செல்வத்தின் வளத்தினால் பெரும் பயன் கொள்வார்
(தி.தொ.பு. 504)

(**விளக்கம்**: வெளிப்படை. (அவர்) தமது மனத்தினுள் எஞ்ஞான்றும் வைத்துத் தியானிப்பது சிவபெருமான் திருவடியேயன்றி வேறொன்று மில்லாதவர்; அந்தி மாலையின் செவ்வான வண்ணராகிய சிவபெருமானுக்கே உரியவர்களாம் அடியார்களைத் திருவமுது செய்வித்து, அவர்கள் கருத்தறிந்து அதற்கேற்பக் கந்தையுங் கீளும் உடையும் உதவி, (அதன் பயனாகத்) தம்பால் வந்த செல்வத்தினது வளங்களினாலே தாம் இவ்வுலகிற் பிறவி பெற்று வருதலாலுளதாகிய உறுதிப் பயனைக் கொள்வாராய்,)

எனச் சேக்கிழாரும் இவரது தொண்டின் மாண்பைப் போற்றியுள்ளார்.

இந்நாயனார் திருநல்லூர் எனும் ஊரில் நடக்கும் திருவிழாக்களுக்குச் சென்று சிவபெருமானைத் தொழுவார். அங்கு வரும் அடியார்களுக்குப் பணி செய்ய எண்ணித் திருமடம் ஒன்றனை நிறுவினார். அங்கு அடியார்களுக்கு அன்னதானம் அளித்ததோடு ஆடைகளையும் கொடுத்து வந்தார். இவரது திருத்தொண்டு இவ்வாறு பல ஆண்டுகள் தொடர்ந்தது. இந்நாயனார் சிவத்தொண்டாற்றி வரும் நாளில், அவரது தொண்டின் பெருமையை உலகுக்கு உணர்த்த இறைவன் திருவுளம் கொண்டார்.

ஒருநாள் இறைவன் அந்தணர் வேடம் பூண்டு நாயனாரின் திருமடத்தை அடைந்தார். அங்கு நாயனாரின் கொடைத்திறத்தை அறிந்து பார்க்க வந்ததாகக் கூறி ஒரு கோவணத்தைத் தந்து,

வணங்கும் அன்பரை நோக்கி அம் மறையவர் இசைந்தே
அணங்கு நீர்ப்பொன்னி ஆடி நான் வர மழை வரினும்
உணங்கு கோவணம் வைத்து நீர் தாரும் என்று ஒருவெண்
குணம் கொள் கோவணம் தண்டினில் அவிழ்த்து அதுகொடுப்பார்
(தி.தொ.பு. 514)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

(**விளக்கம்**: அவ்வாறு வணங்கிய அன்பரைப் பிரமசாரியாக வந்தஅந்த வேதியர் நோக்கி அவர் வேண்டுதலுக்கிசைந்தவராய், "அணங்கு நீரையுடைய காவிரியில் நீராடி நான் வரும்போது மழைவர நேர்ந்தாலும், (அப்போதுஉதவ) உலர்ந்த இக்கோவணத்தை உம்மிடத்தில் வைத்து நீர் தருவீராக! என்று கூறிக், குணமுடையவெள்ளிய கோவணத்தைத் தண்டிலிருந்து அவிழ்த்து அதனைக் கொடுப்பாராகி,)

எனப் பாதுகாப்பாக வைத்திருக்கக் கூறிச் சென்றார். நாயனாரும் அடியாரின் கோவணத்தைப் பாதுகாப்பான இடத்தில் வைத்தார். இருப்பினும் இறைவனின் அருளால் கோவணம் மறைந்தது.

அடியார் நீராடிவிட்டுத் திரும்பி வரும்போது மழையில் நனைந்து வந்தார். மாற்றிக் கொள்ள நாயனாரிடம் கொடுத்த கோவணத்தைக் கேட்டார். நாயனார் கோவணத்தைக் காணாது செய்வதறியாது திகைத்து நின்றார். அடியாரின் கோவணத்திற்கு ஈடாகப் பட்டாடைகளும் பொன்னும் மணியும் தருவதாக மன்றாடினார். அடியாரும் சினம் தணிந்தவராகத் தமது மற்றொரு கோவணத்தின் எடை அளவு பொருள் தந்தால் போதுமென்று கூறினார். நாயனாரும் மகிழ்ந்து துலாக்கோலை நாட்டி தம்மிடம் உள்ள எல்லா பொருள்களையும் கொண்டு வந்து வைத்தும் எடை சரியாகவில்லை. இதனைச் சேக்கிழார்,

> தவம் நிறைந்த நான் மறைப் பொருள் நூல்களால் சமைந்த
> சிவன் விரும்பிய கோவணம் இடும் செழும் தட்டுக்கு
> அவனிமேல் அமர்நீதியார் தனம் எலாம் அன்றிப்
> புவனம் யாவையும் நேர்நிலா என்பது புகழோ!
>
> (தி.தொ.பு. 540)

(**விளக்கம்**: தவத்தால் நிறைந்த நான்மறைப் பொருளாகும் நூல்களினால் அமைந்து சிவபெருமான் விரும்பியதாய்ச் செழுந் தட்டிலிட்ட கோவணத்துக்கு இந்த ஒரு பூமியில் அமர்நீதியாரது தனங்கள்மட்டுமேயன்றி எல்லாப் புவனங்களும் நேர்நிற்க மாட்டா என்று சொல்வதும் அதற்கு ஒரு புகழாகுமோ? (ஆகாது; அதன் புகழ் அதனினும் மேம்பட்டு நிற்கும்.)

எனக் கூறுகின்றார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நாயனார் அடியவரிடம் தானும் மகனும் மனைவியும் மட்டுமே எஞ்சியிருப்பதால் அவர்களைத் தட்டில் ஏற அனுமதி கேட்டார். அடியவரும் அதற்கு ஒப்புக்கொண்டார். நாயனார் அகமகிழ்ந்து,

இழைத்த அன்பினில் இறை திருநீற்று மெய் அடிமை
பிழைத்திலோம் எனில்,பெரும் துலை நேர் நிற்க என்று
மழை தடம் பொழில் திருநல்லூர் இறைவரை வணங்கித்
தழைத்த அஞ்சு எழுத்து ஓதினார்;ஏறினார் தட்டில்
(தி.தொ.பு. 544)

(**விளக்கம்**: "புரிந்த அன்பினாலே இறைவரது திருநீற்றிலே கொண்டு செலுத்திய உண்மை யடிமைத் திறத்திலே இதுவரை நாங்கள் பிழைசெய்தோமில்லை என்பது உண்மையாயின் பெருந் துலையானது நேர் நிற்பதாக!" என்று சொல்லி, மழையால் நிரம்பிய தடாகங்களும் பொழில்களும் சூழ்ந்த திருநல்லூரில் விளக்கம்பெற எழுந்தருளிய இறைவரை வணங்கித், தழைத்த திருவைந்தெழுத்தினை விதிப்படி ஓதினாராகித் தட்டிலே ஏறினார்.)

என இதுவரை தான் அடியார்த் தொண்டைத் தவறின்றிச் செய்திருப்பின் துலாக்கோல் சமமாக இறைவனை வேண்டி நின்றார். உடனே இரு தட்டுகளும் சமநிலையை அறிந்தன.

சிவபெருமான் நாயனாரின் திருத்தொண்டினை மெச்சி உமையம்மையோடு காட்சி தந்து அருள்புரிந்தார். மாணிக்கவாசகரின்,

அன்றே எந்தன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அணையாய் என்னை ஆட்கொண்டபோதே கொண்டிலையோ?
இன்று ஓர் இடையூறு எனக்கு உண்டோ?எண் தோள், முக்கண் எம்மானே!
நன்றே செய்வாய்;பிழை செய்வாய்;நானோ இதற்கு நாயகமே?
(திருவாசகம், 33)

(**விளக்கம்**: உயிர் உடம்பு உடைமை என்றதால், எல்லாம் இறைவனது உடைமை என்பதாம். ஆதலின், தமக்கென ஒரு செயல் இன்றாதலின், அதனால் உண்டாகும் பயனும் தமக்கு இல்லை என்பார், 'இன்றோர் இடையூ றெனக்குண்டோ?' என்றார். இறைவனே எல்லாவற்றுக்கும் தலைவன் என்று கூறியபடி.)

எனும் பாடல் அமர்நீதியாரின் பெருமைக்கு இலக்கணமாய் அமைந்துள்ளது எனலாம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தம்முடையவையென்று கொண்ட எல்லா பொருள்களையும் கொடுத்தும் தம்மைக் கொடுக்காமல் இருக்கும்போது இறையருள் வெளிப்படாது என்பது இந்நாயனாரின் வரலாற்றில் தெரிகிறது. நாயனார் தம் மனைவி மகனையும் தம்மையும் ஈடாகக் கொடுத்த பின்னரே துலாக்கோல் நேர்நின்று இறையருள் வெளிப்பட்டது என்கிறார் சி.கே.சுப்ரமணிய முதலியார் (1954).

அன்பு உள்ள இடத்தில் அருள் தாழ்ந்து போகும் என்பதும் நாயனாரின் வாழ்க்கையில் உண்மையாயிற்று. அடியாரின் அன்பு மேலிட மேலிட ஆண்டவன் அருள் தாழும் என்பதையும் அறிய முடிகிறது. மேலும், தம்மிடம் கொடுக்கப்பெறும் அடைகலப்பொருளை எவ்வாறு பேண வேண்டும் என்பதையும் அது காணாமல் போய்விட்டால் எவ்வாறு நாணமடைய வேண்டும் என்பதையும் அமர்நீதியாரின் வாழ்க்கை வரலாறு விவரிக்கின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

திருமடங்களை அமைத்துச் சிவனடியார்களுக்குப் பொருள் தந்து தொண்டாற்றுதல் சிறந்த சிவப்புண்ணியங்களாகும். அதிலும் நாயனார் சிவனடியார்களுக்குக் கோவணம் அளித்துத் தொண்டாற்றியது சாலச் சிறந்தது. சிவனடியார்களுக்கு எத்துறையில் பணி செய்கின்றார்களோ அதுவே இறைவனை அடையும் வழிகளாக அமையும் என்பது நாயனாரின் வரலாற்றில் தெரிகிறது. வணிகர் தொழிற்கருவியாகியத் துலாக்கோலே நாயனாரின் அன்பைப் பறைசாற்றவும் விமானமாகி அவரைச் சிவலோகம் சேர்க்கவும் செய்ததையும் காண முடிகிறது.

அமர்நீதியாரைப் போன்றே ஏனைய மூவரும் சிவனடியார்களுக்குப் பொருளுதவி செய்வதில் சற்றும் பின்வாங்காமல் இருந்தவர்கள். முற்றும் துறந்த சிவனடியார்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் கிரகஸ்தர்களுக்கும் பங்குண்டு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

என்பதை நன்கு உணர்ந்தவர்கள் (இராஜேந்திரன், 2012). அதன் விளைவாகவே எவ்வித பலனையும் எதிர்ப்பார்க்காமல் பக்தியோடு ஆற்றிய தொண்டுகள் இந்நாயன்மார்களின் முக்திக்கும் வழிவகுத்தது. இவர்களின் வாழ்க்கை வரலாறு திருமூலரின்,

சாலோகம் ஆதிசரி ஆதியில் பெறும்
சாலோகம் சாமீபம் தங்கும் சரியைஆல்
மாலோகம் சேரில் வழி ஆகும் சாரூபம்
பாலோகம் இல்லாப் பரண் உருஆமே

(திருமந்திரம், 1481)

(**விளக்கம்**: சிவவுலகம், சிவனண்மை, சிவனுருவம், சிவனாம் பெரு வாழ்வு என்னும் நான்கும் சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்னும் நானெறியின் பெறுபேறாக எய்துவன. சிவவுலகநிலை சீலத்தால் எய்தப் பெறும். சிவனண்மைநிலை நோன்பால் மாவுலகத்தைச் சார்வதால் எய்தும். இந் நோன்புவழித்தாம் செறிவினால் விரிவாம் உலகத் தொடர்பில்லாத சிவத்தினுருவம் எய்தும்.)

என்ற பாடலுக்கேற்பச் சரியை வழியில் நின்று சாலோப முக்தி பெறலாம் என்பதை மெய்ப்பிக்கிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.4.3 அடியார்களுக்கு உடல் உழைப்பால் தொண்டுகள் புரிதல்.

இவ்வாய்வின் அடிப்படையில் பார்க்கும்போது அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர் மட்டுமே தமது உடல் உழைப்பால் சிவனடியார்களுக்குத் திருத்தொண்டு புரிந்துள்ளார் என்பது தெளிவாகிறது. திருக்குறிப்புத் தொண்டர் சிவனடியார்களின் உள்ளக் குறிப்பறிந்து சிவப்பணி மேற்கொண்டு அதனின்று பிறழாமல் தொண்டாற்றியவர்.

குறிப்பின் குறிப்புஉணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்

(குறள், 703)

எனும் வள்ளுவரின் குறளுக்கேற்ப இந்நாயனாரின் திருத்தொண்டு போற்றுதற்குரியது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அவரது வரலாறு பின்வருமாறு அமைகிறது.

4.4.3.1 திருக்குறிப்புத் தொண்டர்

தொண்டை நாட்டில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்களையும் கொண்டு சிறப்புடன் விளங்கும் திருநகரம் காஞ்சி. இக்காஞ்சி மாநகரில் வண்ணார் குலத்தில் அவதரித்தவர் திருக்குறிப்புத் தொண்டர். இவர் சைவ நெறியில் நின்று சிவனடியார்களின் உள்ளக் குறிப்பறிந்து தொண்டு செய்பவர். இதனையே சேக்கிழார்,

> மண்ணின் மிசை வந்த அதற்பின் மனம் முதல் ஆயின மூன்றும்
> அண்ணலார் சேவடியின் சார்வு ஆக அணைவிப்பார்
> புண்ணியமெய்த் தொண்டர் திருக் குறிப்பு அறிந்து போற்று நிலைத்
> திண்மையினால் திருக்குறிப்புத் தொண்டர் எனும் சிறப்பினார்
> (தி.தொ.பு. 1194)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

(**விளக்கம்**: இவ்வுலகில் வந்தவதரித்தபின், மனம் முதலிய மூன்று கரணங்களையும் சிபெருமானது திருவடிகளின் சார்பாகவே அணைவிப்பாராகி, (அவர்), சிவபுண்ணியமுடைய மெய்த்தொண்டர்களுடைய உள்ளத்தின் திருக்குறிப்பினை அறிந்து அவர்களுக்குத் தொண்டுசெய்யும் தன்மையில் நிலைத்த உறைப்பினாலே திருக்குறிப்புத் தொண்டர் என்று சொல்லப்படும் சிறப்புப் பெயரை உடையவராயினார்.)

எனப் பாடியுள்ளார். அடியார்களின் அழுக்கடைந்த ஆடைகளைத் துவைத்துக் கொடுக்கும் திருப்பணியை நாயனார் வழுவாமல் செய்து வரும் நாளில் அவரைச் சோதிக்க சிவனார் திருவுளம் கொண்டார்.

ஒருநாள் குளிர்காலத்தில் சிவனடியார் வேடம் பூண்டு இறைவன் திருக்குறிப்புத் தொண்டரின் வீட்டிற்கு எழுந்தருளினார். திருக்குறிப்புத் தொண்டர் அவரை வரவேற்று வணங்கி நின்றார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அடியார் வேடத்திலிருந்த இறைவன்,

இக்கந்தை அழுக்கு ஏறி எடுக்க ஒணாது எனினும் யான்
மெய்க் கொண்ட குளிர்க்கு உடைந்து விடமாட்டேன் மேல் கடல் பால்
அக்குன்றம் வெங்கதிரோன் அணைவதன் முன் தருவீர் ஏல்
கைக் கொண்டுபோய் ஒலித்துக் கொடுவாரும் கடிது என்றார்
(தி.தொ.பு. 1201)

(**விளக்கம்**: இக்கந்தையானது அழுக்கு மிகுதியினால் எடுக்கவொண்ணாததாயிருப்பினும், நான், என்மேனியிற்கொண்ட குளிரினுக்குப் பயந்து அதனை விடமாட்டேன்; மேற்குக் கடலிடத்து அத்தகிரியாகிய அந்த மலையைச் சூரியன் சேர்வதற்கு முன் தருவீராகில் ஏற்றுக் கொண்டுபோய் ஒலித்துக்கொண்டு விரைவில் வாரும்" என்று சொன்னார்.)

என்று தனது கோவணத்தை நாயனாரிடம் கொடுத்து மீண்டும் மாலைக்குள் அதனைத் துவைத்து உலர்த்தித் தந்து விடவேண்டும் எனக் கூறினார். நாயனாரும் அடியாரை வணங்கி ஆடையைப் பெற்றுக் கொண்டார்.

அடியவர் மேலும்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கந்தை இது ஒலித்து உணக்கிக் கடிது இன்றே தாரீரேல்
இந்த உடற்கு இடர் செய்தீர் என்று கொடுத்து ஏகினார்
(தி.தொ.பு. 1202)

(**விளக்கம்**: "இந்தக் கந்தையினை விரைவாக ஒலித்து உலர வைத்து இன்றைக்கே தாரீராகில் இந்த உடலுக்குத் துன்பஞ்செய்தீராவீர்" என்றுசொல்லிக் கொடுத்துப் போயினர்.)

என்று ஆடையை விரைவில் தராவிட்டால் இவ்வுடலுக்குத் துன்பம் இழைத்தவர் ஆவீர் என எச்சரித்தும் சென்றார்.

நீர்த்துறையை அடைந்த திருக்குறிப்புத் தொண்டர் அடியாரின் ஆடையைத் துவைத்து உவர்மண் ஊட்டி வெள்ளாவி வைத்தார். அச்சமயம் பிற்பகல் ஆகிவிட்டது; பெருமழையும் பிடித்துக் கொண்டது. திசைகள் தெரியா வண்ணம் கருமேகங்கள் சூழ்ந்து மழை தாரை தாரையாய்க் கொட்டத் தொடங்கிற்று. இரவும் வந்தது. மழை நின்றபாடில்லை. நாயனார் அடியார் குளிரில் நடுங்குவாரென்றும் இதுவரை தாம் புரிந்து

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

வந்த குற்றேவல் தவறி முற்றுப் பெறும்போல் உள்ளதென்றும் வருந்தினார். சேக்கிழாரும்,

நாயனாரின் மனநிலையை,

ஓவாதே பொழியும் மழை ஒரு கால் விட்டு ஒழியும் எனக்
காவாலி திருத் தொண்டர் தனி நின்றார் விடக் காணார்
மேவார் போல் கங்குல் வர மெய் குளிரும் விழுந்தவர் பால்
ஆஆ என் குற்றேவல் அழிந்த வா என விழுந்தார்.
(தி.தொ.பு. 1205)

(**விளக்கம்**: நீங்காமல் பொழியும் மழை ஒருவேளை பொழியாது விட்டொழியும் என்று, கபாலியாகிய சிவபெருமானது திருத்தொண்டர் தனி நின்றார்; ஆனால் மழைவிடும் நிலைகாணவில்லை; பகைவரைப்போல இரவு வரவே "குளிரால் உடல் வருந்தும் தூய தவசியாரிடத்தில் ஆ! ஆ! எனது குற்றவேல் தவறிவிட்டதே" எனக்கீழே விழுந்தனர்.)

என்று பாடியுள்ளார்.

அடியாரின் திருமேனி குளிரில் நடுங்கிடத் தீங்கு இழைத்துவிட்டேன் என்று வருந்திய நாயனார் கற்பாறையில் தம் தலையை மோதி உயிரைவிடத் துணிந்தார்.

அக்கணமே இறைவனின் செங்கை நாயனாரின் தலையைப் பற்றியது. இதனைச் சேக்கிழார்,

கந்தை புடைத்திட எற்றும் கல்பாறை மிசைத் தலையைச்
சிந்த எடுத்து எற்றுவன் என்று அணைந்து செழும் பாறை மிசைத்
தன் தலையைப் புடைத்து எற்ற அப்பாறை தன் மருங்கு
வந்து எழுந்து பிடித்தது அணி வளைத் தழும்பர் மலர்ச் செங்கை
(தி.தொ.பு. 1207)

(**விளக்கம்**: "கந்தையினைத் தோய்ப்பதற்கு ஏற்றுகின்ற பாறையின்மேல் எனது தலையை சிதைந்துபடுமாறு ஏற்றுவன்" என்று துணிந்து அணைந்து, செழிப்புடைய பாறையின்மேல் தமது தலையைமுட்டி மோதிய அளவில் அந்தப் பாறையின் பக்கத்திலிருந்து அழகிய வளைத்தழுப்பு பூண்டவராகிய ஏகாம்பரநாதரது மலர்போன்ற செம்மையுடைய கையானது வந்து, எழுந்து, அத்தலையைப் பிடித்துக்கொண்டது.)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எனக் கூறியுள்ளார். நாயனாரின் பெருமையை உலகுக்கு உணர்த்திய சிவபெருமான் உமையம்மையுடன் காட்சி கொடுத்துச் சிவலோகம் வந்தடைய திருவாய் மலர்ந்தருளினார்.

திருக்குறிப்புத் தொண்டர் ஊர் மக்களின் துணிகளை வெளுத்துத் தரும் வண்ணானாக இருந்தவர். சிவனடியார்களின் ஆடைகளைத் துவைத்துக் கொடுத்த பின்னரே தமது தொழிலைத் தொடங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தவர். இதனையே தமது சிவப்பணியாக எண்ணி அதனின்றும் வழுவாமல் தொண்டு செய்து வந்தவர்.

உலகியல் பார்வையில் இது மிகச் சாதாரணத் தொண்டாகப் புலப்படினும் திருத்தொண்டின் மாண்பினைக் கருதி திருக்குறிப்புத் தொண்டர் எனும் பெயரே போற்றுதற்குரியது என்பதைச் சேக்கிழாரும்,

சீர் நிலவுத் திருக்குறிப்புத் தொண்டர் திருத்தொழில் போற்றி
(தி.தொ.பு. 1210)

(**விளக்கம்**: சிறப்பு நிலவப்பெற்ற திருக்குறிப்புத் தொண்ட நாயனாருடைய திருத்தொழிலைத் துதித்து,)

என்று கூறியுள்ளார்.

முப்போதும் சிவச் சிந்தனையில் ஈடுபட்டவர்கள் சிவனடியார்கள். அவ்வாறு சிவ நிஷ்டையில் ஆழ்ந்திருக்கும் அவர்கள் தங்களின் புற உடலையும் புற வாழ்க்கையையும் அதிகம் எண்ணுவது கிடையாது. இருப்பினும் இது போன்ற அடியவர்களுக்கும் சிறு சிறு உலகத் தேவைகள் இருக்கும் என்பது மறுப்பதற்கில்லை. தமது ஆடைகளை வெளுத்து அணிதல் என்பது சிவனடியார்களுக்கும் அவசியமான ஒன்றாகும். இவ்வடியார்களின்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இடையறாத சிவச் சிந்தனை சிதறாமலிருக்கும் பொருட்டு அவர்களின் குறிப்பறிந்து தொண்டு செய்யும் தன்மையில் நிலைப்பெற்றவர் திருக்குறிப்புத் தொண்டர் என்கிறார் சி.கே.சுப்ரமணிய முதலியார் (1954).

சிவனடியார்களுக்குத் திருத்தொண்டு செய்ய எண்ணம் கொண்டோர் அதன்படியே செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாவிடில் அடியார்களுக்குத் தவறு இழைத்தவர்களாகி விடுவர். மேலும், சிவநிந்தனை செய்த பாவமும் நம்மைச் சாரும். எனவே, சிவனடியார்களுக்கு எண்ணியபடி தொண்டு செய்யாமல் அபசாரம் செய்து வாழ்வதைக் காட்டிலும் சாவது மேல் என்று எண்ணுபவர்கள் சான்றோர். தவிர, குற்றம், குறைகளைப் பிறரிடத்தில் தேடாமல் தம்மிடம் காண்பதே உயர்ந்தோரின் பண்பாகும். இத்தகு வாழ்க்கையை மேற்கொண்டவர் திருக்குறிப்புத் தொண்டர்.

திருவள்ளுவரின்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

> தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்
> கொள்வர் பழிநாணு வார்
>
> (குறள், 433)

எனும் கூற்றுக்கேற்ப அடியார்களுக்குப் பணி செய்யும்போது சிறிதளவு தவறு நேர்ந்தாலும் அதைப் பெரிதாக எண்ணி மீண்டும் அது ஏற்படாது காத்துக் கொள்ளத் துணிந்தவர் திருக்குறிப்புத்தொண்டர்.

மேலும், சைவ சித்தாந்த கோட்பாட்டில் ஆன்மாவின் அறிவை மயக்கும் பாசம் எனும் கட்டு இறைவனை அடைவதற்குத் தடையாக உள்ளது என்று கூறுகிறது. தான் செய்யும் கர்ம வினைகளின் அடிப்படையில் ஆன்மாவானது பாசத்திலிருந்து விடுபட்டு முக்தியடைய இயலும் எனவும் அது குறிப்பிடுகிறது (ஆனந்தரசன், 2005). இந்த முயற்சியில் சற்றும் மனந்தளராத திருக்குறிப்புத் தொண்டர் சிவனடியார்களின்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கோவணங்களைத் துவைத்துக் கொடுக்கும் பணியில் ஈடுபட்டார். அதே வேளையில் தனது கர்மங்களையும் துடைத்தொழித்து இறைவனின் திருவடி பேற்றையும் அடைந்தார்.

மக்களோடு சேர்ந்து வாழும் நிலையில் உடை ஒவ்வொரு மனிதனுக்கும் தன் மானத்தைக் காக்கும் கருவியாகவே உள்ளது. அதிலும் நாம் உடுத்தும் உடை சுத்தமாக இருப்பதும் அவசியமாகிறது. இதைத்தான் 'கந்தையானாலும் கசக்கிக் கட்டு' என்றனர் சான்றோர். எனினும் முப்போதும் சிவன்பால் தங்கள் சித்தத்தைச் செலுத்தும் அடியார்கள் இதுபோன்ற தங்களின் பிறத் தேவைகளைப் பெரிதெனக் கருதுவதில்லை என்கிறார் சுத்தானந்த பாரதியார் (1998). அதனாலேயே திருக்குறிப்புத்தொண்டரைப் போன்ற நாயன்மார்கள் இவர்களுக்குச் சேவகம் செய்வதை வழக்கமாக்கிக் கொண்டனர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எனவே, சிவனடியார்களின் மனது குளிர அவர்களுக்குத் தொண்டு செய்த திருக்குறிப்புத் தொண்டர் சிவபெருமானின் அருளுக்கும் அன்புக்கும் பாத்திரமானது ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில். 'இறைவன் தொண்டருள்ளத் தொடுக்கம்' என்கிறார் ஔவையார். உள்ளத் தூய்மையுடனும் உண்மையான பக்தியுடனும் அடியார்களுக்குச் செய்யப்படும் எந்தச் செயலும் இறைவனுக்குச் செய்யும் சேவகமாகவே ஏற்றுக்கொள்ளப்படும் என்பது இந்நாயனாரின் வரலாற்றிலிருந்து தெரிகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.4.4 ஆலயத் திருப்பணிகள் செய்தல்

ஆலயம் என்பது உலகுக்கு முதல்வனான இறைவனின் திருவருள் பெருகி வழிகின்ற இடமாகும். இவ்வாலயங்களில் செய்யப்படும் பூசனைகளும் திருவிழாக்களும் இறை உணர்வைத் தூண்டுவதாக அமைகின்றன (தர்மலிங்கம், 2012). அதனாலேயே அக்காலத்தில் ஆலயங்கள் மக்களின் உயிர்நிலையாக விளங்கியது என்றும் கூறலாம்.

ஆலயத்தின் சிறப்பினைச் சுந்தரரின் வரலாறு நன்கு விவரிக்கின்றது. ஒருமுறை திருக்கூடலையாற்றூர் திருக்கோவிலுக்குச் செல்ல சுந்தரர் தடுமாறியபோது அவருக்கு இறைவனே வழிப்போக்கனாக வந்து வழிகாட்டினார்; மற்றொருமுறை கோயிலுக்குச் செல்ல மறந்த சுந்தரரை 'மழப்பாடியுள் உள்ள என்னை மறந்தனையோ' என்று இறைவன் அவர் கனவில் தோன்றி நினைவுறுத்தினார் (திருத்தொண்டர் புராணம், 2002). நாவுக்கரசர் 'கூற்றாயினவாறு' எனப் பாடியதும் சுந்தரரை இறைவன் 'பித்தா' எனப் பாடக் கேட்டதும் திருக்கோயிலிலேயே நிகழ்ந்தது.

மேலும், ஞானப்பால் கொடுத்து இறைவன் திருஞானசம்பந்தரை ஆட்கொண்டதும் திருக்கோயிலில்தான் என்பதையும் பெரிய புராணம் காட்டுகின்றது. இதன்வழி திருக்கோயில் வழிபாட்டின் முதன்மையை உணர முடிகின்றது (தர்மலிங்கம், 2012). எனவே, இத்தகைய சிறப்பினைக் கொண்ட ஆலயத்தில் திருப்பணிகள் செய்வது சைவ நெறியில் ஓர் உயர்ந்த தொண்டாகவே கருதப்படுகிறது. இதைப்,

> பட மாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்
> நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா
> நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயின்
> படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே
>
> (திருமந்திரம், 1821)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

(**விளக்கம்**: அருஞ்சைவர் தத்துவம் ஆறாறினையும் பிண்டவடிவிற் காட்டும் படம்போல் விளங்குவது திருக்கோவில். இது நின்றுபயன் அளிக்கும் அருள் நிலையம். சிவனை மறவா நினைவுடன் யாண்டும் இயங்குவாரின் திருமேனி நடமாடும் திருக்கோவில் என்ப. அவர்தம் மறவா நினைவுக்குரிய இடங்கள் எட்டென்ப. அவை நிற்றல், இருத்தல், கிடத்தல், நடத்தல், மெல்லல், துயிலல், விழித்தல், இமைத்தல் என்ப. நடமாடும் திருக்கோவில் சென்று பயனருளும் சிறப்புடைத் திருக்கோவிலாகும். இத் திருக்கோவிற்குச் செய்யும் சிறப்பு முழுவதும் படமாடக்கோவிற் பரமனார் திருவடிப்பால் சாரும். ஆனால் படமாடக் கோவில் வழிபாடு ஆண்டே தங்கி நடமாடக் கோவிலை நண்ணுவதில்லை. இவை யிரண்டும் முறையே கல்லெழுத்தும் கருத்தழுத்தமும் ஆகும். "எவரேனும் தாமாக இலாடத்திட்ட. திருநீறு" என்பது அப்பர் அருண்மொழி. 'தாமாக' என்பது தாம் சிவமாக: எனவே சிவனடியாரே என்பதாம். கண்ணிற்காணும் இவரே சிவமாவர். காணா அவர் சிவமெனக் கருதற்க.)

எனத் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

'ஆலயம் தானும் அரனெனத் தொழுமே' என்கிறது சிவஞானபோதம். அந்த வகையில் இறைவன் வாழும் ஆலயத்தையும் அங்கு உள்ளத் திருமேனிகளையும் இறைவனாகவே எண்ணித் தொழுவதையே அடியார்கள் பலர் தங்களின் வாழ்க்கை குறிக்கோளாகக் கொண்டிருந்தனர்.

ஆலயத் திருப்பணிகளைச் சிவத்தொண்டாகச் செய்த நாயன்மார்கள் வீடுபேற்றைக்கூட எண்ணாமல் வாழ்ந்துள்ளனர் என்பதைச் சேக்கிழாரின்,

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்

(தி.தொ.பு. 143)

(**விளக்கம்**: கேடும்....திருவினார் - குறைவதும் மிகுவது மில்லாத நிலைத்த ஐசுவரியத்தை உடையவர்கள்; ஓடும்...நோக்குவார் - மண் ஓட்டையும் பசும் பொன்னையும் ஒன்று போலவே காண்பவர்கள்; கூடும்...விளங்கினார் - (இறைவனை மனத்திலே) கூட்டி வைக்கும் அன்பு மேலீட்டினாலே அவனைக் கும்பிடும் பிறப்பு ஒன்றேயன்றி வீட்டையும் விரும்பாத வன்மையுடையார்.)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எனும் பெரிய புராணப் பாடல் விளக்குகிறது. ஆலயத் திருப்பணிகளே சரியை மார்க்கத்தில் முதன்மையானவை. எனவே வஞ்சனை வழிபாடன்றி உண்மையான அன்பினால் 18 நாயன்மார்கள் ஆலயத் திருப்பணிகள் செய்வதிலேயே தங்கள் வாழ்நாளைக் கழித்துள்ளனர் என்பதைப் பெரிய புராணம் சுட்டி நிற்கின்றது.

தற்காலச் சூழ்நிலையில் ஆலயங்களில் நடத்தப்படும் பூசனைகளும் விழாக்களும் வணிக நோக்கத்திற்காகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன (ஜெயமோகன், 2015). ஆனால், ஆலயத் திருப்பணிகள் மனிதனை இறைவனோடு இணைக்கும் உறவுப் பாலமாக அமைகிறது என்பதை இந்நாயன்மார்களின் வரலாறு மெய்ப்பிக்கிறது. ஆலயத்தில் திருவிளக்கிடுதல், திருமெழுகிடுதல், திருவலகிடுதல், மலர் பறித்தல், பூமாலை கட்டுதல், பாமாலை தொடுத்தல், இறைவனுக்குத் திருவமுது படைத்தல், திருக்கோயில் எழுப்புதல் போன்ற சரியை நெறிகள் இந்நாயன்மார்களின் அன்றாடக் கடமைகளாக இருந்து வந்துள்ளன என்பதைப் பெரிய புராணத்தின்வழி அறிய முடிகின்றது (தர்மலிங்கம், 2012).

ஆலயத் திருப்பணிகளில் முக்கியமாக விளங்குவது விளக்கேற்றுதலேயாகும். விளக்கேற்றுவது பண்டைய தமிழர்களின் மரபாக இருந்து வந்துள்ளது. அதிலும் குறிப்பாகப் பூஜைகளில் விளக்கேற்றி வழிபடுவது ஒவ்வொருவரின் வாழ்வையும் பிரகாசிக்கச் செய்யும் என்பது அவர்களின் நம்பிக்கை (சோமசுந்தரம், 2001). மேலும், விளக்கேற்றுவதால் அனைவரும் பயனடைகின்றனர் என்கிறார் கிருபானந்த வாரியார் (2003).

பதியாகிய சிவபெருமானும் ஜோதி வடிவாகவே பசுவாகிய ஒவ்வோர் ஆன்மாவுள்ளும் உறைகின்றான் என்று திருமந்திரம் கூறுகின்றது. அவ்வாறு ஜோதி

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

வடிவாக இருக்கும் இறைவனைத் தேடிக் கண்டு கொள்பவர்கள் வீடுபேறு அடைவர் என்பதை,

கான விளக்கொளி கண்டுகொள் வார்க்கு
மேலை விளக்கொளி வீடெளி தாநின்றே

(திருமந்திரம், 663)

(**விளக்கம்**: புருவநடுவிலுள்ள உயிர்க்கு உயிராய் உதவும் சிவவொளி. மேலை விளக்கொளி - வானோர்க்கு உயர்ந்த உலகத்துறையும் சிவவொளி. இவ்வொளிகளைக் காணும் பயிற்சியுடையார்க்குத் திருவடிப்பேறு. எளிதாநின்று இன்பந்தரும்.)

எனத் திருமந்திரம் கூறுகின்றது. அண்டத்தில் அருவமாக விளங்கும் இறைவனை நமது ஜீவனில் ஜோதியாக ஏற்றி வழிபட்டால் உள்ளொளி பெருகி முக்தியின்பம் கிட்டும் (வள்ளலார், 2015).

இதனாலேயே நாயன்மார்களும் ஆலயத்தில் விளக்கேற்றும் திருப்பணியை மேற்கொண்டு ஆன்மாவில் உறையும் ஜோதி வடிவான இறைவனை உணர்ந்து கொள்ள முற்பட்டனர். ஆலயத் தீபம் ஏற்றும்போது கவனத்துடன் அதில் மனதை இலயிக்கச் செய்து ஜோதியை உள்வாங்கிக் கொண்டனர். அந்த ஜோதியானது தங்களுக்குள் ஊடுருவி ஆன்ம ஜோதியைப் பிரகாசிக்க வைத்தனர். வள்ளலார் பெருமான் கூறியதைப் போன்று

ஜோதி ஜோதி ஜோதி சுயம்
ஜோதி ஜோதி ஜோதி பரம்
ஜோதி ஜோதி ஜோதி அருள்
ஜோதி ஜோதி ஜோதி சிவம்

(திருஅருட்பா, 385)

என்ற உண்மையையும் நிலைநிறுத்தி ஆன்ம தரிசனத்தைக் கண்டனர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இதனைத் தொடர்ந்து, மலர் பறித்தலும் பூமாலை கட்டுதலும் இறைவனுக்கு மிக உயர்ந்த தொண்டாகவே கருதப்படுகிறது. மலர்கள் என்றதுமே வண்ணம், வாசம், மென்மை, அழகு எனப் பலவும் நம் நினைவுக்கு வரும். ஆன்மிகத்திலும் மலர்கள் முக்கியமான அர்ப்பணிப்பாகப் போற்றப்படுகின்றன. மலர்களை உள்ளன்போடு அர்ப்பணித்து அர்ச்சனை செய்வது இறைவனுக்கு மிகவும் பிரியமானது. இஃது இறைவனின் திருவருளை நமக்குப் பெற்றுத் தரும் (சுஜாதா சுகுமாறன், 2017).

அம்புயம் நீலம் கழுநீர் அணி நெய்தல்
வம்பு அவிழ் பூகமும் மாதவி மந்தாரம்
தும்பை வகுளம் சுரபுன்னை மல்லிகை
செண்பகம் பாதிரி செவ்வந்தி சாத்திடே

(திருமந்திரம், 979)

(**விளக்கம்**: தாமரை, கருங்குவளை, செங்கழுநீர், நெய்தல், பலா, மாதவி, மந்தாரம், தும்பை, மகிழ், சுரபுன்னை, மல்லிகை, செண்பகம், பாதிரி, செவ்வந்தி ஆகிய பதினான்கு வகையான நறுமணமிக்க பூக்களைக் கொண்டு வழிபாடு செய்வாயாக. மாதவி - குருக்கத்தி. வகுளம் - மகிழ். அருச்சனை - வழிபாடு. ('ஆரா தனையே வழிபா டருச்சனை' பிங்கல நிகண்டு.)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எனும் திருமந்திரப் பாடல் தாமரை கருங்குவளை, செங்கழுநீர், நெய்தல், பலா, மாதவி, மந்தாரம், தும்பை, மகிழ், சுரபுன்னை, மல்லிகை, செண்பகம், பாதிரி, செவ்வந்தி ஆகிய பதினான்கு வகையான நறுமணமிக்க பூக்களைக் கொண்டு வழிபாடு செய்ய வேண்டும் என்பதற்குச் சான்றாக விளங்குகிறது. பாமர மக்கள் வழிபட்டு உய்வதற்காகவே கோயிலில் பதியாகிய இறைவன் உருவத்திருமேனியுடன் விளங்குகின்றான். இந்த இறை மூர்த்தங்களுக்கு மலர் மாலை அணிவிப்பதும் அவற்றை மலர்களால் அர்ச்சிப்பதும் வழக்கமாக உள்ளது. இது பசுவாகிய ஆன்மாக்கள் மனதை ஒருநிலைப்படுத்தி வழிபாடு செய்யத் துணைபுரிகிறது (நிர்மலா தேவி, 2013).

மலர்கள் பழந்தமிழரின் வழிபாட்டில் முக்கிய இடத்தை வகுத்துள்ளன. ஆலய வழிபாட்டிற்காக மலர்களைப் பறித்துக் கொடுப்பது புனிதத் தொண்டாகக்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கருதப்படுகிறது. திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களும் இதனால் நன்மையடைகின்றனர் (சோமசுந்தரம், 2001). இதன் பொருட்டே நாயன்மார்களும் மலர் பறிக்கும் தொண்டினை நாள் தவறாது செய்து வந்தனர். இதன்வழி, இறையின்பமும் எய்தினர்.

நாயன்மார்கள் ஆலயத் தூய்மை செய்யும் பணிகளிலும் மிகுந்த ஈடுபாடு காட்டி வந்துள்ளனர். அக்காலத்தில் ஆலயங்கள் யாவும் பரந்து விரிந்து கிடந்த நிலையை இன்றளவும் நம்மால் காண முடிகின்றது. இதனால், ஆலயங்களைப் பராமரிப்பது மிகவும் கடினமாக ஒன்றாக அமைந்தது. தவிர, இவ்வாலயங்களுக்கென்று வருமானமும் இல்லாததால் நாயன்மார்கள் இத்தகு புனிதச் செயல்களில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டனர் (நாராயணசுவாமி, 2010). இறைவன் குடிகொண்டுள்ள புனித இடம் என்பதையும் கடந்து மக்களின் நலன் காக்கும் இடமாகவும் ஆலயங்கள் அந்நாளில் செயல்பட்டன. அதனால், ஆலயத் தூய்மை அங்கு வரும் பக்தர்களுக்கும் அமைதியான ஆரோக்கியமான சூழலில் இறைவனை வழிபட உதவியது.

மேலும், ஆன்மா பாசங்களிலிருந்து விடுபட இறைவனை உணர வேண்டும். அவனுக்குத் தொண்டுகள் புரிவதைக் கடமையாகக் கொள்ள வேண்டும். திருமூலரும்,

> கிடக்கின்ற வாறே கிளர்பயன் மூன்று
> நடக்கின்ற ஞானத்தை நாடோறு நோக்கித்
> தொடக்கொன்றும் இன்றித் தொழுமின் தொழுதால்
> குடக்குன்றி லிட்ட விளக்கது வாமே
>
> (திருமந்திரம், 2368)

(**விளக்கம்**: ஆருயிர்கள் பாசப் பிணிப்புண்டு கிடக்கின்ற முறையில் அப் பாசப்பிணிப்பினின்றும் விடுபடக் கைக்கொள்ளவேண்டிய பொருள்கள் மூன்று. அவை இன்பமும் பொருளும் அறனும் என்ப. இம் மூன்றின் வழியொழுகினார் திருவடி எய்தற்குரிய நானெறியில் நடப்பர். அந்நானெறியுள் சீலத்தின் பயனாக நோன்பும், நோன்பின் பயனாகச் செறிவும் கைகூடும். இம் மூன்றன் வழி முடிந்த பயனாகிய அறிவு கைவரும். அவ்வறிவாகிய திருவடியுணர்வை நாடொறும் நோக்கல் நோக்கமாகக் கருதி ஒழுகிவருதல் வேண்டும். அப்படி யொழுகி வந்தால் தொடக்காகிய பாசப்பிணிப்பு ஒன்றும் இன்றாகும். அதன் பொருட்டு முழுமுதற் சிவபெருமானைச் செந்தமிழ்த் திருமுறை ஓதி இடையறாது தொழுங்கள். தொழுதால்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

குடத்துள் மறைந்திருந்த விளக்க குன்றின் விளக்காகச் சிறந்து உறைந்திருக்கக் காணலாம். குடவிளக்கென்பது ஆருயிர் பாசப்பிணிப்புண்டு மறைந்திருப்பதை யுணர்த்துவதாகும். அவ்வுயிர் பாசப்பிணிப்பு விண்டு சிவபெருமான் திருவடியினைத் திருவருளால் கண்டு சிறந்து உறைந்திருப்பதைக் குன்றின் விளக்கு உணர்த்துவதாகும்.)

என்று இதனைத் தெளிவுறுத்துகிறார். இதன் அடிப்படையில், ஆலயத்தைத் தூய்மை செய்யும் தொண்டானது கர்ம வினைகள் நீங்கி முக்தி பெற வழிவகுக்கும் (கிருபானந்த வாரியார், 2003). எனவே, நாயன்மார்கள் இத்திருப்பணி செய்து பாசத்திலிருந்து விடுபட்டு முக்தியை அடைந்தனர்.

திருக்கோயிலில் பாமாலை தொடுப்பதும் சரியை தொண்டுகளில் சிறப்புக்குரியது. இறைவன் இசையால் ஈர்க்கப்பட்டவர் (ஆனந்தரசன், 2005). இறைவனது கடமையையே மறக்கச் செய்யும் ஆற்றல் இசைக்கு உண்டு. தமிழோடு இசை கேட்கும் இறைவனது இச்சையாலேயே எலும்பைப் பெண்ணாக்கியது; மறைக்கதவு திறந்தது; விஷம் நீக்கி அருள் புரிந்தது; முதலையுண்ட பாலகனை மீட்டது போன்றவை நிகழ்ந்தன (திருத்தொண்டர் புராணம், 3796).

பெரிய புராணத்தில் நாயன்மார்கள் இறைவனின் அருள் திறத்தைப் புகழ்ந்து பாடும் அதே வேளையில் இவர்கள் சைவ நெறிகளையும் வாழ்வியல் நெறிகளையும் அதனுள் புகுத்தினர். மேலும், இப்பதிகங்கள் தங்கள் ஆன்மாவில் உறையும் இறைவனைக் கண்டு கொள்ளவும் உதவின. இதனால் அவர்கள் முக்தியின்பத்தையும் பெற்றனர் (குமரேசமூர்த்தி, 2004). நாயன்மார்களும் பிற அடியார்களும் பாடிய பதிகங்கள் பன்னிரு திருமுறைகளாகத்ப் பின்னாளில் தொகுக்கப்பெற்றன. இப்பதிகங்கள் பஞ்சபுராணம் என இன்றளவும் ஆலயங்களில் பாடப்பெறுகின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எனவே, நாயன்மார்களின் ஆலயத் திருப்பணிகள் சமுதாயம் சார்ந்தும் இருந்துள்ளது என்பது தெரிகிறது. இவர்களின் ஆலயத் திருப்பணிகளை இருவகையாகப் பகுத்துக் கூறலாம். முதலாவது திருக்கோயிலில் தொண்டுகள் புரிதல் என்பதாகும். அடுத்தது திருக்கோயிலைப் பராமரிப்பது என்பதாகும். இந்நாயன்மார்களுள் 11 பேர் திருக்கோயில் பணிகளிலும் ஏனைய எழுவர் திருக்கோயில் நலன் கருதியும் பணி செய்தவர்களாவர். சைவம் வலுவிழந்து சமணம் மேலோங்கியிருந்த காலத்திலும்கூட இவர்கள் தமது தொண்டிலிருந்து சற்றும் அடி பிறழாமல் செயல்படுத்தியவர்கள் என்கிறார் ஆறுமுகம் (1989). **அட்டவணை 4.6** ஆலயத் திருப்பணிகள் செய்த நாயன்மார்களைப் பற்றிய சிறு விவரங்களைத் தொகுத்தளிக்கிறது.

அட்டவணை 4.6

ஆலயத் திருப்பணிகள் ஆற்றிய நாயன்மார்கள்

எண்	பெயர்	குறிப்புகள் / தொண்டுகள்
1	மூர்த்தியார்	மூர்த்தியார் வணிக மரபினர். இவர் பாண்டிய நாட்டின் மதுரையம்பதியில் வாழ்ந்தவர். இவரது காலம் கி.பி. 400-600. இவர் இறைவனுக்குச் சந்தனக்காப்பு அணிவிக்கும் பணியை இடையறாது செய்தவர். சந்தனக்கட்டைகள் கிடைக்காத சமயத்தில் தம் முழங்கையைச் சந்தனப்பாறையில் தேய்த்தவர்.
2	கலியர்	கலியர் வணிக மரபைச் சேர்ந்தவர். இவரது ஊர் தொண்டை நாட்டைச் சேர்ந்த திருவொற்றியூர். இவரது காலம் கி.பி. 660-840. இவர் ஆலயத்தில் திருவிளக்கு எரித்தவர். வறுமை காலத்தில் விளக்கேற்றத் தம் மனைவியையும் விற்கத் துணிந்தவர். உதிரத்தால் விளக்கெரிக்க தலையை அறுக்க முற்பட்டபோது சிவனால் ஆட்கொள்ளப்பட்டவர்.
3	கோட்புலியார்	கோட்புலியார் வேளாளர் மரபினைச் சேர்ந்தவர். இவர் சோழ நாட்டைச் சேர்ந்த திருநாட்டியதான்குடி எனும் ஊரைச் சேர்ந்தவர். இவரது காலம் கி.பி. 840-865. இவர் சோழ மன்னரின் படைத்தளபதியாவார். அரசனிடமிருந்து பெற்றச் செல்வத்தைச் சிவன் கோயில்தோறும் திருவமுதின் படிபெருகச் செந்நெல்லைக் குவித்தவர். சிவனடியார்களுக்கென வைத்திருந்த செந்நெல்லை உறவினர்கள் திருடியதால் அவர்களைக் கொன்றவர்.
4	கணம்புல்லர்	கணம்புல்லர் சோழ நாட்டைச் சேர்ந்த வேளூர் எனும் பகுதியில் வாழ்ந்தவர். இவரது காலம் கி.பி. 400-600. இவர் கணம் புல்லை விற்று எண்ணெய் வாங்கி ஆலயத்தில் விளக்கெரித்தவர். வறுமை வாட்டியக் காலத்தில் தமது தலைமுடியையே திரியாக்கி

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

		விளக்கெரித்தவர்.
5	இசைஞானியார்	இசைஞானியார் ஆதி சைவ மரபினைச் சேர்ந்தவர். இவர் நடுநாட்டைச் சேர்ந்த திருநாவலூரில் வாழ்ந்து வந்தார். இவரது காலம் கி.பி. 840-865. இவர் சுந்தரரை உலகுக்கு ஈன்றளித்தவர். திருக்கோயில் தொண்டில் தம் வாழ்நாளைக் கழித்தவராவார்.
6	திருநாவுக்கரசர்	திருநாவுக்கரசர் வேளாளர் மரபினர். இவரது ஊர் தொண்டை நாட்டைச் சேர்ந்த திருமுனைப்பாடி. இவரது காலம் கி.பி. 600-660. இவர் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறியவர். தொண்டிற்கு இலக்கணம் வகுத்தவர். சிவாலயங்கள்தோறும் பதிகம் பாடி உழவாரத் தொண்டு புரிந்தவர்.
7	மங்கையர்கரசியார்	மங்கையர்கரசியார் அரச மரபினைச் சேர்ந்தவர். இவர் பாண்டிய நாட்டின் மதுரையைச் சேர்ந்தவர். இவரது காலம் கி.பி. 600-660. பாண்டிய மன்னனைச் சமணத்திலிருந்து மாற்றி மீண்டும் சைவம் தழைக்கச் செய்தவர். கோயில் திருப்பணிகளில் இன்பம் கண்டவர்.
8	திருநீலகண்ட யாழ்ப்பாணர்	திருநீலகண்ட யாழ்ப்பாணர் பாணர் மரபைச் சேர்ந்தவர். இவர் சோழ நாட்டைச் சேர்ந்த எருக்கத்தம்புலியூரில் வாழ்ந்தவர். இவரது காலம் கி.பி. 600-660. இவர் திருஞானசம்பந்தருடன் இணைந்து திருத்தலங்களில் யாழ் வாசித்தவர். பஞ்சாட்சரத்தையும் யாழில் வாசித்தவர்.
9	முருகர்	முருகர் பிராமண மரபைச் சேர்ந்தவர். இவர் சோழ நாட்டைச் சேர்ந்த திருப்புகலூரே இவரது ஊர். இவரது காலம் கி.பி. 600-660. இவர் பலவகை மலர்களைக் கொய்து மாலைகள் கட்டி இறைவனுக்குச் சாற்றுவார்.
10	நமிநந்தியடிகள்	நமிநந்தியடிகள் பிராமண மரபைச் சேர்ந்தவர். இவரது ஊர் சோழ நட்டின் ஏமப்பேரூர். இவரது காலம் கி.பி. 400-600. இவர் சிவாலயங்களில் விளக்கு ஏற்றியவர். சமணர்களின் பரிகாசத்திற்கு ஆளான இவர் சிவனருளால் குளத்து நீரைக் கொண்டு விளக்கேற்றியவர்.
11	ஏயர்கோன் கலிகாமர்	ஏயர்கோன் கலிகாமர் வேளாளர் மரபைச் சேர்ந்தவர். இவரது ஊர் சோழ நாட்டைச் சேர்ந்த பெருமங்கலம். இவரது காலம் கி.பி. 840-865. இவர் சோழர் சேனைத் தலைவர். சிவாலயங்களில் தொண்டாற்றி வந்தவர். சுந்தரரை வெறுத்து அவரைப் பார்க்க மறுத்து தம் உயிரை மாய்த்துக் கொண்டவர்.
12	குங்கிலியக் கலயர்	குங்கிலியக் கலயர் பிராமண மரபைச் சேர்ந்தவர். இவரது ஊர் சோழ நாட்டைச் சேர்ந்த திருக்கடவூர். இவரது காலம் கி.பி. 600-660. இவர் சிவபெருமானுக்குத் தூபமிடும் பணியைச் செய்தவர். வறுமையிலும் தம் மனைவியின் தாலியை விற்றுத் தூபமிட்டவர். மேலும், திருப்பனந்தாளில் சாய்ந்திருந்த லிங்கத்தை சரிசெய்து நேர் நிறுத்தியவர்.
13	திருநாளைப் போவார்	திருநாளைப்போவார் பறையர் குலத்தைச் சேர்ந்தவர். சோழ நாட்டைச் சேர்ந்த ஆதனூரே இவரது ஊர். இவரது காலம் கி.பி. 660-840. சிவாலயங்களுக்குத் தோல், வார் முதலியவற்றைக் கொடுத்துதவியவர். திருபுன்கூர் நந்தியை விலகச் செய்தவர். பல தலங்களைத் தரிசித்துச் சிதம்பர தரிசனம் கண்டவர். தீயில் மூழ்கி புகழ் உடம்பு பெற்றவர்.
14	சடையனார்	சடையனார் ஆதி சைவ மரபினர். இவர் நடுநாட்டைச் சேர்ந்த திருநாவலூரில் வாழ்ந்தவர். இவரது காலம் கி.பி. 840-865. இவர்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

		சுந்தரரின் தந்தையாவார். இடைவிடாது திருக்கோயில் பணி செய்தவர்.
15	காரியார்	காரியார் சோழ நாட்டைச் சேர்ந்தவர். இவரது ஊர் திருக்கடவூர். இவரது காலம் கி.பி. 660-840. இவர் மூவேந்தர்களிடமும் காரிகோவை பாடி அதன் மூலம் ஈட்டிய நிதியைக் கொண்டு சிவாலயங்கள் அமைத்தவர்.
16	கோட்செங்கட் சோழர்	கோட்செங்கட்சோழர் அரச மரபினைச் சேர்ந்தவர். இவரது ஊர் சோழ நாட்டைச் சேர்ந்த சிதம்பரம். இவரது காலம் கி.பி. 400-600. இவர் சிவபக்தியின் பொருட்டு சிவாலயங்களைக் கட்டித் தந்தவர். மேலும், தீட்சிதர்களுக்கு மாளிகைகள் கட்டித் தந்தவர்.
17	கணநாதர்	கணநாதர் பிராமண மரபைச் சேர்ந்தவர். இவரது ஊர் சோழ நாட்டைச் சேர்ந்த சீர்காழி என்பதாகும். இவரது காலம் கி.பி. 600-660. இவர் ஆலயங்களில் சரியை தொண்டை மேற்கொண்டவர். சைவப் பணிகளுக்கு ஆட்களைப் பயிற்றுவித்தவர். திருஞானசம்பந்தரை பூஜிக்கும் பேறு பெற்றவர்.
18	தண்டியடிகள்	தண்டியடிகள் சோழ நாட்டைச் சேர்ந்த திருவாரூரில் வாழ்ந்தவர். இவரது காலம் கி.பி. 400-600. குருடராயிருந்தபோதும் கோயில் தொண்டு புரிந்தவர். சமணர்களுடைய பாழிகளை அழித்துக் குளங்களை நிறுவியவர். மேலும், சமணரோடு வாதிட்டுக் கண் பெற்றவர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேற்குறிப்பிடப்பட்ட நாயன்மார்களுள் சிலர் ஒன்றுக்கும் மேற்பட்ட ஆலயத் திருப்பணிகளில் ஈடுபாடு காட்டியும் வந்துள்ளனர். இவர்களின் ஆலயத் திருப்பணிகளுக்குத் தடை வந்தபோது தங்கள் உயிரையும் பெரிதென எண்ணாமல் துறந்துவிடத் துணிந்தவர்கள் இவர்களின் இந்த பக்தியே உலகியல் துன்பங்களிலிருந்து விடுபட்டு முக்தியடையவும் வழிவகுத்தது (வெள்ளைவாரணர், 2016). இதற்குச் சான்றாகக் கணநாதரின் வரலாறும் குங்கிலியக் கலயரின் வரலாறும் விவரிக்கப்படுகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.4.4.1 கணநாதர்.

சோழ நாட்டில் சீர்காழியில் அவதரித்தவர் கணநாதர். இவர் மறையவர் குலத்தில் தோன்றியவர். கணநாதர் திருத்தோணியப்பருக்கு நாள்தோறும் திருப்பணிகள் செய்வதில் இன்புற்று வந்தார். இறைபணிகளில் விருப்பம் கொண்டு செயல்படும் சிவனடியார்களுக்குக் கைத்திருத்தொண்டுகளைப் பயிற்றுவிப்பதில் திறமையானவர்.

நல்ல நந்தவனப் பணி செய்பவர் நறும் துணர் மலர் கொய்வோர்
பல் பணித் தொடை புனைபவர் கொணர் திருமஞ்சனப் பணிக்கு உள்ளோர்
அல்லும் நன் பகலும் திருஅலகிட்டுத் மெழுக்கு அமைப்போர்கள்
எல்லை இல் விளக்கு எரிப்பவர் திருமுறை எழுதுவோர் வாசிப்போர்
(தி.தொ.பு. 3925)

(**விளக்கம்**: நல்ல திருநந்தனவனத்தின் பணி செய்வோரும், நறிய துணர்களில் பூத்த மலர்களைக் கொய்வோர்களும், பலவகைப்பட்ட மலர் மாலைகளைப் புனைபவர்களும், சென்று திருமஞ்சன நீரினைக் கொணரும் பணிக்கு உள்ளவர்களும், இரவும் பகலுமாகத் திருவலகும் திருமெழுக்கும் அமைப்போர்களும், அளவு படாத திருவிளக்கு எரிப்பவர்களும், திருமுறைகளை எழுதுவோர்களும், அவற்றை வாசிப்பவர்களும்.
(வி-ரை) நல்ல...பணி செய்பவர் - நல்ல - நன்மையாவது இறைவரை அலங்கரிக்க வாய்த்த புனிதமாகிய செடி மரம் கொடிகளை வளர்த்தலும் காத்தலும் சிவன்பணிக்குப் பயன்படுத்தலும் ஆகிய இவை தீமை கலவாத, கருணையே உருவுடைய, பணி என்னும் தன்மை; செய்பவர் - நிலம் பண்படுத்தல், விதை - நாற்று முதலியவை நடுதல், நீர்பாய்ச்சுதல். களை கட்டல் முதலாயினவை செய்தல் எனப்பட்டன. பின்னர், அவ்வப்பணிகளின் தொழில்வகைக் கேற்றபடி மலர் கொய்வோர் - தொடைபுனைபவர் - மஞ்சனப் பணிக்கு உள்ளோர் - அமைப்போர்கள் - எழுதுவோர் - வாசிப்போர் என்பது காண்க.)

என்பதற்கேற்ப நந்தவனத்தில் பணி செய்தல், மலர்களைக் கொய்தல், திருமஞ்சனத்திற்கு நீர் கொண்டு வருதல், திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், திருவிளக்கு எரித்தல், திருமுறைகளை எழுதுவித்தல், அவற்றைப் படித்தல் போன்ற பல தொண்டுகளில் ஈடுபட விரும்பும் தொண்டர்களுக்குப் பயிற்சியளித்தவர்.

இந்நாயனாரின் திருத்தொண்டு சரியை தொண்டேயாகும் என்கிறார் கிருபானந்த வாரியார் (2003). இந்நாயனார் திருத்தொண்டர்களை உருவாக்குவதிலும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அடியவர்களை வழிபடுவதிலும் தம் வாழ்நாள் முழுவதையும் செலவழித்தார். நாயனார் திருஞானசம்பந்தரைப் போற்றி வழிபட்டவர். தினமும் மூன்று வேளையும் திருஞானசம்பந்தரின் திருவடிகளை வணங்கி அர்ச்சனை செய்து வந்தார். திருஞானசம்பந்தரைச் சிவமாகவே எண்ணி வழிபட்டார். இதுவே அவரைக் கணங்களின் தலைவராக உயர்த்தியது. இதனையே சேக்கிழாரும்,

> ஆன தொண்டினில் அமர்ந்த பேர் அன்பரும் அகல் இடத்தினில் என்றும்
> ஞானம் உண்டவர் புண்டரீகக் கழல் அருச்சனை நலம் பெற்றுத்
> தூநறும் கொன்றை முடியவர் சுடர் நெடும் கயிலை மால் வரை எய்தி
> மான நல் பெரும் கணம் களுக்கு நாதர் ஆம் வழித் தொண்டின் நிலை பெற்றார்
> (தி.தொ.பு. 3928)

(**விளக்கம்**: ஆன...அன்பரும் - ஆயின முன்கூறிய திருத்தொண்டில் விரும்பியிருந்த பேரன்பராகிய கணநாதரும்; அகலிடத்து...பெற்று - பரந்த நிலவுலகத்தில் எந்நாளும் திருஞானசம்பந்தரது தாமரை போன்ற திருவடியினை வழிபடுதலாகிய நன்மையினை அடைந்து அதன் பயனாக; தூ....எய்தி - தூயமணமுடைய கொன்றை மலர்களை அணிந்த முடியவரது ஒளியுடைய நீண்ட திருக்கயிலைப் பெருமலையினை அடைந்து; மான....நிலைபெற்றோர் பெருமையுடைய நல்ல பெருஞ் சிவகணங்களுக்கு நாதராகும் வழி வழி வரும் திருத்தொண்டிலே நிலைபெற்று நின்றருளினர்.)

எனப் போற்றுகிறார்.

மலர்களைக் கொய்து அவற்றைத் திருக்கோயிலுக்குக் கொடுப்பது எல்லையற்ற புண்ணியத்தைச் சேர்க்கும் என்பது சைவம் உணர்த்தும் உண்மை என்கிறார் சோமசுந்தரம் (2001). இத்தகைய தொண்டு கோயிலுக்கு வரும் அடியார்களுக்கும் நன்மையைத் தரும். அதனாலேயே இவ்வழக்கம் இன்றளவும் மக்களால் பின்பற்றப்பட்டு வருகின்றது (சம்பந்தன், 2004). எனவே, நந்தவனம் அமைத்துத் திருக்கோயிலுக்கு வேண்டிய மலர்களைத் தினமும் கொடுத்து வந்த கணநாதரின் திருப்பணி போற்றுதற்குரியது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேலும், பதிகங்களும் போற்றிகளும் ஆலயப் பூசனையின் முக்கியக் கூறுகளாகும் என்பது சரவணபவன் (1986) என்பவரின் கருத்து. அதன் காரணமாகவே அடியார்கள் பலரும் இறைவனைத் துதித்துப் பாடி தங்களின் பக்தியை வெளிக்காட்டினர். பதிகங்களைப் பாராயணம் செய்வது உள்ளத்தை ஒருநிலைப்படுத்தி இறைவன்பால் சித்தத்தைச் செலுத்தவும் நல்ல வாய்ப்பாகவும் அமையும் என்கிறார் தர்மலிங்கம் (2012). அதனால்தான் கணநாதர் பதிகங்கள் பாடித் தாம் மட்டும் இன்புற்றிருப்பதைத் தவிர்த்து மற்றவர்களும் இறைவனைப் பாடிப் பணிந்திடத் தொண்டுகள் புரிந்தார்.

சோமாசிமாறரின் திருத்தொண்டு சுந்தரரின் வழிபாட்டில் முழுமையடைந்ததுபோல் கணநாதரின் திருத்தொண்டும் சம்பந்தரின் வழிபாட்டில் முழுமை பெற்றது. அடியவர்களின் விருப்பம் அறிந்து அவர்களைத் திருத்தொண்டில் ஈடுபடுத்தியதே இந்நாயன்மார் செய்த அரியச் செயலாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொண்டரை யாக்கி யவரவர்க் கேற்ற தொழில்கள் செய்வித்
தண்டர்தங் கோனக் கணத்துக்கு நாயகம் பெற்றவன்காண்
கொண்டல்கொண் டேறிய மின்னுக்குக் கோல மடல்கள் தொறும்
கண்டல்வெண் சோறளிக் குங்கடல் காழிக் கணநாதனே
(திருவந்தாதி, 45)

எனும் நம்பியாண்டார் நம்பியின் புகழுரை மூலம் அறிய முடிகிறது. பொதுத் தொண்டாலும் வீடு கிடைக்கும் என்னும் நாலடியாரின் கூற்றுக்கேற்பக் கணநாதரின் தொண்டு சிவ வழிபாடு, அடியார் வழிபாடு, சம்பந்தர் வழிபாடு என மூன்று கூறுகளை உள்ளடக்கியிருந்தது. இதுவே இந்நாயனாருக்குக் கணநாதர் என்ற பெரும்பேற்றோடு வீடுபேற்றையும் நல்கியது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.4.4.2 குங்கிலியக் கலயர்

சோழவள நாட்டைச் சேர்ந்த திருக்கடவூர் நீவளமும் நிலவளமும் ஒருங்கே அமையப்பெற்ற ஊராகும். அவ்வூரில் அந்தணர் மரபில் தோன்றியவரே குங்கிலியக் கலயர். இவர் சிவபெருமானின் திருவடிகளை எப்பொழுதும் போற்றிப் பணிந்து வந்தார். சிவாலயத்தில் மணம் கமழும் குங்கியத் தூபமிடும் பணியையே இறைதொண்டாகச் செய்து வந்தார்.

சேக்கிழார் இத்திருத்தொண்டினை,

> பாலன்ஆம் மறையோன் பற்றப் பயம்கெடுத்து அருளும் ஆற்றால்
> மாலும் நான்முகனும் காணா வடிவு கொண்டு எதிரே வந்து
> காலனார் உயிர் செற்றார்க்குக் கமழ்த குங்கியத் தூபம்
> சாலவே நிறைது விம்ம இடும் பணி தலை நின்றுள்ளார்
> (திரு.தொ.பு. 841)

(**விளக்கம்**: (அவர்), பாலனாகிய மறையவராம் மார்க்கண்டேய முனிவர் பற்றிக்கொண்டதனால் அவரது பயமுழுதுங் கெடுத்து அருள் செய்தவாற்றினால் விட்டுணுவும் பிரமதேவனும் காணாத வடிவினைக்கொண்டு வெளிப்பட்டு வந்து காலனை உதைத்துருட்டி உயிர் போக்கிய அமிர்தகடேசராகிய சிவபெருமானுக்கு மணம்மிக்க குங்குலியத்தூபத்தை மிகவும் நிறைந்து வீசும்படியாக இடுகின்ற திருப்பணியிற் சிறந்து நின்றவராயினார்.)

என வருணிக்கின்றார். இறைவனின் திருவுளம், நாயனாரை வறுமை வாட்டியது. நாயனாரும் அவரது சுற்றத்தாரும் பட்டினியால் வாடினர். ஆனால், தமது இறைதொண்டிலிருந்து சற்றும் பின்வாங்காது எல்லா பொருள்களையும் விற்றுக் குங்கியத் தூபமிடும் பணியைத் தொடர்ந்து ஆற்றி வந்தார்.

ஒருநாள் நாயனாரின் மனைவியார் உறவினர்களின் பசியைப் போக்க தமது திருமாங்கல்யத்தைக் கொடுத்து விற்று வரச்சொன்னார். இதனைக்,

> காதல்செய் மனைவியார் தம் கணவனார் கலயனார் கைக்
> கோது இல் மங்கல் நூல் தாலி கொடுத்து நெல் கொள்ளும் என்றார்
> (தி.தொ.பு. 844)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

(**விளக்கம்**: காதலையுடைய மனைவியார் தமது கணவராகிய கலயனாரது கையில் குற்றமில்லாத மங்கலநூற் றாலியைக் கொடுத்து "இதற்கு நெல் வாங்கி வாரும்" என்று சொன்னார்.)

எனும் பாடல்வழி அறியலாம். மாங்கல்யத்தை விற்கச் சென்ற நாயனார் வழியில் ஒரு வணிகனைக் கண்டார். தம்மிடமிருந்த மாங்கல்யத்தைக் கொடுத்து அவ்வணிகனிடமிருந்த குங்கிலியப் பொதியினைப் பெற்றுக் கொண்டார். மகிழ்ச்சி பொங்க ஆலயத்தை அடைந்து அதனைப் பண்டகச்சாலையில் வைத்தார். முன்போல் குங்கிலியத் தூபப் பணியைச் சிரத்தையுடன் மேற்கொண்டார். இறைவன் அருளால் நாயனாரின் வீட்டில் பொன்னும் மணியும் நிரம்பியது. நாயனாரின் மனைவியார் எம்பிரான் அருள் என்று அமுது செய்யும் பணியை மேற்கொண்டார். பின் நாயனாரிடமும்,

சாலநீ பசித்தாய் உன் தன் தட நெடு மனையில் நண்ணிப்
பால்இன் அடிசில் உண்டு பருவரல் ஒழிக என்றார்
(தி.தொ.பு. 852)

(**விளக்கம்**: "நீ மிகப்பசித்தாய்; உனது விசாலமாகிய பெரிய வீட்டிற் சேர்ந்து பாலுடன் கலந்த இனிய உணவை உண்டு பசித்துன்ப நீங்குவாயாக" என்றருளிச்செய்தார்.)

எனச் சிவபெருமான் திருவருள் புரிந்தார். நாயனார் இறைவனின் திருவருளை வியந்து சிவனடியார்களுக்கு நல்லுணவு அளித்து வந்தார்.

அடியாரின் திருப்பணி தொடர்ந்து வரும் நாளில் இறைவன் திருப்பனந்தாளில் சடையப்பன் தாடகை எனும் பெண்ணுக்காகச் சாய்ந்து நின்றதை அறிந்தார் அந்த லிங்கத்தினை நிமிர்த்தி வணங்க நினைத்த அரசனின் முயற்சிகளும் பயனற்றுப் போயின. இதைக் கேள்வியுற்ற நாயனார் திருப்பனந்தாள் சென்றார். லிங்கத்தை நிமிர்த்தும் பொருட்டு இறைவனைச் சுற்றி வலியக் கயிற்றைக் கட்டித் தம் கழுத்தில் அதைச் சுற்றி அன்பு மேலிட இழுத்தார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தேன் அலர் கொன்றையார் தம் திருமேனி பூங்கச் சேய்ந்த
மான வன் கயிறு பூண்டு கழுத்தினால் வருந்தல் உற்றார்
(தி.தொ.பு. 862)

(**விளக்கம்**: தேன் நிறைந்து அலர்கின்ற கொன்றை யணிந்த இறைவனது திருமேனியிற் பூண்ட பூங்கச்சிற்பொருந்திய பெரியவலிய கயிற்றைப் பூட்டித் தமது கழுத்தினால் வருந்தி இழுக்கத் தொடங்கினார்.)

எனும் பாடலில் நாயனாரின் அன்பின் திறத்தைச் சேக்கிழார் பாடியுள்ளார். இறைவன் நாயனாரின் கழுத்து அறுபடுமே என்று நேராக நிமிர்ந்து நின்றார். மன்னனும் நாயனாரை வணங்கி செய்ய வேண்டிய திருப்பணிகளை முடித்துவிட்டு அங்கிருந்து அகன்றான். அதன்பின் கலயனார் சிதம்பரத்தில் சில காலம் தங்கி நடராசப் பெருமானை வணங்கினார். பின் மீண்டும் திருக்கடவூர் சென்று தம் திருப்பணியைத் தொடர்ந்தார். அந்நாளில் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் திருக்கடவூருக்கு வந்ததையறிந்து அவர்களை வரவேற்று அன்போடு திருவமுது செய்வித்தார். இதனைச் சேக்கிழார்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சில பகல் கழிந்த பின்பு திருக்கடவூரில் நண்ணி
நிலவு தம் பணியில் தங்கி,நிகழும் நாள் நிகரில் காழித்
தலைவராம் பிள்ளாஇயாரும் தாண்டகச் சதுரராகும்
அவர் புகழ் அரசும் கூட அங்கு எழுந்து அருளக் கேட்டு
(தி.தொ.பு. 867)

(**விளக்கம்**: சில நாள்கள் கழிந்த பின்பு அங்கு நின்றும் போந்து திருக்கடவூரிற் சேர்ந்து நிலைபெற்ற தமது திருப்பணியில் ஒழுகி வருகின்ற நாட்களிலே ஒப்பற்ற சீர்காழித் தலைவராகிய ஆளுடைய பிள்ளையாரும் தாண்டக வேந்தராகிய மிக்குப் பெருகும் புகழுடைய ஆளுடைய அரசுகளும் ஒன்றாக அங்கு எழுந்தருளக் கண்டு,)

மாறு இலா மகிழ்ச்சி பொங்க எதிர் கொண்டு மனையில் எய்தி
ஈறு இலா அன்பின் மிக்கார்க்கு இன் அமுது ஏற்கும் ஆற்றால்
ஆறு நல் சுவைகள் ஓங்க அமைத்து அவர் அருளே அன்றி
நாறு பூங்கொன்றை வேணி நம்பர் தம் அருளும் பெற்றார்
(தி.தொ.பு. 868)

(**விளக்கம்**: நிகரில்லாத மகிழ்ச்சி பொங்க அவர்களை எதிர் கொண்டு சென்று அழைத்து வந்து, தமது திருமனையில் எய்தி, எல்லையில்லாத அன்பின் மிக்க ஆறு சுவைகளும் பொருந்த அமைத்து ஊட்டி, அவர்களது திருவருளினைப் பெற்றதேயன்றி, மணமுடைய அழகிய கொன்றைமல ரணிந்த இறைவருடைய திருவருளினையும் பெற்றார்.)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எனப் பகர்கின்றார். நாயனர் மேலும் பல திருப்பணிகளைச் செய்து இறைவனின் திருவடி நீழலை அடைந்தார்.

பூஜைகள் இயற்றுவோர் தூபமிடுவதன்வழி எண்ணற்ற நன்மைகளைப் பெறுகின்றனர் என்கிறார் கிருபானந்த வாரியார் (2003). இதனால்தான் தூபமிடுதல் ஆலயப் பூசனைகளில் முக்கிய அங்கம் வகிக்கின்றது. ஆலயங்களில் மட்டுமல்லாது இல்லப் பூசனைகளிலும் தூபமிடுதல் வழக்கத்திலுள்ள முறையாகும்.

பெரும்புல்லார் காலை மூழ்கிப் பித்தருக்கு பத்தராகி
அரும்போடு மலர்கள் கொண்டங்கார் வத்தையுள்ளே
விரும்பி நல் விளக்குத் தூபம் விதியினால் இடவல் வார்க்கு
கரும்பினிர் கட்டி போல்வார் கடவூர் வீரட்டனாரே

(திருமுறை 4:31:4)

(**விளக்கம்**: வைகறையாமத்தில் நீராடிப் பெருமானிடத்தில் பத்தர்களாகி அரும்புகளையும் மலர்களையும் முறைப்படி பறித்துக் கொண்டு உள்ளத்தில் அன்பை ஆக்கி விருப்பத்தோடு நல்ல விளக்குகளையும் தூபங்களையும் முறைப்படி இட்டு வழிபடவல்ல அடியவர்களுக்குக் கருப்பங்கட்டி போல இனிப்பவராவார் கடவூர் வீரட்டனார்.)

எனும் திருநாவுக்கரசரின் பாடல் தூபமிடுவோரின் வாழ்வு சிறக்கும் என்பதனை விளக்கி நிற்கிறது.

இதுவே குங்கிலியக் கலயனாரின் திருத்தொண்டுக்கு அடிப்படையாகவும் அமைந்தது. தினந்தோறும் மக்கள் கூட்டம் அலைமோதும் திருக்கோயில்கள் எப்போதும் தூய்மையாய் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்கிறார் சம்பந்தன் (2004). ஆகவே, தூபமிடுவதன் மூலம் இதமான மணம் கமழச் செய்தது மட்டுமல்லாது காற்றில் கலந்து வரும் விஷ ஜந்துகள் மக்களைத் தாக்காதிருக்கவும் தொண்டாற்றியுள்ளார் கலயர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேலும், தூப மணம் நீண்ட நேர தியானத்திற்கு உதவும் எனக் கூறுகிறார் தர்மலிங்கம் (2012). அந்த வகையில் தூபமிடும் கலயரின் சரியை தொண்டு கோயில்களில் தவம் இயற்றுவோருக்கும் பெரும் பங்காற்றியுள்ளது. எனவே, குங்கியக் கலயர் ஆலயத்தில் தூபமிடும் பணியை மேற்கொண்டாலும் அஃது அடியார்களின் நல்வாழ்விற்கும் வித்திட்டுள்ளது. இதன் மூலம் இறைவனுக்கும் தொண்டு செய்து திருவடி பேறு பெற்றார்.

4.4.5 பிறத் தொண்டுகள்

பெரிய புராணம் முழுவதும் நாயன்மார்களின் பக்தித் திறம் பரவியிருப்பதைக் காண முடிகின்றது என்கிறார் குமரன் இராமையா (2015). அடியார்களுக்கு அமுது படைத்தல், பொருளுதவி செய்தல், உடல் உழைப்பால் தொண்டுகள் புரிதல், ஆலயத் திருப்பணிகள் செய்தல் ஆகியன தவிர்த்துத் தாம் கொண்ட கொள்கையிலிருந்து பிறழாது உறுதியுடன் நின்ற நாயன்மார்களைப் பற்றியும் பெரிய புராணம் பேசுகிறது.

இந்நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றை ஆய்வு செய்கையில் ஏதாகிலும் ஒரு விரதத்தைத் தம் வாழ்நாள் முழுமையும் கடைபிடித்து வந்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது. இவர்களை இறைவன் பல்வேறு சோதனைகளுக்கு உட்படுத்திய பின்னரே ஆட்கொண்டார் என்பதையும் நம்மால் காண முடிகிறது (இலங்கேஸ்வரி அர்ச்சுனன், 2015). இச்சோதனைகள்தாம் நாயன்மார்களின் பக்தித் திறத்தினை உலகுக்கு உணர்த்தி நிற்கின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பொதுவாக, மும்மலங்களே மானிடர்கள் உலக வாழ்க்கையில் அனுபவிக்கும் இன்னல்களுக்குக் காரணமாக அமைகிறது (தனபாக்கியம், 2007). இருப்பதைக் கொண்டு திருப்தி அடையாத மனது மனிதர்களுடையது. அவர்களின் தேவைகள் நாளுக்கு நாள் பெருகுமே ஒழிய குறைவதில்லை. ஆனால், பெரிய புராணத்தில் சுட்டப்படும் நாயன்மார்கள் ஆசைகளை ஒழித்துச் சிவசிந்தனையில் சித்தத்தைச் செலுத்தியவர்கள் ஆவர். எத்தகைய இடர் வரினும் தங்களது கொள்கையிலிருந்து மாறாதவர்கள். இதன்வழி, கொள்கை பிடிப்பிலிருந்து பின்வாங்காத பாமரர்களும் இறைவனை அடையலாம் என்பதை நாயன்மார்கள் நிரூபித்தனர்.

பெரிய புராணத்தின் அடிப்படையில் 15 நாயன்மார்கள் தமது கொள்கை பிடிப்பிலிருந்து விலகாமல் இறை தொண்டு ஆற்றியுள்ளனர் என்பது தெரிகிறது. **அட்டவணை 4.7** சரியை மார்க்கத்தில் பக்தி வைராக்கியத்தில் திளைத்த நாயன்மார்களின் வரிசையைக் காட்டுகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அட்டவணை 4.7

பிறத் தொண்டுகளாற்றிய நாயன்மார்கள்

எண்	பெயர்	குறிப்புகள் / தொண்டுகள்
1	இயற்பகையார்	இயற்பகையார் வணிக மரபைச் சேர்ந்தவர். இவர் சோழ நாட்டைச் சேர்ந்த புகார் எனும் ஊரைச் சேர்ந்தவர். இவரது காலம் கி.பி. 660-840. சிவனடியார்கள் எதனை வேண்டி நின்றாலும் இல்லையெனாது கொடுத்து வந்தார். ஒருநாள் சிவபெருமான் அடியார் வேடம் பூண்டு நாயனாரின் மனைவியை யாசிக்க சற்றும் தயங்காமல் மனைவியைத் தரத் துணிந்தவர். இயற்கைக்குப் புறம்பான அவரது செயலை எதிர்த்த தம் உறவினர்களையும் வெட்டி வீழ்த்தியவர்.
2	மெய்ப்பொருளர்	மெய்ப்பொருளர் அரச மரபினைச் சேர்ந்தவர். இவர் நடுநாட்டைச் சேர்ந்த திருக்கோவிலூரில் வாழ்ந்தவர். இவரது காலம் கி.பி. 660-840. இவர் சிவ வேடத்திற்கு மதிப்புக் கொடுத்தவர். தம்மிடம் பகைமை கொண்டிருந்த முத்தநாதன் சிவ வேடம் பூண்டு அரண்மனையினுள் நுழைந்து தம்மைக் கத்தியால் குத்திய போதிலும் அவனைப் பாதுகாப்பாக அனுப்பி வைத்தவர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

3	விறன்மிண்டர்	விறன்மிண்டர் வேளாளர் மரபைச் சேர்ந்தவர். இவர் சேர நாட்டின் செங்குன்றூரைச் சேர்ந்தவர். இவர் சிவனை வணங்குமுன் சிவனடியாரை வணங்குபவர். சுந்தரரைத் தொகை பாடச் செய்தவர்.
4	எறிபத்தர்	எறிபத்தர் சோழ நாட்டைச் சேர்ந்த கருவூரில் வாழ்ந்தவர். இவரது காலம் கி.பி. 400-600. இவர் சிவப்பணியில் தம் சித்தம் முழுவதையும் செலுத்தி வந்தார். ஒருமுறை சிவனடியார் ஒருவர் பூஜைக்காகக் கொண்டு சென்ற மலர்க்கூடையை அரசரின் பட்டத்து யானை பறித்துக் கீழே தள்ளியதால் அதன் துதிக்கையை வெட்டியவர். எதிர்த்து வந்த வீரர்களையும் மற்றவர்களையும் கொன்றவர்.
5	ஏனாதிநாதர்	ஏனாதிநாதர் சான்றார் மரபைச் சேர்ந்தவர். இவர் சோழ நாட்டைச் சேர்ந்த எயினனூரில் வாழ்ந்தவர். இவரது காலம் கி.பி. 660-840. வீரர்களுக்கு வாட்பயிற்சியளித்து வந்த ஏனாதிநாதரை வீழ்த்த எண்ணினான் அதிசூரன். போரில் திருவெண்ணீறு அணிந்து சிவவேடம் பூண்டிருந்த அதிசூரனைக் கண்டு தலை வணங்கினார். அதிசூரனின் வாளால் குத்துண்டு இறந்தார்.
6	மானக்கஞ்சாறர்	மானக்கஞ்சாறர் வேளாளர் மரபைச் சேர்ந்தவர். சோழ நாட்டின் கஞ்சாறு என்பதே இவரது ஊராகும். இவரது காலம் கி.பி. 840-865. தம் மகளின் திருமணத்தின்போது மணப்பெண்ணின் கூந்தல் பஞ்சவடிக்கு ஆகுமென அந்தணர் வேடம் பூண்ட இறைவன் கேட்கக் கத்தியெடுத்து நெடுங்கூந்தலை அரிந்தவர்.
7	அரிவாள்தாயர்	அரிவாள்தாயர் வேளாளர் மரபைச் சேர்ந்தவர். இவர் சோழ நாட்டைச் சேர்ந்த கணமங்கலம் என்ற ஊரில் வாழ்ந்தவர். இவரது காலம் கி.பி.400-600. தினமும் செந்நெல்,செங்கீரை, மாவடு ஆகியவற்றைப் பிரசாதமாக இறைவனுக்கு நிவேதனம் செய்வார். வறுமை வாட்டியபோதும் தம் திருப்பணியைத் தவறாது செய்து வந்தார். ஒருநாள் கால் இடறி அவர் கொண்டு சென்ற பிரசாதம் கீழே விழ, சிவப்பூஜைக்குப் பங்கம் நேர்ந்ததெனத் தம் தலையை அரிய முயன்றவர்.
8	சாக்கியர்	சாக்கியர் வேளாளர் குலத்தைச் சேர்ந்தவர். இவரது ஊர் சோழ நாட்டைச் சேர்ந்த சங்கமங்கை. இவரது காலம் கி.பி. 400-600. இவர் பௌத்த வேடத்துடனே சிவவழிபாடு செய்தவர். மேலும், சிவலிங்கத்தின்மீது கல்லெறிந்து வழிபட்டவர்.
9	புகழ்ச்சோழர்	புகழ்ச்சோழர் அரச மரபினைச் சேர்ந்தவர். இவர் சோழ நாட்டின் உறையூரைச் சேர்ந்தவர். இவரது காலம் கி.பி. 400-600. தமக்குக் கப்பம் கட்ட மறுத்தச் சிற்றரசனுடன் போர் புரிகையில் மாண்ட வீரன் ஒருவனின் தலையில் சடைமுடி இருக்கக் கண்டார். தம் வீரர் சிவனடியார் ஒருவரைக் கொன்றதாக எண்ணி அத்தலையைப் பொற்தட்டில் சுமந்து வருந்தி நெருப்பிலே மாய்ந்தவர்.
10	சக்தியார்	சக்தியார் வேளாளர் மரபைச் சேர்ந்தவர். இவர் சோழ நாட்டைச் சேர்ந்த விரிஞ்சியூரில் வாழ்ந்தவர். இவரது காலம் கி.பி. 600-840. இவர் சிவனடியரை இகழ்பவரைக் குறட்டினால் நாவறுத்தவர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

11	ஐயடிகள் காடவர்கோன்	ஐயடிகள் காடவர்கோன் பல்லவ அரசராவார். தொண்டை நாட்டைச் செர்ந்த காஞ்சிபுரமே இவரது ஊர். இவரது காலம் கி.பி. 400-600. இவர் சைவத்தைப் பரப்பியவர். பல தலங்களைத் தரிசித்து வெண்பாக்கள் பாடியவர்.
12	நின்றசீர் நெடுமாறர்	நின்றசீர் நெடுமாறர் அரச மரபினர். பாண்டிய நாட்டைச் சேர்ந்த மதுரை இவரது ஊராகும். இவருடைய காலம் கி.பி. 600-660. இவர் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறி பெருந்தொண்டாற்றியவர்.
13	செருத்துணையார்	செருத்துணையார் வேளாளர் மரபைச் சேர்ந்தவர். இவர் சோழ நாட்டைச் சேர்ந்த ஆவூரில் வாழ்ந்தவர். இவரது காலம் கி.பி.840-865. சிவப்பூஜைக்காக இருந்த மலரை முகர்ந்த கழற்சிங்கரின் மனைவியின் மூக்கை அரிந்தவர்.
14	கழற்சிங்கர்	கழற்சிங்கரும் பல்லவ அரசராவார். இவரும் தொண்டை நாட்டைச் சேர்ந்த காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர். இவரது காலம் கி.பி. 840-865. இவரது மனைவியார் சிவப்பூஜைக்கான மலரை முகர்ந்ததால் செருத்துணை நாயனாரில் மூக்கறுபட்டார். உண்மை விளங்கியதும் தம் மனைவி என்றும் பாராமல் அவரது இரு கைகளையும் வெட்டியவர்.
15	அதிபத்தர்	அதிபத்தர் பரதவர் குலத்தைச் சேர்ந்தவர். இவரது ஊர் நாகப்பட்டிணம். இவரது காலம் கி.பி.660-840. தினமும் தாம் பிடிக்கும் முதல் மீனை இறைவனுக்கு அர்ப்பணித்து விடுவதே இவரது கொள்கை. ஒரே ஒரு மீன் கிடைத்தபோதும் அதனை இறைவனுக்காகக் கடலில் விட்டவர். இறைவனின் திருவிளையாடலால் தங்க மீன் கிடைத்தபோதும் தமது விரதபடி அதையும் கடலில் விட்ட சிறந்த பக்தர்.

மேற்குறிப்பிடப்பட்ட நாயன்மார்கள் தங்களின் கொள்கைகளில் உறுதியுடன் இருந்து சோதனைகளையும் சாதனையாக்கியவர்கள். இந்நாயன்மார்களுள் சிலர் இறைவனிடம் பக்தி செலுத்தும் வேளையில் கடின நடவடிக்கைகளைத் திண்மையாகச் செயல்படுத்தியுள்ளனர்; இன்னும் சிலர் கருணையும் மனிதநேயமும் கலந்து இறைவன்பால் பக்தி செலுத்தியுள்ளனர் என்பது குமரன் இராமையா அவர்களின் கருத்து (2015). எவ்வாறாயினும் பக்தி வைராக்கியமே இவர்களின் இறை தொண்டாக அமைந்தது; வீடுபேற்றையும் நல்கியது. இந்நாயன்மார்களுள் இருவரின் வரலாறு இங்கு விளக்கப்பட்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.4.5.1 விறன்மிண்டர்

சேர நாட்டில் வளம் கொழிக்கும் திருச்செங்குன்றூர் எனும் ஊரில் அவதரித்தவர் விறன்மிண்டர். இவர் சிவபெருமானின் திருவடிகளைப் பற்றுக் கோடாகக் கொண்டு மற்றையப் பற்றுகளை வெறுத்து ஒதுக்கிய அடியார்களிடம் அன்பு பூண்டவராக இருந்தார். அதனால், சிவனடியார்களைப் பணிந்து வணங்கிய பின்னரே சிவபெருமானை வணங்குவதைத் தம் திருத்தொண்டாகக் கடைபிடித்து ஒழுகி வந்தார். நாயனாரின் இத்திருத்தொண்டினை,

> அப்பொன் பதியின் இடை வேளாண் குலத்தை விளக்க அவதரித்தார்
> செப்பற்கு அரிய பெரும் சீர்த்திச் சிவனார் செய்ய கழல் பற்றி
> எப்பற்றினையும் அற எறிவார்;எல்லை தெரிய ஒண்ணாதார்;
> மெய்ப்பக்தர்கள் பால் பரிவுடையார்;எம்பிரானார் விறன் மிண்டர்.
> (தி.தொ.பு. 494)

(**விளக்கம்**: அந்த அழகிய பதியிலே வேளாண் குலத்தை விளக்கம் செய்ய அவதரித்தார்; சொல்லுதற்கரிய பெருஞ் சீர்த்தியுடைய சிவபெருமானாரின் சேவடிகளையே பற்றுக்கோடாகக் கொண்டு ஏனைய எல்லாப் பற்றுக்களையும் அறஎறிவார்; எல்லையிட வொண்ணாதார் உண்மை யடியார்களிடத்து அன்புமிக உடையவர்; எமது பெருமானாராகிய விறன்மிண்டர்.)

எனும் பாடல்வழி அறியலாம்.

இந்நாயனார் அகப்பற்று, புறப்பற்று நீங்கிச் சிவபெருமானின் திருவடிகளைப் போற்றித் தொழுதவர். தணியாதக் காதலுடன் திருவைந்தெழுத்தை ஓதியவர். திருநீறும் கண்டிகையும் பூண்டு சிவத்தொண்டு ஆற்றியவர்.

> இயங்கும் உலகினில் ஈசன் அடியார்
> மயங்கா வழி செல்வர் வான் உலகு ஆள்வர்
> (திருமந்திரம், 1836)

(**விளக்கம்**: ஓவாது சுழலும் இவ்வுலகினில் சிவபெருமானின் திருவடியுணர்வு கைவரப்பெற்ற சிவனடியார்கள் செந்நெறியிற் செல்வர்; சிவ உலகை ஆள்வர்.)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எனும் திருமந்திரப் பாடலுக்கேற்பச் சிவனை வழிபடும் முன்னர் சிவனடியார் திருக்கூட்டத்தை வழிபடுபவர். சிவபெருமானின் திருவடிகளைப் புகலிடமாகவும் அடைக்கலமாகவும் வழிபடும் அடியார்களையே போற்றுபவர்.

இந்நாயனார் பல தலங்களுக்கும் சென்று திருக்கூட்டத்தைத் தொழுது பின்னர் திருவாரூரை வந்தடைந்தார். அங்குத் தேவாசிரிய மண்டபத்தில் இருந்த அடியார்களைத் தொழச் சென்றார். அச்சமயம் அங்கு வந்த சுந்தரர் அடியார்களை வணங்காமல் நேரே சிவபெருமானை வணங்க கோயிலினுள் சென்றார். அதனைக் கண்டு வெகுண்ட நாயனார்,

> மருவா நின்ற சிவனடியார் தம்மைத் தொழுது வந்து அணையாது
> ஒருவாறு ஒதுங்கும் வன் தொண்டன் புறகு
> (தி.தொ.பு. 497)

(**விளக்கம்**: பொருந்தி வீற்றிருக்கின்ற சிவனடியார்களைத் தொழுது, அவர்கள்பால் வந்து அணையாமல் ஒரு புறமாக ஒதுங்கிச் செல்லும் வன்றொண்டன் புறகு)

என்றும்,

> சேண் ஆர் மேருச் சிலை வளைத்த சிவனார் அடியார் திருக்கூட்டம்
> பேணாது ஏகும் ஊரனுக்கும் பிரான் ஆம் தன்மைப் பிறை சூடிப்
> யண் ஆர் அரவம் புனைந்தார்க்கும் புறகு’
> (தி.தொ.பு. 498)

(**விளக்கம்**: சேணிடையிலும் உயர்ந்து நிறைந்த மேருமலையை வில்லாகவளைத்த சிவபெருமானடியார் திருக்கூட்டம் பேணாது செல்லும் நம்பியாரூரருக்கும் அவரை ஆண்ட தலைவராந் தன்மையுடைய, பிறையைச் சிரத்திற் சூடிப் பாம்பை அணியாக அணிந்த பெருமானுக்கும் புறகு)

என்றும் உரைத்தார். இறைவனை அடைவதற்கு அடியாரைப் பணிதலே நேர்வழி. மற்றவை அனைத்தும் சிறப்பற்றது என்பது இந்நாயனாரின் கொள்கையாகும். ஆதலால், அடியாரைப் பணியாமல் சென்ற சுந்தரரையும் இறைவனையும் ஒதுக்கி வைத்தார் நாயனார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இதைக் கேள்வியுற்ற சுந்தரர் மனம் வருந்தி அடியார்களை எங்ஙனம் போற்றுவது எனத் திகைத்தார். இறைவன் சுந்தரருக்குத் "தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என அடியெடுத்துக் கொடுத்துப் பாடச் சொன்னார். சுந்தரரும் தேவாசிரிய மண்டபத்தை அடைந்து திருத்தொண்டர் தொகையைப் பாடி அடியார்களை வணங்கினார். அதைக் கேட்டுப் பரவசமடைந்த விறன்மிண்டர் சுந்தரரின் அன்பின் திறத்தை அறிந்தார். பின்னர் நெடுங்காலம் தொண்டர் பணி செய்து சிவபதம் அடைந்து சிவகணங்களின் தலைவரானார்.

உலகில் கல்வி, செல்வம், புகழ் ஆகியவற்றால் பெருமை பெற்றவர் பலர் இருப்பினும் அவர்களைக் காட்டிலும் அடியாரே பெருமை வாய்ந்தவர் என்கிறார் ஆறுமுகம் (1989). இவர்களின் பெருமையை அளவிட முடியாது என்பதனை,

சிரங்கொள் திருத் தொண்டர்புரா ணத்தைஅள விடநம்
சேக்கிழார்க் கெளிதலது தேவர்க்கும் அரிதே
(சேக்கிழார் புராணம், 51)

சேக்கிழார் புராண ஆசிரியர் கூறுகிறார்.

அடியார் பெருமைக்கு நிகர் வேறெதுவும் இல்லை என்பதினாலேயே விறன்மிண்டர் அடியார்களைப் போற்றி வணங்கினார். விறன்மிண்டரின் தூண்டுதலே சுந்தரர் திருத்தொண்டர் தொகை பாட உதவியாக அமைந்தது. இதனால் எக்காலத்திலும் எவ்விடத்திலும் அடியார்கள் வணங்கப் பெற்றார்கள். மேலும், இதனைப் போற்றி வணங்கியவர்களும் சிறப்பு பெறுகின்றனர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

விறன்மிண்டரின் திருத்தொண்டின் சிறப்பினைச் சேக்கிழார்,

ஞாலம் உய்ய நாம் உய்ய நம்பி சைவ நல்நெறியின்
சீலம் உய்யத் திருத்தொண்டத் தொகை முன்பாடச் செழு மறைகள்
ஓலம் இடவும் உணர்வு அரீயார் அடியார் உடன் ஆம் உளது என்றால்,
ஆலம் அமுது செய்த பிரான் அடியார் பெருமை அறிந்தார் ஆர்?
(தி.தொ.பு. 499)

(**விளக்கம்**: உலகம் உய்ய, நாம் உய்ய, சைவ நல்வழியினது சீலம் உய்யத் திருத்தொண்டத் தொகையை முன்னே நம்பிகள் பாடச், செழிய மறைகள் ஓலமிட்டும் உணர்தற்கரியாராகிய சிவபெருமான் "நாம் உள்ளது அடியார்களுடனே யாம்" என்று சொல்வாரானால், விடத்தை அமுதமாக்கிய இறைவனடியார் பெருமையை யாவர் அறிந்தவர்கள்?)

இதன்மூலம், அடியார் பணியின் சிறப்பே விறன்மிண்டரின் குறிக்கோளாக அமைந்திருந்தது என்பது தெளிவாகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.4.5.2 மெய்ப்பொருளர்

மெய்ப்பொருளர் நடுநாட்டைச் சேர்ந்த திருக்கோவிலூரைச் சேர்ந்தவர். அதை ஆண்டு வந்த அரச மரபினர். இவர் திருநீறும் கண்டிகையும் அணிந்த சிவனடியார் வேடத்தையே மெய்ப்பொருளாகக் கருதியவர். ஏனைய அனைத்தும் பொய்ப்பொருள்கள் என்றிருந்தவர். மெய்ப்பொருளர் பல போர்களில் பகைவர்களை வென்று அறவழியில் நாட்டை ஆண்டு வந்தார்.

சிவாலயங்களில் ஆறுகாலப் பூசை நடப்பதற்கும் ஏழிசைப் பாடல்கள் ஓதுவதற்கும் வகை செய்தார். திருவிழாக்களும் குறைவின்றி நடைபெற ஏற்பாடுகள் செய்தார். இவையனைத்தும் ஒரு புறமிருக்கச் சிவனடியார் வேடத்தைச் சிறப்பாகப் போற்றித் திருத்தொண்டு புரிந்து வந்தார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தேடிய மாடு நீடு செல்வமும் தில்லை மன்றுள்
ஆடிய பெருமான் அன்பர்க்கு ஆவண ஆகும் என்று
நாடிய மனத்தினோடு நாயன்மார் அணைந்த போது
கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவு அறக் கொடுத்து வந்தார்
(தி.தொ.பு. 470)

(**விளக்கம்**: தமது அரசுரிமையிலே தேடியனவாகிய பொருள்களும் நீடு செல்வங்களும் திருத்தில்லையிலே ஐந்தொழி லருட்கூத்தியற்றும் பெருமானது அன்பர்க்கே யாவனவாகும் என்று நாடிய மனத்துடனே, தம்மை யாட்கொள்ளும் நாயன்மார்களாகிய அரனடியவர்கள் அணைந்தபோது கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவற அச்செல்வங்களை வேண்டுமாறு கொடுத்து வந்தார்.)

என நாயனாரின் திருத்தொண்டைக் குறிப்பிடுகின்றார் சேக்கிழார்.

இவருடைய நாட்டின் வளப்பத்தை அறிந்த முத்தநாதன் எனும் மன்னன் நால்வகை படைகளுடன் திருக்கோவிலூரின்மீது படையெடுத்து வந்தான். பலமுறை முயன்றும் தோல்வியையே தழுவினான். அதனால், வஞ்சனையால் அவரைக் கொல்ல நினைத்தான். நாயனாரின் திருநீற்றன்பையும் சிவனடியார் நேயத்தையும் உணர்ந்து சடைமுடி தரித்து உடலெல்லாம் வெண்ணீரணிந்து ஓலைச்சுவடிக்குள் சிறு வாளை மறைத்து வைத்துக் கொண்டு நாயனாரின் மாளிகையை அடைந்தான். முத்தநாதனின் சிவவேடத்தைச் சேக்கிழார்,

மெய் எல்லாம் நீறு பூசி வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினில் படை கரந்த புத்தகக் கவளி ஏந்தி
மை பொதி விளக்கே என்ன மனத்தினுள் கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடம் கொண்டு புகுந்தனன் முத்த நாதன்
(தி.தொ.பு. 473)

(**விளக்கம்**: தன் உடம்பெல்லாம் திருநீறு பூசிக்கொண்டு, சடைகளை முடித்துக் கட்டிக்கொண்டு, கையிலே படையை மறைத்துவைத்துப் புத்தகம் போற்கட்டிய புத்தகப்பையை எடுத்து ஏந்திக்கொண்டு, மையினை உள்ளே பொதிந்து வைத்து வெளியே ஒளியினைச் செய்யும் விளக்கே என்று சொல்லும்படி,மனத்தினுள்ளே வஞ்சனையைப் பொதிந்து வைத்துப் பொய்யினை மறைத்த தவவேடங் கொண்டு அந்நகரினுள்ளே முத்தநாதன் என்ற அவ்வரசன் புகுந்தனன்.)

என்கிறார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

காவலர்களும் சிவனடியார் என்றெண்ணி முத்தநாதனை உள்ளே அனுமதித்தனர். மன்னர் உறையும் இடத்தில் காவலிருந்த தத்தன் " இது மன்னர் அரசியுடன் துயில் கொள்ளும் நேரம்" என்றான். போலி வேடத்திலிருந்த முத்தநாதன் " மன்னருக்கு ஓர் உறுதி கூற வந்துள்ளேன். நீ ஒதுங்கி நில்" என்று கூறியவாறே உள்ளே நுழைந்தான். பதறி எழுந்த அரசியார் நாயனாரை எழுப்ப தம் கொள்கை மறவாது சிவனடியாரைப் பணிந்து வணங்கினார்.

நாயனார் "தாங்கள் இங்கு வந்த நோக்கம் யாது? தங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என வினவினார். வேடதாரியான முத்தநாதன்,

> உங்கள் நாயகனார் முன்னம் உரைத்த ஆகம நூல் மண்மேல்
> எங்கும் இல்லாதது ஒன்று கொடு வந்தேன்;இயம்ப என்றான்
> (தி.தொ.பு. 478)

(**விளக்கம்**: "உங்கள் நாயகராகிய இறைவனார் முன் சொல்லிய ஆகமநூல் இம்மண்ணுலகத்தின் மேலே எங்கும் இல்லாததாகிய ஒன்று உமக்கு இயம்புதற்காகக் கொண்டு வந்திருக்கிறேன்" என்று (முத்தநாதன்) சொன்னான்.)

எனக்கூறி நாயனாரைத் தனியே அழைத்தான். நாயனாரும் தம் மனைவியாரை அனுப்பிவிட்டுத் தரையிலமர்ந்து அதனைக் கேட்க முற்பட்டார். இதுதான் தக்கத் தருணம் என்று முத்தநாதன் வாளை எடுத்து நாயனாரை வெட்டினான். இச்செயலை,

> .... தான் முன் நினைந்த அப்பரிசே செய்ய,
> மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்
> (தி.தொ.பு. 481)

(**விளக்கம்**: முன்னர் நினைத்துவந்த அவ்வண்ணமே செய்தானாக; "உண்மைத் தவவேடமே மெய்ப்பொருளாம்" என்று தொழுது வென்றார் (அரசர்).)

எனத் தொழுது நின்றார் நாயனார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நாயனார் தரையில் சாய்கையில் தத்தன் ஓடிவந்து முத்தநாதன்மீது வாளை ஓங்கினான். நாயனார் அவனைத் தடுத்து அடியார்க்குத் தீங்கு ஏற்படாத வண்ணம் உடன்காவலாகச் சென்று அவரை விட்டுவிட்டு வரக் கூறினார்.சினம் கொண்டு வந்த மக்களைத் தடுத்து தத்தன் முத்தநாதனைப் பாதுகாப்பாக விட்டு வந்தான்.

'இன்று எனக்கு ஐயன் செய்தது யார் செய்ய வல்லார்?'
(தி.தொ.பு. 487)

(**விளக்கம்**: "இன்று எனக்கு ஐயனாகிய நீ செய்ததுபோல யாவர் செய்யவல்லவர்?) என்று தத்தனைப் பார்த்து மகிழ்ந்தார்.

பின், நாயனார் அங்குக் கூடியிருந்த அமைச்சர்களிடமும் உறவினர்களிடமும் அரசியல் ஏற்பாடு பற்றி ஒன்றும் கூறாது,

திருநீற்று அன்பு பாது காத்து உயிப்பீர்
(தி.தொ.பு. 488)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

(**விளக்கம்**: திருநீற்றினிடத்து வைத்த அன்பினையே சோர்வு வாராது பாதுகாத்து உலகிலே கொண்டு செலுத்தக் கடவீர்)

என்றார். பின்னர், நாயனார் மனக்கண்ணில் இறைவனை நினைத்தபோது சிவபெருமான் காட்சியளித்து அவரை ஏற்றுக் கொண்டார். இடைவிடாமல் தன்னை வணங்கும் சிவபதத்தையும் அளித்தார்.

பேணி அணிபவர்க்கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு என்பதற்கேற்பத் திருநீறு அணிந்த சிவவேடத்தைப் பெரிதும் போற்றி வந்தார் மெய்ப்பொருளர். அதன் காரணமாகவே சிவவேடத்திற்கு முதலிடத்தைக் கொடுத்து அரசு கடமைகளைத் தள்ளி வைத்தார். பின்னரே மனைவியையும் சுற்றத்தாரையும் எண்ணினார். எனவே, அடியார் பணிக்குப் பின்னரே அரசியல் கடமைகளும் குடும்பமும் எனும் குறிக்கோளைக் கொண்டவர் மெய்ப்பொருளர் என்பதைக் காண முடிகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஒரு சிற்றெறும்பு கடித்தாலும் மனிதன் விடுவதில்லை. அதைத் தேடிப் பிடித்து நசுக்கிக் கொன்ற பின்பே திருப்தி கொள்கிறான். ஆனால், தம் உயிர் போய்க் கொண்டிருக்கும் நிலையிலும் பகைவனுக்கும் அருள் செய்தவர் மெய்ப்பொருளர். பகைவர்க்கும் அருள வேண்டும் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டியதால் இவரின் பெருமை இன்றும் பேசப்படுகிறது. இதையே வள்ளுவரும்,

> ஒறுத்தாரை ஒன்றாக வையாரே; வைப்பர்
> பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து
>
> (குறள், 156)

எனக் கூறுகிறார்.

4.5 போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் தொண்டுகள்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

உலகம் முழுவதும் வாழும் ஒருமித்தக் கருத்துடைய மக்களின் கூட்டணியே அரசு சாரா இயங்கங்களின் தோற்றத்திற்கு முக்கியக் காரணமாக விளங்குகின்றது. இந்த மக்கள் கூட்டணி உலகளாவிய நிலையில் மட்டும் நின்றுவிடாமல் குறிப்பிட்ட ஒரு நாடு, நகரம் எனப் பல இயக்கங்களாக உருவெடுத்துள்ளது. இது போன்ற இயக்கங்கள் எவ்வித இலாபமுமின்றி மக்களின் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு இயங்கி வருகின்றன (உலக வங்கி, 1990).

அந்த வரிசையில் மலேசியா முழுவதும் பல அரசு சாரா இயங்கங்கள் சேவையாற்றி வந்தாலும் இவ்வாய்வின் எல்லை கருதியும் நேரம் கருதியும் போர்ட்டிக்சனில் செயல்படும் மூன்று அரசு சாரா இந்தியர் இயக்கங்களே ஆய்வின் பொருளாக அமைந்துள்ளன. மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை, போர்ட்டிக்சன் சமூகநல மேம்பாட்டுக் கழகம், போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நலனபிவிருத்திக் கழகம் ஆகிய மூன்று இயக்கங்கள் இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

பொதுவில், கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாக அரசு சாரா இயக்கங்கள் தொழில்சார் இயக்கங்களாக மாற்றம் கண்டு வருவதை ஆசியான் தொழில்நுட்ப நிறுவனங்களின் பணிமனை ஆய்வறிக்கை (1988) வெளியிட்டுள்ளது. அதேவேளையில் இவ்வியக்கங்கள் தம் அடிப்படைக் கொள்கையான தொண்டு நெறியிலிருந்து சற்றும் மாறாமல் செயலாற்றி வருகின்றன என்றும் அவ்வாய்வறிக்கை குறிப்பிட்டுள்ளது. அதன் அடிப்படையிலேயே போர்ட்டிக்சனில் இயங்கி வரும் மேற்குறிப்பிடப்பட்ட இம்மூன்று அரசு சாரா இந்தியர் இயக்கங்களும் தொண்டுகள் எனும் கோட்பாட்டினை முன்நிறுத்திச் செயல்பட்டு வருகின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேலும், பிறருக்குப் பயன்படும் வகையில் வாழவேண்டும் என்பதே மனிதனாகப் பிறவி எடுத்ததன் நோக்கமாக அமைய வேண்டும். விலங்குகளைப் போலன்றி ஒரு குறிக்கோளுடன் வாழும் வாழ்க்கையே சிறப்புடையதாகும். எனவே, மனிதர்களாகப் பிறந்தவர்கள் இறைவனை வழிபடுவதும் பிற உயிர்களுக்குத் தொண்டு செய்வதும் தம் கடமை என்பதை உணர வேண்டும். அவ்வாறு இறைவனிடத்தில் அடிமைத்திறம் கொண்டு அன்பு வழியில் அடியார்களுக்குத் தொண்டு செய்தவர்களே நாயன்மார்கள். இறைவனுக்குச் செய்யும் தொண்டு மக்களுக்காகவே என்பதை உணர்ந்து தங்களின் உயர்நிலையிலிருந்து இறங்கி வந்து சமுதாயம் உய்யப் பணி செய்தவர்கள்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

திருஞானசம்பந்தர் சிவபெருமானைப் பல்லாயிரம் பாடல்களால் பாடியது தமக்காக மட்டுமல்ல; மக்கள் பலரும் இறைவனைப் பாடி உய்வதற்கேயாகும் (சுப்ரமணிய முதலியார், 1954). அவ்வகையில் பெரிய புராணத்துள் வருள் நாயன்மார்கள் 63 பேரும் உண்மையில் சமயத் தொண்டர்களாக மட்டுமின்றி சமுதாயத் தொண்டர்களாவும் திகழ்ந்துள்ளனர் என்பது புலப்படுகிறது. எனவே, இறைத்தொண்டும் உயிர்த்தொண்டும் இரண்டறக் கலந்ததே சரியை எனப்படும் தொண்டுநெறி. அதன் அடிப்படையிலேயே போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சரியை தொண்டுகள் சமயத் தொண்டு, சமுதாயத் தொண்டு என இரு கூறுகளாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

4.5.1 சமயத் தொண்டு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சமயம் என்பது மனிதனைப் பக்குவப்படுத்தும் தன்மையுடையது என்கிறார் வ.பெருமாள் (1971). விலங்குணர்ச்சியுள்ள மனிதனைத் தெய்விகத்தன்மை பொருந்தியவனாக மாற்றும் தன்மை சமயத்திற்கே உரியது எனவும் அவர் கூறுகிறார். நன்னெறிக்கூறுகள் ஒன்றே மனிதனைப் பூரணத்துவம் பெற்றவனாக ஆக்கும் என்னும் உலக வங்கியின் (1990) கோட்பாடும் இதனை ஒத்திருப்பதை நம்மால் காண முடிகிறது.

மக்களின் உடல், உள வளர்ச்சிக்குச் சமயமே துணையாக நிற்கின்றது. அதன் அடிப்படையில் திருக்கோயில்கள், திருமடங்கள், சமய ஆர்வத்தால் மக்களால் தோற்றுவிக்கப்பட்ட அமைப்புகள் ஆகியன மூன்றும் சமயப் பணியின் வாயிலாக மக்களின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றுபவையாகத் திகழ்கின்றன (குன்றக்குடி அடிகளார், 2001).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எனவே, ஒரு சமயத்தின் வளர்ச்சியும் பாதுகாப்பும் மேற்குறிப்பிடப்பட்ட மூன்று நிலையங்களைச் சார்ந்துள்ளதால் போர்ட்டிக்சனில் செயல்பட்டுவரும் இம்மூன்று அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமயத் தொண்டுகள் பெரும்பாலும் திருக்கோயில் திருப்பணிகளைச் சார்ந்தே அமைந்துள்ளன. இவ்வியக்கங்கள் மக்களின் தன்னார்வத்தால் தோற்றுவிக்கப்பட்டிருந்தாலும். இவர்களின் சமய ஆர்வமே இதற்கு முக்கியக் காரணியாக இருந்துள்ளது. இதன்வழி சமய ஆர்வலர்கள் பலரையும் ஒன்றிணைக்கவும் முடிகிறது.

அதன் அடிப்படையில், போர்ட்டிக்சன் சுற்று வட்டார ஆலயங்களில் இவ்வியக்கங்களின் சமயத் தொண்டுகள் ஒவ்வோர் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வந்துள்ளன. 2013 தொடங்கி 2017 வரைக்குமான இம்மூன்று அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமயத் தொண்டுகள் இங்கு விளக்கப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.5.1.1 மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவையின் சமயத் தொண்டுகள்

மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை பலதரப்பட்ட சமயத் தொண்டுகளை இவ்வட்டார மக்களுக்குச் செய்து வருகின்றது. இவ்வியக்கத்தின் சமயத் தொண்டுகள் குழந்தைகள், பெரியவர்கள் என அனைத்துத் தரப்பினரையும் முன்னோடியாகக் கொண்டு விளங்குகின்றது. **அட்டவணை 4.8** மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவையின் சமயத் தொண்டுகளைக் காட்டுகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அட்டவணை 4.8

மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவையின் சமயத் தொண்டுகள்

எண்	சமயத் தொண்டு	வருடம்				
		2013	2014	2015	2016	2017
1	சமய வகுப்பு	✓	✓	✓	✓	✓
2	திருமுறை ஓதும் விழா	✓	✓	✓	✓	✓
3	கூட்டுப் பிரார்த்தனை	✓	✓	✓	✓	✓
4	சமயச் சொற்பொழிவு	✓	✓	✓	✓	✓
5	சைவ சித்தாந்த வகுப்பு	✓	✓	✓	✓	✓
6	சைவ சித்தாந்தப் பயிற்சி பட்டறை					✓
7	இல்ல வழிபாடு	✓	✓	✓	✓	✓
8	ஆன்மிகச் சுற்றுலா	✓	✓	✓	✓	✓
9	திருக்கோயில் தூய்மை	✓	✓	✓	✓	✓
10	திருக்கோயிலில் அன்னதானம்	✓	✓	✓	✓	✓
11	திருவிழாக் காலப் பூஜைகளை ஏற்று நடத்துதல்	✓	✓	✓	✓	✓
12	திருக்கோயில் நன்கொடை	✓	✓	✓	✓	✓

அட்டவணை 4.8 மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவையின் சமயத் தொண்டுகளைக் காட்டுகிறது. இவ்வியக்கம் ஏறத்தாழ 12 தொண்டுகளை ஒவ்வோர் ஆண்டும் செயல்படுத்தி வந்துள்ளது. கடந்த ஐந்து வருடங்களில் சமய வகுப்பு, திருமுறை ஓதும் விழா, கூட்டுப் பிரார்த்தனை, சமயச் சொற்பொழிவு, சைவ சித்தாந்த வகுப்பு, இல்ல வழிபாடு, என மக்களுக்குச் செய்யும் தொண்டுகளில் அதிக ஆர்வம் காட்டி வந்துள்ளது. 2017-ஆம் ஆண்டு சைவ சித்தாந்த பயிற்சி பட்டறை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஒன்றனையும் இவ்வியக்கம் நடத்தியுள்ளது என மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவையின் தலைவர் கிருஷ்ணமூர்த்தி (2018) தெரிவித்தார்.

மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை சமய வகுப்புகள் நடத்துவதைத் தமது தலையாயக் கடமையாகக் கொண்டுள்ளது. இந்தச் சமய வகுப்புகள் இவ்வியக்கம் தோற்றம் கண்ட நாள் முதல் நடத்தப்பட்டு வருகின்றன. எனினும், ஆரம்பக் காலங்களில் ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தப்பட்டு வந்த சமய வகுப்புகள் மக்களின் வசதிக்காகத் தற்போது வெள்ளிக்கிழமை மாலை நடத்தப்படுகின்றன. இந்தச் சமய வகுப்புகளில் ஐந்து வயது குழந்தைகள் தொடங்கி பெரியவர்கள் வரை கலந்து கொள்கின்றனர். இவர்களுக்குப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் தேவாரம் முதலான பதிகப் பாராயணமும் நீதி போதனைகளும் கற்பிக்கப்படுகின்றன. தவிர, கோலமிடுதல், தோரணம் பின்னுதல், சரம் தொடுத்தல், மாலை கட்டுதல் போன்ற பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன (ஜெகதிஸ் கிருஷ்ணன், 2018).

மேற்குறிப்பிடப்பட்ட பயிற்சிகளில் கலந்து கொண்டோரின் திறமைகளை அடையாளம் காணும் வண்ணம் ஒவ்வோர் ஆண்டும் இவ்வியக்கம் திருமுறை ஓதும் விழாவையும் ஏற்று நடத்தி வருகின்றது. இதைத் தவிர, தேவாரத்திலும் ஏனையத் திருமுறை பாடல்களிலும் தேர்ச்சி பெற்றவர்களின் துணையுடன் இவ்வியக்கம் கூட்டுப் பிரார்த்தனைகளையும் நடத்துகிறது. புதுமனை புகுவிழா, பிறந்தநாள் போன்ற சுபகாரியங்களில் மட்டுமின்றி ஈமக்கிரியை போன்ற அசுப காரியங்களிலும் இது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது (கிருஷ்ணமூர்த்தி, 2018). தமிழர்களின் அக்கறையின்மையினாலும் சமயக் கல்வியை முயன்று கற்காமையினாலும் சைவ சமயமும் அதன் கொள்கைகளும் நலிந்து கிடக்கின்றன. இதனால், தமிழர்கள் உண்மை சமயத்தை மறந்து அறியாமையினால் உழன்று கொண்டிருக்கின்றனர். அந்த வகையில்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இவ்வியக்கம் நடத்தி வரும் சமய வகுப்புகள் நம் இந்து குழந்தைகளிடையே சமயத்தின் உண்மை நெறியை வளர்க்கும் ஒரு முயற்சியாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சமயச் சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்வதிலும் இவ்வியக்கத்தின் பங்கு குறிப்பிடத்தக்கது. ஒவ்வோர் ஆண்டும் குறைந்தது ஒரு முறையாவது சமயச் சொற்பொழிவுகள் இவ்வியக்கத்தின் துணையுடன் நடத்தப்படுகின்றன. இத்தகைய சொற்பொழிவுகள் குழந்தைகள், சிறார்கள், இளைஞர்கள் என அனைத்துத் தரப்பினருக்கும் நன்மை பயக்கும் வகையில் அமைகின்றன. நமது சமயம் எவ்வாறு மனித வாழ்விற்கு வழிகாட்டி நிற்கின்றது என்பதை அறிந்து கொள்ள இந்தச் சொற்பொழிவுகள் துணை செய்கின்றன. மேலும், சமயத்தோடு இணைந்து தமது வாழ்க்கையை ஒழுங்குபடுத்தவும் வளப்படுத்தவும் இவை உதவுகின்றன.

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை
(திருமுறை 3:24:3052)

(**விளக்கம்**: உயிர்கள் இப்பூவுலகில் வளமோடு இன்பவாழ்வு வாழலாம். தினந்தோறும் இறைவனை நினைத்து வழிபட யாதொரு குறையுமிலாத முக்தியின்பமும் பெறலாம்.)

எனும் பாடலின்வழி வாழ்க்கையை நல்ல முறையில் வாழ முடியும் என்று திருஞானசம்பந்தர் சுட்டுகின்றார். அவ்வாறு ஒவ்வொரு மனிதனும் தமது வாழ்வின் நோக்கினையும் போக்கினையும் உணர்ந்து உயர்வடைவதற்கு இத்தகைய சமயச் சொற்பொழிவுகள் வழிகாட்டுகின்றன.

சமயச் சொற்பொழிவுகள் மட்டுமின்றி ஆன்மிகச் சுற்றுலாவும் இவர்களுக்கென ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. நமது நாட்டில் உள்ள திருக்கோயில்களைத் தரிசிக்க இச்சுற்றுலா வழிவகுக்கிறது. இதன்வழி, அத்தலங்களின் சிறப்புகளையும் இயற்கை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எழிலையும் தெரிந்து கொள்ள முடிகிறது. அங்குள்ள இயற்கை சூழல் மனத்திற்கும் உடலுக்கும் புத்துணர்ச்சியைக் கொடுக்கும் என்பதாலும் பலதரப்பட்ட மொழி, பண்பாடு, பழக்கவழக்கம், சூழ்நிலை போன்றவற்றைக் குழந்தைகள் அறிந்து கொள்ளவும் இது ஏதுவாக அமைகிறது. இதன் மூலம் அவர்களின் அறிவும் மேம்படும். மேலும், மக்கள் கூட்டம் வந்து வணங்கினால்தான் திருக்கோயில்கள் பயன்தரும். மக்கள் விலகிச் சென்றால் திருக்கோயில்களின் பயன் இல்லாமல் போய்விடும். நுகர்வோரால்தான் நுகர்பொருள் பெருமை பெறுகிறது என்பதைச் சுந்தரரும்,

> தளிசாலைகள் தவம் ஆவது தம்மைப் பெறில் அன்றே?
> குளியீர் உளம்! குருக்கேத்திரம் கோதாவிரி, குமரி,
> தெளியீர் உளம்! சீ பர்ப்பதம் தெற்கு(வ்) வடக்கு ஆக
> கிளிவாழை ஒண்கனி கீறி உண் கேதாரம் எனீரே
> (திருமுறை 7:78:797)

(**விளக்கம்**: உலகீர், தேவகோட்டங்கள் தவச்சாலைகளாய் நின்று பயன் தருவது, மக்கள் அவ்விடங்களை அடைந்தாலன்றோ? இதனை மனத்துட் கொண்மின்கள்; கொண்டு, தெற்கென்னும் திசை கிடைக்க, 'கோதாவரி, குமரி' என்னும் தீர்த்தங்களிலும், வடக்கென்னும் திசைகிடைக்க, அழகிய குருக்கேத்திரத்தில் உள்ள தீர்த்தத்திலும் சென்று முழுகுமின்கள்; அவ்வாறே தெற்கில் சீபர்ப்பதத்தையும், வடக்கில் கிளிகள், பழத்தைக் கீறி உண்ணுகின்ற திருக்கேதாரத்தையும் சென்று வணங்கித் துதிமின்கள்.)

எனும் பாடல் வழி தெளிவுறுத்துகிறார். எனவே, தலவழிபாட்டை மேற்கொள்ள வேண்டும் என்ற சுந்தரரின் கூற்றிற்கிணங்க இவ்வியக்கத்தின் ஆன்மிகச் சுற்றுலாவும் குறிப்பிடத்தக்கது.

மேலும், குடும்ப மாதர்கள் பயன்பெற குருக்களின் உதவியுடன் முறையான இல்ல வழிபாடு சார்ந்த பூஜைகளையும் இவ்வியக்கம் நடத்தி வருகின்றது. எல்லா உலகங்களையும் உயிர்களையும் தனது திருவருளால் இறைவன் நடத்துவிக்கின்றான். இதனையே சைவ சித்தாந்தம் பெண்ணாக, அம்மையாக, அம்பிகையாக உருவகப்படுத்திக் காட்டுகின்றது (தர்மலிங்கம், 2012). இதன் அடிப்படையில்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அம்பிகைக்குரிய சிறப்பு தினங்களான சித்திரா பௌர்ணமி, ஆடிப்பெருக்கு, வரலக்ஷ்மி நோன்பு, நவராத்திரி போன்ற நாட்களில் மேற்கொள்ளப்படும் இல்ல வழிபாடு தொடர்பான பூஜை முறைகள் பெண்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன (கிருஷ்ணமூர்த்தி, 2018). இதனால், கோயிலுக்கு வர இயலாத பக்தர்கள் தத்தம் வீட்டிலேயே முறையாக பூஜைகள் இயற்றிப் பயன் பெறுகின்றனர். உலக உயிர்களால் தொழப்படும் தன்மையாளனான இறைவனுக்குச் செலுத்தப்படும் நன்றிக்கடனாவே இஃது அமைகின்றது.

இதைத் தவிர்த்து, இளைஞர்கள், பெரியவர்களுக்கெனச் சைவ சித்தாந்த வகுப்பையும் இவ்வியக்கம் நடத்தி வருகின்றது. இவ்வகுப்புச் சைவ சித்தாந்தத்தைப் பற்றிய அடிப்படை அறிவைப் பெற மக்களுக்கு ஏதுவாக அமைகிறது. இதன் அடிப்படையில் 2017-ஆம் ஆண்டு மக்களின் வேண்டுகோளுக்கிணங்க இவ்வியக்கம் சைவ சித்தாந்த பயிற்சி பட்டறையையும் நடத்தியுள்ளது. மேலும், உலகளாவிய நிலையில் நடத்தப்படும் சைவ சமய மாநாடுகளிலும் இவர்கள் கலந்து கொண்டு பயன் பெறுவதை இவ்வியக்கம் உறுதி செய்கிறது.

ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களை விட்டு இறைவனைச் சார்ந்து இறையறிவைப் பெற்றால் பேரின்பமாகிய முக்தியை அடையலாம் என்கிறது சைவ சித்தாந்தம் (தர்மலிங்கம், 2012). அதுபோல் இவ்வியக்கம் நடத்தி வருகின்ற சைவ சித்தாந்த வகுப்புகள் இறைவனை அடைகின்ற அறிவைப் போதிக்கின்றன. இது சித்தாந்த வகுப்புகளில் கலந்து கொள்பவர்களுக்குப் பயனாக அமைகின்றது.

திருக்கோயில் தொண்டுகளிலும் மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை ஈடுபாடு காட்டி வருவதை மேற்கண்ட அட்டவணைவழி அறிய முடிகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆன்மிகச் சுற்றுலா, ஆலயத் தூய்மை, திருக்கோயிலில் அன்னதானம், திருவிழாக் காலப் பூஜைகள், திருக்கோயில் நன்கொடை எனப் பல தொண்டுகளைப் புரிந்து வருகின்றது. இவ்வகையான திருக்கோயில் தொண்டுகளைப் போர்ட்டிக்சன் ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயத்தில் முதன்மையாக இவ்வியக்கம் செயல்படுத்தி வருகின்றது.

அது மட்டுமல்லாது, தேவார வகுப்புகளில் கலந்து கொள்ளும் மாணவர்கள், பெரியவர்கள் துணையுடன் மாதம் ஒருமுறை திருக்கோயிலைத் தூய்மை செய்யும் பணியும் இவ்வியக்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. குறிப்பாகப் போர்ட்டிக்சன் ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயத்திலும் போர்ட்டிக்சன் கம்போங் அராப் ஸ்ரீ அம்பாள் ஆலயத்திலும் இத்திருக்கோயில் தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இத்தொண்டு எவ்வித வற்புறுத்தலின் பேரிலும் செய்யப்படுவதில்லை. மக்கள் விரும்பியே இதில் கலந்து கொள்கின்றனர். இதனால் திருக்கோயில் தொண்டில் பங்கு கொண்ட ஆத்ம திருப்தியை அவர்கள் அடைவதாகக் கூறுகின்றார் கிருஷ்ணமூர்த்தி (2018).

மொழி, இனம், சமயம், கலை, பண்பாடு, நாடு, கண்டம் என்று வேறுபட்டு நிற்கும் அனைவருக்கும் இறைவன் ஒருவனே என்பதே சித்தாந்த தத்துவம் என்பது சைவர்களின் கொள்கை. இதனையே சேக்கிழாரும் 'உலகு எலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்' (திருத்தொண்டர் புராணம், 1) எனக் குறிப்பிடுகின்றார். இருப்பினும் பக்தர்கள் கடவுளைப் பல்வேறு மூர்த்தங்களில் வழிபட்டு பழகி விட்டனர். எல்லா பக்தர்களின் வழிபடு திருவுருவங்களையும் திருக்கோயில்களில் வைத்து அவர்களின் விருப்பங்களை நிறைவு செய்ய வேண்டிய நெருக்கடி தற்போது உண்டு. எனவே, பக்தர்களின் தேவைகளை நிறைவு செய்யும் வண்ணம் திருக்கோயில்களில் ஒன்றுக்கும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேற்பட்ட கடவுளரின் திருவுருவங்களை அமைப்பதோடு பல பூஜைகளும் நடத்தப்படுகின்றன (தர்மலிங்கம், 2012).

அந்த வகையில், இவ்வியக்கம் விழாக் காலங்களில் ஆலயத்தில் பூஜைகளை ஏற்று நடத்துவதையும் வழக்கமாகக் கொண்டிருக்கின்றது. சிவராத்திரி, நவராத்திரி போன்ற சிறப்புத் தினங்களில் இவ்வியக்கம் பூஜைகளை ஏற்று நடத்துகின்றது. பக்தர்கள் தாங்கள் விரும்பும் வகையில் இறைவனைப் பல்வேறு வடிவங்களில் பூஜித்து மகிழ்கின்றனர். இதனால், பக்தர்களின் விருப்பங்கள் நிறைவேறுவதோடு அவர்களின் மனம் குளிரும்படியும் இவ்வியக்கம் செயல்படுகிறது.

இதுபோன்ற நாட்களில் அடியார்களின் கூட்டம் இறைவனின் அருள் பெற வேண்டி திருக்கோயிலுக்கு வருவதால் அவர்களுக்கு அன்னதானமும் வழங்க இவ்வியக்கம் வகை செய்கிறது. மேலும், திருக்கோயிலுக்கு நன்கொடை வழங்கும் பணியிலும் இவ்வியக்கம் தவறாது துணை செய்கிறது. தற்போது போர்ட்டிக்சன் ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம் புனரமைப்புப் பணிகளுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதால் அதற்கான நிதி திரட்டும் பொறுப்பில் இவ்வியக்கமும் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது (கிருஷ்ணமூர்த்தி, 2018).

மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை சமயம் சார்ந்த அமைப்பாகத் திகழ்வதால் சமயத் தொண்டுகளில் அதன் ஈடுபாடும் செயல்பாடும் நிறைந்து காணப்படுகின்றது. இவ்வியக்கத்தின் சமயத் தொண்டுகள் திருக்கோயிலை மட்டுமல்லாது மக்களைச் சார்ந்தும் அமைந்திருக்கின்றன. மேலும், இவ்வியக்கத்தின் சமயத் தொண்டுகள் போர்ட்டிக்சன்வாழ் இந்துக்களுக்கு உண்மையான சமய நெறியையும் உணர்த்தி நிற்கின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.5.1.2 போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகத்தின் சமயத் தொண்டுகள்

போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம் சமயம் சார்ந்த தொண்டுகளில் தமது சேவையை மேம்படுத்திக் கொண்டே வருகின்றது. இவ்வியக்கத்தின் இலக்கு மாணவர்களையும் இளைஞர்களையும் சார்ந்துள்ளதால் இதன் நடவடிக்கையும் அவர்களைப் பின்னொற்றியே அமைகின்றது. இவ்வியக்கத்தின் சமயத் தொண்டுகளை **அட்டவணை 4.9** காட்டுகின்றது.

அட்டவணை 4.9

போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகத்தின் சமயத் தொண்டுகள்

எண்	சமயத் தொண்டு	வருடம்				
		2013	2014	2015	2016	2017
1	சமயப் புதிர்ப் போட்டி	✓	✓	✓	✓	✓
2	திருமுறை ஓதும் விழா				✓	✓
3	திருக்கோயில் நன்கொடை				✓	✓

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவையைப் போன்றே போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம் சமயத் தொண்டுகளில் தமது பங்கினை இயன்ற அளவு செயல்படுத்தி வருகின்றது. சமயப் புதிர்ப்போட்டி, திருமுறை ஓதும் விழா, திருக்கோயில் நன்கொடை எனக் குறிப்பிட்ட சில தொண்டுகளில் இஃது ஆர்வம் காட்டுகின்றது என்பதை அட்டவணை 4.9 விளக்குகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இவ்வியக்கம் சமயப் புதிர்ப்போட்டியினை ஒவ்வோர் ஆண்டும் நடத்தி வருகின்றது. இப்புதிர்ப்போட்டி போர்ட்டிக்சன் சுற்று வட்டார இடைநிலைப்பள்ளி மாணவர்களுக்காக நடத்தப்படுகிறது. மாணவர்களிடையே சமய அறிவு குன்றி வருவதை நிவர்த்திச் செய்யும் ஒரு முயற்சியாகவே இந்தப் புதிர்ப்போட்டி நடத்தப்படுகின்றது (கந்தையா, 2018). அதனால், இப்புதிர்ப்போட்டி திருமுறைகள், இதிகாசங்கள், நன்னெறி நூல்கள் போன்று பலவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைகின்றது.

தற்காலச் சூழலில் இளையத் தலைமுறையினர் புதுப்புது சமயங்களை உருவாக்கி மக்களைத் திசைத் திருப்புகின்றவர்களின் பின்னால் திரிவதைக் காண முடிகின்றது. தவிர, எல்லை தெய்வங்களையும் காவல் தெய்வங்களையும் வழிபடுவதையும் பார்க்க முடிகின்றது. எனவே, முட்டை, வியர்வை, விதை, கரு என்ற நான்கு வகைகளிலே தோன்றி தேவர், மாந்தர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் ஆகிய எழுவகை பிறப்பினுக்கும் உட்படாதது பரம்பொருள் எனும் சித்தாந்த கொள்கையின் அடிப்படையில் உண்மை அறிவு பெற இத்தகைய புதிர்ப்போட்டிகள் பயனாக இருக்கின்றது. இதனால், வருங்காலங்களில் சமயத்தைப் பற்றித் தெரிந்து கொள்வதில் மாணவர்களின் ஆர்வம் மேலோங்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம் கடந்த இரண்டு ஆண்டுகளாக மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை நடத்தும் திருமுறை ஓதும் விழாவிலும் பங்கெடுத்து வருகின்றது. திருமுறை ஓதும் விழாவில் அதிகமான மாணவர்கள் கலந்து கொள்வதால் சமயப் புதிர்ப்போட்டியை நடத்துவதற்கும் ஏதுவாக அமைகிறது. மேலும், இரண்டு இயக்கங்கள் இணைந்து திருமுறை ஓதும் விழாவினை ஏற்பாடு செய்யும்போது செலவினமும் குறைகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இதனால், மாணவர்களுக்கான பரிசு தொகையை அதிகரிக்க முடிகிறது. தவிர, மக்களின் ஆதரவும் பெருகுகிறது என்பது கந்தையாவின் (2018) கருத்து.

திருக்கோயிலுக்கு நன்கொடை வழங்குவதும் போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகத்தின் மற்றுமொரு சமயத் தொண்டாக விளங்குகிறது. போர்ட்டிக்சன் ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயப் புனரமைப்புப் பணிகளுக்கு இவ்வியக்கம் சிறு தொகையை நன்கொடையாக வழங்கியுள்ளது. அதோடு நின்று விடாமல் இக்கோயில் திருப்பணிக்காக மேலும் பல அமைப்புகளிடமிருந்தும் பொது மக்களிடமிருந்தும் நிதி திரட்டுவதைத் தனது கடமையாகக் கொண்டிருக்கிறது என்று கந்தையா (2018) தெரிவித்தார்.

போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகத்தின் சமயத் தொண்டுகள் குறைவாக இருப்பினும் அதன் பயன் பெரிதாகவே உள்ளது. இக்கழகத்தின் சமயத் தொண்டுகள் மாணவர்களைப் பின்னணியாகக் கொண்டு விளங்குகிறது. எனவே, எதிர்காலத்தில் உண்மையான சமய வளர்ச்சிக்கு இது துணைபுரியும் என்பது சிந்திக்கத்தக்கது.

4.5.1.3 போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகத்தின் சமயத் தொண்டுகள்

போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம் அண்மையக் காலமாகவே இங்கு செயல்பட்டு வருகின்றது. இருப்பினும் இக்கழகத்தின் தொண்டுகள் பிற அரசு சாரா இயக்கங்களுக்கு நிகராகவே உள்ளன. அந்த வரிசையில் சமயத் தொண்டுகள் ஆற்றுவதிலும் இக்கழகம் பின்வாங்குவதில்லை. இக்கழகத்தின் சமயத் தொண்டுகளை **அட்டவணை 4.10** சுட்டுகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அட்டவணை 4.10

போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகத்தின் சமயத் தொண்டுகள்

எண்	சமயத் தொண்டு	வருடம்				
		2013	2014	2015	2016	2017
1	திருக்கோயிலில் பஜனை					✓
2	திருக்கோயில் நன்கொடை					✓

அட்டவணை 4.10 போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகத்தின் சமயத் தொண்டுகளைக் காட்டுகிறது. இக்கழகம் 2017-ஆம் ஆண்டிலிருந்தே சமயத் தொண்டுகளைச் செய்து வருகின்றது. இக்கழகத்தின் சமயத் தொண்டுகள் திருக்கோயிலில் பஜனை நடத்துவதையும் திருக்கோயிலுக்கு நன்கொடை வழங்குவதையும் அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

திருக்கோயிலில் பஜனைகள் செய்வதை இக்கழகம் கடந்த ஓராண்டாகவே செயல்படுத்தி வருகின்றது. திருக்கோயிலில் விழாக் காலப் பூஜையில் பஜனைகள் இடம்பெற இக்கழகம் வழிவகுக்கிறது. இந்தப் பஜனைக் குழுவில் இடைநிலைப்பள்ளி மாணவர்களும் குடும்ப மாதர்களும் இடம்பெற்றுள்ளனர். திருக்கோயில்களில் நடைபெறும் மகோற்சவத்தின்போதும் பஜனைகள் செய்ய இக்கழகம் பொறுப்பேற்கிறது. போர்ட்டிக்சன் ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம், லுக்குட் ஸ்ரீ அஷ்ட தச புஜ துர்கையம்மன் ஆலயம், லுக்குட் தோட்ட ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம் போன்ற ஆலயங்களில் இக்கழகம் பஜனைகள் நடத்தி வருகின்றது என அதன் தலைவர் மோஹனதாஸ் (2018) கூறினார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொடர்ந்து, திருக்கோயில் பணிகளில் பங்கு பெறும் நோக்கில் போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம் நிதி வழங்கவும் செய்கிறது. திருக்கோயிலைச் சீரமைக்கும் பணிகளுக்கு நன்கொடை திரட்டிக் கொடுக்கவும் இக்கழகம் தவறுவதில்லை. கழக உறுப்பினர்கள் மட்டுமின்றி சுற்று வட்டார மக்களும் கோயில் திருப்பணிகளுக்கு நன்கொடை வழங்கி வருகின்றனர் (மோஹனதாஸ், 2018). இதனால், கோயில் சீரமைப்புப் பணிகள் விரைவாக முடியும் தருவாயில் இருக்கின்றன.

பொதுவில், போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம் சமயத் தொண்டுகளில் தன்னை இணைத்துக் கொண்டுள்ளதை இதன் மூலம் அறிய முடிகின்றது. திருக்கோயிலைச் சார்ந்து ஆற்றப்படும் சமயத் தொண்டுகள் இங்கு வாழும் மக்களுக்கு நன்மையை அளிக்க வல்லவை என்பதை உணர்ந்து இக்கழகம் செயல்படுகிறது. எனவே, இக்கழகத்தின் சமயத் தொண்டுகள் நிறைய இல்லாதிருப்பினும் நிறைவாகவே இருக்கின்றது எனக் கூறுவது பொருந்தும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.5.1.4 போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமயத் தொண்டுகளின் - ஒப்பீடு

போர்ட்டிக்சனில் இயங்கி வரும் இம்மூன்று அரசு சாரா இந்தியர் இயக்கங்களும் சமயத் தொண்டாற்றுவதில் ஆர்வம் காட்டி நிற்கின்றன. இவ்வியக்கங்களின் சமயத் தொண்டுகள் வேறுபட்டிருந்தாலும் அவை மக்களை நல்வழிப்படுத்தும் சாதனமாக விளங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வியக்கங்களின் சமயத் தொண்டுகளை ஒட்டிய ஒப்பீட்டை **அட்டவணை 4.11** விவரிக்கின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அட்டவணை 4.11

போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமயத் தொண்டுகளின் ஒப்பீடு

எண்	சமயத் தொண்டு	இயக்கம்		
		மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை	போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம்	போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம்
1	சமய வகுப்பு	✓		
2	திருமுறை ஓதும் விழா/ சமயப் புதிர்ப்போட்டி	✓	✓	
3	கூட்டுப் பிரார்த்தனை / பஜனை	✓		✓
4	சமயச் சொற்பொழிவு	✓		
5	சைவ சித்தாந்த வகுப்பு / பயிற்சி பட்டறை	✓		
6	இல்ல வழிபாடு	✓		
7	ஆன்மிகச் சுற்றுலா	✓		
8	திருக்கோயில் தூய்மை	✓		
9	திருக்கோயிலில் அன்னதானம்	✓		
10	திருவிழாக் காலப் பூஜைகள்	✓		
11	திருக்கோயில் நன்கொடை	✓	✓	✓

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அட்டவணை 4.11 மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை, போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம், போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம் ஆகிய மூன்று இயக்கங்களின் சமயத் தொண்டுகளின் ஒப்பீட்டைக் காட்டுகிறது.

இம்மூன்று இயக்கங்களுள் மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவையின் சமயத் தொண்டே மேலோங்கி நிற்கின்றது. மலேசிய இந்து சங்கம் சமயம் சார்ந்த அமைப்பாகச் செயல்படுவது இதற்கு முக்கியக் காரணமாகத் திகழ்கின்றது. ஆன்மிகச் சுற்றுலா, இல்ல வழிபாடு, சமய வகுப்பு, சித்தாந்த வகுப்பு என இதன் நடவடிக்கைகள் சமயத்தை முன்னோடியாகக் கொண்டே மேற்கொள்ளப்படுகின்றன. தவிர, திருக்கோயில் தூய்மை, அன்னதானம் வழங்குதல், திருவிழாக்களை ஏற்று நடத்துதல் எனத் திருக்கோயில் பணிகளிலும் இவ்வியக்கத்தின் சேவை அதிகமாகக் காணப்படுகிறது. இவ்வியக்கத்தின் நடவடிக்கைகள் சமயத்தின் வளர்ச்சிக்குப் பெரும் துணையாக இருக்கின்றது என்பதும் தகும்.

ஏனைய இரு அமைப்புகளின் சமயத் தொண்டுகள் குறைவாகவே இருக்கின்றன. இவ்வியக்கங்கள் இரண்டும் சமுதாயம் சார்ந்த அமைப்பாகத் தோற்றம் பெற்றதால் சமயத்தில் அவற்றின் பங்கு குறைந்து காணப்படுகின்றது எனக் கூறலாம். இருப்பினும் சமயத்தின் வளர்ச்சி சமுதாய உருமாற்றத்திற்கு வித்திடும் என்பதால் குறிப்பிட்ட சில சமயப் பணிகளை இவ்வியக்கங்கள் மேற்கொண்டு வருகின்றன. அந்த வகையில் போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம், மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவையுடன் இணைந்து திருமுறை ஓதும் விழாவினை நடத்தி வருவது இங்கு நோக்கத்தக்கது. அதே போன்று போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நலனபிவிருத்திக் கழகம் திருக்கோயில்களில் பஜனைகளை நடத்தி வருவதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

திருக்கோயில்கள் மக்களின் நல்வாழ்வு கருதியே எழுப்பப்பட்டவை என்பது குன்றக்குடி அடிகளாரின் கருத்து (2001). எனவே, திருக்கோயில்கள் சமுதாய வாழ்வின் பண்பாட்டைப் பறைசாற்றுவதால் இவ்வியக்கங்களின் சமயத் தொண்டுகள் அதனைச் சார்ந்து மேற்கொள்ளப்படுகின்றன என்பது இதன் மூலம் தெரிகிறது. இதனால், இங்கு வாழும் மக்கள் சமயம் சார்ந்த பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கும் இவ்வியக்கங்கள் வாய்ப்பளிக்கின்றன.

எனவே, மேற்குறிப்பிடப்பட்ட மூன்று இயக்கங்களும் இல்லற நெறியில் நின்று இறைவழிபாட்டிற்குத் துணை செய்து வருகின்றன. இறை இன்பத்தை அடையும் நெறிகளையும் சமய வழிகாட்டல்களையும் இவ்வியங்கங்கள் மேற்கொண்டு வருகின்றன. இதனால், சரியான வழிகாட்டல், பின்பற்றுதல், முன்மாதிரிகள் இல்லாததால் சமயத்தின் பேரில் நிகழும் அவலங்களைத் தவிர்க்கவும் இவ்வியக்கங்களின் நடவடிக்கைகள் வழிவகுக்கும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.5.2 சமுதாயத் தொண்டு

தன்னலம் கருதாமலும் எந்தப் பலனையும் எதிர்பாராமலும் செய்வதுதான் பொதுநலத் தொண்டு. அப்படிச் செய்யும் தொண்டுகளில் எவ்வித இடையூறுகள் வந்தாலும் அதனைத் எதிர்கொள்ளும் மனப்பக்குவமும் வேண்டும். இதைத்தான் 'பொது நலத் தொண்டும் தியாகச் சாதனமும் இல்லாத வாழ்க்கை மேதகு வாழ்வல்ல' என்கிறார் க.திரவியம் (1974).

இத்தகைய தொண்டுகள் இன்றளவும் சமுதாய மேம்பாட்டிற்காகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தத் தொண்டுகள்தாம் அரசு சாரா இயக்கங்களின் தாரக மந்திரமாகவும் திகழ்கின்றன எனக் கூறுகிறார் நோர்மா மன்சூர் (Norma Mansor, 2014). சமுதாயத்தின் தேவையறிந்து இயன்ற அளவு பணி செய்யும் முக்கிய அமைப்புகளாகவும் அவை விளங்குகின்றன என்கிறார் அவர் (2014).

இவ்வாய்வில் அடையாளம் காணப்பட்ட போர்ட்டிக்சனில் செயல்பட்டு வரும் மூன்று அரசு சாரா இந்தியர் இயக்கங்களும் இதுபோன்ற தொண்டுகளை வழங்குவதில் பின்வாங்குவதில்லை. ஸ்டிபன் ஹென்ஸ் (Stephen Heintz, 2006) என்பவரின் கருத்துபடி மக்களின் நலன் கருதிச் சேவையாற்றுவதில் அரசு சாரா இயக்கங்கள் தனித்துவம் மிக்கவையாகத் திகழ்கின்றன. அரசு சாரா இயக்கங்களின் பங்கு சமுதாய மறுமலர்ச்சிக்கு வித்திடுகிறது என்னும் அவரின் (2006) கூற்றையும் மெய்ப்பிக்கும் வண்ணம் மேற்குறிப்பிடப்பட்ட போர்ட்டிக்சன் வட்டார மூன்று அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சேவையும் அமைந்துள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இளையோர் முதல் முதியோர் வரை எல்லா தரப்பினருக்கும் ஏற்றச் சேவைகளை வழங்குவதுதான் அரசு சாரா இயக்கங்களின் தனித்துவம் (நோர்மா மன்சூர், Norma Mansor, 2014). மேற்குறிப்பிடப்பட்ட இம்மூன்று அரசு சாரா இந்தியர் இயக்கங்களும் பலதரப்பட்ட திட்டங்களையும் சேவைகளையும் இப்பகுதிவாழ் இந்திய மக்களுக்கு வழங்கி வருகின்றன. இவ்வியக்கங்களின் நடவடிக்கைகள் யாவும் சமுதாய முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமைகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, போர்ட்டிக்சனில் இயங்கி வரும் மேற்குறிப்பிடப்பட்ட மூன்று இயக்கங்களும் சமுதாயத்தின்பால் அக்கறை கொண்டு பல நடவடிக்கைகளைத் தவறாது செய்து வருகின்றன. இவர்களின் சமுதாயத் தொண்டுகள் குழந்தைகள், பெரியவர்கள், இளைஞர்கள், மாதர்கள் என அனைத்துத் தரப்பினருக்கும் நன்மை அளிப்பனவாகவே இருக்கின்றன. அந்த வகையில் இவ்வியக்கங்களின் சமுதாயத் தொண்டுகள் இங்கு விளக்கப்படுகின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.5.2.1 மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவையின் சமுதாயத் தொண்டுகள்

மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை சமுதாயத் தொண்டுகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறது. இவ்வியக்கத்தின் சமுதாயத் தொண்டுகள் ஒரு பிரிவினரை மட்டுமே சாராது அனைவருக்கும் பொதுவானதாக அமைகின்றது. இவ்வியக்கத்தின் சமுதாயத் தொண்டுகளை **அட்டவணை 4.12** சித்திரிக்கின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அட்டவணை 4.12

மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவையின் சமுதாயத் தொண்டுகள்

எண்	சமுதாயத் தொண்டு	வருடம்				
		2013	2014	2015	2016	2017
1	தன்னம்பிக்கை சொற்பொழிவு	✓	✓	✓	✓	✓
2	மருத்துவமனை பணிவிடைகள்			✓	✓	✓
3	ஏழைக் குடும்பங்களுக்குப் பொருளுதவி (உணவுப் பொருட்கள்)	✓	✓	✓	✓	✓

மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை அடிப்படையில் சமயம் சார்ந்த அமைப்பாகச் செயல்பட்டாலும் சமுதாயத் தொண்டுகளையும் செய்து வருகின்றது என்பதை அட்டவணை 4.12 மூலம் அறிய முடிகின்றது. இவ்வியக்கம் சொற்பொழிவு, மருத்துவமனை பணிவிடைகள், ஏழைக் குடும்பங்களுக்கு உதவுதல் என்று மக்களுக்கான தொண்டுகளிலும் செயலாற்றி வருகின்றது. இத்தகைய சேவைகள் போர்ட்டிக்சன் மக்களுக்குப் பெரும் தொண்டாகவே அமைகின்றன.

மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை ஒவ்வோர் ஆண்டும் தன்னம்பிக்கை சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்து வருகின்றது. இவ்வகையான சொற்பொழிவுகள் குறிப்பாக இளைய சமுதாயத்தை இலக்காகக் கொண்டே நடத்தப்படுகின்றன. இந்தச் சொற்பொழிவுகளில் சமய நெறியும் தன்னம்பிக்கை உணர்வும் சேர்ந்தே வழங்கப்படுகின்றன. சைவத் திருநெறியோடு உலகமயமாகி வரும் சவால்களை எதிர்கொள்ள இத்தகைய சொற்பொழிவுகள் ஏதுவாக இருக்கும் (கிருஷ்ணமூர்த்தி, 2018).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இதனைத் தொடர்ந்து, இவ்வியக்கம் தனது சமுதாயத் தொண்டாக மருத்துவமனையில் உள்ளவர்களுக்கும் இயன்ற உதவிகளைச் செய்து வருகின்றது. இத்தொண்டு போர்ட்டிக்சன் அரசு மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்போர்க்கு உணவு வழங்குதல், மருந்து கொடுத்தல், அவர்கள் தம் உடலைத் தூய்மை செய்ய துணைபுரிதல் போன்ற அடிப்படை உதவிகளை இவ்வியக்கம் மேற்கொண்டு வருகின்றது. இத்தகைய தொண்டுகள் இனம், மொழி, மத பேதமின்றி அனைத்துத் தரப்பினருக்கும் வழங்கப்படுகின்றன.

'யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே' (திருமந்திரம், 109) என்பதற்கேற்ப துன்பத்திலுள்ளோர்க்கு ஆக்கமும் நல்லுணர்வும் கொடுக்கும் பொருட்டும் இனிய சொற்களைப் பேசி மகிழ்விப்பதும் நல்ல ஈகையே என்கிறது திருமந்திரம். எனவே, மருத்துவமனையில் உள்ளவர்களை நோயாளிகளாகக் காண்பதை விடுத்துத் தங்கள் குடும்பத்தில் ஒருவராக நினைக்கும் மனப்பக்குவமும் மனிதநேயமும் கொண்டு சேவையாற்றும் இவ்வியக்கத்தின் தொண்டு போற்றுதற்குரியது. தங்களால் இயன்ற உதவிகளைப் பிறருக்குச் செய்வதன்வழி அன்புடையவராகலாம். எனவே, பாசங்களிலிருந்து விடுபட்டால் இறைவனின் அன்புக்கு ஆளாகலாம் என்ற சைவ சித்தாந்த உண்மை இவ்வியக்கத்தின் சேவையோடு நோக்கத்தக்கது.

மேலும், சமுதாயத் தொண்டுகள் எனும் அடிப்படையில் இவ்வியக்கம் பிறரின் தேவையறிந்து உதவுவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளது. போர்ட்டிக்சன் சுற்று வட்டாரத்தில் வசிக்கும் ஏழ்மை நிலையிலுள்ள மக்களுக்கு இவ்வியக்கம் உதவி வருகின்றது. அந்த வரிசையில் ஒவ்வொரு மாதமும் ஐந்து ஏழைக் குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் இவ்வியக்கத்தால் வழங்கப்படுகின்றன. 2017-ஆம் ஆண்டு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தீவிபத்தில் வீட்டையும் உடைமைகளையும் இழந்த ஓர் இந்திய குடும்பத்திற்கு இவ்வியக்கம் தொடர்ந்து உதவி வருகின்றது (ஜெகதிஸ் கிருஷ்ணன், 2018).

இவ்வுலக வாழ்க்கையானது நிலையான இறையுலக வாழ்வினைப் பெறுவதற்குத் துணையாக நிற்கின்றது என்பது சைவ சித்தாந்தம் காட்டும் உண்மை. எனவே, ஒவ்வோர் உயிரும் தான் வாழ்வதற்கு மட்டுமின்றிப் பிற உயிர்களுக்கும் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்து மேம்பட வேண்டும். அவ்வாறு இனத்தோடு ஒன்றுபட்டு, ஒருவருக்கொருவர் உதவி இன்பமாக வாழும் இயல்பினையே இறைவனும் விரும்புகிறான் எனச் சித்தாந்தம் மேலும் வலியுறுத்துகின்றது. இதன் அடிப்படையிலேயே மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவையின் சமுதாயத் தொண்டுகள் அமைகின்றன. மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவையின் சமுதாயத் தொண்டுகள் குறைவாக இருப்பினும் நிறைவான சேவையையே மக்களுக்கு வழங்கி வருகின்றது. இதன்வழி மக்களின் இன்னல்கள் தீரவும் இவ்வியக்கம் உதவுகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.5.2.2 போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகத்தின் சமுதாயத் தொண்டுகள்

போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம் சமுதாயத் தொண்டுகளில் அதிக ஆர்வம் காட்டிச் செயலாற்றி வருகின்றது. மக்களின் முன்னேற்றத்தின்பால் இவ்வியக்கம் கொண்டுள்ள அக்கறையே இதற்கு முக்கியக் காரணமாகக் கூறப்படுகின்றது. இக்கழகத்தின் சமுதாயத் தொண்டுகளை **அட்டவணை 4.13** தொகுத்து அளிக்கின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அட்டவனை 4.13

போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகத்தின் சமுதாயத் தொண்டுகள்

எண்	சமுதாயத் தொண்டு	வருடம்				
		2013	2014	2015	2016	2017
1	கூட்டுப்பணி	✓				
2	கல்வி விழா	✓	✓	✓	✓	✓
3	இளைஞர் நன்னெறிப் பயிற்சி பட்டறை		✓	✓	✓	✓
4	இளைஞர் தன்னம்பிக்கை பயிற்சி முகாம்			✓	✓	✓
5	இடைநிலைப்பள்ளி மாணவர் தனித்துவப் பயிற்சி முகாம்			✓	✓	✓
6	பெண்ணாளுமை பயிற்சி முகாம்				✓	✓
7	பாட நூல்கள்/பயிற்சி தாள்கள் நன்கொடை	✓	✓	✓	✓	
8	கல்விச் சுற்றுலா			✓	✓	✓
9	ஏழை இந்தியக் குடும்பங்களைப் பற்றிய ஆய்வு			✓	✓	✓
10	கல்வி நிதியுதவி (பல்கலைகழக மாணவர்கள்)				✓	✓
11	பொருளுதவி (ஏழை மாணவர்கள்)	✓	✓	✓	✓	✓
12	மாணவர்களுக்கு உணவு வழங்குதல்	✓	✓	✓	✓	✓

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அட்டவணை 4.13 போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகத்தின் சமுதாயத் தொண்டுகளை உள்ளடக்கியுள்ளது. இக்கழகம் ஏறத்தாழ 12 தொண்டுகளை மக்களின் நலன் கருதிச் செயல்படுத்தி வருகின்றது. இக்கழகத்தின் சமுதாயத் தொண்டுகள் இளைஞர் சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டவையாகத் திகழ்கின்றன.

இவ்வியக்கத்தின் ஏற்பாட்டில் இளைஞர் நன்னெறிப் பயிற்சி பட்டறை, இளைஞர் தன்னம்பிக்கை முகாம், இடைநிலைப்பள்ளி மாணவர்கள் தனித்துவப் பயிற்சி முகாம் ஆகியவை கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து நடத்தப்பட்டு வந்துள்ளன. எதிர்காலச் சமுதாய மலர்ச்சி இளையோர்களின் கையில் என்பதால் இக்கழகத்தின் இலக்கு அவர்களின் முன்னேற்றம் சார்ந்து அமையப்பெற்றுள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட பயிற்சிகள் இடைநிலைப்பள்ளி மாணவர்களுக்கு மட்டுமின்றி பல்கலைக்கழகத்தில் அடியெடுத்து வைக்கக் காத்திருக்கும் மாணவர்களுக்கும் நடத்தப்படுகின்றது (கந்தையா, 2018). எனவே, சமுதாயச் சீர்க்கேடுகளில் சிக்கித் தவிக்காமல் தங்களின் இலட்சியத்தை அடைய இத்தகைய பயிற்சிகள் இளையோர்களுக்குத் துணைபுரியும்.

இடைநிலைப்பள்ளி மாணவர்களுக்கு மேற்கண்ட பயிற்சிகளை வழங்கும் அதே வேளையில் இக்கழகம் கல்வி விழாவையும் ஆண்டுதோறும் ஏற்பாடு செய்து வருகின்றது. இவ்விழா மாணவர்களின் ஆர்வத்திற்கேற்பவும் திறமைக்கேற்பவும் கல்வித் துறைகளைத் தெரிவு செய்ய பேருதவியாக அமைகின்றது. தவிர, பட்டதாரி இளைஞர்களுக்கும் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் களமாகவும் இது விளங்குகிறது. இதன் தொடர்ச்சியாகவே இடைநிலைப்பள்ளி மாணவர்களுக்குக் கல்விச் சுற்றுலாவையும் இக்கழகம் ஏற்பாடு செய்து வந்துள்ளது. நாட்டின் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், தொழில்நுட்ப நிறுவனங்கள் போன்ற இடங்களுக்கு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேற்கொள்ளப்படும் சுற்றுலாவினால் மாணவர்கள் தங்கள் இலக்கை அடைய உறுதி கொள்வர் என்பதும் இக்கழகத்தின் வலுவான நம்பிக்கை (சரவணன், 2018).

அடுத்ததாக, மாணவர்களின் நலனில் அக்கறை கொண்டொழுகும் போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம் ஏழை மாணவர்களுக்குத் இயன்ற உதவிகளைச் செய்வதில் தவறியதில்லை. ஆண்டின் தொடக்கத்தில் ஏழ்மை நிலையிலுள்ள மாணவர்களுக்குப் பள்ளிக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றோர்களின் சுமையைக் குறைக்க இக்கழகம் உதவுகின்றது. மேலும், இந்த மாணவர்களுக்குத் தேவையான பள்ளி உபகரணங்களையும் கொடுத்து வருகின்றது. இது மட்டுமின்றி, இரு மாணவர்களுக்குப் பல்கலைக்கழக நுழைவுக் கட்டணத்தையும் கடந்த இரண்டு ஆண்டுகளாக வழங்கி வருகின்றது (சரவணன், 2018).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கும் இக்கழகத்தின் சேவை பெருமளவில் உதவுகிறது. ஆரம்பப்பள்ளியில் பயிலும் ஏழை மாணவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்குச் சத்துணவு வழங்கவும் ஏற்பாடு செய்து வருகின்றது. மேலும், ஆறாமாண்டு மாணவர்களுக்கான மாதிரித் தேர்வுத் தாட்களையும் பயிற்சி நூல்களையும் இக்கழகம் வழங்குகின்றது. இத்திட்டம் தற்போது போர்ட்டிக்சன் இராணுவ முகாம் தமிழ்ப்பள்ளியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எதிர்வரும் காலங்களில் போர்ட்டிக்சன் சுற்று வட்டாரத் தமிழ்ப்பள்ளிகளுக்கும் இச்சேவை வழங்கப்பெறும் என்பதையும் கந்தையா தெரிவித்தார் (2018).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பொதுவில், ஏழை மாணவர்களை அடையாளம் காணும் நோக்கில் இக்கழகம் ஏழைக் குடும்பங்களைப் பற்றிய ஆய்வினையும் மேற்கொண்டுள்ளது. அதன் அடிப்படையிலேயே, மாணவர்களுக்கு உதவிகள் செய்யப்படுகின்றன. இந்த ஆய்வின் துணையுடன் பெண்ணாளுமை முகாமும் நடத்தப்பட்டு வருகின்றது. இதில் கலந்து கொள்ளும் பெண்களுக்கு வருமானத்தை ஈட்டவும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இதன் மூலம், அவர்களின் ஏழ்மை நிலையைப் போக்கவும் இக்கழகம் வழி செய்கிறது என்பதைக் காண முடிகின்றது.

மேற்காணும் தொண்டுகளை உற்று நோக்கின் இவ்வியக்கம் உறவினர், வேண்டியவர், வேண்டாதவர், நண்பர், பகைவர், இளமையானவர், முதுமையானவர் போன்று வேறுபாடு காட்டாமல் எல்லாருக்கும் உதவ வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு செயலாற்றி வருவதை அறிய முடிகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இதைத்தான் திருமூலரும்,

> ஆர்க்கும் இடுமின் அவரவர் என்னன்மின்
> பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
> (திருமந்திரம், 107)

(**விளக்கம்**: நாடு மொழி நன்னெறி, உயர்வு, தாழ்வு, வறுமை, செல்வம், இளமை, முதுமை முதலிய எவ்வகை வேறுபாடுமின்றி உடலினுக்கு உணவும் உயிரினுக்கு உணர்வும் வேண்டினார்க்கு ஈதல் உடையோர் கடனாகும். ஈண்டு உணவினை ஒதுகின்றனர். தக்காராய் வந்தார் யாவர்கட்கும் மிக்கவுவகையோடு இலனென்னும் எவ்வம் உரையாவகையாய்க் குறிப்பறிந்து இடுங்கள். அவர் இவர் என்று எவ்வகை வேறுபாடும் கூறாதீர்கள். செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருந்து உண்ணுங்கள். உண்ணத்தக்க காய்கனி கிழங்கு விதை இலை பூ முதலியவற்றை அவ்வாறே கொண்டும், ஏனையவற்றைத் தக்கவாறு சமைத்தும் உண்ணுதல் வேண்டும். அவ்வாறு உண்ணுங்கால், சிறுபொழுதும் நாள்களும் கழியவிட்டு அவை பழைமையாகி செவ்வியழிந்த பின் உண்ணுதல் தவறு. அதனால் பழம்பொருள் போற்றன்மின் என்றனர்.)

என்று தெளிவுறுத்துகின்றார். அவ்வகையில், இக்கழகத்தினைச் சார்ந்தோர் பல்வேறு துறைகளில் ஆளுமை உடையவர்களாதலால் இளைய சமுதாயத்தினரையும் அத்தகு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

வெற்றிப் பாதையில் வளர்ச்சி காணச் செய்வதே இவர்களின் குறிக்கோளாகவும் அமைகின்றது.

இதனைத் தொடர்ந்து, கூட்டுப்பணியும் இக்கழகத்தின் சமுதாயத் தொண்டாக உள்ளது. திருக்கோயில்கள், பள்ளிகள் ஆகியன இதன் இலக்காக இருந்தாலும் இஃது ஓராண்டு மட்டுமே நடத்தப்பட்டுள்ளது. இக்கழக உறுப்பினர்களில் பலர் வெளியிடங்களில் பணிபுரிவதால் இத்திட்டத்தை அடுத்தடுத்த ஆண்டுகளில் செயல்படுத்த முடியவில்லை எனச் சரவணன் (2018) தெரிவித்தார். எனினும் இத்திட்டம் எதிர்வரும் ஆண்டுகளில் இடைநிலைப்பள்ளி மாணவர்களின் உதவியோடு மேற்கொள்ளப்படும் எனவும் அவர் (2018) கருத்துரைத்தார்.

போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம் இயன்ற அளவில் சமுதாயத் தொண்டுகளில் ஈடுபட்டு வருகின்றது. இக்கழகம் மன நிறைவை அளிக்கும் ஈகையை வாழும் மக்களிடத்து விரும்பிச் செய்து வருகின்றது. இறைவனால் கொடுக்கப்பட்ட உடலையும் அறிவையும் பிற உயிர்களுக்குப் பயன்படும் வகையில் ஈடுபடுத்த வேண்டும் எனும் திருமூலரின் கூற்று இக்கழகத்தின் சமுதாயத் தொண்டுகளோடு பொருந்தி இலங்குகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.5.2.3 போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகத்தின் சமுதாயத் தொண்டுகள்

போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம் சமுதாயத் தொண்டுகளில் கால் பதித்துச் சில ஆண்டுகளே ஆகியுள்ளது. இருப்பினும் இக்கழகம் போர்ட்டிக்சன் சுற்று வட்டார மக்களுக்கு இயன்ற உதவிகளைச் செய்து வருகின்றது. **அட்டவணை 4.14** இக்கழகத்தின் சமுதாயத் தொண்டுகளை விவரிக்கின்றது.

அட்டவணை 4.14

போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகத்தின் சமுதாயத் தொண்டுகள்

எண்	சமுதாயத் தொண்டு	வருடம்				
		2013	2014	2015	2016	2017
1	ஏழைக் குடும்பங்களுக்கு நிதியுதவி			✓	✓	✓
2	ஏழைக் குடும்பங்களுக்குப் பொருளுதவி (உணவுப் பொருட்கள்)			✓	✓	✓
3	இளைஞர் தன்னம்பிக்கை பயிற்சி முகாம்			✓	✓	✓
4	பேறு குறைந்தவர்களுக்குப் பொருளுதவி (சக்கர நாற்காலி)			✓	✓	✓

அட்டவணை 4.14 போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகத்தின் சமுதாயத் தொண்டுகளைக் காட்டுகிறது. இக்கழகம் ஏழைக் குடும்பங்களைத் தனது இலக்காகக் கொண்டுள்ளது. ஏழைக் குடும்பங்களுக்கு நிதியுதவி செய்தல், பொருளுதவி செய்தல், பேறு குறைந்தவர்களுக்குப் பொருளுதவி செய்தல்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இளைஞர்களுக்குத் தன்னம்பிக்கை முகாம் நடத்துதல் ஆகிய சேவைகளை வழங்கி வருகின்றது.

இக்கழகம் இவ்வாட்டாரத்தில் வசிக்கும் ஏழைக் குடும்பங்களுக்கு நிதியுதவியும் பொருளுதவியும் செய்து வருகின்றது. இக்குடும்பங்களின் பின்னணி, உறுப்பினர்கள், அவர்களின் வருமானம் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு இந்த நிதியுதவி வழங்கப்படுகிறதுது என மோஹனதாஸ் (2018) தெரிவித்தார். பள்ளி ஆண்டு தொடக்கம், விழாக் காலங்கள், விபத்து, இறப்பு போன்ற காலக்கட்டங்களில் இந்த நிதியுதவி இக்குடும்பங்களின் சுமையைக் குறைக்க பெருமளவில் உதவியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், இக்கழகம் சில குடும்பங்களுக்கு மாதந்தோறும் அரசு பொதுநல இலாகாவின் மான்யம் கிடைப்பதற்கும் ஆவணச் செய்துள்ளது எனவும் அவர் (2018) தெரிவித்தார். இறைவன் அடியார்கள் பலரும் அவனிடமிருந்து பொன்னையும் பொருளையும் பெற்று அதை அன்பர்களுக்குக் கொடுத்துதவிய நிலையைப் பெரிய புராணத்தில் காண முடிகின்றது. அதுபோலவே, இக்கழகமும் அரசாங்கம், வணிக நிறுவனங்கள் என உரிய இடத்திலிருந்து பணத்தைப் பெற்று அதை ஏழை எளியவர்களுக்குப் பயன்படும் வகையில் செலவிடுகிறது. இதனால், சமுதாய மேம்பாடு எல்லாத் தரப்பினருக்கும் போய்ச் சேர்ந்து அவர்களும் வாழ்வில் உயர இக்கழகம் வழிசெய்கிறது.

பேறு குறைந்தவர்களுக்கும் இக்கழகம் இயன்றளவில் உதவி வருகின்றது. தனித்து வாழும் பேறு குறைந்தவர்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை இக்கழகம் வழங்கி வருகின்றது. இதைத் தவிர்த்து, அவர்களுள் சிலருக்கு மருத்துவச்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

செலவுகளுக்கும் இக்கழகம் பணம் கொடுக்கின்றது. மேலும், கை கால்கள் செயலிழந்து நடக்க முடியாத இருவருக்கு இக்கழகம் சக்கர நாற்காலியையும் வழங்கி உதவி புரிந்துள்ளதையும் காண முடிகின்றது.

இளைஞர்களுக்கான சேவையையும் இக்கழகம் செய்யத் தவறவில்லை. கடந்த மூன்றாண்டுகளாகவே இளைஞர் தன்னம்பிக்கை பயிற்சி முகாம் இக்கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. உலகச் சவால்களைச் சமாளிக்கும் திறன்களைப் பெற இளைஞர்களுக்கு இதுபோன்ற முகாம்கள் பேருதவியாக அமைகின்றன. உலகமயமாதல் கொள்கைக்கு நிகராக இந்திய இளைஞர்களை உருவாக்குவதிலும் இக்கழகம் முனைப்புக் காட்டி வருவதை இது காட்டுகிறது.

எனவே, உலகியல் இன்பங்களுக்கு முதன்மை அளித்துச் சுயநலமும் தற்பெருமையும் பொறாமையும் கொண்டு வாழும் மனிதர்களினூடே இக்கழகம் ஆற்றி வரும் சமுதாயத் தொண்டுகள் அன்பு நெறியான இறைநெறியோடு நோக்கத்தக்கது. உலக உயிர்கள் ஒவ்வொன்றிலும் இறைவனைக் காணும் திறத்தை இக்கழகம் கொண்டிருக்கிறது. பணம், பதவி, புகழ் என்று பஞ்சாய்ப் பறப்பவர்கள் மத்தியில் இக்கழகத்தின் சேவை தனித்து நிற்கிறது.

4.5.2.4 போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமுதாயத் தொண்டுகளின் ஒப்பீடு

மேற்குறிப்பிடப்பட்ட மூன்று அரசு சாரா இந்தியர் இயக்கங்களும் எளிய மக்களுக்குச் சமுதாயத் தொண்டுகளைச் செய்து வருவதைத் தம் கடமையாகக் கொண்டிருக்கின்றன. இவ்வியக்கங்களின் தொண்டுகள் மக்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

செயல்படுத்தப்படுகின்றன. இவ்வியக்கங்களின் சமுதாயத் தொண்டுகளை **அட்டவணை 4.15** ஒப்பிட்டுக் காட்டுகின்றது.

அட்டவணை 4.15

போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமுதாயத் தொண்டுகளின் ஒப்பீடு

எண்	சமுதாயத் தொண்டுகள்	இயக்கம்		
		மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை	போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம்	போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம்
1	இளைஞர்களுக்கான நன்னெறி / தன்னம்பிக்கை பயிற்சி	✓	✓	✓
2	ஏழைக் குடும்பங்களுக்கு நிதியுதவி / பொருளுதவி	✓	✓	✓
3	மாணவர்களுக்கு நிதியுதவி / பொருளுதவி		✓	✓
4	பெண்களுக்கான தன்னாளுமை பயிற்சி		✓	✓
5	கூட்டுப்பணி		✓	
6	பேறு குறைந்தவர்களுக்குப் பொருளுதவி			✓
7	மருத்துவமனை பணிவிடைகள்	✓		
8	கல்விச் சுற்றுலா / கல்வி முகாம்		✓	

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அட்டவணை 4.15 மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை, போர்ட்டிக்சன் சமூகநல மேம்பாட்டுக் கழகம், போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம் ஆகியவற்றின் சமுதாயத் தொண்டுகளின் ஒப்பீட்டைக் காட்டுகிறது. இளைஞர்கள், பெண்கள், மாணவர்கள், பேறு குறைந்தவர்கள் என இவ்வியக்கங்களின் சேவை பல தரப்பினருக்கும் உதவியாக உள்ளதை இதன்வழி அறிய முடிகின்றது.

இளைஞர்கள் ஒரு சமுதாயத்தின் முதுகெலும்பு எனலாம். ஆகவேதான், இவ்வியக்கங்கள் அவர்களுக்கான தன்னம்பிக்கை பயிற்சி முகாமையும் நன்னெறிப் பயிற்சி முகாமையும் நடத்தி வருகின்றன. இதில் தன்னம்பிக்கை தொடர்பான சொற்பொழிவுகளும் இடம்பெறுகின்றன. இத்தகைய சொற்பொழிவுகளும் பயிற்சிகளும் இளைஞர்களின் நம்பிக்கைக்குத் தூண்டுகோலாக அமைவதோடு மட்டுமின்றி அவர்களின் செயல்பாடுகளையும் வெற்றியை நோக்கிப் பயணிக்கச் செய்கிறது. இத்தகைய தொண்டில் இம்மூன்று இயக்கங்களும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்றன. குறிப்பாகச் சிறார்களையும் இளைஞர்களையும் நன்னெறிப்படுத்தி நல்லொழுக்கமிக்கவர்களாகத் திகழச் செய்வதற்குச் சமயக் கல்வி பெரும் உதவியாக இருக்கும் என்பதால் சமயம் சார்ந்த தன்னம்பிக்கை பயிற்சிகளும் இவ்வியக்கங்களின் ஆதரவில் நடத்தப்படுகின்றன.

இதைத் தவிர்த்து, சமுதாயத் தொண்டில் ஏழைகளுக்கு உதவுவதும் இவ்வியக்கங்களின் கொள்கையாகத் தெரிகின்றது. வறுமையில் வாடும் ஒருவரின் வாழ்க்கை அவர்கள் உடுத்தியிருக்கும் கிழிந்த ஆடையைப் போன்றது. இவர்களின் இல்லத்தில் மகிழ்ச்சி நிலைக்காது; நல்ல நாள், பெருநாள், திருநாள் என்று எதுவும் நடைபெறாது என்பதனை,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

புடைவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை
அடையப்பட் டார்களும் அன்பில ரானார்
கொடையில்லை கோளில்லை கொண்டாட்ட மில்லை
நடையில்லை நாட்டில் இயங்குகின்றார் கட்கே
(திருமந்திரம், 252)

(**விளக்கம்**: உழப்பின் வாரா உறுதிகள் உளவோ' என்பதை நாடாது, 'கழப்பின் வாராக் கையறவுளவோ' என்பதற்குக் காட்டாக உழையாது வைத்து நல்குரவு எய்துவோர் வாழ்க்கை, முற்றுங்கிழிந்து அற்றம் மறைத்தற்கும் ஆகாப்புடைவை போல் மதிப்புறாது போய்க்கழியும். கழியவே தம்மைச் சார்ந்த நண்பர் உறவினர் முதலாயினாரும் அன்பற்று விலகுவர். எவர்க்கும் ஏதும் கொடுத்தலும் உண்டாகாது. அதனால் அவர்கள்பால் ஏதும் கொள்ளுதற்கும் இடன் இன்று. சிறப்பாகக் கொண்ட உயிர் நட்பும் பறந்தொழிந்தது. ஆனேறுபோல் தான் நிமிர்ந்து நடக்கும் பீடுநடையில்லை. நாட்டில் என்புதோல் போர்த்த உடம்புபோல் இன்பின்றித் திரிகின்றார்கள். கோள் - கொடுக்கல் வாங்கல்.)

எனத் திருமூலர் விளக்குகிறார்.

எனவே, இத்தகு கொடிய வறுமையைப் போக்கும் முயற்சியில் போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம் அதிக ஆர்வம் காட்டுகின்றது. இக்கழகம் ஏழ்மை நிலையிலுள்ள குடும்பங்களை அடையாளம் கண்டு நிதியுதவி, பொருளுதவி ஆகியவற்றைச் செய்து வருகின்றது. இக்குடும்பப் பெண்களின் முன்னேற்றம் கருதி முகாமும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. மேலும், அவர்களின் குழந்தைகளின் கல்விச் செலவுக்கும் உதவி புரிகிறது (சரவணன், 2018). குழந்தைகளின் கல்வியில் அக்கறை கொண்டு செயல்படும் இக்கழகம் கல்விச் சுற்றுலா, கல்வி விழா ஆகியவற்றையும் ஏற்பாடு செய்கிறது.

போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகமும் ஏழைக் குடும்பங்களுக்கு உதவுவதைத் தவறாமல் செய்து வருவதைக் காண முடிகின்றது. குடும்பங்களின் மலர்ச்சி குழந்தைகளின் கல்வி வளர்ச்சியை உறுதிபடுத்தும் நோக்கில் ஏழ்மையின் பிடியிலிருந்து அவர்களை வெளிக்கொண்டு வருவதே இவ்வியக்கங்களின்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நோக்கம் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வியக்கங்களின் சேவை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் ஊன்றுகோலாக அமைகின்றது.

இதனைத் தொடர்ந்து,போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம் பேறு குறைந்தவர்களுக்கும் பொருளுதவி செய்கிறது என்பதை அட்டவணை 4.14 காட்டுகிறது. பேறு குறைந்தவர்கள் சுயமாகத் தங்கள் கடமைகளை ஆற்ற இக்கழகத்தின் உதவி ஏதுவாக அமைகிறது. சமுதாயத்தில் இவர்களும் ஓர் அங்கத்தினர் என்பதை உணர்ந்து அவர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்து வருகிறது. (மோஹனதாஸ், 2018). அதேவேளையில், மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை நோயாளிகளுக்குப் பணிவிடைகள் மேற்கொண்டிருப்பதும் இத்தகைய சேவையை ஒத்திருப்பதைப் பார்க்க முடிகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அகப்பூசனையில் இறைவனுக்கு எட்டு மலர்கள் சாற்றி வழிபடுவது சிவாகம மரபாக உள்ளது. கொல்லாமை, ஐம்பொறி அடக்கல், பொறுமை, இரக்கம், அறிவு, மெய், தவம், அன்பு என்பதே அந்த எட்டு மலர்கள் எனச் சைவ சித்தாந்தம் கூறுகின்றது. இதையே, திருமந்திரமும் 'பற்றாய நற்குரு பூசைக்கும் பன்மலர்' (திருமந்திரம், 239) என வலியுறுத்துகிறது. அந்த வகையில் பேறு குறைந்தவர்களுக்கும் நோயுற்றவர்களுக்கும் பொறுமை, இரக்கம், அன்பு எனும் அடிப்படையில் மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை, போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம் ஆகிய இயக்கங்களின் தொண்டுகள் போற்றுதற்குரியவை. ஏனெனில், அன்பும் கருணையும் இருந்தாலன்றி இதுபோன்ற தொண்டுகளை ஆற்றுவது கடினம் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கூட்டுப்பணி என்பதும் சமுதாயத்திற்குச் செய்யப்படும் தொண்டாகவே திகழ்கிறது. நாம் வாழும் சுற்றுப்புறம் தூய்மையாக இருப்பதுதான் நம் ஆரோக்கியத்தை உறுதி செய்யும். அதன் அடிப்படையிலேயே போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம் இந்தத் துப்புரவு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இருப்பினும் இது தொடர்ந்து நடத்தப்படாததற்குக் கழகத்தின் மற்ற பணிகளும் ஒரு காரணம் என்கிறார் சரவணன் (2018). மலேசிய இந்து சங்கமும் நேரிடையாகக் கூட்டுப்பணி எனும் திட்டத்தை மேற்கொள்ளாவிட்டாலும் மாதம் ஒருமுறை திருக்கோயிலைத் தூய்மைப்படுத்தச் சமய வகுப்பு மாணவர்களை ஊக்குவிக்கிறது. இதன்மூலம், சுற்றுப்புறத்தைத் தூய்மை செய்வது மட்டுமின்றி ஒன்றுபட்டுச் செயல்படும் தன்மையையும் மேலோங்கச் செய்கிறது. (ஜெகதிஸ் கிருஷ்ணன், 2018).

மலேசிய இந்து சங்கம் சமயம் சார்ந்த அமைப்பாக இருந்தாலும் சமுதாய மேம்பாட்டிற்குத் துணைபுரியும் பல தொண்டுகளையும் அது மேற்கொண்டு வருகின்றது. ஏனைய இரு இந்திய அரசு சாரா இயக்கங்களும் சமுதாயத் தொண்டையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகின்றன. அவ்வகையில், போர்ட்டிக்சனில் செயல்பட்டுவரும் இம்மூன்று இந்திய அரசு சாரா இயக்கங்களும் சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றன என்பது தெரிகிறது. இவ்வியக்கங்களின் சமுதாயத் தொண்டுகள் இச்சுற்று வட்டார மக்களால் பெரிதும் போற்றப்படுகின்றன.

இறைவனுக்குத் தொண்டு செய்வதைக் காட்டிலும் அவன் வாழும் உயிர்களிடத்தில் அன்பு பாராட்டுவதைச் சைவ சித்தாந்தம் பரிந்துரைகின்றது. அமைதியாக, அடக்கமாக, ஆரவாரமின்றிச் செய்யப்பட்டு வரும் இவ்வியக்கங்களின் தொண்டுகளின் தொண்டுகளை இறைவனும் அறிவான் என்றே கொள்ள வேண்டும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

திருமூலரும்,

இகழ்ந்ததும் பெற்றதும் ஈசன் அறியும்
உகந்தருள் செய்திடும் உத்தம நாதன்
கொழுந்தன்பு செய்தருள் கூரவல் லார்க்கு
மகிழ்ந்தன்பு செய்யு மருளது வாமே

(திருமந்திரம், 267)

(**விளக்கம்**: அன்பினைப் பொருட்படுத்தாமல் வன்னெஞ்சினராய்த் திரிவாரையும், அவ்வன்பினைப் பெற்று மென்னெஞ்சினராய் மேவி வாழ்வாரையும் சிவன் அறிந்து அவரவர் செய்கைகட்கு ஏற்றவாறு முறையே துன்ப இன்பங்களை அளிப்பன். அத்தகைய உகப்புடன் அருள்செய்யும் தலைமைசேர் முதல்வன். ஆருயிர்கள் முதற்கண் தொடர்புடையார்மாட்டு அன்புடையராய், அப் பயிற்சி மேலீட்டால் அனைத்துயிர்கள் மாட்டும் அருளுடையராய் ஒழுகவல்லார்க்கு மகிழ்ந்தன்பு செய்வன். அதுவே அவன் திருவருளுமாகும். இகழ்ந்தது - அன்பினைப் புறக்கணித்தது. பெற்றது - மெய்யன்புற்றது.)

என்கிறார். எனவே, மேற்குறிப்பிடப்பட்ட மூன்று அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் தொண்டுகளும் இறைத்தொண்டினை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருக்கின்றன என்பது சிந்திக்கவல்லது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.6 நாயன்மார்களின் சரியை தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சரியை தொண்டுகளும் - ஒப்பீடு

இந்த ஆய்வு நோக்கில் பெரிய புராணத்தின் அடிப்படையில் சரியை தொண்டுகள் ஐந்து கூறுகளாகப் பகுக்கப்பட்டு இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளன. 47 நாயன்மார்கள் சரியை மார்க்கத்தில் சமயத் தொண்டுகளைச் சமுதாயம் உய்யும் பொருட்டுத் தன்னலம் கருதாது ஆற்றி வந்தது தெரிகிறது. இதுவே அவர்களின் வாழ்க்கை குறிக்கோளாகவும் இருந்தது. நாயன்மார்களில் பெரும்பாலோர் கோயில் தொண்டுகள் மூலம் இறைவனை அடைந்துள்ளனர் என்பது தெரிகிறது (கலியாணசுந்தரனார், 2000). இன்னும், சிலர் இறை அடியார்களுக்குத் தங்களால் இயன்ற அளவு தொண்டாற்றுவதைக் கடைபிடித்து

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஒழுகியுள்ளனர் என்பதையும் காண முடிகின்றது. இதன் மூலமே இந்த 47 நாயன்மார்களும் முக்தியின்பம் அடைந்துள்ளனர்.

நாயன்மார்களின் சரியை தொண்டுகள் சமயம், சார்ந்து அமைந்திருந்தாலும் அவை சமுதாயத்தின் நன்மை கருதியே ஆற்றப்பட்டன. திருக்கோயிலில் ஆற்றப்பட்ட தொண்டுகள் மக்களின் துயர் களைந்தது. இத்தகைய சரியை தொண்டுகள் மக்களிடையே பக்தியை வளர்க்கும் சேவையாகவும் விளங்கின என்கிறார் இலங்கேஸ்வரி அர்ச்சுனன் (2015). எனவே, உள்ளத் தூய்மையுடனும் உண்மையான அன்புடனும் செய்யப்படும் எந்தச் சேவையும் இறைவனுக்கே அர்ப்பணம் என்பதும் இவரின் (2015) கருத்து.

இன்றையக் காலக்கட்டத்தில் தொண்டுகள் மனித குலத்தின் அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிலையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பணம்,பொருள், நேரம், சேவை ஆகியவற்றை வழங்கும் செயல்பாடுகள் தொண்டுகள் எனப் போற்றப்படுகின்றன (குமரன் இராமையா, 2015). இத்தகைய தொண்டுகளையே போர்ட்டிக்சன் இந்திய அரசு சாரா இயக்கங்களான மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை, போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம், போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம் ஆகியவையும் வழங்கி வருகின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

உலகமயமாகிக் கொண்டிருக்கும் இன்றையச் சூழலில் பணமும் பொருளும் மட்டுமே பலரது சிந்தையைக் கவர்ந்திழுக்கிறது. ஆயினும், அதையும் தாண்டி மனித நேயத்தை மனத்தில் கொண்டு தன்னலம் கருதாமல் செயலாற்றும் இந்த அரசு சாரா இயக்கங்களின் தொண்டுகள் நாயன்மார்களின் சரியை தொண்டுகளை ஒத்திருப்பதைக் காண முடிகின்றது.

4.6.1 நாயன்மார்களின் சமயம் சார்ந்த சரியை தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமயம் சார்ந்த சரியை தொண்டுகளும் - ஒப்பீடு

பெரிய புராணத்தில் குறிப்பிடப்படும் 63 நாயன்மார்களும் சமயத்தின் பேரில் பல்வேறு தொண்டுகளைப் புரிந்துள்ளனர். இவர்களுள் 47 பேர் சரியை மார்க்கத்தில் சமயத்தின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் பங்காற்றியுள்ளனர். அதேவேளையில் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களும் சமயத்திற்குத் தொண்டு செய்வதைத் தலையாயப் பணியாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. **அட்டவணை 4.16** நாயன்மார்களின் சமயம் சார்ந்த சரியை தொண்டுகளையும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமயம் சார்ந்த சரியை தொண்டுகளையும் தொகுத்துக் காட்டுகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அட்டவணை 4.16

நாயன்மார்களின் சமயம் சார்ந்த சரியை தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமயம் சார்ந்த சரியை தொண்டுகளும் - ஒப்பீடு

	எண்	தொண்டுகள்	நாயன்மார்கள்	மலேசிய இந்து சங்கம்	போர்ட்டிக்சன் சமூகநல மேம்பாட்டுக் கழகம்	போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம்
சமயத் தொண்டு	1	ஆலயப் பூஜை தொண்டுகள் (மலர் பறித்தல், பூமாலை தொடுத்தல், விளக்கேற்றுதல், தூபமிடுதல், சந்தனம் அரைத்துக் கொடுத்தல் நெல் வழங்குதல்)	✓	✓		
	2	ஆலயத்தில் திருமுறை ஓதுதல்,ஓதுவித்தல்/ பஜனை செய்தல் / பதிகங்களைப் பாராயணம் செய்தல்.	✓	✓	✓	✓
	3	ஆலயத்தில் விழாக்காலப் பூஜைகளை ஏற்று நடத்துதல்.	✓	✓		
	4	ஆலயத்தில் அன்னதானம் வழங்குதல்.	✓	✓		
	5	ஆலயங்கள் அமைத்தல் / ஆலயத் திருப்பணிக்கு நன்கொடை வழங்குதல்.	✓	✓	✓	✓
	6	ஆலயத்தைத் தூய்மை செய்தல்.	✓	✓		
	7	ஆலயங்களில் குளம் வெட்டுதல்	✓			
	8	ஆலயத்திற்கு இசைக்கருவிகள் வழங்குதல்	✓			

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சைவ நெறியில் நிற்பவர்கள் திருக்கோயில்களையும் அவை உள்ளத் திருநகரங்களையும் தேடித் திரிந்து வழிபடுவர். இதனைத்,

நாடு நகரமும் நல்திருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே
(திருமந்திரம், 1418)

(**விளக்கம்**: இதன்கண் சீலநெறி நிற்போர் திருத்தொண்டு ஓதப்பெறுகின்றது. சிவபெருமான் மெய்யடியார்கள் உய்யுமாறு ஆண்டாண்டு வெளிப்பட்டருள்கின்ற திருநாடு திருநகரம் திருக்கோவில் முதலியவற்றைத் தலையன்பால் தேடித்திரிந்து 'ஆலயம் தானும்அரனெனத் தொழுமே' என்றபடி இடையறாது தொழுவர். அங்ஙனம் தொழுவார்க்கு அகம்புறமாய் இன்றியமையாதன முறையே பாடுதலும் பணிதலுமாம். அங்ஙனம் செய்தார் நல்லுள்ளங்களைச் சிவபெருமான் திருக்கோவிலாகக் கொண்டருள்வன்.)

எனும் பாடல் இயம்புகின்றது. இதனாலேயே நாயன்மார்கள் ஆலயத் தொண்டுகளில் தங்களது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து வாழ்ந்துள்ளனர் என்பது பெரிய புராணம் காட்டும் உண்மை.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

‘சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்’ (திருமுறை 4:1:6) என்று திருநாவுக்கரசர் பாடியுள்ளார். இதன்வழி சைவர்களின் பண்பாட்டில் நீர், மலர், சாம்பிராணி புகை போன்ற பொருள்கள் சிறப்பு வாய்ந்திருப்பதை அறிய முடிகிறது. குமரன் இராமையா, 2015). அதனால்தான் திருக்கோயிலில் விளக்கேற்றுதல், தூபமிடுதல், பூஜைக்குத் தேவையான மலர்களைப் பறித்துக் கொடுத்தல் போன்ற திருத்தொண்டுகள் நாயன்மார்களின் வாழ்நாள் கடமையாக இருந்து வந்துள்ளன.

பெரிய புராணத்தின் அடிப்படையில் ஆய்வு செய்கையில் முருகர், செருத்துணையார், திருநாவுக்கரசர், சடையர், இசை ஞானியார் ஆகியோர் ஆலயத்தில் இறைவனுக்கு மலர் பறித்துக் கொடுக்கும் திருத்தொண்டினைத் தவறாது ஆற்றி

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

வந்துள்ளனர் என்பது தெரிகிறது. ஆலய பூஜைகள் சிறப்பாக நடைபெற மலர்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன (தனபாக்கியம், 2007). மேலும், மலர்கள் ஒவ்வொன்றும் அதன் தனித்தன்மையினால் மனிதக் குலத்திற்கு நன்மை அளிக்கும் குணமுடையவை (சரவணபவன், 1986). இதன் பொருட்டே நாயன்மார்கள் மலர்களால் இறைவனை அர்ச்சிக்கவும் ஆராதிக்கவும் இத்தொண்டினை மேற்கொண்டனர். இவர்களுள் முருக நாயனார் எண்ணற்ற மலர்களைப் பறித்து இண்டை, தாமம், கண்ணி, பிணையல் போன்று பல்வேறு வகையான மாலைகளைத் தொடுத்து ஆலயத் தொண்டாற்றியுள்ளார். இதனை,

இண்டைச் சுருக்குந் தாமமுட னிணைக்கும் வாச மாலைகளும்
தண்டிற் கட்டுங் கண்ணிகளுந் தாளிற் பிணைக்கும் பிணையல்களும்
(தி.தொ.பு. 1030)

(**விளக்கம்**: சுருக்கும் இண்டைச்சுருக்கும் தாமங்களோடு, இணைக்கின்ற வாசனை பொருந்திய மாலைகளும், தண்டுபோலக் கட்டும் கண்ணிகளும் தாளிலே பிணைக்கும் பிணையல் வகைகளும்)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எனும் பாடல்வழி அறியலாம். எனவே, இத்தகைய மலர் பறிக்கும் தொண்டே இந்நாயன்மார்களின் முக்திக்கும் வழிவகுத்தது (வெள்ளைவாரணர், 2016).

இதனைத் தொடர்ந்து, விளக்கேற்றும் திருப்பணியும் ஆலயத் தொண்டுகளில் சிறப்பிடம் பெற்றுள்ளது. இறைவனை ஒளி வடிவில் காண்பதே வழிபாட்டின் வெற்றியாகக் கருதப்படுகிறது (தர்மலிங்கம், 2012). ஜோதி வடிவான ஈசன் உயிர்களைப் பற்றியிருக்கும் பாசத்தினை அறுத்து வீடு பேறு அருளக்கூடியவன். அதனாலேயே, அருட்பெருஞ்சோதியை ஆன்மா உணர வேண்டும் என்பதை வள்ளலார்,

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி
(திருஅருட்பா, 317)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

என்று உரைக்கிறார். அந்த வகையில், கலியர், கணநாதர், நமிநந்தியடிகள் ஆகியோர் விளக்கேற்றுவதன் மூலம் ஜோதி வடிவான இறைவனைத் தங்களுக்குள்ளே கண்டு முக்தி பேறு அடைந்தனர் என்பதைப் பெரிய புராணம் தெளிவுபடுத்துகிறது. இவர்கள் விளக்கேற்றும் திருப்பணிக்கு எவ்வித பங்கமும் ஏற்படாதிருக்க உயிரையும் மாய்க்கத் துணிந்தவர்களாவர். திருவிளக்கு ஏற்ற நெய் கிடைக்காதபோது தனது உதிரத்தையே வார்க்கத் தயங்காதவர்கள். நாயன்மார்களின் இந்த மனத்திடத்தை,

திருவிளக்கு திரியிட்டங் ககல்பரப்பிச் செயனின்ற
வொருவியவெண் ணெய்க்கீடா வுடலுதிரங் கொடுநிறைக்கக்
(தி.தொ.பு. 4036)

(**விளக்கம்**: திருவிளக்கு.....பரப்பி - திருவிளக்குக்களுக் கெல்லாம் திரியினை இட்டு அங்கு அகல்களை முறையாகப் பரப்பி வைத்து; செயல் நிரம்ப....மிடறரிய -அச்செயல் நிரம்பும்படி கிட்டாது ஒழிந்த எண்ணெய்க்கு ஈடாகத் தமது உடலினிறைந்த உதிரத்தைக் கொண்டு நிறைக்கும்படி)

எனும் கலியரின் வரலாறு கூறுகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அடுத்து, தூபமிடும் பணியும் ஆலயத் தொண்டுகளில் முதன்மை வகிக்கின்றது. தூபமிடுவது தெய்விக மணம் கமழச் செய்யும். இஃது இறைவழிபாட்டிற்குப் பெரிதும் உகந்ததாக அமைகின்றது (கிருபானந்த வாரியார், 2003). தூபத்தின் நறுமணம் ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் மனதை இறைவழிபாட்டில் இலயிக்கச் செய்கிறது. இதன்வழி, அகப்பூசனையில் இறைவனை இருத்தி நீண்ட நேரம் தியானத்தில் ஈடுபடவும் உதவுகிறது.

தவிர, தூபமிடும் பணியைச் செய்பவர்கள் இறைவனுக்குத் தொண்டு செய்பவர்களாவர். இதன் காரணமாகவே நாயன்மார்கள் இத்தகைய தொண்டுகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர். ஆலயத்திற்கு வரும் பக்தர்களுக்குத் தொண்டாற்றுவதன் மூலம் இறைவனுக்குச் சேவை புரியும் பாக்கியத்தைப் பெற்றனர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பெரிய புராணத்தில் குங்கிலியக் கலயர் ஆலயத்தில் தூபமிடும் தொண்டை இடையறாது செய்து வந்துள்ளார்.

இவரது திருத்தொண்டு,

> காலனா ருயிர்செற்றார்க்குக் கமழ்தகுந் குலியத்
> சாலவே நிறைந்து விம்ம விடும்பணி தலைநின் றுள்ளார்
> (தி.தொ.பு. 841)

(**விளக்கம்**: காலனை உதைத்துருட்டி உயிர் போக்கிய அமிர்தகடேசராகிய சிவபெருமானுக்கு மணம்மிக்க குங்குலியத்தூபத்தை மிகவும் நிறைந்து வீசும்படியாக இடுகின்ற திருப்பணியிற் சிறந்து நின்றவராயினார்.)

எனச் சேக்கிழாரால் பாடப்பெற்றுள்ளது. இந்நாயனார் தம் தொண்டினால் இறைவனுக்கு மிக அருகில் இருக்கும் பெரும் பேற்றினையும் பெற்றுள்ளது பெரிய புராணத்தின்வழி தெளிவாகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இதனைத் தவிர்த்து, ஆலயத்தில் சந்தனம் அரைத்துக் கொடுக்கும் திருப்பணியும் பெரிய புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நெற்றியில் திலகமிடுவதற்குச் சந்தனம் பயன்படுகிறது. மேலும், சந்தனம் உடலுக்குக் குளிர்ச்சியைத் தருவதாலும் இஃது எல்லாராலும் விரும்பி அணியப்படுகிறது. இதனாலேயே, வாசனை மிகுந்த சந்தனம் இறைவனின் திருமேனியை நீராட்டுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது (சோமசுந்தரம், 2001). தவிர, இறைவனுக்குச் சந்தனக் காப்புச் சாற்றவும் தேவைபடுகிறது. கஸ்தூரி, குரோஜனம், குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம் ஆகியவற்றுடன் சந்தனம் சேர்த்து இடப்படும் காப்பு இறைவனுக்கு மிக உகந்ததாகப் போற்றப்படுகிறது (கிருபானந்த வாரியார், 2003).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பெரிய புராணத்தில் மூர்த்தி நாயனார் சந்தனக் காப்பு அரைத்துக் கொடுக்கும் தொண்டினைச் செய்து முக்தியுன்பம் அடைந்தவர் என்பது புலனாகிறது. இந்நாயனார் இறைவனுக்குச் சாற்ற சந்தனம் கிடைக்காதபோது தனது முழங்கையைப் பாறையில் வைத்துத் தேய்த்ததை,

நட்டம்புரி வாரணி நற்றிரு மெய்ப்பூச் சின்று
முட்டும்பரி சாயினுந் தேய்க்குங்கைமுட்டா தென்று
வட்டந்டிகழ் பாறையின் வைத்து முழங்கை தேய்த்தார்
கட்டும்புறந் தோனரம் பென்பு கரைந்து தேய
(தி.தொ.பு. 992)

(**விளக்கம்**: "அருட் கூத்தப் பெருமானார் அணியும் நல்ல திரு மெய்ப்பூச்சுத் திருப்பணிக்கு இன்று முட்டுவந்து நேரும் தன்மை உண்டாயினும், அந்தச் சந்தனத்தைத் தேய்க்கும் எனது கையினுக்கு முட்டு நேராது" என்று துணிந்து, வட்டமாய் விளங்கிய சந்தனக்கற்பாறையில் தமது முழங்கையை வைத்து அதனைக் கட்டிப் போர்த்த புறந்தோலும் நரம்பும் எலும்பும் கரைந்து தேயும்படி தேய்த்தனர்.)

என்ற பாடல் விளக்குகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆலயத்திற்கு நெல் கொடுப்பதும் பெரிய புராணத்தில் பேசப்பட்டுள்ளது. ஆலயத்திற்கு வழங்கப்படும் நெல் இறைவனுக்கு அமுது படைக்க உதவுகிறது (நாகப்பன் ஆறுமுகம், 2008). உலகிலுள்ள உயிர்களுக்கு எல்லாம் ஈசன் படியளக்கிறார் என்பதை,

வாரா வழி தந்த மாநந்தி பேர் நந்தி
ஆரா அமுது அளித்தான் நந்தி பேர் நந்தி
(திருமந்திரம், 1784)

(**விளக்கம்**: மீண்டு வாரா வழியருள்புரிகின்ற முழுமுதற் சிவமாகிய மாநந்தியின் திருப்பெயர் 'நமசிவய.' அந்நந்தியே ஆருயிர்களுக்கு ஆரா அமுதளித்துப் பேரின்பம் பெருக்கும் இன்பவுருவினன். இன்பவுருவினன் என்பதே ஆனந்தி.)

எனும் பாடல் உரைக்கின்றது. எனவே, இறைவனுக்கு அமுது படைப்பதன் மூலம் சகல ஜீவராசிகளுக்கும் உணவு படைத்த திருப்தி கிட்டும் எனும் காரணத்தால்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நாயன்மார்களும் இத்தொண்டினைப் புரிந்தனர். படைத்தளபதியாக இருந்த கோட்புலியார், தமக்குக் கிடைத்த கூலியில் சிவாலயத்தில் நெல்படி பெருகச் செய்தார். இதனை,

மன்னவன்பால் பெறும் சிறப்பின் வளம் எல்லாம் மதி அணியும்
பிஞ்சகர் தம் கோயில் தொறும் திருஅமுதின் படிபெருகச்
செந்நெல் மலைக் குவடு ஆகச் செய்து வரும் திருப்பணியே
பல்நெடும் நாள் செய்து ஒழுகும் பாங்கு புரிந்து ஓங்கும் நாள்
(தி.தொ.பு. 4135)

(**விளக்கம்**: மன்னவன்பால்.....வளமெல்லாம் - அரசனிடம் அத்தொழிலிற் பெறுகின்ற சிறந்த வளங்களை யெல்லாம்; மதியணியும்....திருப்பணியே - சந்திரனை அணிந்த இறைவரது கோயில்கள் தோறும் திருவமுதுக்குரிய படித்தரம் பெருகுவதற்காகச் செந்நெல்லினை மலைச்சிகரம் போலக் குவித்துச் செய்துவரும் திருப்பணியினையே; பன்னெடு.....ஓங்குநாள் - பல நீண்ட காலங்கள் செய்துவருகின்ற ஒழுங்கு பெறும்படி செய்து பணிசெய்து சிறந்து வாழும் நாளிலே.)

எனச் சேக்கிழார் பாடுகின்றார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேற்குறிப்பிடப்பட்ட ஆலயப் பூஜைக்கான தொண்டுகளில் நாயன்மார்களின் பக்தித் திறத்தைக் காண முடிகின்றது. ஆலயம் என்பது இறைவன் உறையும் புனிதத் தலம் என்பதால் அங்கு செய்யப்படும் தொண்டுகள் இறைவனுக்கே செய்யப்படும் தொண்டுகள் என்பது நாயன்மார்களின் கொள்கையாக இருந்து வந்துள்ளது. இதுவே இவர்களின் முக்திக்கும் வழிவகுத்தது.

நாயன்மார்களின் இத்தகைய தொண்டுகள் இன்றளவும் பின்பற்றப்பட்டு வருகின்றன. அதன் அடிப்படையில், மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவையும் ஆலயப் பூஜைக்குத் தேவையான பொருட்களை வழங்குவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறது. ஆலய வழிபாட்டிற்குத் தேவையான மலர் மாலைகள், சந்தனம், பால், எண்ணெய், கற்பூரம் விளக்குகள் போன்ற பூஜை பொருட்கள் அருகிலுள்ள பூக்கடைகளிலிருந்து கொணரப்படுகின்றன. இந்தப் பொருட்கள் பல

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

வேளைகளில் மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவையினால் நன்கொடையாகக் கொடுக்கப்படுகின்றன. குறிப்பாக, ஆலய விழாக்காலப் பூஜையின்போது இவை வழங்கப்பெறுகின்றன.

மேலும், கோயிலுக்கென மாதந்தொறும் 20 கிலோ அரிசியும் இவ்வியக்கத்தால் வழங்கப்படுகின்றது. இதனால், ஆலய நிர்வாகத்தின் செலவினத்தைக் குறைக்கவும் இவ்வியக்கம் துணைபுரிகிறது. எனவே, மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவையின் இத்தகைய தொண்டுகள் நாயன்மார்களின் தொண்டை ஒத்திருப்பதைப் பார்க்க முடிகின்றது. இவ்வியக்கத்தின் தொண்டுகள் நாயன்மார்களைப் போன்று அமையாவிட்டாலும் அதன் குறிக்கோள் இறைப்பணியே என்பதைக் காண முடிகின்றது.

இதனைத் தொடர்ந்து, திருமுறை ஓதுதல், பஜனை பாடுதல், பதிகங்களைப் பாராயணம் செய்தல் போன்ற திருத்தொண்டுகளையும் நாயன்மார்களின் வாழ்விலும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் நடவடிக்கைகளிலும் காண முடிகின்றது. ஒரு பிறவியில் பெருமானை வாழ்த்திப் பாடிப் பெறும் பயனானது அடுத்தடுத்த பிறவிகளிலும் தொடரும் என்பது சைவ சித்தாந்தத்தின் முடிவு. இதைத்தான் திருவள்ளுவரும்,

> ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
> எழுமையும் ஏமாப் புடைத்து
>
> (குறள், 398)

என்கிறார். பாடுவதன்வழி இறைவனை அடையலாம் என்பதைச் சேக்கிழாரும் 'பதிகப் பெருவழி' எனப் பெரிய புராணத்தில் குறிப்பிட்டுள்ளார் (தர்மலிங்கம், 2012).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பாடல்கள் அல்லது பதிகங்கள் சைவ சமயத்தவர் மேற்கொள்ளும் பூஜையில் முக்கிய அங்கம் வகிப்பவையாகத் திகழ்கின்றன (சரவணபவன், 1986). அதன் காரணமாகவே நாயன்மார்களும் ஏனைய அடியார்களும் இறைவனைப் புகழ்ந்து பாமாலை தொடுத்துத் தங்கள் பக்தியினை வெளிப்படுத்தினர். இவர்களுள் திருநாவுக்கரசர் குறிப்பிடத்தக்கவராவார். திருநாவுக்கரசர் தம் வாழ்நாள் முழுவதையும் இறைவனை நினைந்து பாடுவதிலேயே கழித்தவர்.

தெரிவரிய பெருந்தகைமைத் திருநாவுக் கரசுமணம்
பரிவுறுசெந் தமிழ்ப்பாட்டுப் பலபாடிப் பணிசெயுநாள்
(தி.தொ.பு. 1409)

(**விளக்கம்**: திருவீரட்டானத்தினுள் எழுந்தருளி யிருக்கும் அமுதமானவரை, மனத்தினுள் மிக்க அன்பு பொருந்தும் செந்தமிழ்ப்பாட்டுக்கள் பலவற்றையும்பாடித் திருப்பணி செய்கின்றநாளிலே.)

என்று சேக்கிழாரும் நாயனாரின் திருத்தொண்டினைப் புகழ்கின்றார். முருகர், செருத்துணையார், காரியார், தண்டியடிகள் போன்றோரும் பாமாலை சூட்டி இறைவனை வழிபட்டுள்ளனர். நாயன்மார்கள் பாடிய பாடல்களின் தொகுப்புப் பன்னிரு திருமுறைகளாகப் பின்னாளில் வகுக்கப்பெற்றது.

இறைவனை நாவால் வழிபடாதவர்களின் ஜென்மம் கடைத்தேறாது என்பதை 'நாக்கைக் கொண்டு அரன் நாமம் நவில்கிறார்' (திருமுறை 5:89:1958) என்று திருநாவுக்கரசர் குறிப்பிடுகிறார். திருமுறை பாடல்களைப் பாடுவதன்வழி ஆன்மாவில் உறையும் இறைவனைக் கண்டு கொண்டு பாச நீக்கம் பெறலாம் என்பதைக் காரைக்கால் அம்மையாரும்,

நாமாலை சூடியும் நம்ஈசன் பொன்னடிக்கே
பூமாலை கொண்டு புனைந்தன்பாய் - நாமோர்
அறிவினையே பற்றினால் எற்றே தடுமே
எறிவினையே என்னும் இருள்
(திருமுகப்பாசுரம், 130)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேற்கண்ட நாயன்மார்களின் வரலாறு இக்கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் அமைகிறது. இவர்கள் இறைவனை நாளும் வாயார வாழ்த்தி வணங்கி வீடுபேறு பெற்றவர்களாவர்.

எனவே, பாமாலைகள் பாடுவது பதியாகிய இறைவனைக் கண்டு கொள்ள எளிய வழியாக அமைகின்றது. திருமூலரும்,

அறிந்துணர்ந் தேனிவ் வகலிட முற்றுஞ்
செறிந்துணர்ந் தோதித் திருவருள் பெற்றேன்
(திருமந்திரம், 1563)

(**விளக்கம்**: திருவருட்டுணையால் உலகியல் உண்மை முற்றும் அறிந்துணர்ந்தேன். சிவன் திருவடிக்குப் பேரன்பு வைத்துத் திருமுறையும் சித்தாந்த நூல்களும் ஓதியுணர்ந்து திருவருள் பெற்றேன்.)

என்ற பாடல்வழி இயம்புகின்றார். இறைவனின் அருள்பெற்ற இருபத்து ஏழு பேரும் ஏனைய அடியார்களும் சிவத்தின்மேல் கொண்ட அன்பின் பெருக்கால் திருமுறைகளை நமக்கு அளித்திருக்கின்றனர். இத்திருமுறைகள் நம்மைப் போன்றவர்கள் இறைவனைப் பாடிப் பணியவே இவர்கள் மூலம் அருளப்பட்டதாகும் (தர்மலிங்கம், 2012).

இதன் பொருட்டே போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களும் ஆலயங்களில் திருமுறை ஓதுதல், பஜனை செய்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபாடு காட்டி வருகின்றது. மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை வாரந்தொறும் சமய வகுப்புகள் நடத்தி வருகின்றது. போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகமும் இதனுடன் இணைந்து திருமுறை ஓதும் விழாவையும் நடத்துகிறது. போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகமோ ஆலயங்களில் பஜனைகள் செய்வதை செயல்படுத்தி வருகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இவ்வியக்கங்களின் இந்த நடவடிக்கைகள் இங்கு வாழும் மக்கள் திருமுறைகளை ஓதக் கற்றுக் கொள்ளத் துணைசெய்கின்றன. இறைவனை எவ்வாறு போற்ற முடியுமோ அவ்வாறே பதிகங்களால் போற்றி வணங்கிடவும் வழிவகுக்கிறது. மேலும், நமக்குப் பாடத் தெரியாவிட்டாலும் பிறர் பாடும்போது அதனைக் கேட்டு மகிழ வேண்டும்; பாடுவோரையும் ஆதரிக்க வேண்டும் (நாகப்பன் ஆறுமுகம், 2018). இதனால் எந்த உலகத்திலும் எவ்வித துன்பமும் நேராது என்பதை,

> மாதொரு கூறனை வலஞ்சுழி மருவிய மருந்தினை வயற்காழி
> நாதன் வேதியன் ஞானசம்பந்தன்வாய் நவிற்றிய தமிழ்மாலை
> ஆதரித்து இசைகற்று வல்லார் சொலக் கேட்டுகந்தவர் தம்மை
> வாதியாவினை மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம் வந்தடையாவே
> (திருமுறை 2:106:2626)

(**விளக்கம்**: மாதொருகூறனை, திருவலஞ்சுழியில் விளங்கும் மருந்து போல்வானை, காழி ஞானசம்பந்தன் பாடி ஏத்திய இத்திருப்பதிகத்தை அன்போடு இசைகூட்டிப் பாடுவார். அதனைக் கேட்பார் ஆகிய அடியவர்களை வினைகள் சாரா. இம்மை, மறுமை எப்போதும் வருத்தம் வந்து அவர்களை அணுகா.)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எனும் பாடல் விளக்கி நிற்கிறது. அந்த வகையில், போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்கள் திருமுறையைப் பயிற்றுவிக்க முறையான ஆசிரியர்களின் துணையை நாடுகின்றன. மேலும், திருமுறை பாடுவோருக்குச் சன்மானங்கள், வெகுமதிகள் எனக் கொடுத்து ஊக்குவித்து மாநில, தேசிய அளவிலான போட்டிகளிலும் கலந்து கொள்ளச் செய்கின்றன. இவ்வியக்கங்களின் இத்தகைய பணிகள் பெரிய புராணத்தில் கணநாதரின் தொண்டுகளோடு பொருந்தி இலங்குகிறது.

அடுத்ததாக, சிவப்பூஜைகளில் பங்கு கொள்வதும் சைவ சித்தாந்தம் காட்டும் நன்னெறிகளில் ஒன்றான சரியை தொண்டேயாகும் (தர்மலிங்கம், 2012). இந்தச் சிவப்பூஜை தமக்கான ஆன்மார்த்தப் பூஜையாகவும் பிறருக்குச் செய்யப்படும் பரார்த்தப் பூஜையாகவும் இருக்கலாம் என்றும் சைவம் குறிப்பிடுவதாக அவர் (2012) கூறுகிறார். இதன் பொருட்டே நாயன்மார்கள் அன்றாடம் ஆலயங்களில் பூஜைகள் செய்வதை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஆலயத்திற்குப் பல சிக்கல்களோடும் துன்பங்களோடும் ஆறுதலை எதிர்ப்பார்த்து வரும் பக்தர்களுக்கு இத்தகைய பூஜைகள் மனவலிமையைத் தரவல்லவை என்பதால் விழாக்காலங்களில் சிறப்பாகப் பூஜைகள் இயற்றி மகிழ்ந்திருந்தனர்.

சிவாலயங்களில் நித்தியப் பூஜையும் சிறப்புப் பூஜையும் நடைபெறாவிடில் தீமையே விளையும். இதனால் கொடிய நோய்கள் பரவி மக்களின் நல்வாழ்வு கெடும். மேலும், மழையின்றி பஞ்சமும் வறட்சியும் நிலவும். தவிர அரசியல் நிலைத்தன்மை கெட்டு நாடே பெரும் சிக்கல்களுக்கு உள்ளாகிவிடும். இதனை,

> ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்
> போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
> கூற்றுதைத் தாந்திருக் கோயில்க ளெல்லாஞ்
> சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே
>
> (திருமந்திரம், 500)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

(**விளக்கம்**: கூற்றுதைத்த சிவபெருமான் திருக்கோவில்களில் எல்லாம் நெறி நூலும் துறைநூலுமாகிய செந்தமிழ் வேத ஆகமங்களில் விளம்பியபடி நாள்வழிபாடு சிறப்புவழிபாடுகள் முட்டாது செய்தல் வேண்டும். செய்யத் தவறுமானால் உலகத்துக்கு அளவில்லாத கொடிய நோய்கள் பெருகும். வேண்டுங்காலத்து மழைபெய்யாது. சிறப்புடை மன்னரும் போர்வலி குன்றி மறமும் மானமும் இழந்து சீரழிவர்.)

எனத் திருமந்திரம் பறைசாற்றுகின்றது. மாறாகச் சிவப்பூஜைகளைச் சிவாகம முறைப்படி செய்வதால் நற்பலன்களே கிட்டும். இதனால்தான் நாயன்மார்கள் இறைநெறி உறைப்பால் ஆலயப் பூஜைகள் இயற்றி இறைவனின் அன்புக்குப் பாத்திரமாகினர்.

பெரிய புராணத்தில் சடையர், இசைஞானியார், நின்றசீர் நெடுமாறர், மங்கையர்கரசியார், ஏயர்கோன் கலிகாமர் போன்றோர் ஆலயப் பூஜைகளைத் தவறாமல் செய்து வந்தவர்கள் என்பதை அறிய முடிகிறது. ஆலயங்களில் நித்தமும் சிவாகம முறைப்படி ஆறுகாலப் பூஜைகள் நடத்தப்படுவதற்கு இவர்கள் துணைநின்றனர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இதுவே அந்நாளில் நாடு வளம் பெறவும் மக்கள் சுபிட்சமாக வாழவும் வழிவகுத்தது. ஆலயப் பூஜைகளின்வழி மக்களிடையே இறையுணர்வை மேலிடச் செய்து சமுதாயத்திற்கும் இவர்கள் தொண்டாற்றியுள்ளனர். அதேவேளையில், இறைநெறியின் உறைப்பால் சிவச்சிந்தனை மேலோங்க பாசங்களிலிருந்து விடுபட்டு இறையின்பத்தையும் அடைந்தவர்கள் என்பதும் தெளிவாகிறது.

நாயன்மார்களை முன்னோடியாகக் கொண்டே போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களும் ஆலயங்களில் மக்களின் நன்மைக்காகப் பல பூஜைகளை ஏற்று நடத்தி வருகின்றன. இதில் மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை குறிப்பிடத்தக்கது. இவ்வியக்கத்தினர் இடம், வாய்ப்பு, பொருளாதாரம் ஆகியவற்றின் அடிப்படையில் இயன்றவாறு ஆலயங்களில் பூஜைகள் இயற்றி வருகின்றனர். சிவராத்திரி, நவராத்திரி, பிரதோஷம், ஆனித் திருமஞ்சனம், தைப்பூசம், விநாயகர் சதுர்த்தி போன்ற சிறப்பு நாட்களில் இவ்வியக்கம் பூஜைக்கான மொத்த செலவையும் ஏற்றுக் கொள்கிறது. தினமும் நடைபெறும் பூஜைகளிலும் சிறிய அளவிலேனும் தம் பங்கைத் தவறாமல் செய்து வருகின்றது.

மேற்குறிப்பிடப்பட்டதைப்போல், இவ்வியக்கம் சைவ மரபுகளை முன்நிறுத்தி ஆலயப் பூஜைகளை ஏற்று நடத்தி வருகின்றது. இதனால், சைவத்தின் உயர்ந்த கொள்கைகளும் முறையான கிரியை முறைகளும் மக்களின் அறியாமையைப் போக்கத் துணை செய்கின்றன. மேலும், தூய மனத்தோடு ஆற்றும் இறைத்தொண்டின் மூலம் மக்கள் வழிபாடு செய்யவும் துணைநின்று உதவுகிறது. தற்காலச் சூழலுக்கு ஏற்ற வகையில் மேற்கொள்ளப்படும் இத்தகைய பூஜைகள் நாயன்மார்களின் தொண்டுகளை ஒத்து அமைந்திருப்பதையும் இதன்வழி காண முடிகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இதனைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கும் தொண்டும் போற்றுதற்குரிய ஒன்றாகவே திகழ்கிறது. மானிடர்கள் உயிர் வாழ்வதற்கும் இறைவழிபாடு செய்வதற்கும் உணவு அவசியமாகிறது (வள்ளலார், 2013). உணவின்றிக் கிடப்பது பசிக்கொடுமையையும் குடல் சம்பந்தப்பட்ட நோயையும் உண்டாக்கும் அபாயம் உள்ளது. இதனால், இறைவனை முழுமையாக நினைக்க முடியாமல் போகும் (தர்மலிங்கம், 2012). எனவே, உணவு இறைவனை மனதார எண்ணுவதற்குத் துணையாக இருக்கின்றது என்பதை உணர வேண்டும்.

மேலும், ஒவ்வொருவரின் உடம்பிலும் இறைவன் குடிகொண்டிருக்கின்றான் என்கிறது சித்தாந்தம். அத்தகு, உயிருக்குயிராய் உடம்பில் கோயில் கொண்டிருக்கும் இறைவனைச் செய்கைகளினாலும் பாதுகாக்கின்றவர் பெருந்தவச் சீலர்கள் ஆவர் (தர்மலிங்கம், 2012). எனவே, இறைவன் நமக்கு அளித்துள்ள இவ்வுடம்பின் பயனையும் அதனால் அடைய வேண்டிய திருவடிப் பேற்றையும் உணர்ந்த நாயன்மார்கள் அடியார்களுக்கு அன்னதானம் வழங்குவதைக் கடைபிடித்தனர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

உயிரைக் காக்கவும் வளர்க்கவும் உடலுக்கு அன்னம் தேவை. அத்தகைய அன்னம் உயிராகப் போற்றப்படுகிறது. ‘அன்னம் பிராண மயம்’ என்ற வடமொழி சுலோகமும் அன்னத்தின் சிறப்பைப் போற்றிப் புகழ்கின்றது (ஸ்ரீஜா வெங்கடேஷ், 2014). இதனால், பசி என்று வந்தவர்க்குப் புசிக்க அன்னத்தைத் தருபவர் உயிரைத் தந்தவர்க்கு நிகரானவர். இதனையே நமது சங்கத் தமிழும்,

> நீரின் றமையாக் கெல்லாம்
> உண்டிக் கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
> உண்டி முதற்றே உணவின் பிண்டம்
> உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
>
> (புறம், 18)

பறைசாற்றுகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேலும், 'தானத்தில் சிறந்தது அன்னதானம்' சான்றோர் வாக்கு. உலகின் சிறந்த பொருளாகவும் அன்னம் மதிக்கப்படுகிறது. பசித்தோர்க்கு உணவிடுவதை ஒரு தர்மமாகவே சைவம் கூறுகின்றது. ஒருவருக்குத் தங்கம், வைரம் முதலிய பொருட்கள் எவ்வளவு கொடுத்தாலும் போதும் என்ற திருப்தி வரவே வராது. ஆனால், அன்னம் மட்டுந்தான் ஒருவரின் வயிற்றைச் சென்றடைந்து உடல் உறுப்புகளைக் குளிர்வித்து மனத்திருப்தி அடைந்தவனாக ஆக்குகிறது. இதனாலேயே அடியவர்களுக்கு உணவளிப்பதன்வழி இறைவனுக்கும் உணவளிக்கும் மனதிருப்தியைப் பெற்றனர் நாயன்மார்கள்.

பெரிய புராணத்தில் இளையான்குடி மாறனார், அப்பூதியடிகள், குலச்சிறையார், சிறுதொண்டர், நரசிங்க முனையரையர், முனையடுவார், சிறப்புலியார், மூர்க்கர், கலிகம்பர் போன்றோர் அடியார்களுக்கு உணவிடும் தொண்டினைப் புரிந்துள்ளது தெரிய வருகின்றது. சோதனைகள் பல வந்த போதிலும் அடியார்களுக்கு உணவளிப்பதை இவர்கள் விடவில்லை என்பதை அறிய முடிகின்றது. இதற்கு, அடியாரின் வேண்டுகோளுக்கிணங்கி அவருக்குப் பிள்ளைக் கறி படைத்த சிறுதொண்டரின் வரலாறு சிறந்த சான்றாகும். இந்நாயன்மாரின் பக்தித் திறத்தைச் சேக்கிழாரும்,

> இனிய மழலைக் கிண்கிணிக்கா லிரண்டு மடியின் புடையிடுக்கிக்
> கனிவாய் மைந்தன் கையிரண்டுங் கையாற் பிடிக்கக் காதலனு
> "நனிநீ டுவகை யுறுகின்றா" ரென்று மகிழ்ந்து நகைசெய்யத்
> தனிமா மகனைத் தாதையார் கருவி கொண்டு தலையரிவார்
> (தி.தொ.பு. 3722)

(**விளக்கம்**: இனிய மழலை ஓசைதரும் கிண்கிணியை அணிந்த கால்கள் இரண்டினையும் மடியின் இடையே இடுக்கிக்கொண்டு கனி போன்ற வாயினையுடைய மகனது கைகளிரண்டினையும் கையாற் பிடித்துக்கொள்ள; காதலனும்.....நகை செய்ய - மைந்தனும் தனது பெற்றோர்கள் மிகவும் பெரிய மகிழ்ச்சி யடைகின்றார்கள் என்று மகிழ்ந்து நகைக்க; தனி.....அரிவார் - ஒப்பற்ற பெருமையுடைய மகனாரைத் தாதையாராகிய சிறுத்தொண்டர் கருவியினால் தலையினை அரிவாராகி,)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

என்று இயம்புகின்றார். எனவே, எத்தகைய சூழலிலும் உணவளிக்கும் கொள்கையைக் கைவிடாத நாயன்மார்களின் வாழ்வில் அன்பு நெறியும் பக்தி நெறியும் மேலோங்கி இருந்ததே இதற்குக் காரணங்களாக அமைகின்றன எனலாம்.

நாயன்மார்களின் வழிகாட்டலின் பேரில் சமய இயக்கமான மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவையும் இயன்ற அளவில் ஆலயங்களில் அன்னதானம் வழங்கி வருகின்றது. இது பெரும்பாலும் சிவராத்திரி, நவராத்திரி, தைப்பூசம், விநாயகர் சதுர்த்தி போன்ற தினங்களில் நடைபெறுகிறது. இவ்விழாக்காலங்களில் குறைந்தது நூறு பேருக்காவது ஆலயத்தில் அன்னதானம் ஏற்பாடு செய்யப்படுகின்றது. இதில் அருகிலுள்ள தமிழ்ப்பள்ளி மாணவர்கள், அரசாங்க ஊழியர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு பசியாறுகின்றனர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எனவே, அடியவர்களின் பசியாற்றி இறையின்பம் அடைந்த நாயன்மார்களின் தொண்டோடு இவ்வியக்கத்தின் அன்னதானப் பணியும் நோக்கத்தக்கது. இறைவழிபாட்டில் ஈடுபடும் பக்தர்கள் பசியின்றி இருக்க இவர்கள் செய்யும் அன்னதானம் உதவியாக இருக்கின்றது. அந்த வகையில் இறைப்பணியை அடிப்படையாகக் கொண்டே இவ்வியக்கத்தின் சேவையும் அமைகின்றது.

இதைத் தவிர்த்து, ஆலயங்கள் கட்டுவதும் அதனைப் பராமரிக்க நிதியுதவி அளிப்பதும் சைவ நன்னெறியில் சரியை தொண்டைச் சார்ந்தே அமைகிறது. அக்காலத்தில் ஆலயங்கள் சமூக மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தும் மையமாகத் திகழ்ந்தன. கல்விக்கூடமாகவும் தேர்தல் கூடமாகவும் மருத்துவச் சாலையாகவும் விளங்கிய ஆலயங்களைப் பராமரிப்பதை நாயன்மார்கள்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

திருதொண்டாகக் கருதினர். இதனால், ஆலயங்களுக்கு நிதி அளித்து அதன் உன்னதத்தையும் பாதுகாத்தனர்.

பசுவாகிய ஆன்மா பாசங்களிலிருந்து நீங்கப்பெற்று பதியாகிய இறைவனை அடையும்வரை மீண்டும் மீண்டும் பிறப்பெடுத்துக் கொண்டேயிருக்கும் என்பது சித்தாந்தத் தத்துவம். அந்த வகையில் மும்மலங்களை நீக்கி பிறவிப் பயனைத் தரவல்லவை ஆலயங்களே ஆகும் (சுத்தானந்த பாரதியார், 1998). இதனாலேயே 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற முதுமொழியும் வழக்கத்தில் வந்தது. எனவே ஆலயங்கள் அமைப்பது சிறந்த சிவப்புண்ணியமாகப் போற்றப்படுகின்றது (மணிவாசகன், 2010).

இதன் அடிப்படையில், ஏயர்கோன் கலிகாமர், மங்கையர்கரசியார், கோட்செங்கட்சோழர் போன்றோர் ஆலயம் எழுப்புவதற்கும் திருப்பணி செய்வதற்கும் தம் செல்வம் முழுவதையும் அர்ப்பணித்துள்ளனர் என்பது பெரிய புராணம் காட்டும் உண்மை. அக்காலத்தில் ஆலயங்கள் எழுப்புவது ஒவ்வோர் அரசின் கடமையாகவும் இருந்து வந்துள்ளது. அந்த வகையில் அரச மரபைச் சார்ந்த மங்கையர்கரசியாரும் கோட்செங்கட்சோழரும் பல ஆலயங்கள் உருவாகக் காரணமாயிருந்தவர்கள். இவர்களுள் கோட்செங்கட்சோழர் தமிழகம் முழுவதும் 70 ஆலயங்களை எழுப்பியவர் என்பது குறிப்பிடத்தக்கது (கிருபானந்த வாரியார், 2003). இதனைச் சேக்கிழாரும்,

> பூதநாதன் தான் மகிழ்ந்து பொருந்தும் பெருந்தண் சிவ ஆலயங்கள்
> காதலொடும் பல எடுக்கும் தொண்டு புரியும் கடன் பூண்டார்
> (தி.தொ.பு. 4208)

(**விளக்கம்**: பூதநாதராகிய சிவபெருமான் தாம் மகிழ்ச்சி கொண்டு பொருந்தி வீற்றிருக்கும் பெரிய குளிர்ந்த சிவாலயங்கள் பலவற்றையும் பெருவிருப்புடன் எடுக்கின்ற திருத்தொண்டினைச் செய்யும் கடமையினை மேற்கொண்டனர்.)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

என்று பெரிய புராணத்தில் பாடியுள்ளார்.

எனவே, ஆலயங்கள் எழுப்புவதும் அதற்கு நிதி வழங்குவதும் ஒப்பற்ற தொண்டாக விளங்குகிறது. அந்த வகையில், போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களான மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை, போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம், போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம் ஆகியவை ஆலயத் திருப்பணிக்கு நிதி வழங்குவதைக் கடமையாகக் கொண்டிருக்கின்றன. தற்காலச் சூழலில் தனிமனிதனாக ஒரு திருக்கோயிலை எழுப்புவதென்பது கடினமான ஒன்று. இதுபோன்ற அமைப்புகளின் முயற்சிகளினாலும் பரிந்துரைகளினாலும் சில சமயங்களிலொரு குறிப்பிட்ட தொகையை அரசிடமிருந்து நிதியாகப் பெற்று ஆலயத் திருப்பணிகளைச் செம்மைப்படுத்த இயலும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேற்குறிப்பிட்டதைப் போன்று நாயன்மார்களின் முயற்சியைப் பின்பற்றும் வகையில், போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களும் செயல்பட்டு வருகின்றன. முன்னமே குறிப்பிட்டிருந்ததைப் போன்று தற்போது போர்ட்டிக்சன் ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம் திருப்பணிகளுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதால் இவ்வியக்கங்களின் தொண்டு பன்மடங்கு துணை செய்கிறது. அரசாங்க நிதியுதவி மட்டுமின்றி சுற்று வட்டார மக்களிடமிருந்தும் வசூலிக்கப்படும் பணம் ஆலய நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்கப்படுகிறது.

பொருட்செல்வம் என்பது நிலையற்றது. எனவே, நிலையில்லாத பொருட்செல்வத்தினைக் கொண்டு நிலையான அருட்செல்வத்தைத் தேட வேண்டும் என்பது நாயன்மார்கள் நமக்குக் காட்டிய வழி. அறவழியில் ஈட்டிய பொருளை இறைவனின் ஆலயத் திருப்பணிக்கு அவர்கள் செலவிட்டனர். அதன் மூலம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இறைவனின் திருவடிப் பேற்றைப் பெற்றனர். இவர்களைப் பின்னொற்றியே போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களும் அருட்செல்வத்தைத் தேடும் பணியில் பயணிக்கிறது. மக்களும் அவ்வழியே செல்ல ஓர் ஊன்றுகோலாக அமைகின்றது.

இதைத் தவிர்த்து ஆலயத்தைத் தூய்மை செய்தலும் உன்னதத் தொண்டாகக் கருதப்படுகிறது. இஃது அப்பர் பெருமானின் உழவாரத் தொண்டோடு நோக்கத்தக்கது. அவர் வாழ்ந்த காலத்தில் சமணர்களின் ஆதிக்கத்தால் பல சிவாலயங்கள் பாழடைந்து கிடந்தன (வேலுப்பிள்ளை, 1985). அவ்வாலயங்களைப் புதுப்பிக்கும் முயற்சியாகவே அப்பரடிகள் அங்கு முளைத்திருந்த புல் பூண்டுகளைத் தம் உழவாரப் படை கொண்டு செதுக்கினார். இதன்வழி, ஆலயங்கள் எப்பொழுதும் சுத்தமாக இருக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் உலகுக்கு உணர்த்தினார் (மஞ்சுளா, 2004). அப்பரடிகளைப் பின்னொற்றி முருகர், செருத்துணையார், சடையர், இசைஞானியார், தண்டியடிகள் போன்றோரும் ஆலயத்தைத் தூய்மை செய்வதில் அக்கறை கொண்டொழுகினர் என்பதை பெரிய புராணம் சுட்டுகின்றது.

ஆலயம் என்பது நம் மனித உடலை ஒத்திருக்கின்றது என்பது சிந்தாந்தத்தின் கொள்கை. அந்த ஆலயத்தில் உறையும் இறைவன் நம் ஆன்மாவிலும் உறைகின்றான் என்பதனை நன்கு உணர்ந்தவர்கள் நாயன்மார்கள். அதனால், உயிரில் கலந்திருக்கின்ற பெருமானை அடையும் ஒரு திறவுகோலாக ஆலயத் தூய்மை பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர். ஆலயத் தூய்மையினைப் பேணிக் காக்காவிட்டால் இறைவனை ஒன்றிய மனத்தோடு எண்ணுவதற்கு இயலாமல் போய்விடும் என்பதையும் அவர்கள் அறிந்திருந்தனர். அதனால், ஆலயத்தைக் கூட்டிப், பெருக்கி, மெழுகிக், கோலமிட்டு இறைபணியைச் செய்து வந்தனர். இதன்வழி, தங்களது உடலை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மெய்யுணர்வு வழியில் பழக்கி இறைவனின் திருவடி உணர்வைப் பெற்றனர் (தர்மலிங்கம், 2012). ஆலயத் தூய்மையைப் பேணுங்கால் தம் உயிரைப் பற்றியிருக்கின்ற அழுக்குகளையும் அகற்றி முக்தி எய்தினர்.

நாயன்மார்களின் சமயத் தொண்டுகளை வழிகாட்டியாகக் கொண்டு, போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களும் ஆலயத் தூய்மை பணியில் ஈடுபட்டு வருகின்றன. போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம் இத்தூய்மை பணியை ஒருமுறை மட்டுமே ஏற்று நடத்தியுள்ளது. எனினும், இத்திருப்பணியைத் தொடர்ந்து நடத்துவதற்கான முயற்சிகளில் இவ்வியக்கம் ஈடுபாடு காட்டி வருகின்றது. மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை இத்தகைய நடவடிக்கைகளை நேரிடையாக நடத்தாவிட்டாலும் அதன் பங்கும் நன்மையளிப்பதாகவே உள்ளது. இவ்வியக்கம் மாதம் ஒருமுறை தம் சமய வகுப்பு மாணவர்களின் துணையுடன் ஆலயத் தூய்மை பணியில் ஈடுபட்டு வருவது இங்குக் குறிப்பிடத்தக்கது. ஆகவே, நாயன்மார்களைப் போன்று இன்றும் ஆலயத் தூய்மை பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் இந்த அரசு சாரா இயக்கங்களின் தொண்டும் போற்றத்தக்கது.

மேற்குறிப்பிடப்பட்ட தொண்டுகளினூடே ஆலயங்களில் குளம் வெட்டுவதும் சரியை தொண்டேயாகும். நாயன்மார்களின் வரலாற்றில் ஆலயங்களில் குளங்கள் அமைக்கும் தொண்டும் சேக்கிழாரால் பாடப்பட்டுள்ளது. முறையான நீர்நிலைகளைத் தெரிவு செய்து வழிபாடு இயற்றுவோர்க்கு இறைவனின் அருள் கிட்டும் என்பதனாலேயே, ஆலயங்களில் குளங்கள் அமைக்கப்பட்டன. இஃது இறைத்தீர்த்தம் எனவும் வழங்கப்பட்டது (தர்மலிங்கம், 2012).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

குளத்தில் உள்ள நீர் ஆலயத்தைத் தூய்மை செய்யப் பயன்படுத்தப்படுகிறது. மேலும், ஆலயத்தில் எழுந்துள்ள இறை மூர்த்தங்களை நீராட்டவும் இந்த நீர் உதவுகிறது. தவிர, ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் தம் உடலைச் சுத்தப்படுத்திய பின்னரே ஆலயத்திற்குள் புக வேண்டும் என்பது நியதி. எனவே, பக்தர்கள் குளத்தில் மூழ்கி நீராடிய பிறகே இறைவழிபாடு செய்வது வழக்கமாகியது.

இறைத்தீர்த்தங்களாகக் கருதப்படும் இக்குளங்களில் மூழ்குபவர்கள் முதலில் உள்ளத்திலும் உயிரிலும் உள்ள நற்பண்புகள் எனும் நீர்நிலையில் தங்களின் தீயப் பண்புகளைக் கழுவிக் கொள்ள வேண்டும் என்பதே இதன் தத்துவம். திருமூலரும்,,

உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்
மெல்லக் குடைந்துநின் றாடார் வினைகெடப்
பள்ளமும் மேடும் பரந்து திரிவரே
கள்ள மனமுடைக் கல்வியி லோரே

(திருமந்திரம், 492)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

(**விளக்கம்**: தீர்த்தங்கள் - ஆண்டவனை மறவாமையாகிய அன்பும், அவன் பெருந்துணையாகிய அருளும், அவ் அருளால் கணிக்கும் 'சிவயசிவ' என்னும் திருவைந்தெழுத்தும், அம் மறை வண்ணமாகிய நாயன்மார் திருவுரு முதலியவற்றில் நிறைந்துநிற்கும் சிவனருளும் உள்ளத்து ஓவா துன்னத் தீர்த்தங்களாகும். மெள்ளக் ...வினை கெடப் - பிறப்பிற்கு ஏதுவாகிய வினையும், அதற்கேதுவாகிய மலமும்அகல மேற்கூறிய உள்ளத்துள்ள தீர்த்தங்களை நன்மனத்துடன் கைக்கொண்டால், அவ்வாறு முடியும்; அங்ஙனம் செய்யார். பள்ளமும் ...ளோரே - காடும் மலையும் சுற்றித் திரிவோர் திருமுறைக் கல்வியில்லாதவராவர்.)

எனும் பாடல்வழி இதனை உணர்த்துகிறார்.

இதன் அடிப்படையில், தண்டியடிகள் நாயனார் குருடராக இருப்பினும் ஆலயங்களில் குளம் வெட்டுவதைத் திருத்தொண்டாகக் கொண்டொழுகியவர் என்பதைப் பெரிய புராணம் உணர்த்தி நிற்கிறது. திருக்கோயில்களில் குளம் வெட்டுவதிலும் அதைத் தூய்மை செய்வதிலும் தம் உயிரைப் பற்றியுள்ள அழுக்குகளைக் கழுவியவர் தண்டியடிகள்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தண்டியடிகள் நாயனாரின் திருத்தொண்டு இக்காலத்தில் ஆலயங்களுக்குப் பொருந்துவதாக அமையவில்லை. காரணம், தற்போது ஆலயங்களில் நீர் வசதிகளுக்காகக் குழாய்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. இதுபோன்ற வசதிகளைச் செய்து கொடுப்பதில் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்ககங்கள் நேரிடையாக செயல்படாவிட்டாலும் அவ்வப்போது அதனைப் பழுது பார்க்கும் பணியில் உதவி வருவதைக் காண முடிகின்றது. இஃது ஆலயங்களுக்கு வரும் பக்தர்கள் இறைவழிபாட்டை எவ்விதத் தடங்கலுமின்றி இயற்ற ஏதுவாக அமைகின்றது.

அட்டவனை 4.16 காட்டும் ஆலயப் பூஜை தொண்டுகளில் இறுதியாக வருவது இசைகருவிகளைத் தானம் செய்வதாகும். இசைக்கருவிகள் இறைவழிபாட்டில் முக்கிய அங்கம் வகிப்பவையாகத் திகழ்கின்றன (தட்சிணாமூர்த்தி, 2005). நாதஸ்வரம், மேளம், போன்ற இன்னிசைக் கருவிகள் ஆலயப் பூஜையின்போது முழங்கப்படுகின்றன. இவற்றினால் எழும் இசை ஆலயத்தில் தெய்விகச் சூழலை பரவச் செய்வதோடு மக்களின் மனத்தையும் இலயிக்கச் செய்கின்றன.

இதன் பொருட்டே பெரிய புராணத்தில் திருநாளைப் போவாரும் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் ஆலயங்களுக்கு இசைக்கருவிகளைக் கொடுப்பதைத் தங்கள் பணியாகக் கொண்டிருந்தனர் என்பது தெரிய வருகின்றது. இவர்களுள் திருநாளைப்போவார் நாயனார் பேரிகைக்குத் தோலும் வீசி வாரும் அளித்துத் தொண்டாற்றியுள்ளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேலும், வீணை, யாழ் போன்றவற்றிற்குப் பொருத்தமான நரம்புகளையும் கோரோசனைகளையும் கொடுத்தும் பணி செய்துள்ளார் என்பதனை,

போர்வைத்தோல் விசிவாரென் றினையனவும்
நேர்வைத்த வீணைக்கும் யாழுக்கு நிலவகையில்
சேர்வுற்ற தந்திரியுந் தேவர்பிரா னர்ச்சனைக்கட்
கார்வத்தி னுடன்கோரோ சனையுமிவை யளித்துள்ளார்
(தி.தொ.பு. 1059)

(**விளக்கம்**: போர்வைத் தோலும்; விசிவாரும், மற்றும் இவ்வாறாகிய பிற சாதனங்களும், இசை பேசுகின்ற நேர்மையுடைய வீணைக்கும் யாழுக்கும் அவ்வற்றுக்கேற்ற வகையிற் பொருத்தமுற்ற தந்திரியும், அன்புடனே தேவர் பெருமானுடைய அருச்சனைகளுக்குரிய கோரோசனை முதலிய பொருள்களும் ஆகிய இவற்றை அளித்துள்ளார்.)

என்று சேக்கிழார் சுட்டுகின்றார்.

இத்தகைய தொண்டு இக்காலக்கட்டத்தில் ஆலயங்களில் ஆற்றப்படுவது மிகவும் குறைவு. ஏனெனில், தற்போது ஆலயங்களில் நாதஸ்வரமும் மேளமும் மட்டுமே பூஜையின்போது வாசிக்கப்படுகின்றன. பேரிகை, கரடி, வீணை, யாழ் போன்ற இசைக்கருவிகள் இப்பொழுது பூஜைகளில் இசைக்கப்படுவதில்லை. இத்தகைய இசைக்கருவிகளை உருவாக்கவும் பழுதுபார்க்கவும் வல்லுனர்கள் இல்லை என்பதும் இதில் பயிற்சி பெற்ற இசைக்கலைஞர்கள் மிகக் குறைவு என்பதும் இதற்கு முக்கியக் காரணங்களாக அமைகின்றது. மேலும், தற்போது ஆலயங்களில் நாதஸ்வர, மேள வித்வான்கள் ஆலய நிர்வாகத்தினரால் தமிழகத்திலிருந்து வரவழைக்கப்படுகின்றனர். இதனால், மற்றவர்கள் அதில் ஈடுபாடு காட்டுவதில்லை என்றாகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேற்குறிப்பிடப்பட்ட சமயம் சார்ந்த தொண்டுகள் ஆன்மிகப் பயிற்சிகளில் ஒன்றாகவே திகழ்கின்றது. இது மனித வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து கிடப்பதையும் நன்கு அறிய முடிகின்றது. மேலும், எதைச் செய்தால் நமக்கு முழு மனநிறைவு கிடைக்குமோ அதைச் செய்து வாழ்வதே வாழ்க்கை என்பதையும் உணர்த்தி நிற்கின்றது. இதைச் சுயதர்மம் என்கிறது கீதை (பரமசிவம், 2012).

இதனையே பெரிய புராணத்தில் நாயன்மார்களும் நமக்கு எடுத்துக் காட்டியுள்ளனர். கோயில் திருப்பணிகளில் மனதை நிலைப்படுத்தி இறைவனைத் தேடும் இலட்சியப் பயணத்தை நமக்கு அறிமுகப்படுத்தியுள்ளனர். அவனவன் செய்த வினைப்பயன்களை அவனவன்தான் அனுபவிக்க வேண்டும் என்ற நியதியை 'காசிக்குப் போனாலும் கர்மம் தொலையாது' என்பார்கள். ஆனால், திருக்கோயில் பணி செய்து பாசங்களிலிருந்து விடுபட்டு நமது கர்ம வினைகளைத் துடைத்தொழிக்கலாம் என்பதை நாயன்மார்களின் வரலாறு மெய்ப்பிக்கின்றது.

மேலும், ஒரே வகையிலான வழிபாடு என்றில்லாமல் ஒவ்வொருவரும் தங்களால் முடிந்த எளிய முறையில் இறைவனை வழிபடலாம் என்ற சுதந்திரத்தை சித்தாந்த சைவம் கூறுகிறது. வழிபாடு என்பது உயிர்கள் இறைவனோடு ஓர் உன்னத உறவினை ஏற்படுத்திக் கொள்ளும் அன்பு நெறி சார்ந்த முயற்சி என்பதையும் சித்தாந்தம் தெளிவுறுத்துகிறது (தர்மலிங்கம், 2012). இதனாலேயே, நாயன்மார்களின் வழிபாடும் வாழ்வியல் நெறிகளும் நாம் பின்பற்றுவதற்கும் பரிந்துரைக்கப்படுகின்றது..

நாயன்மார்களின் வாழ்வியல் நெறிகளில் சமயம் சார்ந்த தொண்டுகள் ஆலயத்தை அடிப்படையாகக் கொண்டு திகழ்வதை நம்மால் காண முடிகின்றது. உணவளித்தல், ஆலயத்தைத் தூய்மை செய்தல், விளக்கேற்றுதல், மலர் பறித்துக்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கொடுத்தல், புகைதீபம் ஏற்றுதல் போன்ற ஆலயத் தொண்டுகள் நாயன்மார்களை முக்திக்கு இட்டுச் சென்றது என்பதை பெரிய புராணம்வழி அறிய முடிகின்றது.

திருமூலரும்,

அன்புடனேநின் றமுதமும் ஏற்றியே
பொன்செய் விளக்கும் புகைதீபந் திசைதொறுந்
துன்பம் அகற்றித் தொழுவார் நினையுங்கால்
இன்புடனேவந் தெய்திடும் முக்தியே

(திருமந்திரம், 981)

(**விளக்கம்**: உள்ளன்புடன் படைப்பினைக் குழைத்து, விளக்கம் மிக்க திருவிளக்குகள் எல்லாப் பக்கங்களிலும் ஏற்றுக. புகையும் ஒளியும் காட்டி வழிபடுக. இனம்பற்றி மணியும் இயமும் இயம்புக. செந்தமிழ் மாமறைத் திருமுறை யோதுக. இத்தகைய தொழுகையினர் நினையுங்கால் திருவடிப் பேற்றின்பம் உடனே கைகூடும். அமுதம் - படைப்பு. நிவேதனம் - குழைத்தல்; ஊட்டல். வழிபாட்டுக்குரிய உறுப்புக்கள் ஐந்து; அவை, பூவும் புகையும், புனலும் படைப்பும், விளக்கும் ஒளியும், பாவும் பண்ணும், மணியும் இயமும் என்ப. பா - திருமுறை. இயம் - வாத்தியம்; வாழ்த்தியம் - மேளதாளம். 'திருநீற்றுப் பதிகம்' ஓதித் திருநீறு எடுத்தல்வேண்டும். 'பாராழி வட்டத்தார்' என்னும் திருப்பாட்டு ஓதிப் புகையினை எடுத்தல் வேண்டும். 'எல்லா வுலகமும்' என்னும் திருப்பாட்டு ஓதி ஒளியினை எடுத்தல்வேண்டும். 'ஒசையொலியெலாம்' என்னும் திருப்பாட்டு ஓதி பாவும் இயமும் இயம்புதல்வேண்டும். 'நமசிவய' எனக் கீழிருந்து மேல்நோக்கியும், 'சிவயநம' என மேலிருந்து கீழ்நோக்கியும், ஓம் என வட்டமிடும் முறையே 'ஆடும், சேர்க்கும், ஓங்கார' என்னும் உண்மை விளக்கத் திருவெண்பா ஓதிப் புகையொளி காட்டி வழிபடுக.)

எனும் பாடல்வழி இதனைக் குறிப்பிடுகின்றார். எனவே, மேற்கூறிய செயல்களில் இறைச்சிந்தனையோடு உறைப்பாய் நிற்பது முக்திக்கான வழி என்பது புலனாகிறது.

திருஞானசம்பந்தரின்,

பறித்த மலர்கொடு வந்துமை யேத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்

(திருமுறை 1:116:1254)

(**விளக்கம்**: பறித்த மலர்களைக்கொண்டு பூசித்து 'உம்மை ஏத்தும் பணியை உடைய அடியவர் நாங்கள்' எனக் கூறி வழிபட்டுவரின் சிறப்பற்ற தீய பழவினைகள் நம்மைத் தீண்ட மாட்டா. இது திருநீலகண்டத்தின் மேல் ஆணை.)

எனும் தேவாரமும் மலர்களைக் கொண்டு பூஜிப்பதன் மூலம் தீவினைகள் நீங்கப் பெற்று இறைவனின் திருவடியில் சேரலாம் என்பதை வலியுறுத்துகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

திறம் பயில் ஞானசம்பந்தன் செந்தமிழ் பத்தும் வல்லார்
நிறைந்த உலகினின் வானவர்கோனொடுங் கூடுவரே
(திருமுறை 1:116:1258)

(**விளக்கம்**: சிவபிரான் திருவடிகளின் பெருமைகளை அறிந்த ஞானசம்பந்தன் அருளிய இத்திருப்பதிகச் செந்தமிழ்ப் பாடல்கள் பத்தையும் ஓதவல்லவர்களாயின், அவர்கள் இமையவர்கள் நிறைந்த வானுலகில் அவ்வானவர் கோனொடும் கூடி மகிழும் பதவியைப் பெற்று இன்புறுவர்.)

எனும் மற்றுமொரு பாடலில் திருமுறைகளை ஓதுபவர்கள் இறைவனின் அருள் பெற்று இறையின்பம் எய்துவர் என்பதனையும் அவர் சுட்டுகின்றார்.

எனவே, இறைவனால் படைக்கப்பட்ட உயிர்கள் இறைவனின் திருவடி நீழலில் அடைக்கலம் புக வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இதற்குத் திருமூலர் கூறும் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு வழிகளில், சரியை, தொண்டு நெறியை அடிப்படையாகக் கொண்டது. இந்தத் தொண்டு நெறி ஆலயத் திருப்பணிகளையும் உள்ளடக்கியது என்பதை நாயன்மார்களின் வரலாறு இயம்புகிறது. ஆலயத் தொண்டுகளின் மூலம் வீடுபேற்றினை அடைந்த நாயன்மார்களின் வரலாறு நமக்கு நல்ல வழிகாட்டியாக அமைகின்றது. இதன் அடிப்படையிலேயே போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமயப் பணியும் அமைந்துள்ளது. இவ்வியக்கங்களின் சமயப் பணி காலத்திற்கேற்ப மாறுபட்டிருப்பினும் நாயன்மார்களின் தொண்டுகளோடு ஒத்திருப்பதைப் பார்க்க முடிகின்றது.

இவ்வியக்கங்கள் இன்றைய இளைய சமுதாயம் உண்மை சமயத்தை அறிந்து வாழ வேண்டும் என்ற நற்சிந்தனையில் செயல்பட்டு வருகின்றன. முறையான, தேவையான, அறிவார்ந்த சமயம் சார்ந்த செயல்முறைகளைத் தெரிவு செய்து அவற்றின் பொருளை விளக்கியும் மக்களுக்குப் பணியாற்றி வருகின்றன. இதன்வழி, நம் இளைய

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சமுதாயத்தினர் சமயநெறியின் சிறப்பைத் தெரிந்து கொள்வதோடு இறையன்பர்களாக மாறி வாழவும் இவ்வியக்கங்கள் துணை செய்கின்றன.

மேலும், ஆலய வழிபாட்டின் முதன்மையையும் உணர்ந்து இவ்வியக்கங்கள் பூஜைகளையும் விழாக்களையும் ஏற்று நடத்துவது நம் சமயத்தின் மாண்பினைப் பிறச் சமயத்தவரும் அறியும் வண்ணம் செய்கின்றன. இது நம் பண்பாட்டுச் சிறப்பினை மீட்டெடுத்து நிலைநிறுத்த உதவும் என்பதும் தகும். இதன்வழி சைவம் காட்டி நிற்கும் உண்மையான பக்தி நெறியை அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு செல்லும் நற்செயல் புரியும் இயக்கங்களாகவும் இவை திகழ்கின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.6.2 நாயன்மார்களின் சமுதாயம் சார்ந்த சரியை தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமுதாயம் சார்ந்த சரியை தொண்டுகளும் - ஒப்பீடு

பெரிய புராணத்தில் நாயன்மார்கள் 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' எனும் கொள்கையின் அடிப்படையில் வாழ்ந்து இறையின்பம் எய்தியதை அறிய முடிகின்றது. இவர்கள் சமயத்தின்வழி சமுதாயத்தின் நலன் கருதிப் பல தொண்டுகளை ஆற்றியுள்ளனர். நாயன்மார்களின் வழியிலேயே இவ்வாய்க்குட்படுத்தப்பட்ட போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்கள் மூன்றும் சமுதாய முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு செயல்பட்டு வருவதைக் காண முடிகின்றது.

காலங்கள் பல கடந்திருப்பினும் நாயன்மார்களின் தன்னலம் கருதாத தொண்டுகள் இன்றளவும் இந்த அரசு சாரா இயக்கங்களின் மூலம் பரிணமிக்கின்றன. **அட்டவணை 4.17** நாயன்மார்களின் சமுதாயம் சார்ந்த சரியை தொண்டுகளையும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமுதாயம் சார்ந்த சரியை தொண்டுகளையும் காட்டுகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அட்டவணை 4.17

நாயன்மார்களின் சமுதாயம் சார்ந்த சரியை தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமுதாயம் சார்ந்த சரியை தொண்டுகளும் - ஒப்பீடு

	எண்	தொண்டுகள்	நாயன்மார்கள்	மலேசிய இந்து சங்கம்	போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம்	போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம்
சமுதாயத் தொண்டு	1	ஏழைகளுக்கு உணவுப் பொருட்கள் வழங்குதல்	✓	✓	✓	✓
	2	ஏழைக் குடும்பத்திற்குப் பொருளுதவி / நிதியுதவி செய்தல்	✓	✓	✓	✓
	3	மாணவர்க்குப் பொருளுதவி / நிதியுதவி செய்தல்		✓	✓	✓
	4	பேறு குறைந்தவர்க்குப் பொருளுதவி செய்தல்		✓		✓
	5	பணிவிடைகள் / கூட்டுப்பணி செய்தல்	✓	✓	✓	✓
	6	இளைஞர்களுக்கு நன்னெறி / தன்னம்பிக்கை பயிற்சி	✓	✓	✓	✓
	7	கல்விச் சுற்றுலா / கல்வி முகாம்	✓	✓	✓	
	8	பெண்ணாளுமை முகாம்				✓
	9	மாணவர்கள் தனித்துவப் பயிற்சி			✓	

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அட்டவணை 4.17 நாயன்மார்களின் சமுதாயம் சார்ந்த சரியை தொண்டுகளையும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமுதாயம் சார்ந்த அரசு சாரா இயக்கங்களின் தொண்டுகளையும் காட்டுகிறது. சரியை மார்க்கத்தில் உணர்வுப்பூர்வமாக அன்பு செலுத்தி இறைவனை அடைந்த நாயன்மார்களின் கொள்கையைப் பின்பற்றி உலக உயிர்களிடம் அன்பு கொண்டு செயல்படுபவர்களாக இந்த அரசு சாரா இயக்கங்களும் இயங்கி வருகின்றன.

அந்த வரிசையில் ஏழைகளுக்கு உணவுப் பொருட்கள் வழங்குவது இவ்வியக்கங்களின் சமுதாயத் தொண்டுகளில் முதன்மையானதாகத் திகழ்கின்றது. பசியால் வாடுபவர்க்குச் சோறு கண்ட இடம் சொர்க்கமாகவே இருக்கும். தான வள்ளல் எனப் போற்றப்படும் கர்ணன், பசித்திருந்த ஒருவனுக்கு உணவு கிடைக்கும் இடத்தினைச் சுட்டிக் காட்டிய புண்ணியத்தின் பலனாகவே சொர்க்கத்தில் சேர்ந்ததாகப் புராணக் கதைகள் சித்திரிக்கின்றன (ஸ்ரீஜா வெங்கடேஷ், 2014).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

‘உணவே தெய்வம்’ என்பதை உலகிற்கு உணர்த்தும் பொருட்டே நாயன்மார்கள் ஆலயங்களில் உணவுப் பொருட்கள் வழங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்கிறார் சுஜாதா சுகுமாறன் (2017). உலகில் உள்ள அனைத்து உயிர்களும் திருப்தியாக வாழும் நோக்கத்திற்காகவே உணவு பொருட்கள் வழங்குவது சிறந்த தானமாகக் கருதப்படுகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பெரிய புராணத்தில் கோட்புலியார் ஆலயத்திற்குச் செந்நெல் கொடுத்துத் தொண்டாற்றிய அதே வேளையில் தம் சுற்றத்தாருக்கும் தேவையான உணவுப் பொருட்களை வழங்கி வந்ததைக் காண முடிகின்றது. இதனை,

> தம் தமர்கள் ஆயினார் தமக்கு எல்லாம் தனித்தனியே
> எந்தையார்க் கமுதுபடிக் கேற்றியநெல் லிவையழிக்கச்...
> (தி.தொ.பு .4137)

(**விளக்கம்**: தம்.....தனித்தனியே - தமது சுற்றத்தார்க ளாயினார்களவர்கள் எல்லாருக்கும் தனித்தனியே; எந்தையார்க்கு .....என்று - எமது இறைவருக்கு அமுது படிக்காகச் சேர்த்துள்ள இந்நெற்கூடுகளைத் தாம் அழிக்கும்படி மனத்தினாற்றானும் நினைப்பார்களாயின்)

என்று சேக்கிழார் பாடியுள்ளார். ஒருபுறப் இறைப்பணிக்காகச் செந்நெல் வழங்கித் தொண்டாற்றியிருந்தாலும் மற்றொருபுறம் மக்களின் வயிற்றுப் பசியைத் தணிக்க உணவுப் பொருட்கள் கொடுத்துதவியதையும் இதன்வழி அறிய முடிகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அந்த வகையில், நாயன்மார்களை வழிகாட்டிகளாகக் கொண்டு போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களும் ஏழைகளுக்கு உணவுப் பொருட்கள் கொடுத்து உதவுவதைத் தங்களின் முக்கியக் கடைமைகளில் ஒன்றாகக் கடைபிடித்து வருகின்றன. மாதந்தொறும் ஐந்து இந்தியக் குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்குவதை வழக்கமாகக் கொண்டிருக்கும் மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை இங்குக் குறிப்பிடத்தக்கது. இதைப் போன்றே போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகமும் போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகமும் தங்களால் இயன்ற அளவு இத்தொண்டில் பங்குக் கொள்கின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இவ்வியக்கங்கள் பெரும்பாலும் பண்டிகைக் காலங்களில் சுற்று வட்டாரத்தில் வசிக்கும் ஏழைகளுக்கு உணவுப் பொருட்களை வழங்கி வருகின்றன. பண்டிகைக் காலங்களில் மற்றவர்களைப் போல் அவர்களும் கொண்டாட்டத்தில் திளைத்திருக்க வறுமை ஒரு காரணமாக இருக்கக்கூடாது என்பதே இதன் முக்கிய நோக்கமாகும். ஏனெனில் வறுமையை விடத் துன்பமானது வறுமை ஒன்றேயாகும். இதனைத் திருவள்ளுவரும்,

இன்மையின் இன்னாதது யாதுஎனின் இன்மையின்
இன்மையே இன்னா தது

(குறள், 1041)

என்கிறார்.

மேலும், பிற உயிர்களுக்கு உதவுதல் என்பது பசியை அடக்கித் தவம் செய்வதைக் காட்டிலும் மேலானது என்கிறது சைவ சித்தாந்தம். இதனைத் திருமூலர் ‘அறம் செய்வான் திறம்’ என்னும் பகுதியில் விளக்கியுள்ளார். மானிடர்களாகிய நாம் உழைத்துச் சேமித்த பணத்தையும் நம் முன்னோர்கள் விட்டுச் சென்ற செல்வத்தையும் பிறருக்குப் பயன்படும் வகையில் செலவிட வேண்டும். இதனைக் கொண்டே அருட்செல்வத்தினைத் தேட வேண்டும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அதுவே, இறை உலகில் அருட்செல்வத்திற்காகக் கொடுக்கப்படும் முன்பணம் என்பதைப்,

பற்று அதுவாய் நின்ற பற்றினைப் பார்மிசை
அற்றம் உரையான் அற நெறிக்கு அல்லது
உற்று உங்களால் ஒன்றும் ஈந்த அதுவே துணை
மற்று அண்ணல் வைத்த வழி கொள்ளும் ஆறே
(திருமந்திரம், 116)

(**விளக்கம்**: அனைத்துயிர்க்கும் பற்றுக்கோடாக நின்றருளும் சிவ பெருமானைப் பற்றிய மெய்யன்பர் நிலமிசை யார்மாட்டும் எவ்வகையான குற்றமும் புகலார். அறநெறியல்லாமல் பிறநெறியிற் செல்லார். பிறநெறி பாவநெறி. அறவழியில் ஈட்டிய பொருளை அறவோர்க்கு மனமுவந்து உங்களால் கொடுக்கப்படுவது ஒன்றுமே உங்கட்கு வழித்துணையாகும். அம்மட்டோ? சிவபெருமான் தன் திருவடியைச் சேருமாறு வகுத்தருளிய நேர் வாயிலாகிய நன்னெறியினையும் நண்ணுவிக்கும். இதுவே நல்வழியினைக் கைக் கொள்ளும் வழியாகும். பற்றினை - பற்றப்படும் மெய்ப்பொருளாகிய சிவபெருமானை.)

எனத் திருமூலர் பகர்கின்றார். உலக வாழ்க்கைக்குப் பொருளும் செல்வமும் தேவைப்பட்டாலும் அதனைத் துணையாகக் கொண்டு அருள் உலகிற்குத் தேவையானவற்றைச் செய்ய வேண்டும். திருவள்ளுவரின்,

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளிலார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு
(குறள், 247)

எனும் குறளும் இதனையே விளக்குகின்றது.

இதனையே நாயன்மார்களும் செய்திருப்பதைப் பெரிய புராணம் உணர்த்தி நிற்கின்றது. தம்மிடம் உள்ள செல்வங்களும் தம் முன்னோர்கள் சேமித்து வைத்த செல்வங்களும் சிவனடியார்களின் திருப்பணிக்காக இறைவன் தமக்கு அளித்ததென எண்ணி வாழ்ந்தனர் நாயன்மார்கள். இத்தகைய நற்பண்பையும் நற்சிந்தனையையும் மெய்ப்பொருள் நாயனாரின் வரலாறு சித்திரிக்கின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அரச மரபில் தோன்றிய இந்நாயனார் தம் செல்வம் முழுவதையும் சிவப்பணிக்கே அர்ப்பணித்தவர். சேக்கிழாரும்,

> தேடிய மாடு நீடு செல்வமும் தில்லை மன்றுள்
> ஆடிய பெருமான் அன்பர்க்கு ஆவன ஆகும் என்று
> நாடிய மனத்தினோடு நாயனார் அணைந்த போது
> கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவு அறக் கொடுத்து வந்தார்
> (தி.தொ.பு. 470)

(**விளக்கம்:** தமது அரசுரிமையிலே தேடியனவாகிய பொருள்களும் நீடு செல்வங்களும் திருத்தில்லையிலே ஐந்தொழி லருட்கூத்தியற்றும் பெருமானது அன்பர்க்கே யாவனவாகும் என்று நாடிய மனத்துடனே, தம்மை யாட்கொள்ளும் நாயன்மார்களாகிய அரனடியவர்கள் அணைந்தபோது கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவற அச்செல்வங்களை வேண்டுமாறு கொடுத்து வந்தார்.)

என்று நாயனாரின் பெருமையைப் புகழ்கின்றார்.

பிற உயிர்களின் துன்பங்களைப் போக்க நினைப்பவர்கள் தாங்கள் செய்கின்ற உதவியை எண்ணிப் பெருமை கொள்வார்களேயானால் ஆணவம் அவர்களைப் பற்றிக் கொள்ளும். ஆதலின், உதவும் மனப்பான்மைக்கு முதலில் வேண்டுவது இறையுணர்வே என்பதை நாயன்மார்களின் வரலாற்றின் வழி அறியலாம். இறைவன் தமக்கு அளித்ததையே பிறருக்குக் கொடுக்கின்றேன் என்ற எளிமை உணர்வே இவர்களது ஈகைக்கு அடிப்படையாக அமைந்தது எனலாம்.

மேலும், பொருள் உள்ளவர்கள் தத்தம் நிலையில் உணவு, உடை, கல்வி, இருப்பிடம், வேலை வாய்ப்பு, அடிப்படை வசதிகள் என இயன்றதைப் பிறருக்குச் செய்வது உன்னதத் தொண்டாகவே பார்க்கப்படுகிறது. எங்கிருந்தாலும் எங்குச் சென்றாலும் நம்மால் முடிந்த வகையில் அறச் செயல்களைச் செய்வதில் நாட்டம் கொள்வது நன்று.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாம் செயல்

(குறள், 33)

எனும் வள்ளுவரின் வாக்கும் இதனையே சுட்டுகின்றது.

பெரிய புராணத்தில் நாயன்மார்கள் அனைவரும் சமுதாயப் பொறுப்பு மிக்கவர்களாகவே திகழ்ந்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது. திங்களூரில் வாழ்ந்த அப்பூதியடிகள் அடியார்களுக்காகப் பல தொண்டுகள் புரிந்தார். அத்தொண்டுகள் எவ்வித பயனும் கருதாது மக்களின் நலன் கருதிச் செய்தார் என்பதைத் தம் பெயரில் செய்யாமல் திருநாவுக்கரசரின் பெயரில் செய்ததன் மூலம் அறிய முடிகின்றது.

இதனைச் சேக்கிழாரும்,

வடிவு தாம் காணார் ஆயும் மன்னுசீர் வாக்கின் வேந்தர்
அடிமையும் தம்பிரானார் அருளும் கேட்டு அவர் நாமத்தால்
படி நிகர் மடங்கள் தண்ணீர்ப் பந்தர்கள் முதலாய் உள்ள
முடிவுஇலா அறங்கள் செய்து முறைமையால் வாழும் நாளில்

(தி.தொ.பு. 1785)

(**விளக்கம்**: வடிவுதான் காணாராயும் - திருவடிவத்தினைத் தானும் காணதவராயினும்; மன்னுசீர்...கேட்டு - நிலைபெற்ற சிறப்பினையுடைய திருநாவுக்கரசு நாயனாருடைய திருத்தொண்டின் திறத்தினையும், பெருமானார் வைத்த திருவருளினையும் கேட்டு; அவர் நாமத்தால்...செய்து - அவரது திருப்பெயரால் படி நிகழும் திருமடங்களும் தண்ணீர்ப்பந்தர்களும் முதலாக உள்ள முடிவில்லாத அறங்களைச் செய்து; முறைமையால் வாழும் நாளில் - அந்நியதியின் அமைந்து வாழ்கின்ற நாளிலே.)

என்று பாடுகின்றார். அப்பூதியடிகளின் தொண்டு சமுதாயப் பொறுப்பினைக் காட்டுகின்றது. இவரைப் போன்று பல நாயன்மார்கள் தன்னலம் கருதாமல் பொது நலம் கருதிச் செய்த பணிகளைச் சேக்கிழார் பெரிய புராணத்தில் பாடியுள்ளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தமது உடல் உழைப்புத் தொண்டுகளால் சமுதாயச் சீர்த்திருத்தப் பணிகளுக்கு உதவுதலை வழக்கமாகக் கொண்டிருக்கும் போர்ட்டிக்சன் அரசு சாரா இயக்கங்களின் தொண்டுகள் நாயன்மார்களின் தொண்டுகளைப் பின்னொற்றியே அமைகின்றன. போர்ட்டிக்சன் இந்திய அரசு சாரா இயக்கங்களின் சமுதாயத் தொண்டுகளும் இதைக் கருத்தில் கொண்டே அமைந்துள்ளன. வறுமையில் வாடுபவர்களுக்குக் கல்வி கற்பதற்குப் பண உதவி, தொழில் திறன் பெறுவதற்கு கடன் உதவி, சிறுதொழில் அமைத்துக் கொடுத்தல், வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்றவை இவ்வியக்கங்களின் பணிகளுள் அடங்கியுள்ளன.

மேலும், ஏழ்மையைப் போக்க அற வழியில் பொருளீட்டுவதற்கான வழிகாட்டிக் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல், இளைஞர்களுக்கு வாழ்வியல் பட்டறைகள் நடத்துதல் ஆகியனவும் இவ்வியக்கங்களின் நடவடிக்கைகளைச் சார்ந்து அமைந்துள்ளன. தவிர, ஊனமுற்றோர், முதியோர் காப்பகங்களுக்கு உதவுதல், ஆதரவற்ற குழந்தை காப்பகங்களைப் பேணுதல் போன்ற சமுதாயப் பணிகளிலும் இவ்வியக்கங்கள் நேரிடையாகவோ மறைமுகமாகவோ ஈடுபட்டு வருகின்றன.

மற்றவர்களுக்குச் செய்யும் ஈகையின் தன்மை தம் அளவில் சிறு சிறு உதவிகளைச் செய்வதிலும் அடங்கும் (தர்மலிங்கம், 2012). திருமூலரும் இதனை ‘யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி’ எனக் கூறுகின்றார். அந்த வகையில் ஏழை மாணவர்களுக்கு உணவு, உடை, பள்ளிப் பொருட்கள் கொடுத்தல், தனித்து வாழும் தாய்மார்களுக்கு உதவுதல் போன்ற இவ்வியக்கங்களின் பணியும் இங்கு எண்ணிப் பார்க்கத் தகுந்தது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இறைவனால் படைக்கப்பட்ட உயிர்களுக்குச் செய்யும் தொண்டானதை அனைவரும் அறியும் வண்ணம் பறைசாற்றுகின்றவர்களுக்கு மத்தியில் இவ்வியக்கங்களின் தொண்டுகள் நாயன்மார்களைப் போலவே அமைதியாகவும் ஆரவாரமின்றியும் நடைபெற்று வருகின்றன. உலக இன்பம், கேளிக்கை என இளமைக் காலத்தைக் கழிக்காமல் இவ்வியக்கங்களைச் சார்ந்த இளையோர்கள் சமுதாய வளர்ச்சிக்காகப் பாடுபடுகின்றனர். உணவு, உடை, உறையுள், பொன், பொருள், பணம், பட்டம், பதவி, புகழ் போன்றவைகளை ஒரு பொருட்டாக எண்ணாமல் சமுதாயத்திற்கு வழிகாட்டியாகச் செயல்படுகின்றனர். இறைப்பணி, இறை வழிபாடு, இறையறிவு ஆகியவற்றைத் துணை கொண்டு மக்கள் தொண்டாற்றி வரும் இவர்களது சேவை பாராட்டுக்குரியது.

எனவே, தன்னலம் கருதாமல் பிறரின் தேவையறிந்து செய்யப்படும் இவ்வியக்கங்களின் தொண்டுகள் இறைவனின் திருவருளைப் பெற உதவும். பயன் கருதாமல் பிறருக்கு அன்பு செய்கின்றவர்களை இறைவன் நன்கு அறிவான் என்பதைத் திருமூலரும்,

இகழ்ந்ததும் பெற்றதும் ஈசன் அறியும்
உகந்து அருள் செய்திடும் உத்தம நாதன்
கொழுந்துஅன்பு செய்து அருள் கூரவல்லார்க்கு
மகிழ்ந்து அன்பு செய்யும் அருள் அதுவாமே
(திருமந்திரம், 267)

(**விளக்கம்**: அன்பினைப் பொருட்படுத்தாமல் வன்னெஞ்சினராய்த் திரிவாரையும், அவ்வன்பினைப் பெற்று மென்னெஞ்சினராய் மேவி வாழ்வாரையும் சிவன் அறிந்து அவரவர் செய்கைகட்கு ஏற்றவாறு முறையே துன்ப இன்பங்களை அளிப்பன். அத்தகைய உகப்புடன் அருள்செய்யும் தலைமைசேர் முதல்வன். ஆருயிர்கள் முதற்கண் தொடர்புடையார்மாட்டு அன்புடையராய், அப் பயிற்சி மேலீட்டால் அனைத்துயிர்கள் மாட்டும் அருளுடையராய் ஒழுகவல்லார்க்கு மகிழ்ந்தன்பு செய்வன். அதுவே அவன் திருவருளுமாகும். இகழ்ந்தது - அன்பினைப் புறக்கணித்தது. பெற்றது - மெய்யன்புற்றது.)

என்று குறிப்பிடுகின்றார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

திருமூலரின் இக்கூற்றினை,

> தொழுது தூ மலர் தூவித் துதித்து நின்று
> அழுது காமுற்று அரற்றுகின்றாரையும்,
> பொழுது போக்கிப் புறக்கணிப்பாரையும்,
> எழுதும், கீழ்க்கணக்கு- இன்னம்பர் ஈசனே
>
> (திருமுறை 5:21:1282)

(**விளக்கம்**: தூமலர்களைத் தூவித் தொழுது, துதித்து, நின்று அழுது விருப்புற்று அரற்றுகின்ற மெய்யன்பர்களையும், வாளாபொழுதுபோக்கிப் புறக்கணிப்பார்களையும் கீழ்க்கணக்கெழுதும் இறைவன் இன்னம்பரில் உறையும் ஈசனேயாவன்.
கு-ரை: தொழுது - வணங்கி. தூமலர் - தூய்மையான மலர்கள். துதித்து நின்று - போற்றியுரைத்து நின்று. காமுற்று - அன்பு கொண்டு. பொழுதுபோக்கி - இறைவனைத் தொழாது இறைவன்புகழ் பேசாது வீண்பொழுதுகடத்தி. புறக்கணிப்பார் - வெறுப்பவர். கீழ்க்கணக்கு - சிறுவரிகளாய் எழுதும் குறிப்பு.)

என்று திருநாவுக்கரசரும் உறுதி செய்கின்றார்.)

இறைவன் வாழும் உயிர்களுக்கு அன்பு செய்கின்றவர்களுக்கு எதுவும் கிடைக்காதது போன்ற புறத்தோற்றம் ஏற்பட்டாலும் உரிய காலத்தில் இறைவன் உரிய பயனை அளிப்பான் என்பதை இப்பாடல்கள் உணர்த்தி நிற்கின்றன. பெரிய புராணத்தில் வரும் நாயன்மார்களின் வரலாறு இதற்கு நல்ல சான்றாகும். யாரும் அறியா வண்ணம் தமது குடிசையில் அமைதியாக அடியார்களுக்கு உணவிடும் தொண்டினைச் செய்து வந்த இளையான்குடி மாறனாரின் அன்பையும் உடைகளை வெளுத்துக் கொடுத்து அடியார்களுக்குச் சேவகம் செய்த திருக்குறிப்புத் தொண்டரின் அன்பையும் உலகறியச் செய்தான் இறைவன். அதுபோல், 'வேண்டத் தக்கது அறிவோய் நீ! வேண்ட, முழுதும் தருவோய் நீ' (திருவாசகம், 33) எனும் மாணிக்கவாசகரின் கூற்றிற்கிணங்க உயிர்களின் தேவையறிந்து அருள்பவன் இறைவன். அதனாலேயே இறைவனின் திருவுள்ளக் குறிப்பறிந்து தொண்டாற்றிய நாயன்மார்களின் அன்பைப் பலரும் போற்றும்படி அருளினான்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

போர்ட்டிக்சன் இந்திய அரசு சாரா இயக்கங்களின் தொண்டுகளும் நாயன்மார்களின் தொண்டுகளை வழிகாட்டுதலாகக் கொண்டே அமைந்துள்ளன. குழந்தைகள், முதியவர்கள், பெண்கள், ஏழைகள் எனப் பேதமின்றி அனைவரிடமும் அன்பு பாராட்டுகின்ற மனமும் குணமுமே இவ்வியக்கங்களின் சமுதாயத் தொண்டுகளுக்கு அடிப்படையாகத் திகழ்கின்றன. மேலும், அன்பு செய்கின்றவர்களுக்கே இறைவனும் அருளுவான் என்பதை,

சலம் இலன் சங்கரன் சார்ந்தவர்க்கு அலால்
நலம் இலன் நாள்தொறும் நல்குவான் நலன்
குலம் இலர் ஆகிலும் குலத்திற்கு ஏற்பது ஓர்
நலம் மிகக் கொடுப்பது நமசிவாயவே

(திருமுறை 4:11:109)

(**விளக்கம்**: மனக்கோட்டம் இல்லாது எல்லார்க்கும் நன்மையைச் செய்யும் சிவபெருமான், தன்னையே பற்றுக்கோடாகச் சார்ந்த அடியவர்களைத் தவிர மற்றவர்களுக்கு உயர்நலன் செய்யான். அவர்களுக்கு நாடோறும் விரும்பியதனை நல்காது வினைப்பயன்படி நுகருமாறு விடுப்பான். உயர்ந்த குடும்பத்தில் அடியவர்கள் பிறந்தவர் அல்லராயினும் நற்குலத்துக்குரிய நன்மைகளை மிகவும் கொடுப்பது எம்பெருமானுடைய திருவைந்தெழுத்தேயாகும்.)

எனும் பாடல்வழி திருநாவுக்கரசரும் மெய்ப்பிக்கின்றார். எனவே, அன்பின் அடிப்படையில் பிற உயிர்களுக்குக் குறிப்பாக ஏழைகளுக்கு இவ்வியக்கங்கள் செய்யும் சேவையும் உதவியும் போற்றுதற்குரிய தொண்டாகவே காணப்படுகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.7 தொகுப்புரை

பெரிய புராணத்தில் சரியை மார்க்கத்தில் வழுவாது நின்ற நாயன்மார்களின் திருத்தொண்டுகளையும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்கள் மூன்றின் சரியை தொண்டுகளையும் ஒருசேர இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளது. தற்பெருமைக்கும் புகழுக்கும் சுயநலத்திற்கும் மட்டுமே பிறருக்கு உதவுவதை விரும்புகின்றவர்களின் மத்தியில் நாயன்மார்களின் பக்தி நெறியும் அரசு சாரா இயக்கங்களின் சேவை பண்பும் தனித்து நிற்பதை இதன் மூலம் அறிய முடிகின்றது.

கடவுளின் படைப்பான உயிர்களிடத்தில் அன்பு செலுத்தும் ஒப்பற்ற பண்பினைப் பின்பற்றித் தொண்டு நெறியில் அடி பிறழாது வாழ்ந்தவர்கள் நாயன்மார்கள் என்பதையும் நம்மால் காண முடிகிறது. அடியார் தொண்டே ஆண்டவன் தொண்டு என்பதே இந்நாயன்மார்களின் தாரக மந்திரமாகத் திகழ்ந்துள்ளது. நாயன்மார்களின் சரியை மார்க்கத்திலான செயல்கள் மிகச் சாதாரணமானதாகத் தெரிந்தாலும் அவர்களும் அன்பும் பக்தியும் தூய்மையானவை. திடமான மனவுறுதியும் பக்தியுமே பல்வேறு இக்கட்டான சூழ்நிலைகளிலும் நெறி பிறழாமல் செயல்பட வழிவகுத்தது.

மேலும், நாயன்மார்கள் ஒவ்வொருவரும் பல குலத்தவராயினும் அடியார்கள் மத்தியில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பேதம் கிடையாது என்பதை உணர்த்தும் வகையில் வாழ்ந்து காட்டினர். இதனாலேயே இறைவனுக்கும் அவனது அடியார்களுக்கும் பலதரப்பட்ட தொண்டுகளைப் புரிந்தனர். 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' எனும் கூற்றை முன்வைத்துச் சாதி பேதமின்றி தொண்டாற்றிய

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இவர்களை இறைவனும் ஆட்கொண்டு முக்திப் பேற்றை அருளினான் என்பது பெரிய புராணத்தின் வழி புலனாகிறது.

அந்த வகையில், நாயன்மார்களது மனவுறுதியையும் கொள்கை பிடிப்பையும் வழிகாட்டுதலாகக் கொண்டு இன்றைய தலைமுறையினரும் செயலாற்றுகின்றனர் என்பதற்குப் போர்ட்டிக்சன் இந்திய அரசு சாரா இயக்கங்களின் நற்பணிகளும் சேவைகளும் நல்ல எடுத்துக்காட்டுகளாகும். எந்தவொரு நிபந்தனையுமின்றி உள்ளத்திலிருந்து வெளிப்படும் அன்பே இவ்வியக்கங்களின் பொதுநலத் தொண்டிற்கு வழிவகுத்துள்ளது. தவிர, தம் மக்கள், தம் மனைவி, தம் உற்றார், தம் உறவினர், தம் நண்பர் என்கிற வட்டத்தினையும் கடந்து அனைவருக்கும் செய்யப்படுகின்ற இவ்வியக்கங்களின் உதவிகள் இன்றைய இளையோர்களுக்கு ஒரு முன்னோடியாகவும் திகழும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எனவே, ஆரவாரம், ஆடம்பரம், பகட்டு என்றில்லாமல் உளமாற மற்றவர்களுக்குச் செய்யும் உதவி உயிரில் உறையும் இறைவனைக் கண்டு கொள்ள வழிவகுக்கும். அந்த வரிசையில் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் நற்பணிகளும் ஒவ்வொரு தனிமனிதனும் தன்னுடைய முயற்சியில் வெற்றியடைவதற்கும் நல்லொழுக்கமிக்கவனாக நடப்பதற்கும் உலகியல் துன்பங்களிலிருந்து விடுபடுவதற்கும் அடிப்படையாகத் திகழ்கின்றன என்றே கூறலாம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இயல் 5

ஆய்வுக் கருத்தாடல்களும் முடிவுகளும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

5.1 முன்னுரை

பெரிய புராணத்தில் நாயன்மார்களின் சரியை தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சரியை தொண்டுகளும் ஓர் ஆய்வு எனும் தலைப்பிலான இவ்வாய்வு தொண்டு நெறியை மையமாகக் கொண்டே மேற்கொள்ளப்பட்டுள்ளது. பயனைப் பற்றி எண்ணாமல் இடையூறுகளையும் கண்டு மனம் தளராமல் செய்வதே தொண்டு. தன்னலமற்ற மனமிருந்தால்தான் எவ்வித எதிர்ப்பார்ப்புமின்றித் தொண்டு செய்வது சாத்தியமாகும்.

இறைப்பணிக்காகவே தங்களது வாழ்க்கையை அர்ப்பணம் செய்து கொண்டு வாழ்வதையும் இறைப்பணியைத் தங்களது குறிக்கோளாக எண்ணி வாழ்க்கை நடத்துவதையும் சமயத் தொண்டு எனலாம். 'மன்னுயிர்த் தொண்டே மாதேவன்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொண்டு' எனும் அடிப்படையில் இறைவனை மகிழ்விக்கும் பொருட்டுச் செய்யப்படும். தொண்டுகளைச் சமுதாயத் தொண்டுகள் எனலாம். எவ்வாறாயினும், தொண்டு செய்தலே இறைவனுக்குச் செய்யும் உண்மை பணியாகும்.

இதன் பொருட்டே திருத்தொண்டு கடவுள் தொண்டு என்று சிறப்பித்துக் கூறப்படுகிறது. சிவநெறி பரப்பும் தொண்டே திருத்தொண்டு எனவும் போற்றப்படுகிறது. எனவே, சைவ சமயம் தழைக்க உழைக்கும் பணியே முந்நாளில் திருத்தொண்டர்களின் பண்பாக இருந்து வந்துள்ளது. இறைவனின் அருளையே மூலதனமாகக் கொண்டு செயலாற்றியவர்கள் இத்திருத்தொண்டர்கள். இறைவன் திருவருள் மேலீட்டினால் அவனுக்கும் அவனது அடியார்களுக்கும் ஏனைய மக்கள் சமுதாயத்திற்கும் தொண்டு செய்வதையே தங்களின் தலையாயப் பணியென்று வாழ்ந்தவர்கள் இவர்கள் என்பதும் தகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அடியார்களின் வாழ்க்கை நெறிகளைப் பின்னொற்றி தற்காலச் சூழலிலும் தொண்டு என்பது மனித சமுதாயத்திற்குத் தொடர்ந்து ஆற்றப்பட்டு வருகின்றது. ஆயினும் இன்றைய காலக்கட்டத்தில் ஒரு கூட்டணியாக இணைந்து செயல்படுவது சமுதாய முன்னேற்றத்தை உறுதி செய்யும் எனும் நோக்கில் அமைந்தவையே அரசு சாரா இயக்கங்கங்கள். கால மாற்றத்தின் காரணத்தினால் இன்று மக்கள் சமுதாயம் பல்வேறு வகையான சூழல்களில் வாழ்ந்து வருகின்றனர்.

மேலும், நாகரிக வளர்ச்சியின் காரணத்தினால் மக்களின் தேவைகளும் பலவாறு அமைகின்றன. மக்களின் இத்தகைய தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் சமாளிக்கக் ஒரு குழுவாக இணைந்து செயல்படுவது பொருளாதார ரீதியாகப் பயன்மிக்கதாக அமைகின்றது. அதன் அடிப்படையிலேயே அரசு சாரா இயக்கங்களின் வழி பல

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நல்லுள்ளங்கள் நற்சிந்தனைகளோடு ஒன்றிணைந்து செயலாற்றும்போது மக்களுக்கு நன்மைகளே கிட்டுகின்றன.

5.2 நாயன்மார்களின் சரியை தொண்டுகள் பற்றிய கலந்துரையாடல்

பெரிய புராணத்துள் வரும் நாயன்மார்கள் அனைவரும் சமயப் பணியோடு சமூகப் பணியையும் செய்தவர்களாவர். குளந்தோண்டுவது முதல் கோயில் அமைப்பது வரைக்குமான பல தொண்டுகள் நாயன்மார்களால் ஆற்றப்பட்டுள்ளன. நாயன்மார்களின் எளிமையான வழிபாடுகள் இறைவனுக்கு உகந்த உண்மையான பூஜையைக் காட்டுகின்றன. எவ்வுயிரும் துன்பமின்றி வாழ மற்றவர்கள் துணையாயிருத்தல் வேண்டும் என்பதை இவர்களின் தொண்டுகள் சுட்டி நிற்கின்றன. இருப்பவர்கள் இல்லாதவர்களுக்கு ஈவது வேண்டும் எனும் நன்னெறியை உலகத்தோர்க்குப் பறைசாற்றவும் செய்கின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எனவே, அடியார்கள் யாவராயினும் அவர்களுக்குப் பல நிலைகளிலும் தொண்டு புரிந்து சிவனருள் பெற்ற திருத்தொண்டர்களின் பெருமைகளையே பெரிய புராணம் பேசுகின்றது. ஆய்வாளர் மேற்கொண்ட இந்த ஆய்வின் அடிப்படையில் மொத்தம் 47 நாயன்மார்கள் சரியை எனப்படும் தொண்டு நெறியில் வாழ்ந்து காட்டியவர்களாக அறியப்படுகின்றனர். இவர்களுள் சிலர் தங்களின் சமுதாய நிலைக்கு ஏற்பத் தொண்டு செய்தவர்கள்; சிலர் பொதுநிலையில் தொண்டு செய்தவர்கள். சிவனடியார் தொண்டு, திருக்கோயில் தொண்டு, உழவாரத் தொண்டு, இறைவனுக்கான தொண்டு எனப் பலவகையாகப் பிரிக்கப்படுகின்றன என்கிறார் அ.ச.ஞானசம்பந்தன் (1999).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேலும், தொண்டிற்கு அடிப்படை இறையுணர்வு என்பதைப் பெரிய புராணம் அறிவுறுத்துகிறது. எனவேதான், சிவனடியார்களைச் சிவனாகவே காணும் திறம் நாயன்மார்களிடம் இருந்தது. சிவனிடத்தில் கொண்ட அன்பே அவன் அடியார்களுக்குச் செய்த சிவத்தொண்டும் ஆனது (ஞானசம்பந்தன், 1999).

நள்ளிரவில் கொட்டும் மழையில் தம் இல்லம் தேடி வந்த அடியார்க்கு வறுமை நிலையிலும் வரவேற்று விதைநெல்லை அரிசியாக்கி, வீட்டுக் கூரையை விறகாக்கி உபசரித்த இளையான்குடி மாறனார், அடியார்களிடையே சாதி மதப் பேதம் பார்க்காமல் பாதபூஜை செய்த கலிகம்பர், சிவனடியார்களுக்குக் கோவணமும் ஆடையும் நெய்து கொடுத்த நேசர், கோவணத் தொண்டு புரிந்த அமர்நீதியார், சிவனடியார்களுக்குத் துணி வெளுத்துக் கொடுத்த திருக்குறிப்புத்தொண்டர், சிவனடியார்களுக்குத் திருவோடு வழங்கிய திருநீலகண்டர், அடியார்களுக்கு அமுது செய்விக்கச் செந்நெல் சேமித்து வைத்த கோட்புலியார், தனியொருத்தியாக நின்று சிவனடியார்களுக்கு உணவு, உடை கொடுத்துதவிய காரைக்காலம்மையார், போரில் வென்று பெற்ற கூலியைக் கொண்டு இறைவனடியார்களுக்கு உணவு படைத்த முனையடுவார், சூதில் வென்ற பொருளை அடியவர்க்கமுதாக்கிய மூர்க்கர், தம் பிள்ளையையே அரிந்து அடியார்க்கு அமுது செய்வித்த சிறுதொண்டர், அடியார்க்கு உற்றுழி ஊறு நீக்கிய எறிபத்தர் ஆகியோர் சமயத் தொண்டோடு சமுதாயத் தொண்டும் செய்ததைப் பெரிய புராணத்தின் மூலம் அறிய முடிகின்றது (ஆறுமுக நாவலர், 2008)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அடியவர்க்குச் செய்யும் தொண்டை அரன் தொண்டாகவும் அறத் தொண்டாகவும் இவர்கள் எண்ணிச் செயலாற்றினர். இதனையே திருமூலரும் அடியார்களுக்குச் செய்தால் அஃது இறைவனையே சாரும் என்பதை,

அவன் பால் அணுகியே அன்பு செய்வார்கள்
சிவன் பால் அணுகுதல் செய்யவும் வல்லன்
(திருமந்திரம், 1843)

(**விளக்கம்**: மேல் ஓதிய சிவனடியாரை அடைந்து, அவர்க்கு அன்பும் பணியும் இன்புறச் செய்வார், சிவபெருமான் திருவடியை நெருங்கவும் வல்லராவர். மேலும், அம் மெய்யடியாரைத் தொடர்ந்து நாடுபவர் சிறந்தோராவர். அவர்பால் முழுப்பெருமையும் தங்கும். சிவனடியார் வாயிலாகவே தாயிலாச் சிவனை ஏய்தலாம்.)

எனும் பாடல் வழி விளக்குகிறார்.

இறைப்பணியைத் தங்களது வாழ்க்கையின் அன்றாடக் குறிக்கோளாக எண்ணித் தொண்டாற்றிய அடியார்களையும் பெரிய புராணம் உரைக்கின்றது. இவர்களது இறைப்பணி தமது பொருட்டன்றிப் பிறர் பொருட்டு மேற்கொள்ளப்பட்டது. இதனைப் பரார்த்த பூஜை என்றும் கூறலாம். அடியார் பெருமக்கள் அனைவருக்கும் சமூகப் பொறுப்பு உள்ளதைத் அவர்கள் ஆற்றிய பணியின் மூலம் அறிய முடிகிறது. இதில், தில்லைவாழ் அந்தணர்கள், ஆதி சைவ மரபினர், முப்போதும் திருமேனி தீண்டும் அடியார்கள் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

உலகத்திற்கே தலைவனாக விளங்கும் இறைவன் குடிகொண்டுள்ள இடம் ஆலயம். இங்கு இறைவனைத் தரிசிக்க வரும் அடியவர்களுக்கு அவனது உண்மைகளையும் தத்துவங்களையும் எடுத்துரைப்பதே இவர்களின் சேவையானது. இது சமுகச் சேவையாகவும் அமைந்தது. சுந்தரரின் தந்தை சடையனார், தாயார்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இசைஞானியார் ஆகியோர் இத்தகைய தொண்டு புரிந்துள்ளதைப் பெரிய புராணம் தெளிவுறுத்துகிறது.

இவர்களைத் தொடர்ந்து இறைவன் உறையும் ஆலயத்தில் திருவிளக்கேற்றும் தொண்டினைக் கணம்புல்லரும் நமிநந்தியடிகளும் செய்து வந்துள்ளதைப் பார்க்க முடிகிறது. எண்ணிலடங்கா அடியவர்கள் வந்து வணங்கும் ஆலயமானது எப்போது ஒளி நிறைந்து காணப்பட வேண்டும் என்பதே இவர்களின் விருப்பமாக இருந்தது. அகயிருளை நீக்கும் இறைவனின் திருக்கோயிலில் புறயிருளை நீக்கும் பொருட்டு விளக்கேற்றியது ஒருவகை சமூகத் தொண்டாகவே அமைகின்றது (ஆறுமுகம், 2004).

அடுத்து, அடியவர் பலரும் வந்து வணங்கும் ஆலயத்தில் குங்கிலிய தீபம் ஏற்றும் பணியை மேற்கொண்டவர் கலயர். இறைவனின் திருக்கோயில் தூய்மையாகவும் மணமாகவும் இருப்பதை உறுதி செய்யும் வகையில் இவரின் தொண்டு அமைந்தது. மேலும், திருக்கோயிலுக்கு வரும் எண்ணற்ற அடியவர்களை நச்சுத்தன்மையிலிருந்து பாதுகாக்கும் மிகப் பெரிய தொண்டாகவும் இது விளங்குகிறது.

மேலும், புலையர் சாதியில் பிறந்த திருநாளைப் போவார் நாயனார் இறைவனின் பூஜைக்காக கோரோசனை முதலிய வாசனைத் திரவியங்களையும், இசைக்கருவிக்கான தோல், வீசி, வார் முதலானவற்றையும் கொடுத்துத் தொண்டாற்றியுள்ளார். திருநீலகண்ட யாழ்ப்பாணரோ இசைவழி தமது யாழில் சம்பந்தரது தேவாரத் திருப்பதிகங்களை வாசித்தும், இறைவனைப் பாடியும் இறைவழிபாட்டைச் சிறக்கச் செய்தார்.

அப்பூதியடிகள் திருநாவுக்கரசரின் பெருமைகளைக் கேட்டு அவரின் பெயரிலேயே பல சிவத்தொண்டுகள் புரிந்து வந்தார். இதனை அவர் எந்தவித

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எதிர்பார்ப்புமின்றி மக்களின் நலனுக்காகவே செய்தார் என்பதனைத், தன் பெயரில் அல்லாது, திருநாவுக்கரசரின் பெயரில் செய்ததிலிருந்து தெளிவாகின்றது. அப்பூதியடிகளின் தொண்டு சமுதாயத்திற்கென ஆற்ற வேண்டிய கடமையைக் காட்டுகின்றது. தன்னலம் கருதாமல் பொது நலம் கருதி செய்த அத்தொண்டினைச் சேக்கிழாரும்,

வடிவுதாம் காணார் ஆயும் மன்னுசீர் வாக்கின் வேந்தர்
அடிமையும் தம்பிரானார் அருளும் கேட்டு அவர் நாமத்தால்
படிநிகழ் மடங்கள் தண்ணீர்ப் பந்தர்கள் முதலாய் உள்ள
முடிவுஇலா அறங்கள் செய்து முறைமையால் வாழும் நாளில்
(தி.தொ.பு. 1785)

(**விளக்கம்**: வடிவுதான் காணாராயும் - திருவடிவத்தினைத் தானும் காணதவராயினும்; மன்னுசீர்...கேட்டு - நிலைபெற்ற சிறப்பினையுடைய திருநாவுக்கரசு நாயனாருடைய திருத்தொண்டின் திறத்தினையும், பெருமானார் வைத்த திருவருளினையும் கேட்டு; அவர் நாமத்தால்...செய்து - அவரது திருப்பெயரால் படி நிகழும் திருமடங்களும் தண்ணீர்ப்பந்தர்களும் முதலாக உள்ள முடிவில்லாத அறங்களைச் செய்து; முறைமையால் வாழும் நாளில் - அந்நியதியின் அமைந்து வாழ்கின்ற நாளிலே.)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

என்று பாடுகின்றார்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று தொண்டு நெறியை உலகுக்கு எடுத்துரைத்த திருநாவுக்கரசு நாயனாரின் வரலாறும் இங்குக் குறிப்பிடத்தக்கது. நாம் வழிபடும் இறைவனின் திருக்கோயில் சுத்தமாக இருக்க வேண்டும் என்பதற்காக செல்லும் இடமெல்லாம் உழவாரப் பணி செய்தவர் இந்நாயனார். இவர் இறைவனடி சேரும் இறுதி நேரம் வரை உழவாரத் தொண்டு செய்தார் என்பதைச் சேக்கிழாரும்,

நாவுக்கு மன்னர் திரு நல்லூரில் நம்பர் பால்
மேலுற்ற திருப் பணிகள் மேவுற நாளும் செய்து
(தி.தொ.பு. 1462)

(**விளக்கம்**: திருநாவுக்கரசு நாயனார், திருநல்லூரிலே சிவபெருமானிடத்துப் பொருந்தத் திருப்பணிகளை மனமார நாளும் செய்தும்,)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எனும் பாடல் மூலம் விளக்குகின்றார் (மங்கையர்கரசி, 1972).

தவிர, ஊர் ஊராகச் சென்று ஆலயங்களை வழிபட்டுப் பதிகம் பாடிச் சைவம் தழைக்கவும் பரப்பவும் அப்பர் வழிசெய்தார். திருமறைக்காட்டில் மக்கள் நேர்வழியே சென்று வழிபாடாற்ற உதவியது அப்பரின் சமயத் தொண்டைக் காட்டுகிறது. மேலும், அப்பரின் உந்துதலின் பேரில் மன்னன் சமணப் பள்ளிகளை இடித்துக் கோயிலைக் காணச் செய்ததும் சமயத் தொண்டேயாகும். மக்களுக்கு உதவும் பொருட்டு அடியார்கள் ஓரிடத்திலேயே தங்கி விடுவதில்லை எனும் ஆறுமுக நாவலரின் (2008) கூற்றுக்குப் பொருந்தி இலங்குகின்றது.

தொண்டின் மாண்பைப் பற்றி உலக மக்களுக்கு உணர்த்துவதற்காகத் திருநாவுக்கரசர் தம் நெஞ்சுக்குச் சொல்வதுபோல் சொன்னது சிறப்புடையது. 'நிலை பெறுமாறு எண்ணுதி யேல் நெஞ்சே நீ வா' (திருமுறை 6:31:2397) எனும் அப்பரின் வாக்கு என்னென்ன தொண்டுகள் செய்தால் இறைவனின் திருவடிப் பேறு கிடைக்கும் எனப் போற்றியது புலனாகிறது. எனவே, சமயமானது தொண்டின் நெறியை உலகுக்கு உணர்த்தி உலகம் உய்யத் துணை செய்தது எனலாம்.

இதைத் தவிர்த்து, மனம், வாக்கு, காயம் ஆகியவற்றால் இறைவனை வணங்க வேண்டும் என்பதை உலகுக்கு உணர்த்தியவர்களும் நாயன்மார்களேயாவர். மனத்தால் இறைவனை நினைத்து, வாயால் பஞ்சாட்சரத்தை ஓத, உடலால் கைத்திருத்தொண்டு செய்தவர்கள் நாயன்மார்கள். தினமும் காலையும் மாலையும் இறைவனது திருக்கோயிலை அலகிடுதல், மெழுகிடுதல், பூமாலை கட்டுதல் ஆகிய திருத்தொண்டுகளைச் செய்த அடியார்களும் உண்டு. திருவதிகை வீரட்டானத் திருக்கோயிலில் திலகவதியாரும் செய்தது இத்தகைய திருத்தொண்டே ஆகும். முருக

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நாயனாரும் நாள்தொறும் காலையில் மலர்களைப் பறித்து இண்டை, தாமம், கண்ணி எனப் பலவகையாகத் தொடுத்து இறைவனுக்குச் சாற்றியதும் சிறந்த தொண்டாகவே கருதப்படுகிறது. சங்கிலியாரும் செருத்துணையாரும் கூட இத்தகைய தொண்டுகளையே செய்து வந்தனர் (சுப்ரமணியம் பிள்ளை, 1940).

பெரிய புராணத்துள் தண்டியடிகள் நாயனார் கண் தெரியாத நிலையிலும் கயிறு கட்டிக் கயிற்றைப் பிடித்துக் கொண்டே குளம் தொட்டதும் சமணர் தீங்கு விளைவித்த போதிலும் மனம் தளராமல் குளம் வெட்டியதும் சமூகத்திற்கு ஆற்றிய பெருந்தொண்டாக விளங்குகின்றது. இன்றும் அந்தக் குளம் உலக மக்களுக்குப் பயன்படுகின்றது. திருநாளைப்போவாரும் இறைவன் திருக்கோயிலின் அருகே வெட்டிய குளம் இன்றும் அவர் பெயரால் வழங்கப்பட்டு வருகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இவர்களின் வரிசையில் மங்கையர்கரசியாரின் தொண்டு மறக்க முடியாததாகும். அக்காலக்கட்டத்தில் சைவம் நிலைபெற அறப் போராட்டம் நடத்திய பெருமை அவரையே சாரும். தமது போராட்டம் வெளியில் தெரியாத வண்ணம் அரசனையும் நாட்டு மக்களையும் சைவத்திற்குத் திருப்பியவர் மங்கையர்கரசியார். இவருக்கு உற்றத் துணையாயிருந்து சைவ சமயம் செழிக்க அரசிக்கு வலது கையாக உதவி சம்பந்தரை அழைத்து அருந்தொண்டாற்றியவர் குலச்சிறையார். பொறுமை, மனந்தளராமை, சகிப்புத் தன்மை ஆகியவையே இவர்களது எண்ணம் ஈடேற உதவி புரிந்தது என்றும் கூறலாம் (சத்தியவேல் முருகனார், 2002).

தான் கெடினும் பிறரை வாழ வைப்பதே சமயப் பண்பாடாகும். தாம் வாழும் காலத்தில் மட்டுமல்லாது வீழ்ந்த போதிலும் உலகம் உய்ய வழி செய்யும் நெறியைப் போற்றி வாழ்ந்தவர்களே நாயன்மார்கள். இவர்களின் சமயப் பணி இறைவனுக்காக

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மட்டுமின்றி இறைவனை முன்னிட்டுச் சமுதாயத் தொண்டாகவும் அமைந்தது. மற்றவர் இன்பம் பெறுவதற்காகத் தம்மை வெறுத்துத் தம் இன்பத்தையும் தியாகம் செய்யும் வாழ்வே சமய வாழ்வாகும். தன்னை ஒறுத்து உலகை மகிழ்விக்கும் பண்பாட்டைச் சமயம் சமூகத்துக்கு வழங்குகிறது (பரமசிவானந்தம், 1972). நாயன்மார்களின் சமயத் தொண்டும் மக்களின் நலன் கருதும் சமூகத் தொண்டாகவே அமைந்தது எனலாம்.

5.3 போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சரியை தொண்டுகள் பற்றிய கலந்துரையாடல்

நாயன்மார்களின் தொண்டுகள் தன்னலமற்ற வாழ்வையும் சமதர்ம சமுதாயத்தையும் உருவாக்கக் காரணமாக அமைந்தன. இவ்வடியார்கள் சமயம் வழி சமுதாயத்தில் ஏற்படுத்திய செயல்பாடுகள் இன்றளவும் மக்களால் போற்றப்படுவதோடு மட்டுமின்றி மேற்கொள்ளவும் படுகின்றன. இதற்கு அரசு சாரா இயக்கங்கள் முன்னுதாரணமாகத் திகழ்கின்றன. அந்த வகையில், பலரும் ஒன்றுபட்டு மக்களின் சமுதாய நலன் கருதிச் செயலாற்றுவதில் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களான மலேசிய இந்து சங்கம் போர்டிக்சன் வட்டாரப் பேரவை, போர்ட்டிக்சன் சமூகநல மேம்பாட்டுக் கழகம், போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என நாயன்மார்கள் காட்டிய சங்கம வழிபாட்டில் இவ்வரசு சாரா இயக்கங்கள் சரியை எனப்படும் புறவழிப்பாட்டை உணர்த்தி நிற்கின்றன. சிவனடியார்களுக்கு உணவும் உடையும் உறையுளும் கொடுத்துத் தொண்டாற்றிய நாயன்மார்களின் வழியிலேயே இவ்வியக்கங்கள் சேவை செய்து

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

வருகின்றன. பலரின் கூட்டு முயற்சியில் உருவாகிச் சமுதாயத் தேவையறிந்து செயலாற்றி வரும் மற்ற அரசு சாரா இயக்கங்களைப் போன்றே இந்த இயக்கங்களும் உதவுகின்றன (உலக வங்கி, 1950).

இவ்வியக்கங்கள் தங்களது ஆற்றல்களைக் கொண்டு பொருளைப் பெருக்கிச் சமுதாய நன்மைக்காக அவற்றை அளித்து மகிழ்கின்றன. பெயருக்காகவும் புகழுக்காகவும் இன்றி ஏழை எளியவர்களின் பசியையும் நோயையும் வாட்டத்தையும் போக்குவதில் பெரும் பங்காற்றுகின்றன. இன்றைய உலகியல் வாழ்க்கையில் தொழில், திருமணம், வாணிகம், கல்வி, வீரம், பணம் எனப் பலரும் அலைகின்ற வேளையில் உண்மையான தொண்டு நெறியின் அடிப்படையில் செயலாற்றி வருவது போற்றத்தக்கது (தர்மலிங்கம், 2012). அந்த வரிசையில் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கமான மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை ஏழைகளுக்கு உணவுப் பொருள்கள் வழங்குவதிலும் ஆலயங்களில் அன்னதானம் வழங்குவதிலும் முனைப்பு காட்டி வருகின்றது. இவ்வியக்கத்தின் பணி போர்ட்டிக்சன் வாழ் ஏழை மக்களுக்குப் பெரும் உதவியாக உள்ளது.

தொடர்ந்து, அறம் செய்வதென்பது உணவோ பொருளோ அளிப்பது மட்டுமல்ல. மாறாகத் தன்னைச் சார்ந்தவர்களையும் தான் சார்ந்துள்ள சமுதாயத்தையும் தனது ஆளுமையினால் மேலோங்கச் செய்வதேயாகும். ஒவ்வொருவரும் தமக்கு ஆளுமை உடைய ஒன்றினைப் பிறருக்குக் கற்றுக் கொடுப்பதே உண்மையான அறமாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தம்மிடம் உள்ள தனித்திறமைகளையும் சிந்தனைகளையும் வாய்ப்புகளையும் பிறருக்குத் தராமல் இருப்பதனை,

எட்டிப் பழுத்த இரும் கனி வீழ்ந்தன
ஒட்டியநல் அறம் செய்யாதவர் செல்வம்
வட்டி கொண்டு ஈட்டியே மண்ணின் முகந்திடும்
பட்டிப் பதகர் பயன் அறியாரே

(திருமந்திரம், 117)

(**விளக்கம்:** நச்சப்படாதவன் செல்வம் நடுவூருள் நச்சுமரம் பழுத்தற்று' என்பராகலின், எட்டி மரங்கள் பழுத்துப் பெரும் பெரும் பழங்கள் வீழ்ந்தன. ஆனால் அஃது பயன்படாமையினால் ஒருவராலும் தொடப் படுவதில்லை. அதுபோல் நல்லறஞ் செய்யாதார் செல்வமும் ஒருவர்க்கும் பயன்படுவதின்று. பொன்னாசையினால் கடும் வட்டி வாங்கி மிகுபொருள் ஈட்டியதோடமையாது வஞ்சனையால் பிறர்பொருள் கவரும் பாதகர், தாம் செய்ய வேண்டிய அறத்தினையுமுணரார். தவிர வேண்டிய பாவத்தையுமுணரார். அவற்றினான் விளையும் பயனையும் அறியார். பாதகர் என்பது பதகர் எனக் குறுகி நின்றது.

என்கின்றார் திருமூலர்.)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆனால், போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்கள் தங்கள் உடைமைகளையும் அறிவையும் பிற உயிர்களுக்குப் பயன்படும் வகையில் பயன்படுத்துகின்றன. உலகில் வாழும் மாந்தருக்குப் பேச்சாற்றல், எழுத்தாற்றல், சிந்தனையாற்றல் என இறைவன் அளித்த சிறப்பியல்புகளின் வழி கல்வி, தொழில், கலை, சமயம் என்று பல்வேறு திறன்களைப் பிற மாந்தர்களும் கைவரப் பெற உறுதுணையாக இருக்கின்றன. கல்வியாளர்கள், செல்வந்தர்கள், இலக்கியவாதிகள், தலைமைத்துவம் உடையவர்கள், ஆன்மிகச் சிந்தனையாளர்கள் எனப் பல்வேறு துறைகளில் ஆளுமையுடையவர்கள் இந்த அரசு சாரா இயக்கங்களின் மூலம் சமுதாய வளர்ச்சிக்குப் பங்காற்றுகின்றனர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

> All over the world, independent and strong civil society - NGOs faith leaders and other community advocates - help goverments solve problems and serve their people better by shining a light on the issues that matter most - like education standards, access to healthcare, the rule of law and economic oppoturnity.
> (Ben Rhodes, 2019)

எனும் கூற்றின்படி, அரசுக்கு உதவியாகப் பல்வேறு துறைகளிலும் இந்த அரசு சாரா இயக்கங்களின் சேவை பரந்து விரிந்து கிடக்கின்றது என்பதும் சிந்திக்கவல்லது.

இதனைத் தொடர்ந்து, போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகமும் போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகமும் கல்வி கற்பதற்கு உதவிப் பணம், தொழில் திறன் பெறுவதற்குக் கடன் உதவி, சிறு தொழில் அமைத்துக் கொடுத்தல், வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல், பொருளீட்டல் வழிகாட்டிக் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல், ஊனமுற்றோர், முதியோர் காப்பகங்களுக்கு உதவுதல், ஆதரவு அற்ற குழந்தைகள் காப்பகங்களைப் பேணுதல், சமுதாய நற்பணிகளுக்கு அறக்கட்டளைகள் அமைத்தல், இளைஞர்களுக்கு வாழ்வியல் பட்டறைகள் நடத்துதல், சமுதாயச் சீர்த்திருத்தப் பணிகளுக்கு உதவுதல் போன்றவற்றைச் செய்வதையும் தவறவிடுவதில்லை.

இவ்விரு இயக்கங்களின் முயற்சியால் மாணவர்கள், இளைஞர்களுக்கான தன்னம்பிக்கை பயிற்சிகள் வருடந்தொறும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. மேலும், வீட்டிலிருந்தவாறே வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள பெண்களுக்கான தன்னாளுமை பயிற்சி, பொருளீட்டல் வழிகாட்டிக் கருத்தரங்கு போன்றவையும் நடத்தப்பெறுகின்றன. இதன் மூலம் போர்ட்டிக்சனில் வசிப்பவர்கள் தங்களது வாழ்க்கை தரத்தை உயர்த்திக் கொள்ள இவ்வியக்கங்கள் துணைபுரிகின்றன என்பது இங்கு நோக்கத்தக்கது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவையும் இவ்வாட்டார மக்களுக்குத் தம்மால் ஆன சேவைகளை வழங்கி வருகின்றது. இது சமயம் சார்ந்த அமைப்பாகத் திகழ்வதால் திருக்கோயில்களில் திருமுறை வகுப்புகள், சமயக் கல்வி, சொற்பொழிவுகள், சமய ஆய்வுகள், தேவாரத் திரட்டு, குறுந்தட்டுப் போன்ற சமய வெளியீடுகள் போன்றவற்றிற்குத் துணை நிற்பதில் இந்த இயக்கத்தின் பங்கு அளப்பரியது.

கொடை அல்லது ஈகையை அவரவர் நிலையில் இருந்து ஆற்ற வேண்டும் என்பதே தமிழரின் அறம். பிற உயிர்களுக்கு உணவு, உடை, உறையுள் கொடுத்து தொண்டாற்றுவது ஈகையில் மிகச் சிறந்ததாகப் போற்றப்படுகிறது. மற்றவர்களுக்கு நம்மால் இயன்ற உதவிகளைச் செய்வது பசியை அடக்கித் தவம் செய்வதைக் காட்டிலும் உயர்வானது என்பதைத் திருமூலர்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

திளைக்கும் வினைக் கடல் தீருறு தோணி
இளைப்பினை நீக்கும் இருவழி உண்டு
கிளைக்கும் தனக்கும் அக்கேடு இல் புகழோன்
விளைக்கும் தவம் அறம் மேல் துணை ஆமெ
(திருமந்திரம், 115)

(**விளக்கம்**: ஒருவன் அறஞ்செய்யின், தனக்கும் தன் வழியினுள்ளார்க்கும் அழியாத பழியில் புகழ் நிறுவியவனாவன். அவ்வறம் மேற் சிவனடி கூடுதற்கு வாயிலாம் சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்னும் நற்றவம் புரிதற்குத் துணையுமாகும். வினையான் வரும் பிறவிக் கடலுள் அழுந்தும் ஆருயிர்கள் கரைசேரப் பற்றும் புணை இறைவன் அடித்தோணியே. அதுவே உயிர்களின் இளைப்பினை நீக்குவதாகும். அத்தோணியினைப் பெறுவிக்கும் வாயில் தவமும் அறமுமேயாம்.)

என்ற பாடல் வழி குறிப்பிடுகின்றார். உறவினர், நமக்கு வேண்டியவர், வேண்டாதவர், நண்பர்கள், பகைவர்கள், படித்தவர், படிக்காதவர், செல்வம் உடையோர், வறியவர், போன்று பேதமின்றி உதவ வேண்டும் என்பதையும் அறம் செய்வான் திறம் எனும் பகுதியில் திருமூலர் கூறுகின்றார் (தர்மலிங்கம், 2012). அவரின் கூற்றுப்படியே மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை, போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கழகம், போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம் ஆகியவை மேற்குறிப்பிட்ட கூறுகளைக் கருத்தில் கொள்ளாது அனைவருக்கும் உதவி வருகின்றன என்பது பாராட்டுக்குரியது.

மானிடர்களாகிய நம்மால் செய்யக்கூடிய உதவிகளை எக்காரணத்தை முன்னிட்டும் கைவிடாமல் எல்லாவிடத்திலும் செய்தல் வேண்டும் என்பதைத் திருவள்ளுவரும்,

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாம் செயல்

(குறள், 33)

எனும் குறள் வழி வலியுறுத்துகிறார். நாயன்மார்களின் வாழ்க்கை சரிதம் இதற்கு நல்ல எடுத்துக்காட்டாக விளங்குவதை நாம் அறிவோம். தனியொரு மனிதனாக இறை உணர்வின் பெருக்காலும் தம் கொள்கை பிடிப்பாலும் செல்லும் இடமெல்லாம் அறச்செயலைப் போற்றியவர்கள் நாயன்மார்கள்.

அவர்களின் வழியிலேயே தம் பொருளாலும் முயற்சியாலும் சமுதாயத்தின் தேவையறிந்து உதவுவது போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்கள். நாயன்மார்களைப் பின்னொற்றி ஒரே குறிக்கோள், எல்லையற்ற ஊக்கம், தளர்வில்லாத நெஞ்சுறுதி, சளைக்காத உழைப்பு, நேர்மையான பாதை போன்றவையே மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை, போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம், போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம் ஆகியவற்றின் தனித்தன்மையாக விளங்குகின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தனிமனிதனாக அல்லாமல் பலரின் கூட்டணியில் உருவாகி அனைவரின் கருத்துகளையும் உள்வாங்கிப் பின் பொருளாதார நிலையையும் சீர்தூக்கிப் பார்த்துச் செயல்பட வேண்டிய கட்டாயம் தற்காலச் சூழ்நிலையில் இந்த அரசு சாரா இயக்கங்களுக்கு உள்ளது. இருப்பினும், மக்களின் நல்வாழ்வு, சமுதாய மேம்பாடு, எதிர்காலச் சந்ததியினரின் முன்னேற்றம் போன்ற நற்பண்பும் நற்சிந்தனையுமே இந்த அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் தொண்டுணர்விற்கு வித்திடுகின்றன எனலாம்.

5.4 நாயன்மார்களின் சரியை தொண்டுகள், போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சரியை தொண்டுகள் பற்றிய கலந்துரையாடல்

பெரிய புராணம் பிற இலக்கியங்களைப் போன்று வாழ்க்கை முறை, சமுதாயப் பொறுப்புணர்ச்சி, பழக்க வழக்கங்கள், பண்பாடு என எல்லா இலக்கணங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. சமுதாய நலமே சமய நலமாகக் கொண்டு விளங்குவதால் பெரிய புராணத்தைச் சமுதாய நூல் என்பதும் பொருந்தும். பெரிய புராணத்தில் வரும் நாயன்மார்கள் சைவத்தின் பெருமைகளையும் சமயத்தின் கொள்கைகளையும் மேலோங்கச் செய்தது மட்டுமின்றி சமுதாய மேம்பாட்டுக்காக வாழ்ந்தவர்களாவர்.

நாயன்மார்களின் வழியைப் பின்பற்றி மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை, போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம், போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன. மக்கள் உறவு கொண்டு வாழ்கின்ற சமூகத்தில் மொழி, சமயம், இனம், பண்பாடு, கொள்கை எனச் சமுதாய நோக்கோடு தொண்டுகளை ஆற்றி வருகின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இறைவனை வழிபடுவதற்கு இலக்கணம் வகுத்துத்தந்தது பெரிய புராணம். பெரிய புராணம் எழுதப்படுவதற்கு முன்பு இறைவனை வழிபடுவதற்குப் பல விதிகளை வகுத்து வைத்திருந்தனர். அந்த முறைகளையும் மரபுகளையும் மாற்றியது பெரிய புராணம் (குன்றக்குடி அடிகளார், 2001). எளிய வழிபாட்டின் மூலம் இறைவனின் திருவடிப் பேறு பெறலாம் என்கிற உண்மையை நாயன்மார்களின் வரலாற்றின் மூலம் பெரிய புராணம் உணர்த்தி நிற்கின்றது.

இறைவனை அடையும் முயற்சியில் நாயன்மார்கள் பலதரப்பட்ட ஆலயத் தொண்டுகளைப் புரிந்துள்ளனர். முருகர், செருத்துணையார், திருநாவுக்கரசர், சடையர், இசைஞானியார் ஆகியோர் மலர் பறித்துக் கொடுக்கும் தொண்டினை விடாமல் செய்தவர்கள் என்பது தெரிகிறது. கலியர், கணநாதர், நமிநந்தியடிகள் ஆகியோர் ஆலயத்தில் திருவிளக்கேற்றித் தொண்டு புரிந்தவர்களாவர். இவர்களின் வரிசையில் ஆலயத்தில் தூபமிடும் பணியைச் செய்தவர் கலயர் ஆவார். மேலும், ஆலயத்திற்குச் சந்தனம் அரைத்துக் கொடுக்கும் பணியைச் செய்த மூர்த்தியாரும் இங்குக் குறிப்பிடத்தக்கவர். கோட்புலியாரோ ஆலயத்தில் இறைவனுக்கு அமுது படைக்க செந்நெல்லை வாரி வழங்கியவராகிறார் (தனபாக்கியம், 2007).

அந்த வகையில், போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களும் நாயன்மார்களின் தொண்டுகளைப் பின்பற்றிச் செய்து வருவதைக் காண முடிகின்றது. ஆலயப் பூஜைக்குத் தேவையான மலர் மாலைகள், விளக்குகள், சந்தனம், பால், எண்ணெய் போன்ற பொருள்கள் மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவையால் சுற்று வட்டார ஆலயங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. தவிர, ஆலயத்தில் நடைபெறும் அன்னதானத்திற்கும் இவ்வியக்கம் உணவுப் பொருட்களை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

வழங்கி வருவதைப் பார்க்க முடிகிறது. பெரும்பாலும் விழாக்காலங்களில் இத்தகைய உதவிகளை இவ்வியக்கம் செய்து வருகின்றது.

இதைத் தவிர்த்து, திருமுறை ஓதுதல், திருமுறைகளைப் பயிற்றுவித்தல் ஆகிய தொண்டுகளும் நாயன்மார்களிடம் மிகுந்து காணப்படுகிறது. திருநாவுக்கரசர், முருகர், செருத்துணையார், காரியார், தண்டியடிகள் போன்றோர் இறைவனைப் புகந்து பாடி வழிபட்டனர். கணநாதர் இந்தத் திருமுறைகளை இளையோர்க்குப் பயிற்றுவிக்கும் திருப்பணியில் தம்மை இணைத்துக் கொண்டார். இது போன்று போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களும் திருமுறை ஓதப் பயிற்றுவித்தல், தேவார வகுப்புகளை நடத்துதல் போன்ற பணிகளைச் செய்து வருகின்றன. மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவையும் போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகமும் இணைந்து திருமுறை ஓதும் விழாவினை நடத்துவது இங்குக் குறிப்பிடத்தக்கது. போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகமும் அவ்வப்போது ஆலயங்களில் பஜனைகளை ஏற்பாடு செய்வதும் பாராட்டுக்குரியது.

பெரிய புராணத்தில் நாயன்மார்கள் கோயில் எழுப்பிக் குளம் வெட்டியதை அறிய முடிகிறது. ஏயர்கோன் கலிகாமர், மங்கையர்கரசியார், கோட்செங்கட் சோழர் ஆகியோர் பல சிவாலயங்களை எழுப்பி மகிழ்ந்தனர். தண்டியடிகள் கண் பார்வையற்ற நிலையிலும் கோயிலின் அருகே குளம் வெட்டித் தொண்டுகள் செய்தவர். இதை நினைவில் நிறுத்தி, மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை, போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம், போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம் ஆகியவை சுற்று வட்டார ஆலய நிர்மாணிப்புப் பணிகளுக்கும் சீர்திருத்தப் பணிகளுக்கும் நன்கொடைகள் வழங்கி வருகின்றன. மேலும், வேறு பல தரப்பினரிடமிருந்தும் நிதி திரட்டிச் சேவையாற்றுகின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பெரிய புராணத்தில் நாயன்மார்கள் தொண்டு எனும் பண்பை முழுவடிவமாகப் பெற்றவர்களாவர். நாயன்மார்களின் வரலாற்றில் பக்தி மிகுந்து காணப்பட்டாலும் வாழ்க்கை குறிக்கோளே முதலிடம் பெறுகின்றது. தொண்டு நெறியின் பல்வேறு அங்கங்களில் பக்தியை மூலதனமாகக் கொண்டு சமுதாயப் பணியையும் சேர்த்தே ஆற்றியவர்கள் நாயன்மார்கள். அதன் காரணமாகவே 'மக்கள் தொண்டு மகேசன் தொண்டு' எனும் நோக்கில் அடியார்களுக்குச் செய்யும் தொண்டை இறைவனுக்குச் செய்யும் தொண்டாகவே பாவித்தனர்.

அந்த வரிசையில் அடியார்களுக்குப் பொருளுதவி செய்வது உயர்ந்த தொண்டாகக் கருதப்படுகிறது. அடியார்கள் என்பவர் நித்தமும் இறைச் சிந்தனையிலேயே ஈடுபட்டிருப்பவர்கள். அத்தகையவர்களுக்குத் தேவையான பொருளுதவியைச் செய்து வந்தனர் நாயன்மார்கள். அடியார்களுக்குத் திருவோடு வழங்கிய திருநீலகண்டர், கோவணமும் ஆடையும் கொடுத்துதவிய அமர்நீதியார், உடைகள் நெய்து தந்த நேசர், பொன்னும் பொருளும் கொடுத்தனுப்பிய இடங்கழியார், முனையடுவார் ஆகியோர் இத்தகைய திருத்தொண்டுகள் ஆற்றி வந்துள்ளது புலப்படுகிறது.

போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களும் மேற்குறிப்பிட்டவாறு பொருளுதவிகள் செய்வதில் மும்முரம் காட்டி வருகின்றன. ஏழைக் குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் கொடுப்பது, பண்டிகை காலங்களில் புதுத்துணி வழங்குவது எனச் சேவைகள் செய்கின்றன. மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை, போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம், போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம் ஆகியன மூன்றும் ஏழைகளுக்குப் பொருளுதவி செய்வதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றன. மேலும், பேறு குறைந்தவர்களுக்கான நிதியுதவி,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மாணவர்களுக்கான கல்வி கருத்தரங்குகள், இளைஞர்களுக்கான தொழில் முனைப்புத் திறன் பட்டறைகள் போன்றவற்றை ஏற்பாடு செய்தும் இவ்வியக்கங்கள் சிறந்த வழிகாட்டிகளாகத் திகழ்கின்றன.

பெரிய புராணத்துள் வரும் நாயன்மார்கள் இரண்டு கொள்கைகளை வாழ்க்கையில் கடைபிடித்து ஒழுகியவர்கள். முதலாவது இறைவனின் திருவடியே உண்மை இன்பம் என்பதை உணர்ந்தது; இரண்டாவது அன்பையும் சிவத்தையும் ஒன்றாக நினைத்து இறைப்பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டதுமாகும்.

அன்பு சிவம் இரண்டு என்பர் அறிவு இலார்
அன்பே சிவம் ஆவது ஆரும் அறிகிலார்
(திருமந்திரம், 257)

(**விளக்கம்**: அன்பாகிய திருவருளும் இன்பாகிய சிவனும் மணியும் ஒளியும்போல் ஒன்றே. அவற்றை இருவேறு பொருள்கள் என்று கூறுவார் மெய்யுணர்வு கைவரப் பெறாதார். மெய்ம்மையான் நோக்கின் அன்பாகிய திருவருளே இன்பாகிய சிவனுக்குத் திருமேனியாகும். அம் முறையான் அன்பே சிவமாகும். இவ்வுண்மையினையும் எவரும் உணர்கிலர். அன்பே சிவம் என்னும் உண்மையினை அருளால் அனைவரும் அறிந்தபின் தாம் இடையறாது திருவடிக்கண் வைக்கும் அன்பாகிய வித்தே சிவமாய் விளைந்து இன்பாய்க் கனிந்து அவ்வன்புடையார்க்கு என்றும் பொன்றாப் பேரின்ப நுகர்வாகும். அவ்வுண்மை 'சிவமாய் அமர்ந்திருந்தார்' என்னும் இம்மறை மொழியான் உணரலாம்.)

எனும் திருமந்திரப் பாடலுக்கு இலக்கணமாய் வாழ்ந்து காட்டியவர்கள் நாயன்மார்கள். இறைவனிடத்தில் கொண்ட அளவற்ற அன்பின் காரணத்தால் எண்ணற்ற இன்னல்களையும் பொறுத்துக் கொண்டு எவ்விதப் பலன்களையும் எதிர்பார்க்காது வாழ்ந்தவர்களும் இவர்களேயாவர். இதன் மூலம், எல்லா உயிர்களிடத்தும் அன்பு மேலிடத் தொண்டாற்றியவர்கள் நாயன்மார்கள் என்பதையும் பெரிய புராணம் சுட்டி நிற்கின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தனிமனிதனாக நின்று வாழ்க்கையின் குறிக்கோளிலிருந்து சற்றும் பிறழாத நாயன்மார்களைப் போன்று இன்றைய காலக்கட்டத்தில் தொண்டாற்றுவதென்பது கடினமான ஒன்று. ஏனெனில், தற்காலச் சூழலில் இனம், மொழி, பண்பாடு என மக்கள் சமுதாயம் வேறுபட்டு நிற்கிறது. இருப்பினும், மக்களின் தேவையறிந்து தொண்டுகள் ஆற்றப்பட்டு வருவதை நம்மால் காண முடிகிறது. நாயன்மார்களின் வழிகளைப் பின்பற்றி இன்றைய சூழலில் இயன்ற அளவு மக்களுக்கான தொண்டுகளை உலகம் தழுவிய நிலையில் பல அரசு சாரா இயக்கங்கள் செய்து வருகின்றன. அவர்களின் வழியிலேயே போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களும் செயல்பட்டு வருவதை அறிய முடிகின்றது. நாயன்மார்கள் வகுத்துத் தந்த தொண்டு நெறி இன்றளவும் மனித குலத்தின் மேம்பாட்டுக்கு வித்திடுவதாக அமைகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

5.5 ஆய்வு விளைவு

பெரிய புராணம் எல்லாவற்றிலும் மேலான நூலாகத் திகழ்கிறது. தலைசிறந்த வரலாறு, நிலையுயர்ந்த பண்பாடு, தெருள் நிறைந்த அருளியல், பொருள் பொதிந்த அரசியல், தமிழர்களின் அறிவாற்றல் மிக்க தொழில் முறை போன்றவற்றை எடுத்தியம்பும் மிகச் சிறந்த பக்தி இலக்கியமாகப் பெரிய புராணம் இருக்கின்றது. நமது சமயம் வழிவந்த தனிமனித வாழ்க்கை முறை, குடும்ப வாழ்க்கை முறை, சமுதாய வாழ்க்கை முறை ஆகியவற்றையும் பெரிய புராணம் விளக்கி நிற்கின்றது. எனவே, இவ்வாய்வின்வழி பெரிய புராணம் வழியுறுத்தும் தமிழர்களின் உயரிய பண்பாடு இன்றைய தலைமுறையினருக்கு வழிகாட்டலாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நாயன்மார்கள் இறைவனுக்கும் அவனடியார்களுக்கும் தொண்டு புரிய வேண்டுமென்ற உள்ளம் உடையவர்கள். இவர்கள் இறைவனிடம் எதையும் வேண்டி நிற்பதில்லை. மாறாக, இறைவனது திருவடியை எப்போதும் மறவாதிருக்கவும் எல்லா உயிர்களும் இன்புற்றிருக்கவும் உயர்வு தாழ்வு பாராமல் பிறரின் துன்பத்தைப் போக்க நினைத்தவர்கள். உலகில் உள்ள எல்லா உயிர்களும் அடைய விரும்பும் வீடு பேற்றையும் அடைய விரும்பாதவர்கள் அடியார்கள். வள்ளுவரின்,

வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதுஒப்பது இல்
(குறள், 363)

எனும் குறளுக்கேற்ப எதிலும் விருப்பம் அற்றவர்களாவே வாழ்ந்தனர். இவர்களைப் போன்றே தொண்டுள்ளம் படைத்த அடியார்கள் உலகில் எக்காலத்திலும் இருக்கின்றனர். நாயன்மார்கள் அன்பின் வழியில் நின்று ஒழுகியது போல இக்காலத்திலும் அவர்தம் வழித்தோன்றல்களாகிய தமிழ் மக்கள் சாதி வேற்றுமை பாராமல் எவ்வுயிர்க்கும் தொண்டு செய்ய இவ்வாய்வு தூண்டுதலாக அமையும்.

மேலும், நடைமுறையில் அடியார்களுக்கும் தாம் வாழ்கின்ற மக்கள் சமுதாயத்திற்கும் செய்கின்ற தொண்டின் வழி உயர்நிலையை அடையலாம் என்ற உண்மையையும் பெரிய புராணம் உணர்த்துகின்றது. நாயன்மார்கள் அன்பு நெறியில் பல முறைகளைக் கடைபிடித்தே வீடுபேற்றை அடைந்தனர். சரியை தொண்டு அதி குறிப்பிடத்தக்கது. சரியை தொண்டில் சிலர் மலர்களால் அர்ச்சித்தனர்; சிலர் விளக்கேற்றி வணங்கினர்; இன்னும் சிலர் அமுது படைத்தனர்; பலர் ஆலயத் தொண்டுகளில் ஈடுபட்டிருந்தனர். நாயன்மார்கள் தங்களால் இயன்ற நிலையில் இதுபோன்று தொண்டாற்றி வாழ்ந்தனர். எனவே, இவர்களைப் பின்னொற்றி இக்காலத்தோரும் எளிய தொண்டுகளைச் செய்ய இவ்வாய்வு வழிகாட்டியாக விளங்கும். இதுவரையிலும் இவர்கள் செய்து வந்த தொண்டுகள் மிகச் சாதாரணமாகப் பட்டாலும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தாங்கள் செல்லும் வழி இம்மையிலும் மறுமையிலும் இன்பமளிக்க வல்லது என்ற உணர்வையும் தூண்டிவிடும்.

5.6 தொடராய்வுக்கான பரிந்துரைகள்

இவ்வாய்வின் முடிவுகள், சமயம், சமுதாயம் சார்ந்த தொண்டு நெறியின் உன்னதத்தை காட்டி நிற்கின்றன. இவ்வாய்வினை முன்னிறுத்தி மேலும் சில தொடராய்வுகள் மேற்கொள்ளப் பரிந்துரைக்கப்படுகின்றன.

i. பெரிய புராணம் ஓர் உயர்ந்த சமய நூலாகத் திகழ்கின்றது. இதுவே அடியார் பெருமையையும் மக்களுக்கு அவர்கள் செய்த தொண்டுகளையும் பற்றிப் பேசும் முதல் பக்தி இலக்கியமாகவும் விளங்குகின்றது. எனவே, வரும் காலங்களில் பெரிய புராண அடியார்களின் தொண்டு நெறியையும் நாடு தழுவிய நிலையில் இயங்கி வரும் இந்திய அரசு சாரா அமைப்புகளின் சமயச், சமுதாயப் பணிகளையும் ஒப்பிட்டு ஆய்வினை மேற்கொள்ளலாம்.

ii. பொதுவாக ஓர் இலக்கியம் அது சார்ந்துள்ள சமுதாயத்திற்கு நற்சிந்தனைகளை ஊட்டும் அறநூலாகத் திகழ்வதென்பது அவசியம். மேலும், மானிட வாழ்க்கையின் மேம்பாட்டினையும் உணர்த்தும் களஞ்சியமாகவும் இருக்க வேண்டும். பெரிய புராணத்தைப் போன்றே தொண்டு நெறியை உலகுக்கு எடுத்துரைத்த வைத்த திருநாவுக்கரசரின் தேவாரத்தையும் ஆய்வுக் களமாகக் கொள்ளலாம். அவரது தேவாரத்தில் பொதிந்துள்ள சமுதாய நலன் கருதிய தொண்டு நெறியைப் பற்றிய ஆய்வினை மேற்கொள்ளலாம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

iii. பெரிய புராணத்தில் நாயன்மார்களுள் அரசர்களும் இடம் பெற்றுள்ளனர். மூர்த்தியார், கழற்றறிவார், புகழ்ச்சோழர், நின்றசீர் நெடுமாறர் ஆகியோரின் வரலாறுகள் இதில் இடம் பெறுகின்றன. உயர்குடியில் பிறந்தோராயினும் 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' எனும் அடிப்படையில் இவர்களின் தொண்டுகளை ஒப்பீடு செய்யலாம்.

5.7 தொகுப்புரை

மனிதனைப் பண்படுத்திக் குறிக்கோளுடன் வாழச் செய்வதே சமயம். சமய வாழ்க்கையில் புலன்கள் அனைத்தும் தூய்மை அடைவதால் மனம் தெளிவுறுகின்றது. மனத்தின் தெளிவு பரந்து விரிந்த தேவையற்ற எண்ணங்களை வரையறுத்து செயல்களை முறைப்படுத்தவும் செய்கின்றது. இதனால், நெஞ்சில் கருணை பிறப்பதோடு தொண்டு வாழ்வுக்காகத் தம்மை அர்ப்பணிக்கும் ஊக்கமும் பிறக்கும். இதுவே சமயத்தின் உயர்ந்த நோக்கமாகும்.

பெரிய புராணத்தின் உன்னத நோக்கமும் இதுவேயாகும். பெரிய புராணத்தில் வரும் 63 நாயன்மார்களின் வாழ்க்கை சரிதங்களில் பொதிந்துள்ள உண்மை, உறுதி, ஒழுக்கம், வீரம், அஞ்சாமை ஆகியவை அவர்களின் தொண்டுணர்விற்கு அடிப்படையாகத் திகழ்ந்தன. மக்கள் படும் துன்பங்களிலிருந்து விடுபட்டு இன்பம் எய்த வழிகாட்டிய பெருமை இவர்களையே சாரும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பெரிய புராணத்தில் வரும் நாயன்மார்கள் தத்தம் குறிக்கோளில் நெறியுடன் நின்று கடமையைச் செய்தவர்கள். உயர்வு தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்கியவர்களும் இவர்களே. தம் உழைப்பில் கிடைத்த ஒப்பற்ற செல்வத்தைக் கொண்டு இறைவனுக்கும் அவன் அடியார்களுக்கும் தொண்டு செய்து சிவகதி பெற்றவர்கள். தமக்கு இன்னா செய்தார்க்கும் இனியன செய்யும் பண்பு உடையவர்கள்.

பெரிய புராணத்தில் நாயன்மார்கள் ஏற்படுத்திய மறுமலர்ச்சியாகிய அன்புநெறியும் தொண்டு நெறியும் மக்களின் வாழ்வில் இன்றளவும் கடைபிடிக்கப்படுகின்றது என்றும் கூறலாம். தற்காலச் சூழ்நிலையில், தனிமனிதனாக இல்லாமல் ஒரு மக்கள் கூட்டணியாக இணைந்து அரசு சாரா இயக்கங்கள் எனும் பெயரில் பல தொண்டுகள் ஆற்றப்பட்டு வருகின்றன. நாகரிகம், பண்பாடு, மொழி, இனம் என்பதையெல்லாம் கடந்து மனித நேயம் என்னும் கொள்கை பிடிப்போடு இந்த அரசு சாரா இயக்கங்கள் செயலாற்றி வருவதை நாம் காண முடிகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பொருட்செல்வத்தினைக் கொண்டே அருட்செல்வத்தினைத் தேட வேண்டும் என்ற கொள்கை பிடிப்போடு வாழ்ந்தவர்கள் நாயன்மார்கள். அவ்வாறு அருட்செல்வத்தை தேடும் பணியில் பிற உயிர்களுக்கு ஈகை செய்து இறைவனின் திருவடி நீழலை அடைந்தனர். அவர்கள் வழியிலேயே நின்று இன்றையக் காலக்கட்டத்தில் உணவு, உடை, கல்வி, இருப்பிடம், வேலை வாய்ப்பு, அடிப்படை வசதிகள் என மக்களின் தேவைகளை இயன்ற அளவு பூர்த்தி செய்து வரும் அரசு சாரா இயக்கங்களின் சேவையும் பாராட்டுக்குரியது. எனவே, இவ்வுலகில் வாழும் காலத்தில் இன்பத்தையும் மன நிறைவையும் அளிக்கக்கூடியது பிறருக்குச் செய்யப்படும் தொண்டுகளே என்பதை உணர்ந்து இதுபோன்ற இயக்கங்களில் இணைவோமானால் பொருளும் அருளும் பெற்று நல்வாழ்வு வாழலாம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேற்கோள் பட்டியல்

தமிழ் மேற்கோள்கள்

அருணந்தி சிவாச்சாரியார். (2018). *சிவஞான சித்தியார் (பரபக்கம், சுபக்கம்).* https://shaivam.org/saiva-siddhanta/sivagyana-siththiyar பதிவிறக்கம் செய்யப்பட்டது.

அருணாசலம், மு. (1909). *தமிழ் புலவர் வரலாறு.* திருச்சிராம்பலம்: காந்தி வித்தியாலயம்.

அருணாசலம், மு. (1969). *தமிழ் இலக்கிய வரலாறு.* சென்னை: பாரி நிலையம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அழகரடிகள். (2004). *பெரிய புராணம்.* காரக்பூர்: இந்திய தேசிய மின்னியல் நூலகம்.

அன்பரசன் அருணாசலம். (2018). பெரிய புராணத்தில் அடியார் ஆற்றிய பணியும் ஈட்டிய பயனும். *மலேசிய சைவ சமயப் பேரவையின் நான்காவது உலக சைவ சமய மாநாட்டு மலர்,* மலேசியா, 24-43.

ஆறுமுகம். (1989). பெரிய புராணத்தில் தொண்டுணர்வு. முனைவர் பட்டத்திற்கான ஆய்வேடு. சென்னை பல்கலைக்கழகம்.

ஆறுமுக நாவலர். (1851). *சேக்கிழார் புராணம்.* சென்னை: வித்தியானுபாலயந்திரச் சாலை.

ஆறுமுக நாவலர். (1995). *திருத்தொண்டர் புராணம்.* சென்னை: வித்தியானுபாலயந்திரச் சாலை.

ஆறுமுக நாவலர். (2002). *இந்து சமய இணைப்பு விளக்கம்.* தமிழ்நாடு: இந்துசமய அறநிலையத்துறை.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆறுமுக நாவலர். (2008). *திருத்தொண்டர் வரலாறு அல்லது பெரிய புராண வசனக்காவியம். சென்னை:* சேக்கிழார் பதிப்பகம்.

ஆறுமுகம். (2004). *பெரிய புராணம்.* சென்னை: டி.நகர் பதிப்பகம்.

ஆனந்தரசன். (2003). *சிவஞானபோதம்.* திருநெல்வேலி: அருள்நந்தி சிவம் அருட்பணி மன்றம்.

ஆனந்தரசன். (2005). உண்மை விளக்கம். *திருநெல்வேலி:* மலர் பதிப்பகம்.

இலங்கேஸ்வரி. (2015). பெரிய புராணத்தில் சரியை. *மலாயாப் பல்கலைகழகத் தமிழ் பேராய்வு ஆய்விதழ், 1,* 16-25.

இரத்தினசபாபதி, வி. (1981). திருநாவுக்கரசர் ஓர் ஆய்வு. சென்னை: சென்னை பல்கலைக்கழகம்.

இராமதாஸ், வி, சீர்காழி. (2015). *அருள் தரும் சிவ வடிவங்கள்.* பெட்டாலிங் ஜயா: திருமுருகன் திருவாக்கு பீடம்.

இராமசந்திர தீக்சிதர். (1930). *தமிழ் இலக்கியமும் வரலாறும்.* காரக்பூர்: இந்திய தேசிய மின்னியல் நூலகம்.

இராமசந்திரன், தி.என். (2005). *பெரிய புராணம் திருமுறைகளின் கவசம்.* சென்னை:தமிழ் ஆய்வுக் கழகம்.

இராமச்சந்திரன், அ. (2013). *திருத்தொண்டர் புராணம்.* மயிலாப்பூர்: கலைமகள் டிரேடர்ஸ்.

இராசமாணிக்கனார், மா. (1959). *சைவ சமயம். காரைக்குடி:* செல்வி பதிப்பகம்.

இராசமாணிக்கனார், மா. (1996). *சேக்கிழார்.* சென்னை: பூரம் பதிப்பகம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இராஜேந்திரன். (2011). பெரிய புராணம் - சமுதாய நோக்கில் ஓர் பார்வை. உள் வயி., நாராயணசாமி, மு., இராஜேந்திரன், வே., சபாபதி, கோவி., சிவபாலன், ஜி.எம்., சுப்ரா, எஸ்., முத்தையா (தொகுப்பாசிரியர்கள்). *பன்னிரு திருமுறை ஆய்வு நூல்.* (358-364). சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.

இராஜேந்திரன், மு. (2012). *"பன்னிரு திருமுறைகளின் உயர்தனிச் சிறப்பு", பன்னிரு திருமுறை ஆய்வு நூல்.* புதுவை: மணிவாசகர் பதிப்பகம்.

இராஜேந்திரன், மு. (2012). *இந்து சமயம் ஓர் அறிமுகம்.* கோலாலம்பூர்: மலேசிய இந்து சங்கம்.

ஒளவையார். (2018). *நல்வழி.* http://www.edubilla.com/tamil/nalvazhi/ பதிவிறக்கம் செய்யப்பட்டது.

ஒளவையார். (2018). *மூதுரை.* http://www.edubilla.com/tamil/moothurai/ பதிவிறக்கம் செய்யப்பட்டது.

கண்ணாத்தாள். (2011). பெரிய புராணம் - சமுதாய நோக்கில் ஓர் பார்வை. உள் வயி., நாராயணசாமி, மு, இராஜேந்திரன் வே., சபாபதி, கோவி., சிவபாலன், ஜி.எம்., சுப்ரா, எஸ்., முத்தையா (தொகுப்பாசிரியர்கள்). *பன்னிரு திருமுறை ஆய்வு நூல்.* (358-364). சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.

கலைக்களஞ்சியம். (1954). *புராணங்கள்.* தமிழ் வளர்ச்சிக் கழகம். சென்னை

கந்தையா, ந.சி. (2010). *சைவ சமய வரலாறு. சென்னை:* சந்தியா பதிப்பகம்.

கந்தையா.நா. (2018, பிப்ரவரி 15). போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழக ஆண்டு நடவடிக்கைகள், போர்ட்டிக்சன் [பேட்டி].

கலியாணசுந்தரனார். (2014). *நாயன்மார் வரலாறு.* சென்னை: திருவரசு பதிப்பகம்.

கலியாணசுந்தரனார். (2000). *சேக்கிழார் பெருமான் அருளிய திருத்தொண்டர் புராணம்.* சென்னை: கங்கை புத்தக நிலையம்.

கலியாணசுந்தரனார். (1922). நாயன்மார் திறம். காரக்பூர்: இந்திய தேசிய மின்னியல் நூலகம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

காரைக்காலம்மையார். (2018). *திருமுகப்பாசுரம்.* சென்னை: தமிழ் இணையப் பல்கலைக்கழகம். http://www.tamilvu.org/library பதிவிறக்கம் செய்யப்பட்டது.

கார்த்திகேஸ் பொன்னையா. (2012). *மெய்ஞானத்தில் விஞ்ஞானம்.* கெடா: தமிழர் சங்கம்.

கிருபானந்த வாரியார். (2003). *பெரிய புராணம்.* சிலாங்கூர்: குகஸ்ரீ வாரியார் பதிப்பகம்.

கிருஷ்ணமூர்த்தி.ந. (2018, ஜனவரி 12). மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவையின் தோற்றமும் வளர்ச்சியும், போர்ட்டிக்சன் [பேட்டி].

குப்புசாமி. (2012). *கடவுள் விஞ்ஞானம்.* வடலூர்: சுத்த சன்மார்க்க சபை.

குமரகுருபரர். (2018). *நால்வர் நான்மணி மாலை.* https://shaivam.org/devotees/kumaraguruparar *பதிவிறக்கம் செய்யப்பட்டது..*

குமரன் இராமையா. (2015). பெரிய புராணத்தில் வெளிப்படும் பக்திநெறி. *மலாயாப் பல்கலைக்கழகத் தமிழ் பேராய்வு ஆய்விதழ், 1,* 26-43.

குமரேசமூர்த்தி. (2004). *சைவ சமய உலகில் நால்வரின் செல்வாக்கு.* சென்னை: தி பார்க்கர்.

கும்பாபிஷேக மலர். (1987). போர்ட்டிக்சன்: ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம்.

குன்றக்குடி அடிகளார் (1970). *பெரிய புராணச் சொற்பொழிவுகள்.* சென்னை: அப்பர் பதிப்பகம்.

குன்றக்குடி அடிகளார் (2001). *குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை - சமய இலக்கியம்* சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.

கோலப்ப கனகசபாபதி பிள்ளை. (2018). *தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும்.* சென்னை: தமிழ் ஆய்வுக் கழகம்.

கௌசல்யா விஜயன்.ஜி. (1996). *திருமந்திரத்தில் வாழ்வியல் சிந்தனைகள்.* சென்னை: ஸ்ரீ பரமேஸ்வரி அச்சகம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சத்குரு குருதேவ் முத்து கொத்தள மாரியப்ப செல்வராஜ் (மு.மா.செ). (2015). *சித்தர் களஞ்சியம்.* சென்னை: நர்மதா பதிப்பகம்.

சத்குரு ஜக்கி வாசுதேவ். (2015, ஏப்ரல்). ஆயிரம் ஜன்னல். *துங்கீசம், 4,* 61.

சத்தியவேல் முருகனார், மு.பெ. (2002). *திருமந்திரம் - ஓர் அறிமுகம்.* சென்னை: கலைஞன் பதிப்பகம்.

சத்தியவேல் முருகனார், மு.பெ. (2014). *திருஞானசம்பந்தரின் அவதார நோக்கம்: -ஆய்வு. தமிழ்நாடு:* தெய்வத் தமிழ் அறக்கட்டளை.

சபாபதி நாவலர். (1927). திராவிட பிராகசிகை. சென்னை: சென்னை பதிப்பகம்.

சமுதாய மறுமலர்ச்சி. (1992). சென்னை: குறளகம்.

சமூக மேம்பாட்டுக் கழகம். (2011-2018). *ஆண்டறிக்கை.* போர்ட்டிக்சன்.போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சம்பந்தன். (2004). *திருமூலரின் திருமந்திர விருந்து.* சென்னை: திருவரசு புத்தக நிலையம்.

சம்பந்தன். (2011). *திருவாசகம் ஒரு சிந்தனை.* சென்னை: கவிதா பதிப்பகம்.

சரவணபவன். (1986). *திருமந்திரம் காட்டும் திருநெறி.* சென்னை: சரவணபவன் பதிப்பகம்.

சரவணன் கந்தையா. (2018, பிப்ரவரி 15). போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகத்தின் இலக்கு, போர்ட்டிக்சன் [பேட்டி]

சரிதா. (2017, அக்டோபர்). பூக்களும் சில நியதிகளும். *தரிசனம், 10,* 45.

சுந்தரர். (2018). *சுந்தரர் தேவாரம்.* http://www.tamilvu.org/library பதிவிறக்கம் செய்யப்பட்டது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சுந்தர், எஸ். (2008). *பெரிய புராணம் உரைநடை. சென்னை:* சகுந்தலை நிலையம்.

சுப்ரமணிய முதலியார், சி.கே. (1954). *பெரிய புராணம்.* சென்னை: சென்னை பல்கலைக்கழகம்.

சுப்ரமணியம் பிள்ளை, கா. (1940). *சேக்கிழார் சரிதமும் பெரிய புராண ஆராய்ச்சியும். சென்னை:* நன்னூல் உலகம்.

சுஜாதா சுகுமாறன். (2015, டிசம்பர்). பசி அனைவருக்கும் ஒன்றே. *தரிசனம், 12,* 50.

சுஜாதா சுகுமாறன். (2016, ஏப்ரல்). பொன்மொழிகள். *தரிசனம், 4,* 4.

சுஜாதா சுகுமாறன். (2016, மே). வித்தியாசமான பிச்சை. *தரிசனம், 5,* 37.

சுஜாதா சுகுமாறன். (2016, ஜூன்). திருத்தல யாத்திரை. *தரிசனம், 6,* 44.

சுஜாதா சுகுமாறன். (2017, அக்டோபர்). தீப வழிபாடு. *தரிசனம், 10,* 24.

சுஜாதா சுகுமாறன். (2017, அக்டோபர்). அன்னாபிஷேகம், *10,* 8.

செந்தமிழ் செல்வி (2006). *பெரிய புராணம் என வழங்கப்பெறும் திருத்தொண்டர் புராணம்.* சென்னை: சென்னை பதிப்பகம்.

சோமசுந்தரம் (2001). *சைவ சித்தாந்த கட்டுரைகள் (பகுதி 1&2).* கோலாலம்பூர்: பிந்தாங் பதிப்பகம்.

ஞானசம்பந்தன், அ.ச. (1999). *பெரிய புராணம் ஓர் ஆய்வு*: சென்னை: கங்கை புத்தக நிலையம்.

தட்சணாமூர்த்தி. அ. (2005). *தமிழர் நாகரிகமும் பண்பாடும்.* சென்னை: யாழ் பதிப்பகம்.

தர்மலிங்கம், ந. (2012). *திருமந்திரத் தேனமுது*. கோலாலம்பூர்: சக்தி அறவாரியம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தனபாக்கியம் குணபாலசிங்கம். (2007). *பின்பற்ற வேண்டிய சைவ சமய தத்துவங்கள்.* சென்னை: மணிமேகலை பிரசுரம்.

தாயுமானவடிகள். (2018). *பொன்னை மாதரை.* https://shaivam.org/scripture/Tamil/1193/thayumanavar-padalkal-2#ponnai-madharai பதிவிறக்கம் செய்யப்பட்டது.

திரவியம், க. (1974). *தேசியம் வளர்த்த தமிழ்.* சென்னை: பழனியப்பா பதிப்பகம்.

திரவியம், க. (2001). *ஜனாதிபதி இராதாகிருஷ்ணன்.* சென்னை: பூம்புகார் பதிப்பகம்.

திருஅருட்பிரகாச வள்ளலார். (2013). *திருவருட்பா உரைநடைபகுதி.* வடலூர்: திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையம்.

திருஅருட்பிரகாச வள்ளலார். (2018). *திருவருட்பா அகவல்.* https://shaivam.org/scripture/Tamil/1595/thiruvarutpa-ahaval-vadivudai-manikka-malai-of-ramalinga-adikal பதிவிறக்கம் செய்யப்பட்டது.

திருஅருட்பிரகாச வள்ளலார். (2018). *திருவருட்பா - ஜோதி ஜோதி.* https://shaivam.org/scripture/Tamil/1594/tiruvarutpa-of-ramalinga-atikal-tirumuai-VI-part-IV-verses-5064-5818 பதிவிறக்கம் செய்யப்பட்டது.

திருஞானசம்பந்தர். (2018). *திருஞானசம்பந்தர் தேவாரம்.* http://www.tamilvu.org/library பதிவிறக்கம் செய்யப்பட்டது.

திருநாவுக்கரசர். (2018). *திருநாவுக்கரசர் தேவாரம்.* http://www.tamilvu.org/library பதிவிறக்கம் செய்யப்பட்டது.

திருமூலர். (2018). *பத்தாம் திருமுறை: திருமூலர் இயற்றிய திருமந்திரம்.* http://www.tamilvu.org/library/l4100/html/l41A0ind.htm பதிவிறக்கம் செய்யப்பட்டது.

துர்க்காதாஸ்,எஸ்.கே.ஸ்வாமி. (2003). *அறுபத்து மூவர் கதைகள்.* சென்னை: பிரேமா பிரசுரம்..

நந்தலாலா (2008). *சைவ சித்தாந்தம்.* சென்னை: வரம் பதிப்பகம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நடராசன். (1993). பெரிய புராணம் காட்டும் சமுதாய அரசியல் நிலைகள். முனைவர் பட்டத்திற்கான ஆய்வேடு. பாரதியார் பல்கலைக்கழகம்.

நாகப்பன் ஆறுமுகம். (2008). சித்தாந்த சைவம். கோலாலம்பூர்: சிவா எண்டர்பிரைஸ்.

நாகப்பன் ஆறுமுகம். (2018). தமிழும் சைவமும் நமதிரு கண்கள். மலேசிய சைவ சமயப் பேரவையின் நான்காவது உலக சைவ சமய மாநாட்டு மலர், மலேசியா,10-14.

நாயுடு, அ.கி. (1963). *கவிச்சக்ரவர்த்தி கம்பர் வரலாறு*. கோயம்பத்தூர்: கோயம்பத்தூர் பதிப்பகம்.

நாராயணசுவாமி. (2001). *பன்னிரு திருமுறை ஆய்வு நூல்.* சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.

நாராயணசுவாமி. (2010). *பெரிய புராண ஆய்வு நூல்.* புதுச்சேரி: விஜயா பதிப்பகம்

நாராயண வேலுபிள்ளை. (1995). *பத்தாம் திருமுறை திருமந்திரம்.* சென்னை: சங்கரா பதிப்பகம்.

நிர்மலாதேவி. (2013). *சிவம் எனும் செம்பொருள்*. மலேசியா: சக்தி அறவாரியம்.

பரமசிவம், கோ. (2014, நவம்பர்). அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை. *துங்கீசம், 11,* 8-9.

பரமசிவம், கோ. (2015, ஏப்ரல்).வள்ளலாரின் சன்மார்க்க நெறிகள். *துங்கீசம், 4,* 63.

பரமசிவம், கோ. (2015, ஜூலை). இழப்பிலும் வாய்ப்பைக் காணுங்கள். *துங்கீசம், 7,* 34.

பரமசிவம், கோ. (2016, மார்ச்).என் இதயத்திலிருந்து. *துங்கீசம், 3,* 4-5.

பரமசிவம், கோ. (2016, செப்டம்பர்). அபூர்வாஸின் திருத்தல யாத்திரை. *துங்கீசம், 9,* 12-13.

பரமசிவம், கோ. (2016, நவம்பர்). முடிவில்லா முக்கியத்துவம். *துங்கீசம், 11,* 43.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பரமசிவம், கோ. (2017, மார்ச்). மாசி மக புனித நீராடல் விழா. *துங்கீசம், 3,* 8-9.

பரமசிவம், கோ. (2017, மார்ச்). பிரார்த்தனை. *துங்கீசம், 3,* 65.

பரமசிவம், கோ. (2017, ஆகஸ்டு). திருவிளக்கு தத்துவம். *துங்கீசம், 8,* 19.

பரமசிவம், கோ. (2018, மார்ச்). சரியை கிரியை என்றால் என்ன? *துங்கீசம், 3,* 58-59.

பரமசிவானந்தம், அ.மு. (1972). *தமிழ்கலை.* சென்னை: சென்னை பல்கலைக்கழகம்.

பரமஸ்ரீ கைலாசசாமி. (2002). *ஆன்மிகமும் அறிவியலும் (பஞ்சபூதத் தத்துவம்).* சென்னை: நவஜோதிலிங்கம்.

பரமஸ்ரீ கைலாசசாமி. (2003). *எல்லாம் நமக்குள்ளே.* சென்னை: நவஜோதிலிங்கம்.

புறநானூறு. (2018). http://www.edubilla.com/onbook/purananuru/ பதிவிறக்கம் செய்யப்பட்டது.

புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம். (2016-2018). *ஆண்டறிக்கை.* போர்ட்டிக்சன். போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம்.

பூபதி, க. (2014). சைவ சமயமும் திருமந்திர நெறியும். *பயன்பாட்டியல் பார்வையில் தமிழ் இலக்கியங்களும் ஆவணங்களும், 3,* 1163-1165.
பெருமாள், வ. (1971). *இலக்கியமும் வாழ்க்கையும்.* சென்னை: சிவகாமி பதிப்பகம்.

மங்கையர்கரசி. (1972). *சேக்கிழார் பெருமான் அருளிய திருத்தொண்டர் புராணம்.* சென்னை: தமிழ் இணையப் பல்கலைக்கழகம். http://www.tamilvu.org/library/libindex.htm பதிவிறக்கம் செய்யப்பட்டது.

மஞ்சுளா (2004). *சிவனை அறிந்தவர் சீவனை அறிவர்.* சென்னை: செந்தமிழ் பதிப்பகம்.

மணிவாசகன் (2010). *திருமந்திரம் மூலமும் உரையும்.* சென்னை: இராமையா பதிப்பகம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மலேசிய இந்து சங்கம். (2010-2018). *ஆண்டறிக்கை.* போர்ட்டிக்சன். மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை.

மாணிக்கவாசகர். (2018). திருவாசகம். சென்னை: தமிழ் இணையப் பல்கலைக்கழகம். http://www.tamilvu.org/library பதிவிறக்கம் செய்யப்பட்டது.

முத்துக்கருப்பன், ஆர். (2010). *சமய இலக்கியங்களில் பெரிய புராணம்.* சென்னை: ஆனந்தம் பதிப்பகம்.

முத்துசண்முகம். (1989). 'பக்தர்கள் சமூகத் தொண்டர்கள்' - தமிழ் இலக்கியக் கோட்பாடுகள். சென்னை: South India Saiva Siddahantha Works.

மோஹனதாஸ். (2018, பிப்ரவரி 20). போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம் - சமுதாயச் சேவை, போர்ட்டிக்சன் [பேட்டி].

யோக சுத்தானந்த பாரதியார். (1998). *திருமந்திர விளக்கம்.* சென்னை: இராஜேஸ்வரி புத்தக நிலையம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

வரதராசனார், மு. (2001). *திருக்குறள் தெளிவுரை (166 ஆவது பதிப்பு).* சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

வரதராசனார். (2010). *தமிழ் இலக்கிய வரலாறு.* புது டில்லி: சாகித்திய கல்விக்கழகம்.

வெள்ளைவாரணர். (2002). *சைவ சித்தாந்த சாஸ்திர வரலாறு.* தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.

வெள்ளைவாரணர். (2016). *பன்னிரு திருமுறை வரலாறு (பகுதி 1&2).* சென்னை: சீதை பதிப்பகம்.

வெள்ளைவாரணர். (2008). *தமிழ் இலக்கிய வரலாறு.* சென்னை: கோபால் பதிப்பகம்.

வைத்தியநாதன். (1995). *சைவ சமய வரலாறும் பன்னிரு திருமுறை வரலாறும்.* திருவாவடுதுறை: நமசிவாயமூர்த்தி ஆப்செட் பதிப்பகம்.

வேலுப்பிள்ளை, ஆ. (1985). *தமிழர் சமய வரலாறு.* சென்னை: பாரி புத்தகப் பண்ணை.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஜனசக்தி, சு. (2011). பெரிய புராணம் - சமுதாய நோக்கில் ஓர் பார்வை. உள் வயி., நாராயணசாமி, மு, இராஜேந்திரன் வே., சபாபதி, கோவி., சிவபாலன், ஜி.எம்., சுப்ரா, எஸ்., முத்தையா (தொகுப்பாசிரியர்கள்). *பன்னிரு திருமுறை ஆய்வு நூல்.* (358-364). சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.

ஜெகதிஸ் கிருஷ்ணன். (2018, ஜனவரி 13). மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவையின் நடவடிக்கைகள், போர்ட்டிக்சன் [பேட்டி].

ஜெயமோஹன். (2018). தஞ்சை தரிசனம், தமிழகப் பயணம். www.jeyamohan.in.பதிவிறக்கம் செய்யப்பட்டது.

ஸ்ரீஜா வெங்கடேஷ். (2014, நவம்பர்). ஆனந்த வாழ்வு தரும் அன்னாபிஷேகம். *பக்தி, 11,* 19-20.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பிற மேற்கோள்கள்

Asken Sinaga. (2008). NGO: DEFINISI, SEJARAH, PERANAN, PENGELOMPOKAN DAN KARIR. *Kamp Mahasiswa Regional Sumbagut, Perkantas Medan.* Dimuat turun dari https://askensinaga.wordpress.com/2008/06/02/ngo-defenisi-sejarah-peranan-pengelompokan-dan-karir/

Azrina Mazlin Alias. (2016). Impak Kesukarelawanan dalam Kalangan Belia di Kuala Lumpur - satu kajian. *Jurnal Kepimpinan Pendidikan, 3,* 25-43. Dimuat turun daripada http://jupidi.um.edu.my/index.php/JUPIDI/article/view/8443

Bangkok. Asian Institute of Technology. (1988). *NGO Workshop: Definitions of an NGO.* Bangkok. Retrieved on February 16, 2018, from http://www.gdrc.org/ngo/wb-define.html

Ben Rhodes. (2019). *NGOs Quotes*. Retrieved on December 16, 2018, from https://www.brainyquote.com/authors/ben_rhodes

Bruns, Gerald. (1992). *Hermenutik - Ancient and Modern*. New Haven: Yale University Press.

Elangeswari Aruchunnan. (2017). Pendekatan Pencapaian Mukthi dalam teks Periya Puranam. Disertasi Sarjana. Universiti Malaya, Kuala Lumpur.

James G., Lochtefeld. (2002). In *The Illustrated Encyclopedia of Hinduism*: N-Z New York: The Rosen Publishing Group.

Jean Folger. (2018). *How do NGOs get funding?* Retrieved on June 16, 2018, from https://www.investopedia.com/ask/answers/13/ngos-get-funding.asp.

Joseph Mathew. (2000). *Mother Teresa : Seeker of souls*. Delhi: Authorspress

Kelantan, Jabatan Kebudayaan dan Kesenian. (2016). *Pertubuhan Bukan Kerajaan di Malaysia.* Malaysia. Dimuat turun pada Mac 21, 2018, dari http://www.jkkn.gov.my/

Kerlinger. (1970). *Behavioral Research*. New York. SAGE Publication.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

Malaysia. Hindu Sangam. (2018). *Who we are?* Malaysia. Retrieved on February 22, 2018, from http://www.hati.my/education/malaysia-hindu-sangam/

Malaysia. Hindu Youth Council. (2011- 2017). *Miyc Background.* Malaysia. Retrieved on February 22, 2018, from https://www.miyc.org.my/About-Us.php

Malaysia. Indian Youth Council. (2018). *Our Society Our Responsibility.* Malaysia. Retrieved on February 22, 2018, from http://miyc.org.my/About-us.php
Malaysia, Jabatan Pendaftaran Pertubuhan. (2017). *Status Pertubuhan.* Malaysia. Dimuat turun pada Februari 14, 2018, dari http://www.ros.gov.my/

Malaysia, Jabatan Perangkaan. (2018). *Penduduk dan Demografi.*Malaysia. Dimuat turun pada Mac 21, 2018, dari https://www.dosm.gov.my

Mazlan Che Soh, Makmor Tumin. (2017). Sejarah dan Perkembangan Badan Bukan Kerajaan (NGO) Kesihatan di Malaysia sehingga tahun 2015. *Journal of the Department of History, 26,* 49-70. Dimuat turun daripada https://ejournal.um.edu.my/index.php/SEJARAH/article/view/9864/6967

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

Nagappan Arumugam. (2011). *Siddhantha Saivam*. Kuala Lumpur: Aathi Enterprise.

Norma Mansor (2014, November 6). NGO penuhi keperluan soaial rakyat . BH Online. Dimuat turun pada Januari 11, 2018, daripada https://www.bharian.com.my/node/15982.

Patton Michael Quinn. (1990). *Qualitative evaluation and research Methods (2nd edition).* Newbury Park: SAGE Publication.

Peter Willetts. (2000). *What is a Non- Governmental Organization?* Retrieved on November, 14, 2018 from http://www.gdrc.org/ngo/peter-willets.html.

Ros Aiza Mohd Mokhtar, Abd Hakim Mohad, Aiedah Abdul Khalek, Sarjit G.Jill, Ahmad Tarmizi. (2018). Penerapan Elemen Perpaduan Nasional dalam Program NGO di Sabah - Satu tinjauan awal. *Persidangan Antarabangsa Sains Sosial & Kemanusiaan,* Selangor, 1-8.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

Selangor, Jabatan Islam. (2016). *Pertubuhan Bukan Kerajaan di Malaysia.* Malaysia. Dimuat turun pada Mac 21, 2018, dari http://www.jais.gov.my/

Taylor Steven J. & Bogdan Robert. (1998). *Introduction to Qualitative Research Methods* (3rd Edition). New York: John Wiley & Sons Inc.

Stephen Heintz. (2006). *The Role of NGOs in Modern Societies and an Increasingly Interdependent World* Retrieved on November, 15, 2018 from http://www.rbf.org/sites/default/files/The_Role_of_NGOs_in_Modern_ Societies_and_Increasingly_Interdependent_World.pdf.

Taylor, S. J., & Bogdan, R. (1984). Introduction to qualitative research methods: The search for meanings. New York: John Wiley & Sons.

Tuan Pak Rokiah Syed Hussain. (2016). Belia dan Program Kesukarelawanan di Malaysia - Satu kajian empirikal. *Malaysian Journal of Society and Space, 10,* 183-194. Dimuat turun daripada file:///C:/Users/ACER/Downloads/17775-50569-1-SM.pdf

Washington, DC. The World Bank. (1990). *How the World Bank works with Non-Governmental Organizations.* Washington, DC. Retrieved on February 14, 2018, fromhttp://documents.worldbank.org/curated/en/118901468780890205/ How the-World-Bank-works-with-nongovernmental-organizations

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi